Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°c 26°c

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 313 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 20, ஞாயிறு 06.10.2013

ரணில்–சஜித் குழுக்கள் மோதல் இரத்தக் களரியானது மாத்தறை 02

மின்னொளியில் இறுதி ஆட்டம் 22

2015 உலகக் கிண்ணத் தொடருக்கு ஆப்கான் முதல் முறையாகத் தகுதி 23

# பிரபாகரனின் ஆவி இருப்பிடமே அழிப்பு

## இராணுவப் பேச்சாளர் வணிகசூரிய கொக்கரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 6
புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டை 'தீவிரவாதியின் ஆவி இருப்பிடம்' என்று வர்ணித் துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடயங்களை இன்னமும் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் வேணாவில் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வசித்த நிலக் கீழ் வீடு கடந்த வியாழக்கிழமை மாலை இராணுவத்தால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இது குறித்துக் கருத்து வெளியிடும் போதே இராணுவப் பேச்சாளர் இப்படிக் கூறினார்.



"நாம் பிரபாகரனின் பதுங்கு குழியை அழித்துள்ளோம். தீவிரவாதியின் ஆவியை உயிரோடு வைத்திருக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. விடுதலைப் புலிகளின் தடயங்களை இனியும் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. அதனால்தான் புதுக்குடியிருப்பில் இருந்த பதுங்குழி அழிக்கப்பட்டது.'' என்றார் இராணுவப் 21

## பொதுநலவாய மாநாட்டில் அதிகாரப்பகிர்வு யோசனை

கொழும்பு, ஒக்.6
பொலிஸ், காணி உள்ளிட்ட 13 இல் உள்ள சகல அதிகாரங்களையும் எவ்வித மாற்றமுமின்றி வடமாகாண சபைக்கு வழங்கவேண்டும் என்று இலங்கையை வலியுறுத்தியுள்ளது இந்தியா.

இது குறித்த அறிவிப்பை டில்லி அரசு கொழும்புக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது. இதேவேளை, அதிகாரப் பகிர்வு குறித்த யோசனையை இந்தியாவின் உதவியுடன், இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் முன்வைப்பதற்கான முயற்சியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடு 21

## இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் அடுத்த ஆண்டிலும் பிரேரணை

### தகவல் திரட்டுகின்றன முகவர் அமைப்புகள்

கொழும்பு, ஒக்.06
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அடுத்த ஆண்டும் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதற்கான தகவல்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஐ.நா. முகவர் நிறுவனங்களும், இலங்கை தொடர்பான விடயங்களைக் கையாளும் வெளிநாட்டுத் தூதரகங்களும் தற்போது முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

இலங்கை அரசுக்கு எதிராகக் கடந்த 2012 ஆம் ஆண்டும் இந்த ஆண்டு மார்ச் மாதமும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இலங் கையின் நிலையில் மாற்றம் ஏற் 21

## வடக்கு அமைச்சர்களை முதல்வரே அறிவிப்பார்

யாழ்ப்பாணம், ஒக் .6
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியேற்ற பின்னர் வடக்கு மாகாண அமைச்சர்கள் யார் என்பதை முதலமைச்சரே அறிவிப்பார் என்று நேற்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இரவு இடம்பெற்ற அமைச்சர்கள் தெரிவு தொடர்பான கூட்டம் 40 நிமிடங்கள் வரையே நீடித்தது. அமைச்சுப் பதவிக்கான பெயர்கள் ஒவ்வொரு கட்சிகளாலும் பிரேரிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த விடயம் 21

## புத்தூரில் நேற்று விபத்து பல்கலை மாணவன் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.6
டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன் ஒருவர் தலை வெடித்து உயிரிழந்தார்.

இந்த விபத்து பருத்தித்துறை வீதி, புத்தூரில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த யோகேஸ்வரன் கயந்தன் (வயது-23) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட இறுதியாண்டு மாணவனான இவர் புத்தூரில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கற்பித்து வருகிறார். வழமை போன்று நேற்றும் கல்வி நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த 21

## விக்கியின் பதவியேற்பில் குர்ஷித்தும் பங்கேற்பார்

கொழும்பு, ஒக்.6
வடக்கு மாகாண முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்பாக நாளை திங்கட்கிழமை பதவியேற்கும் நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் பங்கேற்பார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இலங்கைக்கு இரு நாள் பயணமாக நாளை திங்கட்கிழமை காலை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வருகிறார்.

அதேநேரத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வடக்கு மாகாண முதலமைச்சரின் பதவியேற்பும் அன்றையதினம் நடைபெறுகின்றது.

அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாக வடக்கு மாகாண முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் பதவி 21

## விக்கியின் பதவியேற்பை கண்டித்து நடைபயணம்

### வேட்பாளர் தம்பிராசா ஆரம்பித்தார்



யாழ்ப்பாணம், ஒக்.06
வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மஹிந்த முன்னிலையில் பதவியேற்பதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட மாகாண சபை வேட்பாளர் மு.தம்பிராசா, வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி நடை பயணத்தை நேற்று சனிக்கிழமை ஆரம்பித்துள்ளார்.


வவுனியா இறம்பைக்குளம் கருமாரி நாகம்மாள் கோயிலில் இருந்து நேற்று சனிக்கிழமை நண்பகல் இந்த நடை பய 21

## 'டிராக்டர்' சில்லின் கீழ் இளைஞர் மர்மச் சாவு

### முள்ளியான் போக்கறுப்பில் சம்பவம்

கொழும்பு, ஒக்.06
மணல் ஏற்றுவதற்காக டிராக்டரைச் செலுத்திச் சென்ற இளைஞர் மறுநாள் காலை யாரும் இல்லாத இடத்தில் டிராக்டர் சில்லு நெஞ்சில் ஏறியபடி சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். டிராக்டர் சில்லு அவரது தலையுடன் முட்டியவாறு நெஞ்சின் மேல் ஏறியிருந்தது.

இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதால் அது தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.



வடமராட்சி கிழக்கு முள்ளியான் போக்கறுப்புப் பகுதியில் யாருமில்லாத வெளி ஒன்றிலேயே அவர் சடலமாகக் காணப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த செல்வராஜசிங்கம் கயந்தன் (வயது -25) தெரிவரே இவ்வாறு 21

## மன்னாரில் படகு விபத்து; ஐவர் சாவு

மன்னார், ஒக். 6
மன்னார் பலுகஹதுறை கடற்பகுதியில் நேற்றுப் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்தவர்களுள் ஐவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சிறுவன் உட்பட 11 பேரைக் கடற்படையினர் மீட்டுள்ளனர். சிறிய மீன்பிடிப் படகு ஒன்றில் கடலைச் சுற்றிப் பார்க்கச் சென்றவர்களே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளனர். மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 4 பெண்களும், ஒரு ஆண் குழந்தையும் சம்பவத்தில் உயிரிழந்தனர். (கு-சி)

## முதல்வரையும் ஆளுநரையும் யாழில் சந்திக்கிறார் குர்ஷித்

யாழ்ப்பாணம், ஒக்.6
வடக்கு மாகாண முதலமைச்சரையும், ஆளுநரையும் யாழ்ப்பாணத்தில் வைத்துச் சந்திக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

இந்தியத் துணைத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை இலங்கைக்கு வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

நண்பகல் 12 மணிக்குப் பலாலி விமான நிலையத்தை வந்தடையும் குர்ஷித் 12.25 மணியளவில் தெல்லிப்பழையில் அமைக் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-சஜித் குழுக்கள் மோதல் இரத்தக் களரியானது மாத்தறை

## தலைமைத்துவ எதிர்ப்பு, ஆதரவுப் பேரணியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் படுகாயம்

கொழும்பு, ஒக்.06
ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் ஆதரவுக் குழுக்களிடையே மாத்தறையில் நேற்று இடம்பெற்ற கடும் மோதலின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

ஐ.தே.க. ஆதரவாளர்கள், அதிருப்தியாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலால் மாத்தறையில் நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டதையடுத்து, அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.தே.க. தலைமைத்துவத்துக்கு ஆதரவான, எதிரான ஆர்ப்பாட்டக்கா ரர்களுக்கிடையில் இடம்பெற்ற இந்த மோதலில் இரு தரப்பினரும் தடி, பொல்லுகளைக் கொண்டு கடும் தாக்குதல்களை மேற்கொண்டதால் இரு தரப்பினரும் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மாத்தறைப் பகுதியில் இரு தரப்பு மோதல் உக்கிரமடைந்ததையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஐவர் காய மடைந்துள்ளனர்.

ஐ.தே.கவின் தென் மாகாணசபை உறுப்பினர் கிரிஷாந்த புஷ்பகுமார துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் கராப்பிட்டிய வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன், தாக்குதலில் மேலும் ஒருவரும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன, காயமடைந்த ஆறு பேரும் மாத்தறை, காலி வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகவேண்டும் என வலியுறுத்தி, கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 7 நாள் பேரணி மாத்தறையில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பேரணிக்கு கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர்களான மைத்திரி குணரட்ன, சிரால் லக்திலக ஆகியோர் தலைமை தாங்கினர்.

இதேவேளை, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தலைமையில் பேரணி ஒன்றும் இடம்பெற்றது.

இவ்விரு குழுவினருக்குமிடையே மாத்தறைப் பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் தாம் வைத்திருந்த பொல்லு, தடிகளைக் கொண்டு கடும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். மோதல் உக்கிரமடைந்ததன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நிலைமை தீவிரமடைந்ததையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடித்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மைத்திரியின் தந்தை கைது

ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற துப் பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்னவின் தந்தை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, சம்பவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை யடுத்து, மங்கள சமரவீர தலைமையில் இடம்பெற்ற பேரணி கைவிடப்பட்டுள்ளதுடன், மைத்திரி குணரட்ன தலைமையிலான பேரணி கொழும்பு நோக்கிய தமது பயணத் தைத் தொடர்ந்துள்ளது.

மைத்திரி குணரட்ன தலைமையில் இடம்பெறும் இந்தப் பேரணி எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பு நோக்கி வரவுள்ளதுடன், ரணிலுக்கு எதிராக கையெழுத்து வேட்டையும் இதன்போது நடத்தப்படவுள்ளது. (சி)

## கைவிடப்பட்டது பேரணி

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் ஆதரவாளர்கள் கொழும்பு நோக்கி மேற்கொள்ளவிருந்த 7 நாள்பேரணி, நீதிமன்ற அறிவிப்பை அடுத்து நேற்று முதலாவது நாளுடன் கைவிடப்பட்டது.

மாத்தறைப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதன் போது அங்கு ஏற்பட்ட களேபரத்தை அடுத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்த நீதிமன்று தடை விதித்தது. (ஜ)

## சுய நிர்ணயத்தை அங்கீகரித்தால் இனவாதத்தைக் களைய முடியும்

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.06
பல இனங்களைக் கொண்ட இந்த நாட்டில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமாகத்தான் புரையோடியுள்ள இனவாதத்தைத் களைய முடியும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஆசிரியர்கள் இந்த நாட்டின் பரந்துபட்ட தொழிலாளர்கள். அவர்கள் மக்கள் தொழிலாளிகளுடன் இணைந்து போராட வேண்டும். ஆசிரியர்களின் கோரிக்கைகள் பேச்சு மூலமாகத் தீர்க்கப்படாதவிடத்து அதிகார வர்க்கத்துக்கு எதிராக நேரடியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டியுள்ளது.

எமது சங்கம் ஆசிரியர் பிரச்சினையில் மட்டுமன்றி தேசிய இனப்பிரச்சினையிலும் முன்னின்று போராட்டங்களை நடத்தியது.


இனப் பிரச்சினை கூர்மையடைந்து நாட்டின் எரியும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதனால் தமிழர் ஒரு தேசிய இனம். அவர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட வேண்டுமென்ற குரல் வலுப் பெற்றுள்ளது.

பல இனங்களைக் கொண்ட இந்த நாட்டில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமாகத் தான் புரையோடியுள்ள இனவாதத்தைக் களைய முடியும். நாட்டின் ஐக்கியத்தை பேண முடியும். இதன் மூலமாகவே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

இனப்பிரச்சினை கூர்மையடைந்த பின்னர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட முதலாவது தொழிற்சங்கம் எமது சங்கம் என்றுள்ளது. (த-4)

## வடக்கில் படைகள் குறைவாகவே உள்ளன

### பிரிட்டன் எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஒக்.06
அடிக்கடி சொல்லப்படுவதை விட வடக்கில் படைகள் குறைவாகவே இருப்பதாக, உண்மையைக் கண்டறியும் பொருட்டு இலங்கைக்குப் பயணம் செய்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் றோகன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஏழு தினங்களாக உண்மையைக் கண்டறியும் பொருட்டு இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்தனர்.

பயண முடிவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தக் கலந்துரையாடலிலேயே றோகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு சிவில் சமூகத்தினர் மற்றும் அரச அதிகாரிகளைச் சுதந்திரமாகச் சந்தித்துக் கலந் துரையாடியதாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அடிக்கடி தெரிவிக்கப்படுவதைப் போன்று வடக்கில் அதிகளவான இராணுவப் பிரசன்னம் இல்லை. மேலும் எங்களது வட அயர்லாந்தில் ஏற்பட்ட முரண்பாடுகளைப்போன்றே இங்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. வெளியில் இருப்பவர்கள் எதையாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்று தெரிவித்த றோகன் இலங்கையில் நவம்பரில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு நடத்தப்படுவது பொன்னான சந்தர்ப்பம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கின் அபிவிருத்திக்காக மாத்திரம் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தொகை தென் பகுதியில் செலவிடப்பட்ட தொகையிலும் பார்க்க அதிகமானது என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-5)

## மாணவியைக் காணவில்லையென சாவகச்சேரியில் நேற்றுப் பரபரப்பு

### ஓட்டோச் சாரதியின் மறதியால் ஏற்பட்ட சலசலப்பு

தென்மராட்சி, ஒக்.6
ஓட்டோவில் அழைத்து வரப்பட்டதாகக் கூறப்பட்ட சிறுமி இடைவழியில் காணாமற் போனதாக நேற்று சாவகச்சேரியில் பரபரப்பு ஏற்பட்டது. பொலிஸ் நிலையம் வரை சம்பவம் சென்ற நிலையில் ஓட்டோ சாரதி மாணவியை பாடசாலையில் இருந்து ஏற்றவேஇல்லைஎன்ற உண்மை தெரியவந்தது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:
சரசாலைப் பகுதியைச் சேர்ந்த இரு மாணவிகளை தினமும் பாடசாலைக்கு ஏற்றியிறக்கும் பணியை அங்குள்ள ஓட்டோ சாரதி செய்து வந்தார்.

நேற்று காலையும் இரண்டு பிள்ளைகளையும் ஏற்றிச் சென்ற சாரதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒரு மாணவியையும் டிறிபேர்க் கல்லூரியில் மற்ற மாணவியையும் இறக்கி விட்டுச் சென்றார். பாடசாலை முடிந்ததும் மதியம் டிறிபேர்க் கல்லூரிக்குச் சென்ற ஓட்டோ சாரதி மாணவியின் புத்தகப் பையை எடுத்து ஆசனத்தில் வைத்துவிட்டு பிள்ளையை ஏற்றாமல் ஓட்டோவை செலுத்திச் சென்றவர் மகளிர் கல்லூரியில் நிறுத்திவிட்டு உள்ளே நின்ற மற்ற மாணவியை அழைத்து வந்து பார்த்த போது புத்தகப் பை ஆசனத்தில் இருந்தது. மாணவியை தான் ஏற்றி வந்ததாக எண்ணிய அவர் பிள்ளையைக் காணவில்லை என்று தேடியுள்ளார். தகவல் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்டது. மகளிர் கல்லூரிக்கு விரைந்த பொலிஸார் அங்கு தேடிப் பார்த்து விட்டு டிறிபேர்க் கல்லூரிக்குச் சென்ற போது பிள்ளை அங்கு ஓட்டோவை எதிர்பார்த்து காத்திருந்தது தெரியவந்தது. பிள்ளையிடம் விசாரித்தபோது புத்தகப் பையை வாங்கிச் சென்று ஓட்டோவுக்குள் வைத்துவிட்டு தன்னை ஏற்றாமல் ஓட்டோ சாரதி புறப்பட்டுவிட்டார் எனவும் திரும்பி வந்து தன்னை ஏற்றிச் செல்வார் என காத்திருந்ததாகவும் மாணவி தெரிவித்துள்ளார்.

மாணவி காணாமற் போன விடயம் நேற்று சாவகச்சேரி நகரப் பகுதியை பரபரப்புக்குள்ளாகியது. (ஐ-9)

## நட்பாகப் பழகிய பெண் நம்பிக்கை மோசடி ?

### ஆதாரம் இல்லாததால் சட்டநடவடிக்கை எடுக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஒக்.6
அரச நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவர் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் சக பெண்ணிடம் 2 இலட்சம் ரூபாவைப் பெற்று திருப்பிக் கொடுக்காது நம்பிக்கை மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

**போதிய ஆதாரம் இல்லாததனால் பொலிஸார் கூட முறைப் பாட்டைப் பதிவு செய்யவில்லை**

இது தொடர்பில் போதிய ஆதாரம் இல்லாததனால் பொலிஸார் கூட முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லை என்று பணம் கொடுத்ததாகக் கூறும் பெண் தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதான வீதியிலுள்ள அரச நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவரே இவ்வாறு பணத்தைப் பெற்று நம்பிக்கை மோசடி செய்துள்ளதாக அங்கு தற்காலிகமாகப் பணிபுரியும் மற்றொரு பெண் தெரிவித்துள்ளார்.

2 மாதத்துக்கு முன்னர் அவசர வீட்டுத் தேவைக்காக என்று கூறியே பணம் வாங்கியுள்ளார். இரண்டு மாதம் கடந்த பின்னரும் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்காததனால் அதனைத் தருமாறு பணத்துக்குரிய பெண் கேட்டுள்ளார்.

அதன் போதே பணத்தை வாங்கிய பெண் எப்போது பணம் தந்தாய்? பணம் தரவேயில்லையே? பணம் தந்ததற்கான என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்டுப் பணம் வாங்கவில்லை என்று கூறிவிட்டார்.

அதனால் பணத்துக்குரிய பெண் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றார். எனினும் பணம் கொடுத்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லாததனால் முறைப்பாடு பதிவு செய்யவில்லை என்று பணம் கொடுத்ததாகக் கூறும் பெண் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## காங்கேசன்துறை பொலிஸார் பொதுமக்களுடன் சந்திப்பு

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் உள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்கள், பொதுமக்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையேயான சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் றொசான் தகநாயக்கா தலைமையில் இடம்பெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குள் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகள், பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பு என்பன பற்றி இதில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் அண்மையில் இந்தப் பகுதிகளில் மீளக் குடியேறிவரும் நிலையில் அவர்களுடைய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும் இதில் ஆராயப் பட்டது. இந்தக் கலந்துரையாடலில் கீரிமலை, நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், மாவைக்கலட்டி, வீமன்காமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுடன் கிராம அலுவலர்களும் கலந்துகொண்டார்கள். (த-86)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுப்பிட்டி உப தபாலகத்தின் புதிய கட்டடம் திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 6
புங்குடுதீவு இறுப்பிட்டி உப தபாலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. புங்குடுதீவு தபாலதிபர் திருமதி சுமித்திராதேவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.இரட்ண சிங்கம் உபதபாலகத்தின் புதிய கட்டடத்தையும் தபாலகத்தின் பெயர்ப் பலகையையும் திறந்து வைத்தார்.
பேராசிரியர் கா.குகபாலன் நினைவுப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.
நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, யாழ்ப்பாணம் தபாலதிபர் கா.புஷ்பநாதன், உப தபாலதிபர் ச.க.சதீபன் ஆகியோர் உரையாற்றினார்கள்.
முன்னதாக சேதமுற்ற பழைய உப தபாலக கட்டடத்தில் இருந்து விருந்தினர்கள் புதிய கட்டடத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.
தபாலகக் கட்டடத்துக்கான காணியையும் புதிய கட்டடத்தையும் பேராசிரியர் கா.குகபாலன் , சுவிஸ் நாட்டிலுள்ள உறவினர் சிவராசா குடும்பத்தினரின் உதவியுடன் தபால் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள் இந்தோனேசியாவுக்கு கல்விச் சுற்றுலா



வலி.வடக்கு. ஒக். 6
இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் 25 பேர் கொண்ட குழுவினர் கல்விச் சுற்றுலாவாக இந்தோ னேசியாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்கள்.
இந்தோனேசியா நாட்டில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த கல்விச்சுற்றுலா இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள், இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், இளைஞர் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.
இவர்கள் கல்விச் சுற்றுலாவை இந்த மாத மூன்றாம் வாரத்தில் மேற்கொள்ளவுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-86)

# அனுமதியின்றி பனை தறித்த இருவர் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஒக். 6
அனுமதிப் பத்திரமின்றி பனை மரம் தறித்த இருவர் சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற கொடிகாமம் பொலிஸார் இருவரைக் கைது செய்தனர்.
இந்த இருவருக்கும் எதிராக அனுமதிப்பத்திரமின்றி பனை மரங்கள் தறித்ததாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)

# சில்லறை மதுபான நிலையம் மருதங்கேணியில் மூடப்பட்டது

வடமராட்சி.ஒக்.6
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சில்லறை மதுபான விற்பனை நிலையம் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமையினால் சில தினங்களுக்கு முன்னர் மூடப்பட்டது.
மருதங்கேணியில் பொழுது போக்குக் கழகம் என்ற பெயரில் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சில்லறை மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு மதுபான வகைகள் விற்பனை செய்யப் பட்டு வந்தன.
இந்த மதுபான விற்பனை பொழுதுபோக்குக் கழகத்துக்குப் பருத்தித்துறை பிரதேச சபையிடமிருந்து வியாபார உரிமம் பெறப்படவில்லை.
இதனையடுத்து பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் எடுத்துக் கொண்ட நடவடிக்கையை அடுத்து அந்த விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளது.
அதேவேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் மற்றொரு கிராமமான குடத்தனையிலும் பொழுதுபோக்குக்காக மதுபான விற்பனை நிலையம் ஒன்று கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.
மதுபான விற்பனை நிலையம் இல்லாத வடமராட்சி கிழக்குப் பரதேசத்திலும் மதுபான விற்பனை நிலையங்கள் இந்த வருட நடுப் பகுதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிரதேச மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. (த-8)



வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட ஆசிரியர் தின விழா நேற்றுக் காலை இணுவில் இந்துக் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம் பெற்றது.வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (த-86)

# தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடு



வலி.வடக்கு. ஒக். 6
அயலவர் ஒருவர் வீட்டை உடைத்தமை தொடர்பாக மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவர் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற வேளை அதனை ஏற்க மறுத்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பொது மகன் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவால் பொலிஸாரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.
தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் விளக்கம் கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-86)

# கலந்துரையாடல்

வலி வடக்கு ஒக் 06
கோப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரம் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச சபையின் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் தலைமையில் கோப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட நூலகங்களின் நூலகர்கள், உப அலுவலகப் பொறுப்பாளர்கள் சபையின் உறுப்பினர்கள் மற்றும் சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த-86)

# 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு

தென்மராட்சி, ஒக். 6
நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில் டெங்கு ஒழிப்பை தென்மராட்சி பிரதேசத்தின் 60 கிராம அலுவலர் பிரிவுகளும் மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மழை காலம் ஆரம்பிக்கவுள்ளதால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகள் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு டெங்கு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
டெங்குப் பரிசோதனை நடவடிக்கைகளில் அந்தந்த வலயத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் உள்ளூராட்சி சபையினர்.பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வலயக் கல்வி அலுவலகத்தினர், கொடிகாமம் , சாவகச்சேரி பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களின் தொண்டர்கள் உட்பட அனைவரின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.
நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மட்டுவில், மந்துவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும், எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பிரிவுக்குட்பட்ட ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும், 9ஆம் திகதி புதன்கிழமை எழுதுமட்டுவாழ் பிரிவுக்குட்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளிலும், 10ஆம் திகதி வியாழக்கிழமை மீசாலை பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு மீசாலை மேற்கு



கோயிற் குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைதடிப் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும், நாவற்குழி பிரிவுக்குட்பட்ட ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும், 12 ஆம் திகதி சனிக்கிழமை வரணி பிரிவுக்குட்பட்ட எட்டு கிராம அலுவலர் பிரிவுகளிலும், 13 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை பிரிவுக்குட்பட்ட 7 கிராம அலுவலர் பிரிவுகளிலும் டெங்குப் பரி சோதனைகள் இடம்பெறவுள்ளன.
குறித்த பிரிவுகளில் உள்ள மக்கள் பரிசோதனைக்கு வரும் குழுவினருக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(த-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் வவுனியாவில் அதிகம்

பொருளாதார ரீதியில் வறு மைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் வவுனியா மாவட் டத்தில் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு கண வனை இழந்த விதவைப் பெண் கள். போரினால் அங்கவீன மானவர்களின் குடும் பங்கள். வேலைவாய்ப்பு இன்றித் தவிக் கும் குடும்பங்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், பெற்ற கடன்களை மீளளிக்க முடியாத குடும்பங்கள் உட்பட இங்குள்ள பல குடும் பங்கள் வறுமையான நிலையில் வாழ்வ தாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் முற்றாகக் கிடைக் காததுடன் அரச உதவிகளும் கிடைக்காததால் அன்றாட உண வைக் கூடப் பெற முடியாத நிலையில் இந்தக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

போர்க்காலத்தில் கிடைத்த உதவிகள் கூட தற்போது தமக்குக் கிடைப்பதில்லையென இந்தக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. மேலும் தமது குழந்தைகள் போசாக்குக் குறைபாடு காரணமாகப் பாதிக்கப்பட்டு வருவதாக வும் இவர்கள் தெரிவிக்கின்றனர்-

மேலும் வறுமை காரணமாக இந்தக் குடும்பங்களில் சண் டைகள். பிரிவுகள். தற்கொலை முயற்சி என்பன இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் நாகம்மா

கைதடிதெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகம்மா நேற்று (05.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10. 2013) ஞாயிறுக் கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் கைதடி தெற்கு, ஊரியான் இந்துமயானத்தில் பி.ப. 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தப்பர் சின்னையா



கண்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பர் சின்னையா நேற்று (05.10.2013) சனிக்கிழமை காலமானார்..

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், சித்திரா, விசாகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜாணனன், டினோஜா ஆகியோரின் அன்பு மாமனும், கோபால், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனிருத், ஹரிஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிறுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். 077 9596763

(32428.14.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் முருகேசு பாலசிங்கம்

(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 28.05.1938

மறைவு: 06.09.2013

கடந்த 06.09.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு முருகேசு பாலசிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் கோயிலடி ,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த

### சந்திரசேகரம் அபிசேகன்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 17 ஆம் இடத்தையும் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
அப்பம்மா- செ.ஞானேஸ்வரி
சித்தப்பா- த.தர்மசீலன்.

வரணி.


## வவுனியாவில் மாடு வளர்ப்பில் குறைந்து விட்டது நாட்டம்

வவுனியாவில் பசும்பாலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. மாடு வளர்ப்பை பிர தான தொழிலாகக் கொண்ட பலர் அதனைக் கைவிட்டதால் இந்த நிலை உருவாகியுள்ளது. கட்டாக் காலிகளாக அலைந்து திரிந்த மாடுகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை, மாடு களைத் திருடும் சம்பவங்கள் அதிகரித்தமை போன்ற காரணங்களால் மாடு வளர்ப்புத் தொழிலை மேற்கொண்ட பலர் அதனைக் கைவிட்டுள்ளனர். மேலும், மாடு வளர்ப்புக்கென சுயதொழில் கடன்களை வழங்கிய நிறுவனங்கள் கடன் வழங்குவதை நிறுத்தியமையும் இதற்கான மற்றொரு முக்கிய கார ணமாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் இந்த மாதம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் திட்டம்மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளதால் பாடசாலைச் சமூகத்தினர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும், வெளி மாவட்டங்களில் இருந்து பசும் பாலைக் கொள் வனவு செய்ய வேண்டிய நிலைக்கும் பாடசாலை நிர்வாகத்தினர் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், உள்ளூரில் மாடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவ னங்கள் முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## புனரமைக்கப்படாத வீதியால் சிரமம்

கிளிநொச்சி மாவட்டம் பச்சி லைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கரந்தாய் கிராமத்திலிருந்து மாசார் கிராமத்துக் குச் செல்லும் வீதி புனரமைக் கப்படாததால் மழை காலத்தில் போக்குவரத்தை மேற்கொள்வதில் இடர்களை எதிர் கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் இந்த இரண்டு கிலோ மீற்றர் நீளமான வீதி ஏ-9 வீதியில் உள்ள கரந்தாய்க் கிராமத்தில் ஆரம்பித்து மாசார் உட்பட பல கிராமங்களை இணைக்கும் வீதி யாக உள்ளது. இங்கு இடம்பெற்ற பல கூட்டங்களில் இந்த வீதியைப் புன ரமைத்துத் தருமாறு விடுக் கப்பட்ட கோரிக்கை இது வரை நிறை வேற்றப்படவில்லையென மக்கள் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தர்மபூபதி நடராசா

கோண்டாவில் வடக்கு அன்னங்கையைப் பிறப்பிடமாகவும் கரம்பன் கிழக்கு, கரம்பன் காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது நீர்வேலி வடக்கு, நீர்வேலி குறுக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மபூபதி நடராசா கடந்த 03.10.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நாகமணி - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் தயா (பிரான்ஸ்), தயானந்தன் (கொழும்பு), காலஞ்சென்ற தயாநிதி, தயாளினி, காலஞ்சென்ற தயாளன் (சூரன் தயாளன் கூல்பார், உரிமையாளர், யாழ்ப்பாணம்), தயாரூபன் ஆகியோரின் பாசமிகு தாயும் தர்ஷினி (பிரான்ஸ்), செல்வி (கொழும்பு) ஆகியோரின் மாமியும் சபிநாத் (பிரான்ஸ்), ஹரிஸ் (பிரான்ஸ்), அஸ்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரஞ்சோதி, தங்கவேலாயுதம், அஞ்சலிதேவி, சந்திரபாலன் (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, குறுக்கு வீதி.
0778071062- 0778155174 (32416-23-14)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா சுப்பிரமணியம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் கடந்த (04.10.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சின்னத்தங்கச்சி, நாகம்மா மற்றும் பொன்னுத்துரை, சின்னத்துரை, குமாரசாமி, அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், தெய்வேந்திரம் (கனடா), மகேந்திரம் (இளவரசி புடைவை அகம்), இராசேந்திரம் (கனடா), காலஞ்சென்ற அழகேந்திரம் ஆகியோரின் அன்பு தந்தையும், சசிகலா (கனடா), வான்மதி, உதயகலா (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், கஜேந்திரன், தேனுகா, புஸ்யந், மதன்ராஜ், மயூரிகா, மஞ்சுகா, ரம்மியா, நிதேஷ், அபிராமி, அனார்த்தனி, அருந்ததி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(32409)
(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்
021 490 0241

## மரண அறிவித்தல்



### கதிரேசு சதாசிவம் (நடராசா)

காரைநகர் விக்காவிலைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது தாவடியில் வசித்தவருமான கதிரேசு சதாசிவம் (நடராசா) நேற்று (05.10.2013) சனிக்கிழமை காலமானார்..

அன்னார் கதிரேசு- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், கிருஷ்ணபிள்ளை-இளையபிள்ளை தம்பத்தியரின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், தெய்வநாயகி, கேதீஸ்வரி(கனடா), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன், சந்திரசேகர்(கனடா), தெய்வேந்திராசா ஆகியோரின் அன்பு மாமனும், கௌசிகா, தாரணி, கவிதாயினி, கிருத்தியன், பேருஜன்,சிகிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிறுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரி வீதி, காளி கோயிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரதீபா பிரபா விருது
மாசற்ற கல்வி தனை
மாணவர்களுக்கு ஊட்டி வைத்து
மெழுகு வர்த்தி போல் தனை உருக்கி
மிகையாகச் சேவை செய்து
நல்லாசான் விருது பெறும்
வல்ல புகழ்
ஜெயமாலினி சிவானந்தமூர்த்தியினை
ஆசிரியர் சமூகம்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

Best Wishes

கிளி மத்திய ஆரம்ப வித்தியாலயம், கிளிநொச்சி.

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 077 2528717, 0772550267



## Green card lottery

2015 அமரிக்க லொத்தர் விண்ணப்பம் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

திருமுருகன் கொம் நெற்

271A, கே.கே.எஸ் வீதி, யாழ்.
46, வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே.: 021 222 7835

## தபால் மூலம் ஆங்கிலக் கற்கைநெறி

Northern Academic and Leadership Training Center (NALTC) நிறுவனத்தினூடாக நடைபெறும் இலகு வழி (easy way) ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியினை வெளிமாவட்டங்களில் இருப்போரும் பெற்றுக்கொள்ள விரும்பினால் உங்களுக்கான தபால் மூலமான பயிற்சியினை எம்மால் வழங்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்

உங்களுக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள் அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை இல்லை விரும்பியவர்கள் கீழுள்ள முகவரிக்கு உங்கள் விபரங்களை அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு :
116, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நேரத்தில் என்ன நடக்குமோ? கைதடியில் ஆபத்தான கட்டடம்

கைதடி, ஒக்.6

கைதடிச் சந்தியில் ஏ-9 வீதியின் மேற்குப் பக்கமாகவுள்ள தனியார் ஒருவரின் காணியிலுள்ள மாடிக் கட்டடம் ஒன்று எந்த நேரத்திலும் உடைந்து வீழ்ந்து உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ளதாக பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.



இந்த மாடிக் கட்டடம் மிகவும் பழைமை வாய்ந்ததுடன் 2000 ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலின்போது எறிகணைகள் வீழ்ந்து பெரும் சேதமடைந்திருந்தது. இதனால் பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் இந்தக் கட்டடம் கடந்த 13 வருடங்களாக இருந்துவரும் நிலையில் இந்தக் கட்டடத்துக்கு மிக அருகில் உள்ள காணிகளில் பல வியாபார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு புதுப்பொலியுடன் காணப்படுகின்றன. இதனைப் புனரமைக்கவோ அன்றேல் இடித்து அகற்றவோ காணி உரிமையாளர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் கூறப்பட்டது.

இதேவேளை, கடந்த வாரம் இந்தக் கட்டடத்தின் அருகில் நின்று உரையாடியவர்களுக்குப் பக்கத்தில் இந்தக் கட்டட இடிபாடுகள் வீழ்ந்த போதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே இந்த விடயத்தில் சாவகச்சேரி பிரதேச சபையினர் உடனடிக் கவனம் எடுத்து இந்தக் கட்டடத்தை இடித்து அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன், உயிர் இழப்புக்கள் ஏற்படாது பாதுகாக்க வேண்டும் எனவும் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.5

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பரீட்சைத் திணைக்களத்தால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் விவரம் வருமாறு:-

**அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாசாலை**

ச.கஜன்-184, வி.லக்சிகன்-180, ம.யதுர்சா-180, பி.தனோஜன்-177, த.அனோஜன்-177, யோ.லாவண்யா-174, கெ.சஞ்சயன்-171, க.லுக்சிகா-171, ச.நசாந்தி-170, சு.லிந்துஜா-168, தி.நிவேகா-168, சி.தமிழ் வேந்தன்-164, ஸ்ரீ.டயானா-160, சி.பவிதா-159, ஞா.சுகிர்தன்-158, உ.கதீஸன்-153.

**கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி**

லோ.ஜனோசன்-176, பு.விதுசனா-160, சோ.தர்ஷாயினி-157, சி.பரணிதரன்-156, த.இலக்கியா-156, சி.ரஜினா-154.

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**

ஆ.பாலகுரு பெருமாள்-190 யோ. சாரணி- 189 , ர.நிதுஷா-189, தி.கோபிஷாந்-186, ஆ.வித்தியாஷாகர்-186, சி.வினுஜா-186, து.பிரசன்னன்-184, ம.இளநிலா-184, த.அமலன்- 182, க.சஜித்தா-182, பி.லதுசன்-181, ஞா.கஜானன்-181, த.அபிநயா-181, ம.பிராணாளினி-181, பு.ஜாதவி-181, சி.சேந்தினி-180, சி.ரங்கன்-179, த.நிசாந்திகா-179, ரூ.அபிலாஷ்-178, க.சியாமினி-178, ந.அரவிந்தன்- 177, சி.கோபிராம்-177, சு.ரமணன்-176, ஜெ.ஜெயனாஷ்-176, சு.பிரணவன்-176, யோ.ஜனுசாந்-176, சி.கஜானி-176, மு.பிரஷான்-175, இ.ஒவியா- 175, இ.ருவாஷிகா-175, கோ.ரம்சன்-174, தா.குகசாந்-174, ஸ்ரீ.பிரவீனன்-174, ச.டிஷாங்கினி- 174, சு.அஜந்திகா-174, செ.ரிஷிகேசன்-174, சு.ஆதவன்-173, உ.கேசாயினி-173, பி.மானசி-173, கு.தஷாயன்- 173, ஸ்ரீ.சினேகன்-172, ஜெ.சாம்பவி-172, ப.தமிழினி-172, ச.அபிராம்-172, கே.ஜருன்ஜா -172, ஜெ.சஞ்ஜீவ் சரண்-171, பே.சிவசங்கர்-171, மு.வர்ஷா- 171, அ.கம்சிகா-171, மு.சதுசன்-170, ஜெ.ஆர்த் திகன்-170, கு.தனுசாந்-170, தி.தனகஸ்தன்-170, சி.பிரகானா-170, த.செந்துமி-170, மு.அருள்குமரன்-169, க.சஜீவன்-169, சி.சிவநாயகி -169, சா.அக்ஷயா-169, சு.சண்முகப் பிரியா-169, சி.ஜனகராஜ்- 168, நி.டினேஸ்-168, பி.பிரேம் சங்கர்-167, ஜெ.கீர்திகா-167, தி.பீரித்திகா-167, சி.பிருதுவி- 166, ரா.கேதாரணி-166, ர.சந்தியா-166, சி.சங்கவி-165, சி.அபிநயா-165, சு.சாமந்தி-165, வை.யதுஷா -165, த.தனுகரன்-165, ஆ.துஷியந்தன்- 165, க.நிருஜன்-165, த.சிவகரன்-165, ஞா.சபேசன்- 164, து.பிரபாசன்-164, பா.ரனுஜன்-164, சி.ரங்கா-163, த.சாருயன்-163, லி.சிந்துஜன் -163, க.பவித்திரன்-163, ச.வைஷ்ணவி-163, ரா.மகீபன்-162, பி.பிரபாஷ்-162, ச.பிரணவன்-162 ஞா.கஸ்தூரி-162, த.டினுஜன்-162, சு.கேஷிகா-162, தி.சதுர் ஜன்-161, ச.கிஷாயினி-161, தா.தரங்கினி-161, த.ஹம்சிகா-161, அ.பிரகதீஸன்-160, யோ.நயனி-160, ம.சிவசங்கர்-160, சி.ரிஷிகேஷ்-159, லோ.சரணியா-159, ம.சௌமியா-159, யோ.கலாவர்த்தனன்-159, ப.பகிரேகா -159, ப.கார்த்திகன்-158, ரா.அங்கரேஸ்-158, க.சரணியன்-158, சா.அக்ஷயா-158, வி.சஞ்ஜீவன்-158, ஸ்ரீ.சுஹாஷினி-158, ப.விபூஷன்-157, தி.உதிசன்-157, த.கார்த்திகன்-157, வி.பானுஜன்-157, ந.மிருணாலினி-157, ஜெ.பிரிமிகா-157, கு.அருணோதயன்-157, உ.கஜலக்ஷன்-156, த.யதுர்ஷன்-156, க.அபிநயா-156, சி.பிரணவி-156, ம.சங்கவி-156, ப.அபிஷா-156, ப.சஞ்ஜீகா-155, ம.துசானிகா-155, பு.அக்ஷனா-155, யோ.ஜெ.ஜெறுஷன்-154, ர.பலராம்-154, சோ.தேனுஜன்-154, ந.ரிஷானி-154.

**யாழ்.சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**

இ.தவினுகன்-190 ,க.ஜங்கரன்-187 , க.சாம்பவி-184 , ஜெ.ஜெயந்தனா-182, சி.கஜந்தன்-177, கோ.யகீர்த்தா-174, த.கஜித்திரன்-172, ஜெ.கஜீவன்-171, ஜெ.கஜானந்தன்-171, சி.சிவகௌரிகா-170, க.தபனியா-169, வி.துஜிராஜ்-169, ந.சரன்ஜா-167, கு.முதல்வன் -165, ஸ.ஸவிஸ்னா -164, ஸ்ரீ.கிருஸ்ணபிரியன்- 163, சி.ஜிருத்திகா-163, லி.நிஷானா -162, ம.நிகேதன்-159, இ.ஷோபிதன்-158, கு.அபர்ணா-157, லெ.அபிஷேகா-157, அ.கஜனி-157, கோ.சுஞ்சிகா-157, இ.சுபாங்கனி-157, ஜெ.அனுராகன்-156, சு.லோசயன்-156, க.லக்மிகன்-156, ஜெ.சிவகேசன்-155, என்.திசானா -154, ஜீ.பவித்திரா-154.

**மீசாலை விக்னேஸ்வரா**

மு.சவின்சன்-160.

**மணல்காடு றோ.க.த.க.பாடசாலை**

அ.இ.அன்ரன் மௌசிகன்-161.

**யாழ்.இணுவில் மத்திய கல்லூரி**

உ.வதுர்ஷன்-178, க.திவாசவன்-175, த.தனுஜன்-171, ப.வல்லபை-169, அ.சிம்மகி-168, கு.ஜனார்த்தனி-162, தே.இராகவன்-161, ஸ்ரீ.ஹிநிவாசினி-159, பா.தர்மிகா-157, அ.துவாரகா-155, சி.கிக்சா-154.

## வாசிப்பு மாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்குக் கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி, இறுவட்டு மூலமான ஆங்கிலக் கல்வி, முன்பள்ளி மாணவர்களுக்கு கதை சொல்லும் நேரம் மற்றும் திறந்த பொது அறிவுப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நூலகத்தினர் அறிவித்துள்ளனர். (ந)

★ ★ ★

தென்மராட்சி, ஒக்.6

சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொது நூலகத்தினர் மாணவர் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கட்டுரை, கவிதை, பொது அறிவு ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளனர்.

போட்டிகள் எதிர்வரும் எட்டாம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளதால் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு நூலகர் பொ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

கட்டுரைப் போட்டிகள் 8, 9 ஆகிய திகதிகளிலும், கவிதைப் போட்டிகள் 10 ஆம் திகதியும், பொது அறிவுப் போட்டிகள் 11 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன. (ந-9)

# வலி.கிழக்குப் பிரதேச செயலக சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

அச்சுவேலி, ஒக்.6

சர்வதேச சிறுவர் -முதியோர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர் மட்டத்தில் "முதியோர் அபிவிருத்திக்கான சக்தி" என்னும் தலைப்பில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**பேச்சு**

**கீழ்ப் பிரிவு:** 1 ஆம் இடம்- சி.பிரணவி (அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை), 2 ஆம் இடம்- இ.ஜெனனி (புனித திரேசா மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- த.கவிதரன் (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்).

**மத்திய பிரிவு:** 1 ஆம் இடம்- சி.இலக்சனா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), 2 ஆம் இடம்- வே.ஜந்துஜா (புனித திரேசா மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-சி.ரேணுகா (அச்சு வேலி மத்திய கல்லூரி).

**மேற்பிரிவு:** 1 ஆம் இடம்- கு.தீபிகா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), 2 ஆம் இடம்- க.கஸ்மன் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**கட்டுரை**

**கீழ்ப் பிரிவு:** 1 ஆம் இடம்- இ.டனுசா (கோப்பாய் மகா வித்தி.),2ஆம்இடம்-வி.பவிக்னா (புத்தகலட்டி விஸ்ணு வித்தி.), 3 ஆம் இடம்- த.கவிதரன் (கோப்பாய் நாவலர் வித்தி.)

**மத்திய பிரிவு:** 1 ஆம் இடம்- க.சுவர்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), 2 ஆம் இடம்- ச.துஷாலினி (கோப்பாய் சரவணபவானந்த வித்தி.), 3 ஆம் இடம்- யோ.தனுசியா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அ.பஸ்மியா (ஊரெழு கணேசா வித்தி.).

**மேற்பிரிவு:** 1 ஆம் இடம்- இ.ஜெயப்பிரியா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), 2 ஆம் இடம்-பு.நிசாலினி (உரும்பிராய் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்- கு.கம்சிகா (இடைக்காடு மகா வித்தி.).

**கவிதை**

**கீழ்ப் பிரிவு:**1 ஆம் இடம் - த.பூமிகா (புத்தூர் பஞ்சசீக வித்தி.), 2 ஆம் இடம்- த.விஸ்ணுகா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.),3 ஆம் இடம்- நகவிஸ்ணா (புத்தகலட்டி விஸ்ணு வித்தி.).


**மத்திய பிரிவு:** 1 ஆம் இடம்- ஸ்.பிரியதர்சினி (அச்சுவேலி மத்திய கல்லூரி), 2 ஆம் இடம்- சி.ஜெனிபர் (புனித திரேசா மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்-ஜெ.சதுர்சனா (கோப்பாய் சரவணபவானந்த வித்தி.).

**மேற் பிரிவு:**1 ஆம் இடம்- ச.பாமினா (அச்சுவேலி மத்திய கல்லூரி), 2 ஆம் இடம்- ச.பிரியசாந்தினி (புனித திரேசா மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- இ.விஜயராஜ் (உரும்பிராய் இந்துக் கல்லூரி). (ந-11)

# ஊரியான் இந்து மயானத்தில் சடலங்களை எரிக்க கொட்டகை

கைதடி, ஒக்.6

கைதடி ஊரியான் இந்து மயானத்தில் சடலங்களை எரிப்பதற்கான கொட்டகையை சாவகச்சேரி பிரதேச சபை அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்த மயானத்தில் கடந்த பல வருடங்களாக இளைப்பாற்று மண்டபம் மற்றும் மழைகாலங்களில் சடலங்களை எரியூட் டுவதற்கான கொட்டகை என் பன இல்லாத நிலை இருந் தது. பொது அமைப்புக்களின் வேண்டுகோளின் பேரில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேச சபை இளைப்பாற்று மண்டபத்தை அமைத்துக் கொடுத்திருந்தது. தற்போது சடலங்களை எரிப்பதற்கான கொட்டகையை அமைத்துக் கொடுத்து உதவியுள்ளது.



மழை காலம் நெருங்கி வரும் இவ் வேளையில் இக்கொட்டகையை சாவகச்சேரி பிரதேச சபைநிலைமை அறிந்து அமைத்திருப்பது வரவேற்கக் கூடியதொன்று என்றும் இதே போல் ஏனைய மயானங்களையும் கவனத்தில் எடுத்தால் சிறப்பு என்றும் பலரும் தெரிவித்தனர். (ஒ-288)

# இடைவிலகிய மாணவரை மீண்டும் இணைக்கும் பணி தொடரும்

**யாழ்.வணிகர் கழகத் தலைவர் கூறுகிறார்**

யாழ்ப்பாணம், ஒக். 6

பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி அவர்களை மீளவும் பாடசாலையில் இணைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன் னெடுக்கப்படும்எனத் தெரிவித்த வணிகர் கழகத் தலைவர், இனிவரும் காலத்தில் மாகாண சபையுடன் இணைந்து இந்தச் செயற்பாடு பரந்த அளவில் முன்னெடுக்கப் படும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்லத்தின் இட நெருக்கடி காரணமாக 7 ஆயிரம் சதுர அடி பரப்பைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்று எமது வணிகர் கழகத்தினால் அமைக்கப்பட்டு வருகின்றது. இது அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு இந்த வருட ஆரம்பத்தில் யாழ்.வணிகர் கழகத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு மீண்டும் பாடசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் 525 மாணவர்கள் இனங்காணப்பட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு பாடசாலைக்கு மீளவும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சேவைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக நான் வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டேன். துரதிர்ஷ்டவசமாக நான் தோல்வியைத் தழு[illegible] வந்த பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று தெரிவித்துள்ளார். (ஒ-5)

# நவாலிப் பகுதியில் விதைப்பு ஆரம்பம்

நவாலி, ஒக்.6

நவாலியில் பெரும்போக நெற் செய்கைக்கான விதைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

நவராத்திரி பூசை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் சகல விவசாயிகளும் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதனால் ஆடு, மாடுகளைக் கட்டி வைத்து வளர்க்குமாறு நவாலி வடக்கு விவசாய சம்மேளனத்தினர் [illegible] அப்பகுதி மக்களுக்கு அறிவித்துள்ளனர். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

# முன்பள்ளி மாணவருக்கு நாளை இலைக்கஞ்சி

தென்மராட்சி, ஒக்.6

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை கொடிகாமம் மத்திய முன்பள்ளியில் கற்கும் 80 மாணவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்கவுள்ளனர். அத்துடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கச்சாய் நூலக எல்லைக்குட்பட்ட 13 முன்பள்ளிகளின் சிறார்களுக்கான சொல்வளப் போட்டியை நடத்தவுள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளனர். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குறைந்த செலவில் இணையத்தள வடிவமைப்பு

பாடசாலைகள், வியாபார நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் உங்களுக்குத் தேவையான இணையத்தளங்களை தரமாகவும் மிகக் குறைந்த செலவிலும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

(32304) (7.6.3) Innovative Designers: 077 339 4457 web.www.idjaffna.com

## காணியுடன் கூடிய வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் வீதி, இல. 15, பிரதான வீதியி லிருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்த 6 பரப்புக் காணி யும், இல. 838, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் 5 பரப்பு காணியுடன் கூடிய வீடும், கச்சேரி நல்லூர் வீதி யில் நல்லூர் கோயில் முன்பாக 600 மீற்றர் தூரத்தில் 2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 837 3354, 077 876 8621 (32296) (7.6.3)

## நிரந்தர தொழில் வாய்ப்பு

**எம்மிடம் நிரந்தர தொழில் வாய்ப்பு:**

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம், கோடியல், சொக்லேட், சவர்க்காரம், காமெண்ட்ஸ், பென்சில், கோழி இறைச்சி தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர், பொதியிடல், தரம் பிரித்தல் போன்ற பிரிவுகளுக்கு 18 -50 வயது, ஆண், பெண் இருபா லாரும் தேவை. சம்பளம் 18,000/=, 25,000/= 30,000/= உணவு, தங்குமிடவசதி என்பன செய்து தரப்படும். வருகை தரும் நாளிலேயே தொழில் வழங்கப்படும்.

தொடர்பு: 077 556 1883

## Wanted Medical (Sales) Representative

மருத்துவ உபகரணங்கள், மருந்துவகைகள் இறக்குமதி செய்து விநியோகிக்கும் வர்த்தக ஸ்தா பனத்துக்கு மேற்குறிப்பிட்ட பதவி நிலைக்கு விண் ணப்பம் கோரப்படுகிறது.

* விண்ணப்பிப்பவர் வயதெல்லை 20-35 ஆகவும் A/L விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத் தல் வேண்டும்.
* அடிப்படைச் சம்பளத்துடன் போக்குவரவு, மேலதிக ஊக்கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு: 07.10.2013 திங்கள் (10 AM-5PM)
கீழ்வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

MEDCON (PVT) LTD
NO: 218 1/1 HOSPITAL ROAD, JAFFNA
MOBILE: 077 012 4415, 071 794 3439 (32205)(3.6.4)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை

மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள

**வீடமைப்புத் திட்டத்தில்**

பணியாற்றுவதற்கு கட்டட நிர்மாண வேலையில் அனுபவமுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். உங்களது விண்ணப்பத்தைப் பின் வரும் முகவரிக்கு இம்மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

முகாமையாளர்,
மெகா கன்ஸ்ரக்ஷன் (பிறைவேற் லிமிட்)
18 ஏ, கெலன்கடுவ பிளேஸ்,
வெள்ளவத்தை-கொழும்பு-06
(32345) (3.6.4)

## சொகுசு Carகள் வாடகைக்குண்டு

* எம்மை விட குறைந்த கட்டணத்தில் Car களை யாழில் எங்குமே பெற முடியாது
* கொழும்பு சென்று வர 12,000/= நிகழ்வுகளுக்கு 4500/=

தொ.பே.077 876 1705
(32329) (45.6.3)

## வான் விற்பனை

59- வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 267 3858
(32344)(4.6.3)

## வாடகைக்கு

கச்சேரி, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மற்றும் சென்ஜோன்ஸ் கல்லூரி களுக்கு மிக அருகில் வீட்டின் ஒரு பகுதி அல்லது அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 452 7671
(32337)(4.6.3)

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் இருந்து 50M தூரத்தில் 1 பரப்புக் காணி நன்னீர் கிணறு மற்றும் ஒரு பக்க மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 077 942 8654, 077 329 6407
(32350)(4.6.3)

## விற்பனைக்கு

*MOTORCYCLE -HONDA-CB125+ (WPUC xxxx) RS 135,000/=
*CAR. MORRIS MINOR 5 SRI xxxx
தொடர்பு: 077 373 4109
(32401)(4.6.3)

## கடை வாடகைக்கு

புங்கன் குளம் வீதி, அரியாலையில் 20 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு. (அரியாலை சனசமூக நிலையம் முன்பாக)
தொடர்பு: 021 222 3250
(32366)(4.6.3)

## காணி விற்பனை

மல்லாகத்தில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வைரவர் கோயிலுக்கு அண்மையில் 9 அடி தனிப்பாதையுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 773 2164
(சி/12584)(4.6.3)

## வீடு வாடகைக்கு

கந்தர்மடச் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 656 2661 (32350) (7.6.3)

## எஞ்சலீஸ் அழகு நிலையம்& பயிற்சியகம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்.....
பே(F,சியல், ஸ்ரைட்டனிங், பேமிங், கலரிங் மணப் பெண் அலங்காரம், திரட்டிங் மற்றும் பல.....
தொடர்பு: இல. 94, கன்னாதிட்டி வீதி, காளிகோயில் அருகில் யாழ்ப்பாணம்.
077 627 7332
(32346)(4.6.3)

## கடை வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:118, ஆரியகுளம் சந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
077 711 2490
(சி/12592) (4.6.3)

## காணி விற்பனைக்கு

ஐந்து கடைகள், வாகன சுத்திகரிப்பு நிலையம், வீடு என்பன அடங்கிய 2 பரப்புக் காணி றக்கா றோட் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ரிந்தூ மில்ஸ்
No-18, றக்கா றோட், யாழ்ப்பாணம். (32326)
077 991 2304 (7.6.3)

## மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்

வெற்றிகரமாக ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள B.M.N Pvt (Ltd) நிறுவனம் புதிதாக நெல்லியடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் தனது கிளையை ஆரம்பிக்க உள்ளது. முகாமைத்துவத்தில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது.
கல்வித் தகைமை O/L, A/L வயது 18-30
[illegible] (32357)
தொடர்பு: 021 568 9998, 077 872 4060 (7.6.3)

## தளபாடங்கள் மலிவு விலையில்

புதிய அலுவலக மேசை, Executive Chair, Projector, விரிவுரைக் கதிரைகள், Box set
தொடர்பு: 021 568 9090 (32369) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கீரிமலை வீதி பண்டத்தரிப்பில் 2 வீடுகள் கொண்ட (6) ஆறு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 663 6374
(சி/12588) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சென்ஜோன்பொஸ்கோ பாடசாலையைச் சேர்ந்த **குகநாதன் தர்ஷன்** 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளி களைப் பெற்று சித்தியடைந் தமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
துவாரகன், திவாகன்
(32354)(3.6.4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான ஜனாதிபதி விருது பெறும் ஆசிரியை திருமதி தாரணி சிவகரன் அவர்கள் 'பிரதீபா பிரபா' விருதைப் பெறும் எமது பாடசாலை இசை ஆசிரியரைப் பாடசாலைச் சமூகம் வாழ்க! வளர்க! என்று வாழ்த்துவதில் பெருமையடைகின்றது.



பாடசாலை நலன்புரிகழகம்
யா/ இராமநாதன் கல்லூரி.

## உளமார வாழ்த்துகின்றோம்

கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புத்தாக்குநர் போட்டியில் தேசிய மட்டத்தில் பங்குபெறும் ஆசிரியர் திருமதி பகீரதி சிவஞானம் அவர்கள் சிறந்த விருதுகளைப் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.



பாடசாலை நலன்புரிகழகம்
யா/ இராமநாதன் கல்லூரி.
(32348) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவிலைச் சேர்ந்த சுதன் அகிலா தம்பதியரின் செல்வப் புதல்வியும் யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்பவருமான

செல்வி **சுதன் சங்கவி** அவர்கள்

2013இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை யில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந் ததையிட்டு பெருமையடைகின்றோம். மேலும் அவர் தொடர்கல்வியில் பல சாதனைகள் பதித்து நீடூழி வாழ எல்லாம் வல்ல வைரவப் பெருமான் பாதம் பணிந்து அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

தாத்தா, அம்மம்மா: திரு.திருமதி சின்னையா தங்கரத்தினம்
அப்பா அம்மா: திரு.திருமதி சுதன் அகிலா
மாமா, அத்தை, பிள்ளைகள்: திரு.திருமதி மோகன், நந்தினி (கனடா)
: திருமதி. ரமேஸ், மதி (பிரான்ஸ்)
(32360)(10.6.3)

## இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

### ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்




கையிருப்பில் சில யந்திரங்களே உள்ளதால் ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே முந்துங்கள்!

Sri Lanka 0777 614 186

flex 4, IBC, Wellawate, Colombo 06, Sri Lanka.

FLEX Graphic


## வேலை வாய்ப்பு

துறைமுகத்திலும், விமான நிலையத்திலும் (தனியார்) கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள், வெல்டர், மெக்கானிக், பெயின்டர், தச்சர் மற்றும் விமான நிலையத்தில் கேட்டரீஸ், சுத்திகரிப்பு, லொன்றி, காகோ போன்றவற்றுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000/=, 25,000/=, 30,000/= (தொழில் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 556 1883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sunjeys Tourism இன்
## Your October Holyday Planning




Oct 11 முதல் 13 வரை
கண்டி, மாத்தளை
(பின்னவல உட்பட)
நுவரெலியாவில் உள்ள முக்கிய இடங்கள் சென்று வர, ஒருவருக்கு ரூபா 8900/= மட்டுமே.

வவுனியாவுக்கு அப்பாலுள்ள கோயில்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும். 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை. கட்டணம் ரூபா 14900/= மட்டுமே.
போகும் இடங்கள் : மடு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், கண்டி, மாத்தளை, நுவரெலியா உட்பட.



குறிப்பு:
உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட) தொலைக்காட்சி, அஜஸ்ரபிள் சீற் போன்ற சகல வசதிகளுடனும் சுற்றிப் பார்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஆசனப் பதிவு முன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆசனப் பதிவுகளுக்கு: Sunjeys Tourism
713, Hospital Road, Jaffna. 077 747 4111 021 221 7070

வரணி ஆசனப்பதிவு நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2868

(C/12599)(7,6,3)


# சேவை நலன் பாராட்டு



யா/மகாஜனக் கல்லூரியிலிருந்து
இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை
ஒய்வு பெற்று மணிவிழாக்காணும்
உப அதிபர்
**திருமதி பத்மஜா லோகநாதன்**
பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர், உப அதிபர்
ஆசிரியர் சேவை தரம்-I
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**ஆசிரியர் கல்வி கற்ற பாடசாலைகள்**

ஆரம்பக் கல்வி - யா/சைவப்பிரகாச வித்தியாலயம், தெல்லிப்பழை.
இடைநிலைக்கல்வி - யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
கொ/பெண்கள் உயர்தரப் பாடசாலை கொழும்பு.
கொ/சாந்த லோறன்ஸ் கன்னியர் மடம், வெள்ளவத்தை.

**ஆசிரிய சேவைகள்:**

- கொ/சாந்த கிளேயர்ஸ் மகளிர் மகா வித்தியாலயம் 19.08.1974-31.12.1979
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, வசாவிளான் 01.01.1980 - 31.12.1982
- களு/ஹொரேந்துடுவ முஸ்லிம் வித்தியாலயம் 01.01.1983-30.08.1984
- யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை 01.09.1984 - 05.10.2013

மகாஜனக் கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியர், விஞ்ஞான மன்றத் தலைவர், பகுதித் தலைவர், பரிசுக் குழு பொறுப்பாசிரியர், விளையாட்டு செயற்குழு உறுப்பினர், பாடசாலை மேம்பாட்டுக்குழு பொரு ளாளர், ஜயரத்தினம் நூற்றாண்டு விழா உப தலைவர், ஒழுக்காற்றுக்குழு உறுப்பினர், முகாமைத்துவக் குழு உறுப் பினர் உப அதிபர் ஆகிய பதவிகளிலிருந்து தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உயர்தரத்தில் நிறை வேற்றிய உன்னதமான ஆசிரியராவார்.

மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை இவ்வாசிரியரிடம் கற்கும்போது கூடிய ஈடுபாட்டுடன் கற்று தெளி வான விளக்கங்களைப் பெறுவர். இதனால் க.பொ.த (சா.த) பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சிறந்த பெபேறு களை மாணவர்கள் பெற்றனர். இணைப்பாடவிதான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு பொறுப்பான உப அதிபராகக் கடமையாற்றினார். இவருடைய சிறந்த அணுகுமுறையினாலும் மாண வர்களையும், ஆசிரியர்களையும் உற்சாகமூட்டுவதாலும் மாணவர்கள் சிறந்த வெற்றிகளையும், சாதனை களையும் நிலை நாட்டி கல்லூரிக்குப் பெரும் புகழ் தேடிக் கொடுத்தனர்.

கல்லூரியின் நிர்வாகத்துக்கு மிகச் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்போடும் கடும் உழைப்போ டும் பணிபுரிந்த உப அதிபராவார். மாணவர்களுக்கு சிறந்த நற்பண்புகளைப் போதித்து வளர்ப்பதோடு ஆசி ரியர்களுடன் உயர்ந்த உறவைக் கட்டி வளர்ப்பதில் பெரும் பணியாற்றியுள்ளார்.

எங்கள் மகாஜனக் கல்லூரியில் 29 வருடங்கள் உன்னதமான பணியாற்றி மகாஜனவின் புகழுக்கும் கீர்த் திக்கும் பாடுபட்டு உழைத்த உத்தம ஆசிரியையாவார். இவரது ஓய்வுக்காலம் ஆரோக்கியத்துடன் மேலும் மகிழ்ச்சியுடன் வாழ பாடசாலை சமூகத்தின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின் றோம்.

(C/12598)(10,6,3)

பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## வலி.வடக்கில் டெங்கு ஒழிப்பு வாரம்

வலி. வடக்கு, ஒக். 6
வலி வடக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனை வலி. வடக்கு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் டெங்கு ஒழிப்பு வார செயல்பாடுகள் நாளை திங்கள்கிழமை 7 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்துக்கு நடைபெறவுள்ளது.

07 ஆம் திகதி அளவெட்டி வடக்கு, அளவெட்டி கிழக்குப் பகுதிகளிலும், 08 ஆம் திகதி தெல்லிப்பழை கட்டுவன் பகுதிகளிலும், 09 ஆம் திகதி கீரிமலை, பன்னாலை பகுதிகளிலும், 10 ஆம் திகதி வயாவிளான், குரும்பசிட்டிப் பகுதிகளிலும், 11 ஆம் திகதி அளவெட்டி தெற்கு, மேற்குப் பகுதிகளிலும், 12 ஆம் திகதி மல்லாகம் பகுதியிலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஓ-86)

## சேவையில் இருந்து ஓய்வு

தென்மராட்சி, ஒக். 6
தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலராகக் கடமையாற்றிய தில்லைநாதர் மகாலிங்கம் தமது 30 வருடகால அரச சேவையில் இருந்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் இளைப்பாறியுள்ளார்.

இவர், நீண்டகாலம் தென்மராட்சி தெற்கின் தனங்களப்பு, மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றி அங்கு பல்வேறு விவசாயத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளார். (ஓ-9)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த
**பாஸ்கரன் நிலோச்சன்**
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை இட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் பரீட்சையில் சித்தியடைய வழிகாட்டிய ஆசிரியர்
**ஸ்ரீ தேவி மோகனகாந்தன்**
அதிபர் க. பொன்னுத்துரை
ஆகியோரையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தங்கை.

(32335)(3.6.4)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
**ஜெயந்தன் சஞ்சீவ்சரண்**
யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று 2013 இல் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஜெயந்தன் தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**சஞ்சீவ்சரண்**
மேலும் கல்வியில் சிறந்து விளங்கி உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். இவருக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.




வாழ்த்துவோர்:
அப்பம்மா, பெரியப்பா குடும்பம்,
அத்தை, மாமா குடும்பம் (அமெரிக்கா),
சித்தப்பா குடும்பம்.
535, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

(32359)(3.6.4)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ யாழ். மத்திய கல்லூரியில்
தரம் 5 இல் கல்விகற்கும் மாணவனும்
ராகவன் பொன்முடி
தம்பதியரின் அன்பு மகனுமான
செல்வன் **ராகவன் மாதுளன்**
2013 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளை பெற்றதையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
மேலும் அவர் கல்வியில் உயர்ந்திட புற்றளை சித்தி விநாயகப் பெருமானின் அருளையும் வில்லூன்றி விநாயகப் பெருமானின் அருளையும் வேண்டி நிற்கின்றோம். அவரின் கல்விக்கு உரமூட்டிய வகுப்பாசிரியர் கி. [illegible] அவர்களுக்கும், அதிபருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் மு.வே. அன்பழகன் ஆசிரியர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பிமார், அப்பப்பா, அப்பம்மா,
தாத்தா, பெரியம்மா குடும்பம், சித்தப்பா குடும்பத்தினர், மாமா

(32407)(4.6.3)


## காணி விற்பனைக்கு

பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் ஊரெழுவில் நல்ல சூழலில் உள்ள இரண்டு (2) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 210 0972
(32361)(4.6.3)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, பொறுப்புக்கள் அற்ற, தாரமிழந்த, 1960ஆம் ஆண்டு பிறந்தவருக்கு, தகுந்த துணை தேவை. சாதி, சமயம், நிறம் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. விதவைகள் ஆதரவற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 075 052 6849
(37545)(7.6.3)

## கணிதம் விஞ்ஞானம்
### 6-G.C.E O/L வரை

ஆங்கில மொழி மூலப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். தமிழ், ஆங்கில மொழிகளில் பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்த ஆசிரியர், பெற்றோர் மட்டும்.
தொடர்பு: 077 242 3400, 077 887 1217
(32404)(4.6.3)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே.கே. எஸ் வீதியில் (ஆல்சிலோன் புத்தகசாலைக்கு முன்பாக) 50 அடி நீளமும் 13 அடிஅகலமும் உடைய கடை வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்கள்/அலுவலகங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 230 6727
(32568)(4.6.3)

## காணி வீடு விற்பனைக்கு

உடுப்பிட்டி வீதியில் நவிண்டிலில் கீறோ கடைக்கு எதிரிலுள்ள ஒழுங்கையில் (றோட்டிலிருந்து 100M தூரம் 8 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 679 4833
(சி/12595)(4.6.3)

## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆங்கிலம்/தமிழ்

பிரபல கல்லூரிகளில் சிறப்பாகக் கற்பித்து சிறப்பான பெறு பேறு பெற்ற ஆங்கில மொழிப் பட்டதாரி ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 30 வருட [illegible]. மேற்படி பாடங்கள் தனிப்பட்ட முறையிலும், சிறு குழுக்களாகவும் கற்பிக்கப்படும். குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் மிகச் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும்.
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
077 242 3400, 077 887 1217
(39405)(10.6.3)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்
## புலமைப்பரிசில் பரீட்சை-2013

சித்தியடைந்தோர்
யா/ வல்லை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை




தவனேஸ்வரன் அபிஷேக்
176 புள்ளிகள்



வீரசுரேந்திரன் பாலகுமாரன்
172 புள்ளிகள்



குமாரவேல் பகீரதி
163 புள்ளிகள்

யா/ வல்லை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2013 ஆம் அண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களுடன் பரீட்சையில் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம். அத்துடன் இவர்களின் முன்னேற்றத்திற்கு உதவிய பாடசாலையின் அதிபர், ஆசிரியைகள் [illegible] வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச்சமூகம்.

(29550)(4.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி வலயத்தில் ஆசிரியர் தின விழா

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறும். வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலை மையில் நடைபெறும். விழாவுக்கு விருந்தினர் களாக வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் களாக கடமையாற்றிய இளைப்பாறிய ஆ.ஶ்ரீஸ் கந்தமூர்த்தி. பீ.முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். விழாவில் ஆசிரியர்கள் கௌரவிப் பும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ந-9)

## நீங்காத நினைவுகளுடன்

மலர்வு
16.06.1995

உதிர்வு
06.10.2012



காற்றினிலே கலந்த செய்தி
காதோரம் வந்து
ஆண்டொன்று ஆகியதோ
ஆனாலும் ஆறவில்லை
உன் துயரம்
நேற்றுவரை எம்மோடு நிழலாக
திரிந்தவன் இன்று நிலவாகி
எமக்கு ஒளி வீசுகின்றாய்
என்றும் உன் நினைவுடன்
ராம் பெரியப்பா குடும்பம்,
கௌசலாக்கா குடும்பம்.

**ஜெயக்குமார் கீர்த்திகன்**

(சி/12590)(3.6.4)

## ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 6

நீர்வேலி வடக்கு பன்னாலை சிவசக்தி சனசமூக நிலையத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழா வும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் ஐ.சிவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக வலி.கிழக்கு கோப்பாய் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இணைப்பாளர் இ.ஜங்கரன் கலந்து கொள்வார்.

அன்றைய இரவு விசேட நிகழ்வாக அன்று முதல் இன்றுவரை தமிழர்களுடைய கலாசாரத்தை பேணிக் காத்து வருபவர்கள் ஆண்களா? பெண் களா? எனும் தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்ற மும் . இசை நிகழ்வும் இடம்பெறும். (ஓ-14)

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **நமசிவாயம் நடராசா**



அன்னை மடியில்
17.01.1923

ஆண்டவன் அடியில்
06.10.1997

திதி : 06.10.2013 பிரதமை

அன்பு இரக்கம் கொண்ட அன்புத் தெய்வமே ஐயா!
எல்லோருக்கும் உதவிய கொடை வள்ளலே ஐயா!
எமைவிட்டுப் பிரிந்து பதினாறு ஆண்டுகள் ஆனாலும் ஐயா!
எம் உள்ளம் என்றும் உங்களை நினைத்திடும் ஐயா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக அம்பாளை வேண்டி நிற்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
கல்வயல் ஐயனார் கோவிலடி, சாவகச்சேரி.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(32353) (7.6.3)

## பொதுக் கூட்டம்

வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அள வெட்டி மேற்கு கொட்டுப்பனை இந்து மயான அபி விருத்தி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேன்தமிழ் சனசமூக நிலைய மண்டபத்தில் மயான அபிவிருத்திச் சபைத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர் தன் மற்றும் பிரதேச சபை யின் உறுப்பி னர்களும் கலந்து கொள் ளவுள்ளார்கள். (ந)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
05.02.1935

ஆண்டவன் அடியில்
17.09.2012



அமரர்
**மனோன்மணி இராசசிங்கம்**
(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)

அம்மா!
பருவங்கள் மாறலாம்
பாதைகள் மாறலாம்
உருவங்கள் மாறலாம்
பிறப்புக்கள் மாறலாம்
ஆனால்
நீங்கள் எங்கள் மீது கொண்ட
அன்போ அல்லது நாங்கள் உங்கள் மீது
கொண்ட அன்போ என்றுமே மாறாது!
"வானுள்ளவரை நிலவிருக்கும் -எம்
வாழ்வுள்ளவரை உங்கள் நினைவிருக்கும்"

இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையானது எமது இல்லத்திலும், சைவ வித்தியா விருத்திச் சங்கம் (சிறுவர் இல்லம்) திருநெல்வேலியிலும், சாந்தி நிலையம் (அரச முதியோர் இல்லம்) கைதடியிலும் நடைபெறுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவுகளுடன்...
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(32365)(10,6,3)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 ★ 11 ★ 1932

மறைவு
06 ★ 10 ★ 2001




மிருதங்க வித்துவான் கலாபூசணம்
**பிரம்மஸ்ரீ அ. கணேஷ சர்மா**
(வட்டுக்கோட்டை)

என்றென்றும் உமது நினைவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, உற்றார், உறவினர், நண்பர்கள்.

A.G. SARMA & CO
&
A G S SHARMA & CO
(Chartered Accountants)
(Management & Staff)
swaminathan@agsarma.com
www.agsarma.com

தகவல்:
க.சுவாமிநாதன் சர்மா (மகன்)
0777 802500

(C/12533)(10,6.3)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பூரணம் பழனிவேலு (ஜானகி)

யாழ் கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும், கொண்ட பூரணம் பழனிவேலு 01.10.2013 செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - அழகம்மா ( Malaysian Pensioner ) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், கந்தவனம் - சிதம்பரம் தம்பதிகளின் மூத்த மருமகளும், கந்தவனம் பழனிவேலு ( ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் ) அவர்களின் அன்பு மனைவியும், சர்வேஸ்வரன், மகேஸ்வரன், மனோரஞ்சிதம் (கனடா), நகுலேஸ்வரன் ( லண்டன் ), ஜெகதீஸ்வரன் ( இலங்கை ), விமலேஸ்வரன் ( லண்டன் ), ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனோன்மணி, யோகேஸ்வரி, பத்மநாதன், ருக்மணி, தில்லைநாதன் ( கனடா ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையா பாலச்சந்திரன், சந்தானலெட்சுமி, விமலா, சசிரேகா, பிறேமா, கெங்காதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், குபேரன், பொணிவெஸ் கிருத்திகா, தர்ஷிகா, கவிக்குமரன், சங்கவி, ஆர்த்தி, நிஷாந்தன், விதுஷா, சிந்துஜா, மனீஷா, ஆரபி, நிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஏரன் அவர்களின் பூட்டியும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பார்வைக்கு : சனிக்கிழமை - 05.10.2013. பி.ப 5.30 பி.ப.9.30
கிரியை : ஞாயிற்றுக்கிழமை - 6.10.2013 மு.ப.9.30 தொடக்கம் 11.30மு.ப

முகவரி : Elgin Mills Road, Richmond Hill Cemetery, ON Canada
கனடா : 001 6473477959

தகவல் : V.ஜெகதீஸ்வரன் (ஜெகன்) 31 A, மேரிஸ் வீதி, கொழும்பு - 04 077 2449365

(C/12377)(10,6,3)

### கனகர் கணேசன்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் கணேசன் கடந்த 02.10.2013 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கிருஷ்ணர் கோயிலடி,
கோப்பாய். 0770742704

(32339)(10,6,3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு பழுதடைதல்



உணவு பழுதடைதல் என்பது சாதாரண மனிதனால் உட்கொள்ள முடியாததொரு அளவுக்கு அது பௌதிக, இரசாயன மாற்றங்கள் அடைந்து காணப்படுதல் ஆகும்.

நுண்ணங்கிகளின் தாக்கம் காரணமாகவும், ஒட்சியேற்றத் தாக்கங்களின் மூலமாகவும், உணவில் காணப்படும் நொதியத்தாக்கங்கள் காரணமாகவும், உணவைச் சரியான முறையில் பாதுகாக்காமை போன்ற பல காரணங்களாலும் உணவு பழுதடைகின்றது. உணவுக்கேஉரித்தான அகக்காரணிகள், உணவு காணப்படும் சூழலில் நிலவும் சூழற்காரணிகள் போன்றன உணவு பழுதடைதலைப் பாதிக்கும் காரணிகள் ஆகும்.

அகக் காரணிகள் என்பது உணவின் தன்மையைப் பொறுத்தது. இவை PH ஈரப்பதன், போசாக்கின் அளவு, உயிரியல் கட்டமைப்பு, உணவில் இயற்கையாக காணப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் ஆகும். PH காரணியால் கூடுதலாக பழங்கள் பழுதடைகின்றன. சகல PH வீச்சுகளிலும் வெவ்வேறு வகையான நுண்ணங்கிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எலுமிச்சம்பழம் (PH 1.8-2), தோடம்பழம் (PH3.6-4.3), வாழைப்பழம் (PH 4.5-4.7) போன் றவை மதுவங்களாலும் இழையுரு பங்கசுக்களாலும் பழுதடைபவை.

ஈரப்பதன் , நுண்ணங்கிகளின் வளர்ச் சிக்கும் பெருக்கத்துக்கும் வேண்டப்படும் அடிப்படையான காரணியாகும். ஈரலிப்புத் தன்மை கூடிய உணவுகள் விரைவில் பழு தடையும். இறைச்சி, மீன் போன்றவை பக்றீரி யாக்களால் பழுதடையும். ஈரலிப்பைக் குறை வாகக் கொண்ட பால்மா, மா போன்ற மிக மிக குறைந்த ஈரலிப்புடைய உணவுப் பொருள்கள் இலகுவில் பக்றீரியாக்களால் அல்லது பூஞ்சணங்களால் பழுதடைய மாட்டா.

போசாக்கின் அளவு கூடிய உணவுகள், விரைவில் பழுதடைகின்றன அதற்குக் காரணம் நீர். நைதரசன், விற்றமின், கனியுப்புக்கள் போன்றவை, நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கும் பெருக்கத்துக்கும் உதவுகின்றன.

உயிரியல் கட்டமைப்பானது, உணவு பழுதடைதலில் முக்கிய பங்கு செலுத்துகின்றது. இயல்பாகவே பழங்களில் காணப்படும் வெளித்தோல் சேதமாவது, முட்டைஓடு சிதைவடைதல், பூச்சி, புழுத் தாக்கம் போன்ற செயற்கைக் காரணிகளினால் உணவில் இயற்கையாக அமைந்த உயிரியல் கட்டமைப்பு சிதைக்கப்படுகின்றது. இதனால் உணவுக்கான பாதுகாப்பு இழக்கப்படுகின்றது.

உயிரியல் கட்டமைப்பு சிதைக்கப்படுவதால் உணவு பழுதடைகின்றது.


உணவுப் பதார்த்தங்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட வெப்பநிலை, ஈரப்பதன், வாயுக்கள் தயாரிக்கப்பட்ட வீதம், சேர்க்கப்பட்ட இரசாயனங்கள் போன்றவை உணவு பழுதடைதலை ஏற்படுத்தும் சூழற்காரணிகளாக அமைகின்றன.

நடுத்தர வெப்பநிலையில் உள்ள உணவு விரைவில் பழுதடைய வாய்ப்புள்ளது. மற்றும்


> ஈரப்பதன் , நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கும் பெருக்கத் துக்கும் வேண்டப்படும் அடிப்படையான காரணியாகும். ஈரலிப்புத் தன்மை கூடிய உணவுகள் விரைவில் பழு தடையும். இறைச்சி, மீன் போன்றவை பக்றீரியாக்களால் பழுதடையும். ஈரலிப்பைக் குறை வாகக் கொண்ட பால்மா, மா போன்ற மிக மிகக் குறைந்த ஈரலிப் புடைய உணவுப் பொருள்கள் இலகுவில் பக்றீரியாக்களால் அல்லது பூஞ் சணங்களால் பழுதடைய மாட்டா.

உயர் சாரீரப்பதன் உள்ள இடங்களில் நீர் கிடைக்கும் அளவு அதிகரிக்கின்றது. இப்படியான இடங்களில் உலர் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும்போது ஈரலிப்பை உணவு உறிஞ்சுவதன் மூலம் உணவு பழுதடைகின்றது.

ஆகையால் உணவைப் பாதுகாப்பதற்கு, பொருத்தமான உணவு வகைகளுக்கு ஏற்ப குளி ரூட்டல், உலர் பாதுகாப்பு, வெப்பப் பாதுகாப்பு, பாச்சர் பாகம் போன்றவற்றை பயன்படுத்திப் பாதுகாப்போம்.



[illegible]
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



> ஒழுங்கான குடற் செயற்பாட்டுக்கும், கழிவுப் பொருள்கள், நச்சுப் பொருள்கள் என்பனவற்றின் வெளியேற்றத்திற்கும் உதவுகின்றது. கொலஸ்ரோல் அகத்துறிஞ்சலையும் குறைக்கின்றது. அதீத நிறை உடையவர்களும், நீரிழிவு நோயாளர்களும் அன்னாசிப் பழத்தை வேண்டியளவு உட்கொள்ள முடியும்.

# சுகம் தரும் அன்னாசி!

நாவுக்கினிய சுவைகொண்டதும், பார்க்கும்போதே உண்ணக் கூடிய விருப்பைக் கூட்டும் பழம் அன்னாசி. மிகவும் குறைந்த கலோரிப் பெறுமானத்தைக் கொண்டிருப்பதுடன் அதிக நார்ச்சத்தையும் இது கொண்டுள்ளது. ஒழுங்கான குடற் செயற்பாட்டுக்கும், கழிவுப் பொருள்கள், நச்சுப் பொருள்கள் என்பனவற்றின் வெளியேற்றத்திற்கும் இது உதவுகின்றது.

அதேவேளை, கொலஸ்ரோல் அகத்துறிஞ்சலையும் குறைக்கின்றது. அதீத நிறை உடையவர்களும், நீரிழிவு நோயாளர்களும் அன்னாசிப் பழத்தை வேண்டியளவு உட்கொள்ள முடியும்.

100 g அன்னாசிப் பழத்தில் விற்றமின்C 47.8 mg ஆக உள்ளது. விற்றமின்C ஆனது எலும்புகள், இழையங்கள் மற்றும் பற்கள் உட்பட உடலின் சகல பாகங்களின் வளர்ச்சிக்கும் மற்றும் மென் சவ்வுகளைப் புதுப்பித்தலுக்கும் தேவைப்படுகின்றது.

நோய் எதிர்ப்பு சக்தி செயல் முறையின் செயற்பாட்டிற்கும் விற்றமின் C உதவுகின்றது.

உணவுகளில் காணப்படுகின்ற சில விற்றமின்களும் கனியுப்புக்களும் (விற்றமின் A,C,E மற்றும் செலனியம்) எதிர் ஒக்சிடன்களாக (Antioxidants) உணவுச் சட்டத்தில் காணப்படுகின்றன. இது அன்னாசிப் பழத்தில் நிறைவாகவே உள்ளது.

போலேட்டு(Folates) விற்றமின்B வகையைச் சேர்ந்த அநேகமான உணவுகளில் இயற்கையாக காணப்படுகின்ற ஒன்றாகும். இது 100 g அன்னாசியில் 18 mg (micrag)ஆக உள்ளது. இது உடலில் உள்ள புதிய கலங்களை, விஷேடமாக குருதிக் கலன்களை உருக்குவதற்கு உதவுகின்றது.

100g அன்னாசியில் காணப்படும் சத்துக்களின் அளவுகள்.

கலோரி - 50 kcal
கொழுப்பு-0.12g
மாப்பொருள்-13.52g
புரதம்- 0.54g
கொலஸ்ரோல்- 0 mg
நார்ப் பொருள்- 1.40g
கல்சியம்-13g
மக்னீசியம்-12 mg
இரும்பு-0.29mg
விற்றமின் A-58 Iu
C-47.8mg
E-0.02mg
K-0.07 micro g
சோடியம்-1 mg
பொட்டாசியம்-109 mg
போலெட்டு (Folates)-18 mg (micro g)



பொட்டாசியம் 109 mgஆக காணப்படுகின்றது. இது இதயத் துடிப்பு மற்றும் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகின்றது.

நார்ச்சத்து 1.40g ஆக காணப்படுகின்றது. நார்ச் சத்தானது குடலின் அசைவினை ஒழுங்காக்குவதற்கு உதவுகின்றது. அவ்வாறே மலச்சிக்கல், எரிச்சல் ஏற்படக் கூடிய அரிப்புடனான குடல் அறிகுறிகள் போன்றவற்றையும் தடுக்கின்றது. நார்ச் சத்து உணவுகளின் நச்சுத் தன்மையை மறைமுகமாக அகற்றுவதுடன் கொலஸ்ரோலின் அகத்துறிஞ்சலையும் குறைக்கின்றது.

ஐஸ்கிறீம், பழ சலாட்டு, புடிங், ஜூஸ் போன்ற உணவுத் தயாரிப்புக்களின் சுவையை கூட்டக் கூடிய ஒரு பழம் அன்னாசி. சுவை மட்டும் அல்லாமல் சத்துக்களும் நிறைவாக உள்ள அன்னாசியை உண்டு பயன் பெறுவோம்.

பு.ஷாலினி,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
BSC. Foods Nutrition and Diet Therapy
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

188-B, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம். வைத்தீஸ்வராச் சந்தியில் நவீன வசதிகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு கொடுக் கப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(சி/12574) (7.6.3) தொடர்பு: 077 104 9110

## கடை வாடகைக்கு

யாழ் நகரில், பஸ் நிலையம் மற்றும் பிரபல வங்கிகளுக்கு அருகில் அமைந்த கடை வாடகைக்குண்டு. நிதிசார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 075 049 6867 (32308) (7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ். மாம்பழம் சந்தியில் கண்டி வீதிக்கு அருகில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 075 7875

E.mail- numoorthy @ g.mail.com 0041792047405 (32282) (4.6.3)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, அரசடி அம்மன் கோயில் பின்வீதியில் அமைந்துள்ள 3 பரப்பும் 6.33 குழியில் அமைந்துள்ள வீடுஉடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 229 9931 (32301) (7.6.3)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுன்னாகம் (கே.கே.எஸ் றோட்) பழைய பொலிஸ் நிலைய வீதி, கச்ச நாவலடியில் சுற்று மதில் வீட்டுடன் ஒன் றரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தூய உறுதி உடையது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(32636) (4.6.3) தொடர்பு: 077 318 2503

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 309 9649, 077 076 4494 (32291) (4.6.3)

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பத்தினரை பராமரிப்பதற்கு பெண் தேவை.

தொடர்பு: 077 627 7332 (32347) (7.6.3)

## கல்வி

பௌத்த விஹாரையில் உணவு விடுதி வசதியுடன் கூடிய இலவசமாக சிங்களமொழி கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். (21 வயதிற்கு மேற்பட்ட ஆண் மாணவர்களுக்கு மட்டும்) சாதி, மத, பேதம் பாராது அனைவரும் கலந்து கொள்ளலாம். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

CHIEF INCUMBENT, BUDDHIST CENTER, NAIVALA, VEYANGODA.
Phone No : 033 228 7347 (32302) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில்(OPPOSITE PETROL SHED) 3¼ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

(32289) (4.6.3) தொடர்பு: 077 597 0928

## வீடு, காணி விற்பனைக்கு

இருபாலை டச்சு வீதியிலுள்ள மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள நான்கு அறைகள், களஞ்சிய அறை, இரண்டு குளியலறை, கழிவறைகள், சுற்றுமதில் கொண்ட வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு: 077 841 6477 (32268) (7.6.3)

## விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

### BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| **யாழ்ப்பாணம்** மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடம் சந்தி அருகாமை) | **நீர்வேலி** 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | **சாவகச்சேரி** சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | **அச்சுவேலி** ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | **சங்கானை** பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| **சுன்னாகம்** Dr. சுபாரத்தினம் வீதி சுன்னாகம் | **வடமராட்சி** பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. |

வழமை போன்று இவ் வருடமும் [2013] 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பாலர் பாடசாலைகளில் பயின்ற பழைய மாணவர்களை கௌரவிக்க இருப்பதால், பெற்றோர் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

### சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- Certificate in English – இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- Diploma in English – G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- ESOL A1, A2 – Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- IELTS – உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

(சி/12536)

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Business College — Where Students Come First

### BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Tel:021 222 4060, 021 222 5796, 077 6646357, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

27/23, ஈச்சமோட்டை வீதி, துரையப்பா லேன், யாழ்ப்பாணத்தில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 905 0213 (32212) (4.6.3)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் பிரம்படி வீதியில் 3 அறைகள், தளபாடங்கள், நவீன வசதிகளுடன் உண்டு. யாழ் பல்கலைக்கழகம், மருத்துவபீடம், உயர்தரக் கல்லூரிகளுக்கு மிக அருகில். சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. (32243) (7.6.3)

தொடர்பு: 077 615 2850, 077 719 7211

## வீடு வாடகைக்கு

இல. 17, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தில் 3 அறைகள், இணைந்த குளியலறை மற்றும் வேலையாள் களுக்கு தனியான மலசல கூட வசதி நன்னீர் கிணறு (பைப்வசதியுடன்) போன்ற சகல நவீன வசதிகளுடனான பெரிய வீடு வாடகைக்குண்டு.

உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

(32288) (4.6.3) தொடர்பு: 077 849 6574

## விற்பனைக்கு

BAJAJ SELF START SCOOTER
500-8702-CLASSIC MODEL

தொடர்பு: 077 651 2333 (32210) (7.6.3)

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள சிசில் இரட்டை குளிர்சாதனப் பெட்டி, சிங்கர் Full Automatic சலவை இயந்திரம், Rinnai இரட்டை அடுப்பு ஹாஸ் குக்கர் சிலின்ரருடன், Akirai Boofer set, பிளாஸ்ரிக் கதிரைகள், அயன், Sony T.V 21" லுமாலா சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 615 2850, 077 719 7211 (32242) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ் சரவணை கிழக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த டிசெம்பர் 1978 இல் பிறந்த பூச நட்சத்திரம் 4இல் சூரியன், செவ்வாய், 3சுற்று மொத்த கி.பா 29, செவ்வாய் பாவம் 8, 5'6" உயரமுடைய, சொந்த வியாபார நிலையம் நடத்தும் லண்டன் சிற்றிசன் மணமகனுக்கு, சாதகப் பொருத்தமுடைய, படித்த, அழகிய, 4-6 வயது குறைவான மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு: 071 400 1257 (32244) (7.6)
(பேரின்பநாயகம்)

## வ/ப இந்திரா ட்ரேடர்ஸ் (தனி.) நிறுவனம்

### விற்பனை பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | திருகோணமலை |
| வவுனியா | முல்லைத்தீவு | மன்னார் |

ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆங்கிலம் உட்பட க.பொ.த. சா.த. (O/L) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை, காப்புறுதிப் பத்திர விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

மனிதவள முகாமையாளர்,
வ/ப இந்திரா ட்ரேடர்ஸ் (தனி.) நிறுவனம்
175, கட்டுகஸ்தொட வீதி, கண்டி.
தொடர்புகளுக்கு : 077 722 2147

(32284) (7.6.3)



## இந்தியன் வங்கி Indian Bank

*Your Tech-Friendly Bank*

(இந்தியன் அரச வங்கி) யாழ்ப்பாணக் கிளை

இந்தியன் வங்கி இந்தியாவில் 108 ஆண்டுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளதோடு, கொழும்பு மாநகரத்தில் 80 ஆண்டுகளாகத் தனது உன்னதமான சேவையினை வழங்கி வருகிறது.

நிலையான வைப்பு வருட வட்டி வீதம் 12%
சேமிப்பு கணக்கு 8 %
மாதாந்த சேமிப்பு மீள்வைப்பு கணக்கு 12% (Recurring Deposit)

(உங்களது மாதாந்த சேமிப்புக்களை ஊக்குவிப்பதற்கான சிறந்த முதலீட்டுத் திட்டம்)

சிறந்த பாதுகாப்புப் பெட்டக வசதிகளும் உள்ளன.

மேலதிக தொடர்புகளுக்கு: இந்தியன் வங்கி
இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 0674, 021 492 0999

(32321) (7.6.3)

## தொழில் வாய்ப்பு

தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களுக்கு வங்கி/பாடசாலை/தனியார் நிதிக் கம்பனி/Foodcity/வைத்தியசாலை போன்றவற்றுக்கு (JSO/LSO/SSO/OTC) தேவை. 20-25 வயதினர் தேவை. சம்பளம் 18000/=, 25000/=, 32000/= வரை.

தொடர்பு: 077 556 1883 (32542) (7.6.3)

## FIRE EXTINGUISHER

தீ அணைக்கும் கருவிகள்

யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு



வியாபாரத் தாபனங்கள், வாகனங்கள், காரியாலயங்கள், வீடுகளுக்கும் தேவையான சகல விதமான கருவிகளும் எம்மிடம் விற்பனைக்குள்ளன.



கள்வனைக் காட்டிக்கொடுக்கும் எச்சரிக்கை ஒலி (Alarm) எம்மிடம் விற்பனைக்குண்டு. (32300)(45.3.6)

### YARL FIRE PROTECTORS

146,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 146, KANNATHIDDY ROAD, JAFFNA.
T.P.: 021 221 9905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினோமெக்ஸ் பிரேக் ஒயில் இலங்கையில் அறிமுகம்

நாட்டின் முன்னணி லுப்ரிகன்ட் வகைகளை விநியோகிக்கும் இன்டர்ஓசியன் லுப்ரிகன்ட்ஸ் நிறுவனத்தி:ன் மூலம் சினோமெக்ஸ் பிரேக் ஒயில் மற்றும் கூலன்ட் போன்றன இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. புகழ்பெற்ற சினோபெக் லுப்ரிகன்ட் வகைகளை இலங்கையில் அறிமுகம் செய்த பெருமையை இன்டர்ஓசியன் நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு மோட்டர் ஷோ - 2013 கண்காட்சி நிகழ்வின்போது. இந்த புதிய அறிமுகம் மேற்கொள் ளப்பட்டிருந்தது. ஒடோ மிராஜ் நிறுவனத்தின் பணிப்பாளரான சந்திரா மோகன் மற்றும் மோட்டர்கேட் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் அசோக பெரேரா அகியோர் சினோமெக்ஸ் பிரேக் ஒயில் மற்றும் கூலன்ட் போன்றவற்றின் முதல் கட்ட பொதியை இன்டர்ஓசியன் லுப்ரிகன்ட்ஸ் பொது முகாமையாளர் சிரான் அபேசிங்கவிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் இன்டர்ஓசியன் லுப்ரிகன்ட்ஸ் பொது முகாமையாளர்



சிரான் அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், 'இன்டர்ஓசியன் லுப்ரிகன்ட்ஸ் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பொருள்கள் பாதுகாப்பு குறித்து அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளதுடன், அதிகளவு சிக்கனம் வாய்ந்தனவாகவும் வாகனங்களை நீண்ட காலம் உழைக்க வைக்கும் திறனைக் கொண்டதாக வும் அமைந்துள்ளன. இரண்டு புதிய தயாரிப்புகளான சினோ மெக்ஸ் பிரேக் ஒயில் மற்றும் கூலன்ட் போன்றன எவ்வித வேறு பாடுகளும் அற்றவை. ஆகவே, இலங்கைச் சந்தையில் காணப்படும் எமது தயாரிப்புகளுக்கு வலுச்சேர்ப்பதாக அவை அமைந்திருக்கும்' என்றார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், 'வாகனங்களின் நீடித்த உழைப்புக்கும் முறையான பராமரிப்புக்கும் உகந்த தயாரிப்புகளாக சினோமெக்ஸ் பிரேக் ஒயில் மற்றும் கூலன்ட் ஆகியன காணப் படுகின்றன. இது போன்ற பயனுள்ள மேலும் பல தயாரிப் புகளை இலங்கையைச் சேர்ந்த மோட்டார் வாகன உரிமையாளர்களுக்காக அறிமுகம் செய்ய இன்டர்ஓசியன் லுப்ரிகன்ட்ஸ் திட்டமிட்டுள்ளது' என்றார். (த)




# சென்ரல் இன்டஸ்றீஸ் நிறுவனத்துக்கு விருது

நஷனல் பிவிசி குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் சென்ரல் இன்டஸ்றீஸ் பிஎல்சி நிறுவனம், இலங்கை தேசிய தொழிற்சாலைகள் சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த CNCI சாதனையாளர் விருதுகள் 2013 இல் சேவை சிறப்புக்காக மிகப்பெரிய பிரிவில் (தேசிய மட்டத்தில்) சிறப்பு விருதை தனதாக்கியிருந்தது. உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்களை இனங்கண்டு, அவற்றின் செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையிலும், தேசத்தின் அபிவிருத்தியில் குறித்த நிறுவனங்கள் வழங்கும் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையிலும் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு இலங்கை தேசிய தொழிற்சாலைகள் சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

தொடர்ச்சியாக பன்னிரெண்டவது தடவையாக இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சினமன் கிராண்ட் ஹோட்டலில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன், இந்நிகழ்வின் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கலந்து கொண்டார்.

சென்ரல் இன்டஸ்றீஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான நிவ்டன் விக்ரமசூரிய கருத்து தெரிவிக்கையில், சென்ரல் இன்டஸ்றீஸ் மூலம் வழங்கப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது. எமது நிறுவனத்தின் பிரதான நோக்கமாக, எமது பொருட்கள் அனைத்திலும் உயர் தரத்தை பின்பற்றுவது அமைந்துள்ளது. சந்தைக்கு விநியோகிக்கும் முன்னர், எமது பொருட்கள் அனைத்தும் முறையான பரிசோதனை முறைக்கு உட்படுத்தப்பட்டு, உயர் தரத்துக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படும். எமது உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஆய்வுகூடத்தின் மூலமாக எமது பொருட்களின் தரம் குறித்து கண்டிப்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, சென்ரல் இன்டஸ்றீஸ் பிஎல்சி நிறுவனம், அக்காலகட்டத்தில் நடைமுறையிலிருந்த ஜப்பானிய தரச்சான்றிதழ்கள் வழங்கல் முறைமைக்கு பதிலாக இலங்கை தரச்சான்றிதழ்கள் வழங்கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்ட போது, அதனை பெற்றுக் கொண்ட முதலாவது இலங்கை நிறுவனம் எனும் பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்துடன், ISO 9001 தரச்சான்றை பெற்றுக்கொண்ட முதலாவது குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தி நிறுவனம் எனும் பெருமையையும் தனதாக்கியிருந்தது.

பின்னர், சென்ரல் இன்டஸ்றீஸ் கிரிப்டன் இலத்திரனியல் சுவிட்ச்களையும், உதிரிப்பாகங்களையும் உற்பத்தி செய்ய ஈடுபட்டதுடன், சொக்கட் வகைகள் மட்டுமல்லாமல் breaker, trips மற்றும் main switch வகைகளை (MCBs and RCCBs) உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டுள்ளது.

# மேம்படுத்தப்பட்ட புதிய ஹோர்லிக்ஸ்

நுகர்வோர் சுகாதார பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் முன்னோடியான ஸ்மித்கிளைன் பீச்சம்(பிரைவட்) நிறுவன மானது, தனது ஊட்டச்சத்துப் பானமான ஹோர்லிக்ஸ் தயாரிப் பினை (6-16 வயதுடைய குழந்தைகளுக்காக) சந்தையில் மீள் அறிமுகம் செய்துள்ளது. 23 முக்கிய ஊட்டச்சத்துக்களினால் செறிவூட்டப்பட்டுள்ள ஹோர்லிக்ஸ் ஆனது, வளரும் குழந்தை களிடையே நிலவும் ஊட்டச்சத்து குறைபாட்டினை நிறைவு செய்கிறது. புதிய ஹோர்லிக்ஸ் ஆனது, கவர்ச்சிகரமான பொதியி டலுடனும், புதிய சுவையுடனும் இலங்கையில் மீள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

புதியதும், மேம்படுத்தப்பட்டதுமான ஹோர்லிக்ஸில் அடங்கி யுள்ள 23 முக்கிய ஊட்டச்சத்துக்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான ஆரோக்கியமான எலும்புகள், தசைகள், வலுவான நோயெதிர்ப்பு சக்தி, ஆற்றல் மற்றும் ஆரோக்கியமான குருதி போன்றவற்றிற்கு போசாக்கினை வழங்குகிறது. ஹோர்லிக்ஸ் ஆனது, குழந்தைகளின் வளர்ச்சியில் பங்களிப்பு செலுத்தும் அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்ற முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஹோர்லிக்ஸ் தயாரிப்பின் மீள் அறிமுகம் குறித்து இலங்கை ஸ்மித்கிளைன் பீச்சம்(பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ரவிந்திர டி கூங்கே கருத்து தெரிவிக்கையில், 'அயடின், விற்றமின் ஏ, இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் துத்தநாகக் குறைபாடுகள் குழந்தை களின் வளர்ச்சியை பாதிக்கக்கூடிய சில நுண் ஊட்டச்சத்து குறைபாடுகள் ஆகும். ஆகவே, போதியளவான நுண் ஊட்டச்சத்துக்களை உட்கொள்வதன் மூலம் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். புதிய ஹோர்லிக்ஸ் அறிமுகத்தின் மூலம், ஒரு ஆரோக்கிய பானம் மூலம் நுண் ஊட்டச்சத்து இடைவெளிகளை பூர்த்தி செய்யும் வகையிலான தயாரிப்பினை அறிமுகப்படுத்த முயற்சித்தோம்' எனத் தெரிவித்தார்.

ஸ்மித்கிளைன் பீச்சம்(பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் பிரிவு முகாமையாளர் லோரன் சாங் கருத்து தெரிவிக்கையில், 'நமது நாட்டிலுள்ள பெற்றோர்கள் தங்களது குழந்தையின் உணவுகள், உணவுப் பழக்கவழக்கம் மற்றும் அவர்களுக்கு புரோட்டீன், காபோவைதரேற்று மற்றும் கொழுப்பு ஆகியன சரியான அளவில் கிடைக்கிறதா என்பது தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்துகின்றனர். இருப்பினும் பழங்கள் மற்றும் காய்கறிகளை குழந்தைகள் அதிகம் உண்ண விரும்பாமையால் நாளாந்தம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய முக்கிய விற்றமின்கள் மற்றும்




கனியுப்புக்கள் உடலுக்கும் கிடைக்காமல் போகின்றது. இதன் காரணமாக நுண் போசணை குறைபாடு ஏற்படுகிறது. இது குழந்தைகளிடையே ஊட்டச்சத்து இடைவெளியை ஏற்படுத்துகிறது. எனவே, இந் நிறுவனத்தின் மூலம் முழு வளர்ச்சிக்கும் அவசியமான நுண் ஊட்டச்சத்துக்கள், அதன் நன்மைகள் மற்றும் நுண் போசாக்கு குறைபாடுகள் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன' என்றார்.

புதிய மேம்படுத்தப்பட்ட ஹோர்லிக்ஸில் அடங்கியுள்ள இரும்புச்சத்து, விற்றமின் ஏ, அயடின், துத்தநாகம், ஃபோலிக் அமிலம், மாங்னீசியம், விளயிளஜஷ்றது மற்றும் செப்பு ஆகிய 23 முக்கிய ஊட்டச்சத்துக்கள் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்து இடைவெளிகளை இல்லா தொழிக்க உதவுகிறது. மேம்படுத்தப்பட்டதும், கவர்ச்சிகரமான [illegible] அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய ஹோர்லிக்ஸ், தற்போது நன்ன வர்த்தக நிலையங்கள், பொது வர்த்தக மையங்கள், பாமசிகள் மற்றும் இதர விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. (த)

# வடக்கு கிழக்கு வாடிக்கையாளர்களுக்கு விசேட IDD அறிமுகப்படுத்தும் மொபிடெல்

இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பு சேவை களை வழங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடெல் தனது வாடிக்கையாளர்கள் கடல் கடந்து வாழும் உறவுகளுடனும், நண்பர்களுடனும் கதை கதை யாய்ப் பேசிடுவதற்காக, வடக்கு கிழக்கு மக்களுக்காக விசேட IDD முற்கொடுப்பனவு அட்டைகளை அறி முகம் செய்துள்ளது.

விசேடமாக முற்கொடுப்பனவு வாடிக்கையாளர் களுக்காக அறிமுகப்படுத்தப்படும் இம்மீள் நிரப்ப அட்டையானது இரண்டு விதமான பணப்பெறு மதிகளை கொண்டது. 189 ரூபா பெறுமதியான அட் டையில் 300 ரூபா பெறுமதியான அமைப்புகளையும் 100 ரூபா பெறுமதியான SMS சேவையினையும் பெற்றிட முடியும். மேலும் 589 ரூபா பெறுமதியான அட்டையில் 900 ரூபா பெறுமதியான அமைப்பு களையும் 400 ரூபா பெறுமதியான SMS சேவையி னையும் பெற்றிட முடியும்

இந்த விசேட வெகுமதி திட்டம் குறித்த மேலதிக விபரங்களுக்கு www.mobitel.lk எனும் இணை யத்தளத்தை பார்வையிடுங்கள். (த)

நண்பர்களுடனும் கதை கதை யாய்ப் பேசிடுவதற்காக, வடக்கு கிழக்கு மக்களுக்காக விசேட IDD முற்கொடுப்பனவு அட்டைகளை அறி முகம் செய்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உயர்ந்து வரும் கிராமப் புறக் கல்வி நிலை; புலமைப் பரிசில் பரீட்சை முடிவு ஒரு சுட்டி

இவ்வாரம் வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் குடாநாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதலைக் காண முடிகிறது. அதிகூடுதல் புள்ளிகளை நகரப்புறப் பாடசாலை மாணவர்களாலேயே பெற இயலும் என்ற நிலை மாறியுள்ளது; மாற்றப்பட்டுள்ளது.

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயத்தைச் சேர்ந்த பரமானந்தன் தனுராஜ் 194 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியோரில் அகில இலங்கை ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருக்கின்றார். அகில இலங்கை மட்டத்தில் அவர் பத்தொன்பதாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்.

அதற்கு முந்திய பதினெட்டு நிலைகளையும் சிங்கள மொழி மூலம் தோற்றிய தென்பகுதி மாணவர்களே அடைந்துள்ளார்கள்-முதல்தர வரிசைப்படுத்தப்பட்டுள் ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி 154 ஆகவும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி 153 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் நகரப்புறம் சாராத பாடசாலையிலிருந்து (ஏழாலை) மாணவன் அதிக புள்ளிகள் பெற்றமை மிகப் பெரும் சாதனையும், ஓர் முன் உதாரணமும் முன்னோடியும் எனப் பாராட்டலாம். பின் தங்கிய பிரதேசம் என்று முத்திரை குத்தப்படும் நெடுந்தீவுப் பகுதியின் சிக்கிலியம் பள்ளம் அ.த.க.பாடசாலை மாணவன் 185 புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, 2011 ஆம் ஆண்டுப் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த முகமட் நலீம் ஷாகி அஹமட்-195 அதிக புள்ளிகள் பெற்றமையும்-

அதேபோன்று 2011 ஆம் ஆண்டுப் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்ட மாணவன் சேதுராகவன் 194 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்தமையும் பாராட்டப்பட வேண்டியவை.

நகரப்புறப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே உச்சப் பெறுபேறுகளை பெற இயலும் என்ற "மாயை" போக்கப்பட்டிருப் பதற்கு இவை ஒரு சில உதாரணங்கள்.

தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் எழுபது சதவீதமானோர் இவ் வருடம் சித்தி எய்தி உள்ளனர் என்பதும் உத்தியோகபூர்வ தகவலாகும்.

வழமையாக, பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி வழங்குவதற்கு அந்தந்த மாவட்டத்துக்குரிய வெட்டுப்புள்ளிக்கு அதிகமான நிலையைப் பெறுபவர்களே அனுமதிக்கப்படுவது உண்டு.

பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி பெற்றால் மட்டுமே, தமது பிள்ளைகள் இடைநிலைக் கல்வியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற இயலும், அதனூடு உயர்நிலைக் கல்வியில் சிறப்புற்று பல்கலைக்கழக அனுமதி வரை உச்சத்தை தொடலாம் என்ற எண்ணம்-அவா-எமது பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர்களின் மிகப் பெரும்பாலானோர்களின் குருட்டு இயல்பாகிவிட்டது.

அது தப்பிதமான போக்கு என்று கருதுவதற்கு இல்லை. ஆனால் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெற வேண்டும் என்பதற்காக, ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் எல்லோரிடமும் அத்தகு திறன் மற்றும் பொது விவேகம் ஆகியன இருக்கும் என்று எதிர் பார்க்க இயலாது. பெற்றோர்கள் பலரின் அதீத ஆசைகள் மாணவர்களின் உளவியலை-உளநலனைக்-கெடுத்து விடுவதும் பல குடும்பங்களில்-வீடுகளில்-சகஜமாகி வருகிறது.

தத்தமது குடும்ப, தொழில்,கல்வித் தராதரங்களுக்கு குறைந்த வகைகள் சார்ந்த பெற்றோரின் பிள்ளைகளின்- மாணவர்களின்-பொது விவேகம் ஒப்பீட்டு அளவில் அதிகமாக உள்ளது என்பதனைப் பெற்றோரில் பெரும்பாலானவர்கள் பகுத்து அறிவதில்லை. அந்த வழிநாடிச் செயற்படுவதும் இல்லை.

இது எங்கள் தமிழர் சமுதாயத்தினரைப் பீடித்துள்ள பெரும் பீடை எனலாம். அதனால் பெரும் கல்வி அறிவு நிறைந்த தரப்புப் பெற்றோர்கள் கூட, தமது பிள்ளைகள் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. அவற்றில் ஈடுபடுவதால் கல்வியில் நாட்டமும், ஆர்வமும் குறைந்து விடும் என்று தமக்குள் கணக்குப்போட்டுக் கொள்கிறார்கள். இந்த நில்லை மாற வேண்டும். பெற்றோர்கள் தம்மைத் தாமே மாற்றிக்கொள்ள வேண்டும்.

வடக்கு வாழ் மக்கள், பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் தொட்டே கல்வியைக் கண்ணாக மதித்துப் பயின்று, வாழ்வியலின் பல துறைகளிலும் உயர்ந்து நின்றார்கள். இந்த நாட்டுக்கு ஆங்கிலேயரிடமிருந்து பூரண அரசியல் சுதந்திரம் கிடைத்த பின்னர், அந்த நிலை மெதுமெதுவாக மாற்றப்பட்டு, தற்போது மிக மோசமான மட்டத்தைப் பிடித்துள்ளது.

பணத்துக்குக் கல்வி என்ற நிலை மாறி, இலவசக் கல்விச் சகாப்தத்துக்குள் நாடு புகுந்தாலும், தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவர்களை விட பல வகைகளிலும் தாழ்ந்து போகும் நிலையில் தள்ளாடுகிறார்கள்.

கிடைத்துள்ள வசதி வாய்ப்புகளை கௌவிப் பிடித்துக்கொண்டு, கல்வித் துறையில் எமது வருங்காலப் பிரசைகள் எழுந்து நிற்பதற்கான ஆக்கபூர்வமான, திட்டமிடப்பட்ட கல்வி ஊக்குவிப்பில் ஈடுபட வேண்டிய காலம் இது.

அதுநாடி, எங்கள் வருங்காலப் பிரசைகளான சிறுவர்களின் கல்வியில், யதார்த்தமும் வாழ்வுயர்ச்சியும் காணும் தடத்தில் கால் பதிக்க முனைய வேண்டும். பெற்றோரின் பங்களிப்பு அதற்குப் பெரியளவில் தேவை.

# பொருளாதார அபிவிருத்தி எனக் கூறி தமிழ் மக்களை ஏய்க்க முடியாது

### தேர்தல் மூலம் அது நிரூபிக்கப்பட்டு விட்டது



பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் மத்தியில் தனக்கிருந்த ஆதரவைப் பெருக்குவதற்கான முயற்சியில் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டார். இவர் போர் வெற்றியை முதன்மைப்படுத்தி, தான் சிங்கள இனத்தின் 'மீட்பர்' எனத் தன்னைத்தானே அடையாளப் படுத்தியதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

பாணைச் சாப்பிடுவதால் மட்டும் மனிதன் ஒருவன் உயிர் வாழ்ந்துவிட முடியாது என்பதை அண்மையில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்து அரசைத் தோல் வியுறச் செய்ததன் மூலம் தமிழ் மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தென்னாசியவியல் பேராசிரியர் வி.சூரியநாராயணன் The New Indian Express ஊடகத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 21 அன்று, பெரும்பான்மையினராக சிங்களவர்கள் வாழும் வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

**வடமாகாண சபைத் தேர்தலில் தமிழர் தரப்பு பெரு வெற்றி**

இலங்கையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசு கிட்டத்தட்ட 60 சதவீத வாக்குகளுடன் வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அதே வேளையில், இக்கூட்டணி வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 78 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றதுடன், 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைப் பெற்று வடக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன் 180,000 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

**பாகிஸ்தானில் நிலவிய இன ரீதியான நிர்வாகம்**

தற்போது இலங்கையில் இன ரீதியான அரசியல் என்பது முன்னிலை பெற்று வருகின் றது என்பது நடைமுறை உண்மை யாகும். இவ்வாறான ஒரு நிலைப்பாடு பாகிஸ்தான் அரசியலிலும் இடம்பெற்றது.

1970 டிசம்பரில் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தலின் விளைவாக மிகவும் மோசமான அரசியல் மோதல் ஏற்பட்டது. முஜிபூர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக் என்கின்ற கட்சி டிசம்பர் 1970இல் இடம்பெற்ற தேர்தலில், கிழக்குப் பாகிஸ்தானில் மட்டுமல்லாது நாடாளுமன்றிலும் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்றது. மேற்குப் பாகிஸ்தானில் சுல்பிகர் அலி பூட்டோ தலைமையிலான பீப்பிள்ஸ் புறொகிறெஸ்ஸிங் கட்சியானது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. 1970இல் பாகிஸ்தானின் அதிபராக இருந்த யஹியா கான் அரசை அமைப்பதற்கு முஜிபூருக்கு அழைப்பு விடுக்க மறுத்தார். கிழக்குப் பாகிஸ்தான் மீது அப்போதைய பாகிஸ்தானிய அரசால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் அராஜகங்களே இதற்கான அடிப்படையாக அமைந்தது.

இறுதியாக, கிழக்குப் பாகிஸ்தானில் செயற்பட்ட முக்தி பாஹினி என்கின்ற விடுதலை அமைப்பு இந்தியாவின் ஆதரவுடன் கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இன ரீதியான பிரச்சினைகள் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அரசியலில் செல்வாக்குச் செலுத்திய போதிலும், இவ்விரு நாடுகளுக்கும் இடையில் அடிப்படையில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாட்டில் உடனடியாக மீள் இணக்கப்பாட்டைக் கொண்டுவருவதற்கான அடிப்படை நகர்வுகளை இலங்கை அரசு மேற்கொள்வதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற் கான யதார்த்தமான விடயங்களை இலங்கை அரசு அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசு உளரீதியான சில அடிப்படை மாற்றங்களுக்கு உட்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், பயங்கரவாதம் தொடர்பிலான அச்சம் நீங்கி விட்டதாகவும் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாகவும் இலங்கை அரசு அறிவித்தது.

இதன்மூலம் இலங்கையின் பெரும்பான்மை சிங்களவர்கள் மத் தியில் தனக்கிருந்த ஆதரவைப் பெருக்குவதற்கான முயற்சியில் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டார். இவர் போர் வெற்றியை முதன்மைப்படுத்தி, தான் சிங்கள இனத்தின் 'மீட்பர்' எனத் தன்னைத் தானே அடையாளப்படுத்தியதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்களின் நலன்கள் முதன்மைப் படுத்தப்பட்ட அதேவேளையில், இலங்கையில் வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் நம்பிக்கைகளும் அவாக்களும் புறக்கணிக்கப்பட்டன.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவதுடன், அடக்குமுறைக்கும் உள்ளாகுகின்றனர் என்பதை இலங்கை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ்ச் சிறுபான்மை இனத்தவர்களுடன் அர சியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் மட்டுமே நாட்டில் தீர் வொன்றை எட்ட முடியும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாது அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிவுறுத்தலின் கீழ் தமிழ் மக்களுக்கான தீர்வு ஒருபோதும் முன்வைக்கப்பட முடியாது.

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையை ஆண்ட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடத்தியதால் ஆயுதக் குழு தோற்றம் பெற்றது. ஆயுத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசால் இழைக்கப்பட்ட அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான போராட்டத்தை ஆரம்பித்தனர். அப் போராட்டம் 30 ஆண்டுகள் வரை நீடித்தது.

இக்காலப்பகுதியில், இந்திய இலங்கை உடன்படிக்கை, 13ஆவது திருத்தச் சட்டம், திஸ்ஸவிதாரண ஆணைக் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் எனப் பல்வேறு தீர்வுத் திட்டங்கள் முன் வைக்கப்பட்ட போதும், இவை எல்லாவற்றிலும் பெரும்பான்மை சிங்கள சமூகம் முதன்மைப்படுத்தப்பட்டதால் இவை வெற்றியளிக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னான காலப்பகுதியில், தமிழர்கள் தொடர்பான இலங்கை அரசின் கோட்பாடானது துரித பொருளாதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறான பொருளாதார அபிவிருத்தி மூலம் தமிழர்களின் மனதை வெல்லலாம் என இலங்கை அரசு கருதியது.

அண்மையில் நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தற் காலப் பரப்புரையின் போது துரித பொருளாதாரத் திட்டங்களை ஆளும் கூட்டணி முதன்மைப்படுத்தியது. இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டமை மற்றும் தமிழர் பகுதிகளில் வாழும் மக்கள் இயல்பு வாழ்வு வாழ்வதாகவும் இலங்கை அரசு தனது பரப்புரையின்போது கோடிட்டுக் காட்டியது.

**13ஆவது திருத்தமும் காணி பொலிஸ் அதிகார விவகாரமும்**

தமிழ்த் தலைவர்கள் தமது நிலைப்பாடு தொடர்பில் தன்னிலை ஆய்வை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையைப் பொறுப் பெடுக்கின்ற போது சில சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இந்திய - இலங்கை ஒப்பந்தம், 13ஆவது திருத்தச் சட்டம் போன்றன தொடர்பாக பேசப்படுகிறது. இதிலுள்ள வரைபுகளை நீக்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப் பட்டமை, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களிடம் கையளிக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தற்போது விவாதிக்கப்படுகின்றன. பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் கையளிக்கப்படக் கூடாது என இலங்கை ஜனாதிபதியும், பாதுகாப்புச் செயலரும் மிகத் தெளிவாக அறிவித்துள்ளனர். மத்திய அரசிடமே காணி அதிகாரங்கள் இருக்கவேண்டும் என அண்மையில் இலங்கையின் உயர் நீதிமன்றம் அறிவித்தது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இல்லாது, மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளத்துடன் வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு நிர்வகிக்க முடியும்? இதைவிட வடக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்தினரின் பிரசன்னமும் தலையீடும் அதிகரித்துள்ளது. வட மாகாணத்தில் தமிழ் மக்கள் எந்தவொரு நிகழ்வை நடத்துவதாயினும் அதற்கு இராணுவத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவிப்பிள்ளை அண்மைய தமது இலங்கைக் கான பயணத்தின் முடிவில் இலங்கையில் சர்வாதிகார ஆட்சி நிலவுவதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் வழங்கிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் உட்பட அனைத்து மீறல்களுக்கும் பொறுப்பானவர்களை அடையாளங் கண்டு இலங்கை அரசு அவர்களுக்குத் தண்டனை வழங்கத் தவறியுள்ளதாகவும் இதன்மூலம் நாட்டில் தேசிய ரீதியில் நம்பகமான மீள் இணக்கப்பாட்டை உருவாக்கத் தவறியுள்ளதாகவும் நவிப்பிள்ளை சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை தொடர்ந்தும் தவறிழைக்கும் பட்சத்தில் அனைத்துலக சமூகம் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான பொறிமுறைகளை உருவாக்கும் எனவும் நவிப்பிள்ளை எச்சரித்திருந்தார்.

அனைத்துலக சமூகத்தின் ஆதரவுடன் இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான போராட்டம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அது இலங்கையின் அரசியல் முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது திட்டவட்டமானது. இதயசுத்தியுடனான ஜனநாயக நடைமுறைசார் அரசால் மட்டுமே நாட்டில் இன மீள் இணக்கப்பாட்டைக் கொண்டு வர முடியும்.

*நன்றி -புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமூக உருவாக்கத்தின் அத்திபாரங்கள்




ஆசிரியர் பணியை புனிதமான தொழிலாகக் கணிப்பதுடன், மாதா, பிதா, குரு, தெய்வம் என பெற்ற தாய் தந்தைக்கு அடுத்த இடத்தை ஆசிரியர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்

பீ.ஏ. அந்தோனிமார்க்

உலக உருவாக்கத்தின் அத்திபாரம் ஆசிரியர்களே என்றால் அது மிகையாகாது. விஞ்ஞானிகளை, பொறியியலாளர்களை, வைத்தியர்களை, பேராசிரியர்களை, கல்விமான்களை, உருவாக்கியவர்கள், உருவாக்குபவர்கள் இந்த ஆசிரியர்களே. இதனால் ஆசிரியர் பணியை புனிதமான தொழிலாகக் கணிப்பதுடன், மாதா, பிதா, குரு, தெய்வம் என பெற்ற தாய் தந்தைக்கு அடுத்த இடத்தை ஆசிரியர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். சிறந்த அர்ப்பணிப்பு உணர்வுடன் எந்தவித லாபநோக்கும் இன்றி பாடப்புத்தக அறிவு மட்டுமன்றி, பலதுறைப்பட்ட பரந்த அறிவை மாணவர்களுக்கு வழங்கிவரும் இந்த ஆசிரியர்களைப் போற்றி புகழ்ந்து கௌரவிக்க வேண்டியது எம் அனைவரினதும் பாரிய கடமையாகும். இவர்கள் கல்வியை மட்டும் மேம்படுத்துவதில்லை; அதற்கு மேலதிக மாக நற் பிரஜைகளை உருவாக்கு வதற்கு அரும்பாடுபட்டு உழைத்து வருகிறார்கள்.

இன்று நாட்டில் எங்கும் வறுமை நிலவுகிறது. சமாதானம் குறைவுற்று தேசம் அழிவை நோக்கிச் செல்கிறது. இதற்குரிய நிவாரணம் ஆசிரியர்களின் கையில்தான் உண்டு. ஏனெனில் சிறுவர்களையும் மாணவர்களையும் வழி நடத்துபவர்கள் இந்த ஆசிரியர்கள் சமூகமே. சர்வகலாசாலையில் உயர்கல்வி நிலையத்தில், பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடவிதானங்களில் சமாதான கற்கை நெறிகளையும், மனித உரிமை பாடத் திட்டங்களையும் சேர்ப்பார்களானால், தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையும் நீடிய சமாதானமும் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதேநேரம் போதிய அளவு கல்விமான்கள் உருவாக்கப்படுவார்களானால் இவர்கள் மூலம் நாட்டில் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி உற்பத்தியை பன்மடங்கு பெருக்க முடியும். அதன் மூலம் வறுமையை அகற்ற முடியும். அயல்நாடுகள் பாரிய அபிவிருத்தியை அடையும் போது நாங்கள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை சீரான முறையில் பயன்படுத்துவதில் பின்தங்கியுள் ளோம். அனுபவமும் தகுதியும் வாய்ந்த விஞ்ஞானிகளுக்கான தட்டுப்பாடு குறைவுபாடு விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதற்குத் தடையாக இருந்து வருகிறது. எனவே ஆசிரியர் சமூகம் நாட்டுப் பற்றுடன் செயலாற்றும் பொறுப்பு உடையவர்களாய் இருக்கிறார்கள்.

இலங்கையில் ஆசிரியர் சேவைச் சங்கங்கள் 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு பல வகையான திட்டச் செயற்பாடுகளை அவை மேற்கொண்டு வருகின்றன. பல ஆசிரியர்கள் சங்கங்கள் எமது நாட்டில் உள்ளன. இவை ஆசிரியர்களின் தொழில் சார் நலன்களை விருத்தி செய்வதற்கு பாடுபடுகின்றன. ஆசிரியர்கள் தங்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆசிரியர் சங்கங்களைப் பலப்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.


பல நூற்றுக்கணக்கான தொண்டராசிரியர்கள் இன்னமும் நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் இன்றி, சம்பளக் கொடுப்பனவுகள் இன்றி, கண்ணீரோடு அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள், ஆளுநர் தரப்புக்களின் பழி வாங்கல் மூலம் பல கல்வி அதிகாரிகளும் ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறான அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது தொழிற் சங்கங்களின் கடமை ஆகும். கடந்த காலங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் ஏனைய அரச உத்தியோகத்தர்களை விடக் குறைவாக இருந்ததினால் பலர் ஆசிரியத் தொழிலை நாடவில்லை. ஆனால் சம் பளம் கணிசமான அளவு கூடியபோது பலர் ஆசிரியத் தொழிலுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனாலும் இன்று உள்ள விலைவாசி உயர்வின்படி ஓர் ஆசிரியர் பெறும் சம்பளம் மிகவும் குறைவானது. இவற்றை நிவர்த்தி செய்து சம்பள அதிகரிப்பு மற்றும் விசேட சலுகைகளையும் அரசு வழங்க முன்வர வேண்டும். போருக்கு பின்பும் பல பாடசாலைகள் இயங்காத நிலையிலேயே உள்ளன. வட மாகாணத்தில் உள்ள சகல பாடசாலை களும் திறக்கப்பட்டு நிரப்பப்பட வேண் டியுள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டு கடந்த 30 வருடங்களாக பின்னடைவு கண்டிருந்த கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஆங்கிலக் கல்வி யைப் போதிப்பதன் மூலம் மாணவர்களின் உயர் கல்விக்கும் தொழில் வாய்ப்பு பெறுவதற்கும் ஊக்கமளிக்க வேண்டும். ஆசிரியத் தொழிலில் நீண்ட காலமாக இருந்து வரும் முக்கியமான பிரச்சினைகளாக பின்வரும் பிரச்சினைகள் இனம் காணப்பட்டுள்ளன.

1. நேர முகாமைத்துவம், 2. தொழில் சார் நெருக்குதல்(Job Related Stress), 3. அடைவுத்தேவை (Need for Achievement), 4. வெகுமதி பெறல் (Reward) என்பனவே அவையாகும். கருத்தினைத் தேடல் Search for Meaning நெருக்குதல் என்று கூறும்போது, மாணவர்களின் ஒழுக்கப் பிரச்சினை, மாணவர்களுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள், நேரத்தைக் கட்டுப்படுத்த முடியாதநிலை, அதிக ஆவணங்கள் பூர ணப்படுத்த வேண்டிய நிலைமை, தெளிவற்ற நிர்வாக ரீதியான எதிர் பார்ப்புகள், ஆசிரியர்களிடையே கூட்டு ஒற்றுமை, கூட்டுப் பொறுப்பு இன்மை போன்றனவாகும். பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறிய மாணவன் உயர்வடைந்து வரும்போது தன்னைப் படிப்பித்த ஆசிரியரைக் கண்டு நன்றி கூறுவானாக இருந்தால், அவன் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவனாக இருப்பான். உயிர்காக்கும் வைத்தியர்களை, பொறியியலாளர்களை, வழக்கறி ஞர்களை, வங்கியாளர்களை, கல்வி மான்களாக உருவாக்கிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகவும் குறைவு. இதனால் இவர்களது குடும்பங்கள் வறுமையில் வாழ்கின்றன. மாணவர்களுக்கு கற் பிக்கின்றோம் என்ற மன நிறைவை விட அவர்களுக்கு பெரிதாக இலாபம் ஒன்றும் கிடைப்பதில்லை. கற்பித்தல் எவ்வளவு சிரமமான காரியம் என்பதை கற்றவர்களே அறிவார்கள்.

இவை யாவற்றுக்கும் மேலாக, நாட்டின் அத்திபாரமாக, மூல ஆதாரங்களாக திகழ்வது ஆசிரியர் சமூகங்களே. கற்றல், கற்பித்தல் என்பதே அவர்களின் தாரக மந்திரம். இதனால்தான் இவர்களைப் போற்றவும், புகழவும் கௌரவிக்கவுமே, இத் தினத்தை ஆசிரியர் தினமாக ஐ.நா அனுசரணை யுடன் உலகம் இன்று கொண்டாடுகின்றது. எனவே இன்றைய நாளிலே எம் அனைவரையும் கல்விமான்களாக உருவாக்கிய ஆசிரியர் சமூகத்துக்கு எமது நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

# முதுமையின் திறவுகோல்

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர்
இல்லம் , கைதடி.



முதியோர் வாரத்தின் ஆறாம் நாள் இன்றாகும். உள மேம்பாட்டுடன் சுகமாக முதுமையடைதல் என்பது சமூகத்தின் மீது தாங்கள் பாரமற்றவர்களாக இருக்கமுடியும்என்றசிந்தனையை விதைக்க முடியும் என்ற நம்பிக்கையின் அதிர்வுகளில் மீண்டும் ஒரு புதிய கோணத்தில் சந்திக்கின்றேன்.

இன்று குடும்பங்களில் மதிப்புக் கொடுத்தல் என்பது பிள்ளை வளர்ப்பில் தங்கியுள்ளது. இன்று கலாசார சீரழிவுகளும், வேண்டாத நட்புகளும், பெற்றோரின் வழிநடத்தல்களும், மேலாதிக்கம் செலுத்துகின்றன. பாடசாலைகளில் சிறுவர் உரிமைகளின் புது வருகையால் மாணவர்கள் மிகுந்த சுதந்திரத்தை கையில் எடுத்து விட்டார்கள். அத்தோடு பாடசாலைகளில் கற்பிப்போரில் 70 வீதமானவர்கள் ஆசிரியைகளாக இருக்கிறார்கள். இதனால் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களை கட்டுப்படுத்துவது என்பது பாடசாலைகளில் சவாலாகியுள்ளது.

இத்தகைய பின்னணியில் இன்று பிள்ளைகள் குடும்பங்களில் வளர்கின்றார்கள். ஒத்த வயதினருடன் மாணவர்கள் பழகாத போதும், நண்பர்களின் பிழையான வழி நடத்தல்களும், சில வீடுகளில் பெற்றோரின் பொறுப்பற்ற தன்மைகளும் மாணவர்களை பிழையான வழிக்குத் திருப்புகின்றன. இதன் விளைவாக பெற்றோர்களின் மனநிலை பாதிப்புற்று உளவளம் நிலை குலைகின்றது.

பிள்ளைகள் பெற்றோர் உறவு, கணவன் மனைவி உறவு , உறவினர்கள் குடும்ப உறவு, அயல்வர்கள் குடும்ப உறவு இந்த நான்கும் உளவளத்தைக் கட்டியெழுப்புவதற்காக சமூகத்தில் காணப்படும் நான்கு தூண்களாக உள்ளன. இந்த உறவுகளின் மேலீடும் குடும்பத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைந்துவிடுகின்றன. காலத்தின் கோலத்தில் சிறைப்பட்டுப் போயிருக்கும் சமூகச் சண்டைகள், குடும்பங்களின் பழிவாங்கும் நிலைகள், சகோதரங்களுக்கு இடையேயான பிறழ்வுகள் என்பன பலவிதமான மனச்சோர்வுகளுக்குக் காரணமாக அமைகின்றன. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் மனிதர்களின் எண்ணிக்கை இன்று அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், பிரச்சினைகளுடன் நாள்கள் தொடங்கி, பிரச்சினைகளுடனேயே நாள்கள் முடிகின்றன. அத்தோடு பணத்தைத் தேடி அலைதல் என்பது பெரிய விடயமாகவும் இருக்கின்றது. பணத்துக்காகப் பரிதவிக்கும் செயல்களை எல்லாம் செய்து விடுகிறார்கள். 'காசு , பணம், துட்டு, மணி மணி' என்ற இன்றைய சினிமாப் பாடல் பெரும்பாலானோரை இன்று கவர்ந்து சிந்திக்க வைத்துள்ளது. இவையெல்லாம் உளவியலில் மனிதனின் வாழ்வியல் பக்கங்களில் விழுந்த துவாரங்களாகக் காணப்படுகின்றன.

மனிதன் உயிர்வாழ்வதற்காக உண்கிறான்; சுவாசிக்கின்றான்; நீர் அருந்துகின்றான். ஆதிகாலத்தில் சகலதையும் இலவசமாக பெறக் கூடிய வசதி மனிதனுக்குப் பூமியில் கிட்டியிருந்தது. பின்னர் பண்டமாற்று முறை அறிமுகமாகி இன்று தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டு 'பணம்' வந்துள்ளது. அன்றும் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. ஆனால் முதுமையடைந்தவர்கள் நீண்ட ஆயுளுடனும் மனமகிழ்வுடனும் வாழ்ந்திருக்கின் றார்கள். இதற்குப் பல காரணங்கள் இருந்துள் ளன. அவர்கள் பாடுபட்டு உழைத் தார்கள். போசாக்கான உணவுகளையே உண்டார்கள். இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழ்ந்தார்கள். மற்றவர்களின் சுக துக்கங்களில் கூடி மகிழ்ந்தார்கள். இன்று இவையெல்லாம் எதிர்பார்க்கமுடியாத ஒன்றாகியுள்ளது. அத்தோடு சுகாதார வசதிகள் மேம்பட்டுள்ளன. இதன் மூலமாகத்தான் ஆயுள் நீடிப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது. மிகுந்த பணச் செலவில் முதியவர் உயிர் வாழ்கின்றார். உடல் வலுவற்ற நிலையில் உயிர் வாழ்கின்றார். மன வலிமை உள்ளவர்கள் மட்டும் நடமாட்டத்துடன் காலத்தை வெற்றிகரமாகக் கழிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ஏனையவர்கள் வலிந்த தாக்குதலில் முதுமைக்கெதிராக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் எந்தப் பகுதியில் உள்வாங்கப்படப் போகின்றோம்.?

குடும்பம் என்ற சமூக அலகின் போக்கும் சீரமைப்பும் சமநிலையில் காணப்பட வேண்டும். இளமையையும் முதுமையாக்கும் திறன் இந்தக் குடும்பத்துக்கு தான் உள்ளது. குடும்பத்தின் வசதி வாய்ப்புக்கள், குடும்ப விழுமியங்கள், சமூக மதிப்பு இவையனைத்தும் காவிகளாக சுமக்கப்படும்போது பொறுப்பு ஏற்படும். இந்தப் பொறுப்பின் மூலம் இருப்பு என்பது வேண்டப்படும். இந்த இருப்பின் கனதியில் தான் முதுமையின் பிறப்பு, நிலைப்புப் பெறும். குடும்பத்தில் ஒத்து வாழ முடியாத பண்புகள் அனைத்தும் துடைத் தெறியப்பட வேண்டும். பலவிதமான முதுமை தொடர்பான விளைவுகளைத் தெரிந்து கொள்வது, முதுமை வாழ்வை மோசமாக்காமல் நேசமாக்கும் என்பது வெள்ளிடை மலை.

> பெற்றோர் உறவு, கணவன் மனைவி உறவு , உறவினர்கள் குடும்ப உறவு, அயலவர்கள் குடும்ப உறவு இந்த நான்கும் உளவளத்தைக் கட்டியெழுப்புவ தற் காக சமூகத்தில் காணப்படும் நான்கு தூண்களாக உள்ளன. இந்த உறவுகளின் மேலீடும் குடும்பத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்பத்திப் பொருள்களைஇந்த இல்லத்தின் மூதாட்டி ஒருவர் பார்வையிடுகிறார். (ஒ-51)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தரம் 6 இல் படிக்கும் மாணவர் ஒருவர் முதிய பெண் ஒருவருக்கு ஐஸ்கிறீம் வழங்கிய பின்னர் அவருக்கு வணக்கம் செலுத்தும் காட்சி. (ஒ-51)



கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முதியோர் வாரத்தின் முதல் நாளன்று சென்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் தரம்-6ஐச் சேர்ந்த மாணவர்கள் இங்கு தங்கி வாழும் உறவுகளால் கைவிடப்பட்ட வயோதிபப் பெண்ணிடம் அவரைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் குறிப்பெடுப்பதைக் காணலாம். (ஒ-51)




சாவகச்சேரி நுணாவில் மத்தி சர்வ சாதன சங்க சனசமூக நிலையத்தினர் நடத்திய சிறுவர் தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் மற்றும் நிலையத் தலைவர் ந.சுந்தரலிங்கம் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஒ-9)




சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவு பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரியில் கலாசார விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை சிறுவர் தினத்தன்று நடத்தியது. நிகழ்வில் சிறுவர் உரிமைகளும் சட்டங்களும் என்ற தலைப்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் உரையாற்றுவதையும் கலாசார நிகழ்வுக் காட்சியையும் காணலாம். (ஒ-4)



வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற சிறுவர், முதியோர் தின விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், முதியவர் ஒருவருக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதையும், சிறுவர்களின் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச செயலர், மேலதிக மாவட்ட அரச அதிபர் மற்றும் பொதுமக்களையும் காணலாம். (ஒ-29)



வவுனியா புதுக்குளம் பண்டிதமணி வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் நெடுங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.விநாயகமூர்த்தி, அதிபர் செல்வி சி.ஜெலந்தினி மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரையும் காணலாம். (ஒ-422)



கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் வாரத்தின் முதல்நாள் நிகழ்வில் இடம் பெற்ற கலை நிகழ்வில் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய மாணவிகளின் நடனம். (ஒ-51)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சங்கானை பிரதேச செ[illegible] நடத்தப்பட்ட நிகழ்வில் முதியோர்களுக்கான சங்கீதக் கதிரை[illegible] மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பலூன் உடைக்கும் போட்டி ஆகியன இடம்பெற்ற வேளையில்... (ஒ-14-29)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரிக்கென 37 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

காரைநகர் - சுழிபுரம் இந்து கௌரவ குடும்பம் 1975, கேட்டை G.C.E. A/L, Cashier, U.K. Citizen மாப்பிள்ளைக்குப் மணமகள் தேவை.
Profile Number : 18196
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2523127 (சி-12380)

## மணமகள் தேவை

புலோலி இந்து கௌரவ குடும்பம் 1977, சதயம் M.Sc. Engineer, U.S.A. Citizen. மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. 7 இல் செவ்வாய் உள்ளது.
Profile Number : 13743
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி-10379)

## மணமகன் தேவை

1985கேட்டை, BIT, Fair, Slim மணமகளுக்கு மணமகன் தேவை. 7 இல் செவ்வாய் உள்ளது. நிறைந்த சீதனம் உண்டு.
தொடர்பு: 0775393728 (சி-12886)

## மணமகள் தேவை

கரவெட்டி இந்து கௌரவ குடும்பம் 1986, பூசம் Aeronautical Engineer, U.S.A Citizen மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை.
Profile Number : 14417
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2523127

## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் மருதனார்மடம், வலி. வடக்கு பிரதேச சபையின் புதிய அலுவலகத்துக்கு முன்புறமாக வீட்டுடன் கூடிய காணி முழுமையாகவோ, பகுதியாகப் பிரித்தோ விற்பனைக்கும், கந்தரோடை உப்புக்குளத்துக்குப் பக்கத்தில் 30 பரப்பு வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. (32405)
தொடர்புகளுக்கு : 078 632 6111 , 0779 710 760

## வாகனச் சாரதி தேவை

பார ஊர்தி அல்லது பஸ் லைசென்ஸ் AD தர அனுமதிப்பத்திரம் உள்ளவர்களும், (முன் அனுபவம் உள்ளவர்கள்) அத்துடன், இலங் கை முழுவதும் றூட் தெரிந்தவர்களும், ஆங்கிலம் or சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : SUNJEY CABS & TOURS
713, HOSPITAL ROAD,
JAFFNA.

## மணமகள் தேவை

சுன்னாகம், இந்து மணமகள் 1978, அனுஷம், Civil Engineer, U.S.A. Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. 4 இல் செவ்வாய் உள்ளது. மொத் தப் பாவம் -23
Profile Number : 15824
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி-12884)

## மணமகள் தேவை

கொக்குவில் - ஏழாலை இந்து கௌரவக் குடும்பம் 1985, பூரம், Vascular Specialist-Hospital, U.S.A. Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை.
Profile Number : 19003
www.thaalee.com (திருமண சேவை)
Tel : 2520619 (சி-12881)



இரண்டு நாட்களில் ஒரு கதவிற்க்கான அடைப்புகளை கொத்தி பெறமுடியும்.12000.00 (நிபந்தனைகளிற்க்குட்பட்டது)

**மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 9399**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, இல.15,கென்மஸ் லேன் (பழைய நீதிமன்றத்துக்கு முன்னால்) வீட்டுடன் கூடிய 20 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. வீட்டுடன் 5 பரப்பு, 7 பரப்பு மற்றும் 8 பரப்பு என பிரித்தும் கொடுக்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
**தொ.பே.இல: 077 0367143**

# IMMEDIATE VACANCIES

## SALES EXECUTIVES

( NORTHERN/ EASTERN/ NORTH CENTRAL / CENTRAL / Provinces)

- More than 1 Year experience in paints or Hardware field
- Age below 27 Yrs.
- Fluent in all three languages
- Should have a valid Driving Licence
- Candidates living in above areas will be given preference
- Willing to work in any part of the Island
- Sound Computer literacy in hardware and software would be an added advantage
- Should be a self-motivated and result oriented professional

Apply with complete CV and **Indicating the post** on the top left hand corner of the envelop to reach us within 7 days to the address below.

General Manager,
C.P.T. CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd
15, Noel Mendis Mawatha,
Moderawila Industrial Estate, Panadura.

LUXURY Colour box KENLUX Sunny DE BZER Fareda AEROMIX

ESTD 1835
GS &Co
BELIEVE

## உள்நாட்டு விநியோகஸ்தர்கள்

George Steuart Teas, மிகவும் தூய்மையான தேயிலை, தூய சிலோன் தேயிலையினை அவ்விதம் பரிமாறும் பெருமையினை கொண்டுள்ளது. தூய சிலோன் தேயிலையினை இலங்கை வாடிக்கையாளர்களும் அனுபவிக்கும் சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் நாடளாவியரீதியில் விநியோக வலையமைப்பினை நிறுவனம் விஸ்தரித்து வருகிறது.
விசேடமாக யாழ்ப்பாணம், நல்லூர். கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனை பிரதேசங்களில் எமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்க ஆர்வம் கொண்டுள்ள வர்த்தகர்களை எம்முடன் இணைய அழைக்கின்றோம்.

தூய சிலோன் தேயிலையினை விநியோகம் செய்வதில் நீங்கள் ஆர்வம் கொண்டிருப்பின் உங்களின் விருப்பத்தினை தெரிவித்து விண்ணப்பம் ஒன்றினை கீழுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யும் ஆற்றலுடன் குறிப்பிட்டு எமக்கு அனுப்பி வையுங்கள்.

- ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான வங்கி உத்தரவாதம்.
- விநியோகத்தினை மேற்கொள்ள ஒரு வாகனம். (ஓட்டுனர், உதவியாளர் உட்பட)
- முறையான களஞ்சிய வசதி மற்றும் அலுவலக இடவசதி.

தெரிவு செய்யப்படும் விநியோகஸ்தர்களுக்கு சிறந்த விநியோக இலாபமும், நாளாந்த வாகன கொடுப்பனவும் வழங்கப்படும்.

## விற்பனை பிரதிநிதிகள் மற்றும் நவீன வர்த்தக அதிகாரிகள்

**தூய சிலோன் தேயிலையின் சிறப்பினை உள்ளூர் சந்தையில் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

George Steuart Teas, சரியான தேயிலை உற்பத்தியாளர், தம்முடன் கம்பீரமான விற்பனை பிரதிநிதிகளையும், நவீன வர்த்தக அதிகாரிகளையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறது.

நீங்கள் சிறந்த சந்தைப்படுத்தல் திறமையுள்ளவர் எனின் சிறப்பான வருவாய் ஒன்றை பெற பொருத்தமான வாய்ப்பே இதுவாகும்.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.

- க.பொ.த (உ/த) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
- FMCG/FMCH துறையில் ஒருவருட விற்பனை அனுபவம். (பாடசாலை விட்டு விலகியவர்கள் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுவர்)

இவ்விளம்பரம் பிரசுரமாகி 10 தினங்களுக்குள் உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர் விபரங்களுடன் கீழுள்ள முகவரிக்கு உங்கள் சுயவிபரக்கோவையினை அஞ்சல் செய்யுங்கள்.

George Steuart
TEAS

General Manager,
**George Steuart Teas (Pvt) Ltd,**
No. 02, Wekanda Road, Colombo 02. T: 011511225[illegible] E-mail: prashantha@gsteas.lk

# உங்களுக்கு

## அவசரபணத்தேவை

# உள்ளதா?

SINGER FINANCE (LANKA) PLC
Trusted Excellence

# SINGER FINANCE

நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

| தொடர்புக்கு | | |
|---|---|---|
| | தனு | 077 9 357 124 |
| | மணி | 077 7 131 292 |
| | பிருந்தன் | 078 5 000 917 |

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆடம்பரமான செலவுகளை குறைப்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி யுண்டு. மறைமுகப் போட்டி களுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக் கும். பயணங்களால் ஆதயம் உண்டு. விருந்தினர், நண்பர் களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**இடபம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயல் படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பேச்சில் கம் பீரம் பிறக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோ சித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகள் ஒத்துழைப்பார்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக் கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும்.

**கடகம்:** வெளிப்படையான பேச்சால் சில காரி யங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தி யோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராகும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கம்:** மனசாட்சிக்கு விரோதமின்றி செயல்பட வேண்டுமென நினைப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார் கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத் தில் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி:** பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். நண்பர், உறவினர் களை பகைத்துக் கொள்ளாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். வியாபாரத்தில் வேலை யாள்களால் விரயம் வரும்.

**நாளை**

புரட்டாதி-21 திங்கட்கிழமை 07.10.2013
திதி: திருதியை பி.இ.03.27 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப.04.30 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32 - 09.02 வரை

**துலாம்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர் கள். கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள். வியா பாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கல்யாண முயற்சிகள் பலித மாகும். உங்கள் ஆலோசனையை பலர் ஏற்றுக் கொள் வார்கள். சகோதர வகையில் நன்மை கிட்டும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு.

**தனுசு:** கணவன் - மனைவிக்குள் அன்னி யோன்னியம் பிறக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். உறவினர்களின் அன்புத் தொல் லைகள் விலகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும்.

**கும்பம்:** வேலைச்சுமையால் உடல் அசதி. மனச்சோர்வு வந்து நீங்கும். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடியுங்கள். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். பிள் ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள் வார்கள். சகோதர வகையில் நன்மை கிட்டும். நவீன மின்னலைச் சாதனங்கள் வாங்குவீர்கள். பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | 3 | | |
| | | | 6 | 3 | | | 7 | 8 |
| 6 | | | | | 9 | 1 | 5 | 4 |
| 7 | | 9 | | | 6 | | | |
| 3 | 6 | 1 | | 8 | | 5 | 2 | 9 |
| | | | 9 | | | 8 | | 7 |
| 5 | 4 | 7 | 1 | | | | | 3 |
| 1 | 9 | | | 7 | 5 | | | |
| | | 6 | | | | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 6 | 9 | 7 | 3 | 2 | 4 | 5 |
| 9 | 7 | 3 | 4 | 2 | 5 | 8 | 6 | 1 |
| 5 | 2 | 4 | 1 | 8 | 6 | 3 | 7 | 9 |
| 3 | 6 | 7 | 8 | 1 | 2 | 5 | 9 | 4 |
| 4 | 8 | 2 | 5 | 6 | 9 | 7 | 1 | 3 |
| 1 | 5 | 9 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 |
| 6 | 4 | 8 | 2 | 3 | 1 | 9 | 5 | 7 |
| 2 | 3 | 5 | 7 | 9 | 4 | 1 | 8 | 6 |
| 7 | 9 | 1 | 6 | 5 | 8 | 4 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் கனகரத்தினம் சிவராசா

(முன்னாள் முள்ளிப்பற்று பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளர், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும், கமக்குழுத் தலைவரும், மல்வில் கிருஷ்ணன் கோயில் பொருளாளரும்)

**தோற்றம்**
**11.06.1949**

**மறைவு**
**07.09.2013**



இமயம் சரிந்து இன்று மாதமொன்று
ஆனதோ? எங்கள்
இதயங்கள் சுமக்கும் துயர் என்றுமினி
ஓயாதோ....?
தந்தையாய், தலைவராய் தக்க வழி காட்டியாய்
தலைமை கொண்ட தெய்வமே!
நெடுந்தூர பயணமோ?
விதியீது என்று மனமாற முடியுமா?
விதிர் விதிர்த்து அழுகிறோம்
துயர் தீர்க்க வாரும் அப்பா!
எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா
கீதா நாயகனின் பாதக் கமலங்களில் அமர
அஞ்சலித்தோம் –
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

கடந்த 07.09.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் கனகரத்தினம் சிவராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (07.10.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் தாங்களும் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கொற்றாண்டார்குளம்,
இயக்கச்சி.

குடும்பத்தினர்.

(32299) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகை

# உலக நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

* 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
* மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான விசேட சலுகை U.K. 3Kg பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன

கிரிஷான் Worldwide Courier Service
499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746

### வீடு, வளவு விற்பனைக்கு

நல்லூர் கச்சேரி நல்லூர் வீதியில் மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அண் மையில் மூன்று அறையுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக் குண்டு.
தொடர்பு - 075 393986, 078 9148712.
(32411)(14,17)

### தவறி விட்டது

கந்தையா சுந்தரலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை Licence, Insurence, Tax வங்கி அடகு துண்டு, புத்தகம் என்பன வண்ணார் பண்ணைக்கும் தச்சன் தோப்புக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
0777 955810
(32416)(14.17)

### மாபெரும் மலிவு விற்பனை

இடம் : தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
காலம் : 06.10.2013 (ஞாயிறு)
கணினிகள், கணினி உபகரணங்கள், Net cafe box, show case, Counter Table, Air Conditioner, Photocopier, Printer etc.
தொடர்பு: 077 261 9590 (32408) (7.6.3)

### பயிற்சிப் பட்டறை

NALTC – Australian Tamil Management Service ஊடான இலகு வழி (Easy way) ஆங்கிலமொழி பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது. இது மூன்று Programs ஆக நடத்தப்படும் இப் பயிற்சி நடத்தப் படும் இடங்கள் Tilko Hotel, Green Grass, Mangos.

காலம் :- October பதிவுகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளன. (பாடசாலை செல்வோர், பாடசாலை விட்டு விலகியோர், வேலை புரிவோர் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி, :- இல. 116, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

### வீடு வாடகைக்கு

அம்மன் கோயில் வீதி, நவாலி தெற்கு மானிப்பாயில் 3பரப்பு 3குழி காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 8054567
(32411)(14.17)

## சிறுவர் தின விழா

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் சர்வ தேச சிறுவர்தின விழா சிறப்பாகக் கொண்டா டப்பட்டது. வர்ண ஆடைகள் அணிந்து பல்வேறு கலை நிகழ் வுகளில் ஈடுபட்ட மாண வர்கள் ஏனையவர்க ளுக்கு இனிப்புப் பண் டங்களை வழங்கி மகிழ் ந்தனர்.

மேலும் சிறுவர் ஆக்க வெளிப் பாட்டு நிகழ்வு களும் சிறுவர் விழி ப்புணர்வு, பேச்சு, நாட கம் போன்ற நிகழ்வு களும் நடத்தப்பட்டன.

இதேவேளை வவுனியா சைவப் பிரகாச ஆரம் பப் பிரிவு, வவுனியா இறம் பைக்குளம் பாடசாலை, வவுனியா நெளுக்குளம் கலை மகள் மகாவித் தியாலயம், வவுனியா விபுலானந்தக் கல்லூரி உட்பட வவுனியாவின் பல்வேறு கிராமப்புறப் பாடசாலைகளிலும் சிறு வர் தினம் கொண்டா டப்பட்டது.

மேலும் வவுனியாவில் உள்ள சிறுவர் கழகங் களிலும் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-402)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நகர மத்தியில் Chapel Street இல் முதலாம் இரண்டாம் குறுக்கு தெருவுக்கு இடையில் 2பரப்பு 20 பேர்ச் காணி விற்பனைக் குண்டு விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு
0773 437 620

3 மாத கால பயிற்சி நெறி **அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் 20000/= மட்டுமே

பேசியல், மேக்கப், கொண்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், மேற்படி பயிற்சி நெறிகள் நடை பெறுகின்றன. ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை, ★ உடல் எடை கூட்டும் குளிசை, ★ உடல் எடை குறைக்கும் பவுடர், குளிசை, கோப்பி, என்பன. ★ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான குளிசை ★ தலைமுடி வளரச்செய்யும் ஆயுள்வேத எண்ணெய், ★ முகத்தில் உள்ள கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நன்பட்ட வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்தின் கிறீம், விற்பனைக்கு உண்டு. மூலிகை வைத்தின் பேசியல் செய்து கொள்ளலாம், மேக்கப் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ★ கழுத்து கறுப்பு அகற்றும் கிறீம் பெற்றுக்கொள்ளலாம். தலைமுடி சுருட்டுதல், அயன்பண்ணுதல், டேனிங்செய்து கொள்ளலாம்.

பதிவு இல. 16168
077 2106155
அக்ஷயா=> நாவலர் வீதி, (பிரவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில்) யாழ்ப்பாணம். (31816.17.16)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் ஐங்கரவதியைச் சேர்ந்த
ஐ. உதயரத்தினம் ஜீவதேவி
தம்பதியரின் புதல்வனும்
யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை
மாணவனுமாகிய

**செல்வன் உ. சுஜீவராஜ்**

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் **164 புள்ளிகளைப்** பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தில் சித்தியடந்தமையிட்டு பாராட்டுவதுடன் மேலும் பல கலைகளைக்கற்று பட்டங்களைப் பெற்று உயர் வடைய பாலகணபதியின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசை - தி.செல்வநாதன்
மாமி- செ.யோகமாலா, மச்சி-செ.லக்ஷிகா,
அத்தான்- செ.சுதர்ஸ்மன்.
திருகிரத்தினவாசம்
அல்வாய்.
(29551)(10.14)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினை
கனகரெத்தினம் பிறேமானந்
(ஆசிரியர், யாழ். தம்பாட்டி
அ.த.க வித்தியாலயம் ஊர்காவற்றுறை.
சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன்)
உலக ஆசிரியர் தினமான நேற்று மகரகம
தேசிய கல்வி நிறுவகத்தில் இலங்கை
சனநாயக ஷோசலிசக் குடியரசின் பிரதம
மந்திரி கௌரவ தி.மு. ஜயரத்ன அவர்களிடம்
சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா"
விருது பெறுவதையிட்டு பாராட்டுவதோடு
மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பாரினிலே
புகழ் பெற வாழ்த்துகின்றோம்.



(32414)(17.14)

வாழ்த்துபவர்கள்:
பனிசாரு குடும்பத்தினர்.
பனிசாரு பூங்கனிச்சோலை
311/1 பலாலி வீதி,
கோண்டாவில் யாழ்ப்பாணம்.

## A\L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
## ESOFT METRO CAMPUS வழங்கும்
### Career Guidance & Higher Education Seminar 2013 / 2014



நவீன யுகத்தில் தகவல் தொழிநுட்பம், மருத்துவம், ஆங்கிலம், வியாபார முகாமைத்துவம் மற்றும் பொறியியற்துறை போன்றவற்றில் தொழில்வாய்ப்புக்கள், உயர்கல்வி சம்பந்தமான இலவச ஆலோசனைகளையும் கொழும்பின் பிரபல்யமான பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

1. மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக......
   Dr. Dayan Rajapakse
   MBBS, MSc, MBCS, CITP, MIEEE, MCS (SL)
   தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரபல விரிவுரையாளர்
   Chairman - ESOFT Groups of Companies
2. தகவல் தொழில்நுட்பம், வேலை வாய்ப்புத் தொடர்பாக......
   Dr. Prasanna Logkuge
   Ph.D (Aus), M.Sc (Comp Sc), PG Dip (COMP Tech), B.Sc. PMP (USA), MPMI (USA), MACS(Aus), MBCS (UK), CITP(UK), MCS (SL)
   Director - ESOFT Intrnational Education Private Limited
3. வணிக முகாமைத்துவம், கணக்கியல் தொடர்பாக......
   Dr.Dillina Herath
   BBA, PG Dip (Mgt), MBA, Ph.D
   Dean- ESOFT Metro Campus
4. பொறியியற்துறை தொடர்பாக......
   Prof. Sisil Kumarawadu
   BSc Eng (Moratuwa), MEng(Saga), PhD(Saga)
   Professor
   Department of Electrical Engineering
   Faculty of Engineering
   University of Moratuwa

இடம் : ESOFT METRO CAMPUS - JAFFNA
காலம் : 11th October 2013
நேரம் : காலை 10 மணி

முன் பதிவுகளுக்கு உங்கள் பெயர் விபரங்களை 077 372 88 42 இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna
Tel : 021 222 4142 | HOTLINE : 077 309 9 308

## Courses of the Month
## OCTOBER

Register for DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology
25% Discount

edexcel Assured
50% Discount

DiBM Diploma in Business Management
DiCA Diploma in Computerized Accounting
DiWE Diploma in Web Engineering
DiSE Diploma in Software Engineering
International Recognized

ESOFT Shaping Lives, Creating Futures.
METRO CAMPUS
No.137, K.K.S, Road, Jaffna
Tel : 021 222 4142
HOTLINE : 077 309 9 308

Register with ESOFT win Android Smartphone
SMS <Your Name> Space <Branch> Space <Course> to 077 990 5 611

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள் மோதி பெண்மணி காயம்

வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணை மோதித்தள்ளியது மோட்டார் சைக்கிள். படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். கோப்பாயில் நேற்று மதியம் இடம் பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பி.செல்லம் (வயது-54) என்பவரே படுகாயமடைந்தார். அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (ஒ-4)


## மரண அறிவித்தல்

### திருமதி நவநீதி சுப்பிரமணியம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் , குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான் சுப்பிரமணியம் நவநிதி (03.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அமிர்தம், சிவஞானம், கண்மணி, சரஸ்வதி மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று கல்கிசை மலர்ச் சாலை யில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் மு.ப.10.00 மணியளவில் இந்து கல்கிசை மயானத்தில் தகனம் செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு

தகவல்:
ச. தெய்வேந்திரன்
011 4869909


## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.6

முத்து இராசரத்தினம் எழுதிய "வானேறும் ஆறு" என்ற கவிதை நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் மாத்தளை கந்தசுவாமி கோயிலடி வேப்பங் கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ்.அம்பிகை பாகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். நூலை சி.ராஜ்குமார் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற பதிவாளர் கு.சண்முகநாதன் பெற்றுக் கொள்வார். (ஒ-14)

## இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோவில் இணையலாம்

யாழ்ப்பாணம், ஒக்.6

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவில் அங்கத்தவர்களாக இணைவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

13 தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும். ஆர்வமுடையவர்கள் யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள நிஸ்கோ அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொது முகாமையாளர் ப.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (வ-14)

## ஓய்வூதியர் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஒக். 6

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் சங்கத்தினர் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 15 மூத்த ஓய்வூதியர்களைக் கௌரவிக்கவுள்ளனர். இந்த நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெறும். சங்கத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும், கௌரவிப்பு நிகழ்வில் பளை, கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மூத்த ஓய்வூதியர்கள் 15 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-9)


## வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 18.09.2013 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத்தந்தையார்
அமரர் தம்பு தருமரத்தினம் (றோசம்மான்)
அவர்களின் சபிண்டீகரணக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கிராமசபை ஒழுங்கை, கொல்லங்கலட்டி.
(32375)(3:6:4)
பிள்ளைகள்,
த.கஜனி, மயூரி.



## மரண அறிவித்தல்

### பிலிப் மார்க்குப்பிள்ளை



முல்லைத்தீவு கோயில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை யாட் அப்பு ரோஜ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் மார்க்குப்பிள்ளை நேற்று (05.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாக்கிரட் இன் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திருகோணமலை புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின் திருகோணமலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நேசரெட்ணம் (மகன்) - 07770 32006
கிறிஸ்ரின் (மகன்) - 07742 47948

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
T.P: 026 222 3355
(32544) (10,14)


## குறைந்தது நுளம்புத் தொல்லை

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியின் முன்பாக உள்ள பெரிய வடிகாலில் தேங்கி நிரம்பியிருந்த மண் யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் அள்ளி வெளியில் எடுக்கப்பட்டு குவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுத்திகரிப்பை அடுத்து அந்தப் பகுதியில் தற்போது நுளம்புகளின் தொல்லை குறைந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (ஒ-51)


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் விஜயகாந்தன்
அவர்களின் அன்புத் தந்தையும் யாழ் ஆனைப்பந்தி அம்பாள் வெதுப்பக
உரிமையாளருமாகிய
சங்கரப்பிள்ளை துரைச்சாமி
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
யாழ். கிளை அங்கத்தவர்கள்



## மரண அறிவித்தல்



திருமதி
### இரஞ்சிதமலர் சுவாமிநாதன்
( ஓய்வு பெற்ற உதவித் தலைமை ஆசிரியை )

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும், கொண்ட இரஞ்சிதமலர் சுவாமிநாதன் 03.10.2013 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுவாமிநாதன் ( ஆசிரியர் ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமு அன்னமுத்து தம்பதிகளின் மகளும், வேலுப்பிள்ளை அன்னமுத்து தம்பதிகளின் மருமகளும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் ( தேயிலை தரக்கட்டுப்பாட்டாளர் ) காலஞ்சென்ற துரைபத்மநாதன், குணநாயகம் ( ஓய்வுபெற்ற ஆசிரியர் ) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயநாதன், காலஞ்சென்ற ஜெயறஞ்சிததேவி, ஜெயானந்தன் ( சுவிஸ் ), காலஞ்சென்ற ஜெயரஞ்சிதநாதன், ஜெயந்திராதேவி ( கனடா ), ஜெயசேகரன் ( சுவிஸ் ),ஆகியோரின் பாசமிகு அன்னையும், நந்தினி, கனகராணி, சந்திரசேகரம், ஞானேஸ்வரி,பரமேஸ்வரி, ஆகியோரின் அன்பு மாமியாரும், துரைசிங்கம் ( ஓய்வுபெற்ற பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ) அவர்களின் அன்புச் சிறிய தாயாரும், அஜன், மனோஜ், நிதர்ஷா, லாவண்யா, விதுஷா, நிஷா, விசால்,நிருஷா, நிருஷன், கிரிஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (06.10.2013)ஞாயிற்றுக் கிழமை மு.ப.10மணி தொடக்கம் பி.ப 6 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு மறுநாள் 07.10.2013 திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சேகர் / தம்பி ( ஏழாலை வடக்கு – சு... )
தொ பே 071 8287793, 0771613060,011 2502976,071 828794



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பாலசிங்கம் இராசம்மா



மலர்வு 11 ★ 05 ★ 1927 உதிர்வு 18 ★ 09 ★ 2012
திதி: துதியை

ஆண்டு ஒன்றாகியும்
உங்கள் நினைவுகள் என்றும்
எமது உள்ளத்தை விட்டு அழியாது

நெட்டிலிப்பாய் வீதி, குமரகோட்டம்,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
சகோதரர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(32374.17.14)



## நினைவலைகள்

6ஆம் மாத நினைவஞ்சலி | 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

19.12.1965 தாயின் மடியில் 29.10.1942
11.04.2013 ஆண்டவன் அடியில் 17.01.2002



தம்பையா ஸ்ரீமோகன்



மாணிக்கம் தம்பையா

பாச உறவிரண்டு பார்விட்டு போய்
மாதம் ஆறும் ஆண்டு 11 ம் ஆனதையா
நாம் உமைவந்து சந்திக்கும் நாள் தான்
எமக்கு பொன்னான நன் நாள் அந்நாள் வரும் வரை
என்றென்றும் உமது நினைவை சுமந்து நிற்கும்

இல. 105, சில்வர் ஸ்ரார் லேன், ...றோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(32371)(10,14)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




அரியாலை செந்தில்நேசன் சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வனும்
யா/ புனித பொஸ்கோ வித்தியாலய மாணவனுமான செல்வன்
**செ.பரத்கிருஷ்ணா**
2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையை மனமகிழ்வோடு வாழ்த்துகின்றோம். அவர் மேலும் கல்வியில் உயர்வு பெற அன்னை கலைவாணியை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
தாத்தா, அம்மம்மா, அன்ரா, சித்தா, மாமாமார், அத்தைமார், மைத்துனர்மார்கள், மைத்துனி.
(32377) (4,6,3)

## ஏடுகள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்

தகுந்த ஆதாரங்களுடன் ஏடுகள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
(சி/12808) (7,6,3)
துரை வீதி, இணுவில். அண்ணா தொழிலகம்.

## AAT
Foundation Level
Intermediat Level
Final Level

வகுப்புகள் நடைபெறுகின்றன.
பதிவுகளுக்கான முடிவுத்திகதி :15th October 2013

எமது வழமையான விரிவுரையாளர்களுடன் கணக்கியல் துறை ஆசிரியர் Mr. d. Sam, வணிகவியல்துறை ஆசிரியர் Mr. M. Mugunthan ஆகியோர் இணைந்து கொள்கின்றனர்.

- G.C.E A/L வர்த்தகப்பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு ஆரம்ப நிலை (Foundation) விலக்கழிப்பு (Exemptions)
- இக் கற்கை நெறியை எமது நிறவனத்தில் திறமையான முறையில் பூர்த்தி செய்வோருக்கு வேலைவாய்ப்புகளையும் முன்னணி நிறுவனங்களிலிருந்து பெற்றுத் தருகின்றோம்.

**Spectra skills,**
No-19, Stanley Road, Jaffna. (32376)(10,14)
Tel: 021 222 1422
021 222 1423

## STUDY IN
### Williams College, London

**POST GRADUATE COURSES**
➤ EDSML - £4,500

**PROFESSIONAL COURSES**
➤ ACCA - 30 Months Programme
Initial Payment of £3,000

**CTH:** DIP/ Advance Dip in Hotel Management
Level 5/6 - £3,500
PGD - Level 7 - £4,350

**HND - Edexcel**
- Business
- Accounting
- Marketing
- HR Management
- Com / System Management
- Health & Social Care
- Fashion & Textile
- Hospitality Management
- Travel & Tourism

SCHOLARSHIPS AVAILABLE
BRITISH COUNCIL
edexcel Approved Centre
ACCA
TIER 4
HIGHLY Trusted
Licence No: RPR6PRQ0
* TERMS & CONDITION APPLY

Local Call:
Mr.Siva - 0752355460 Miss. Ano - 0729269766
e-mail:Williamssrilanka@yahoo.co.uk

**Williams College**
Mr. A Marikar
Regional Marketing Manager
E:mohamed.shabeel@williamscollege.co.uk
T:+44 207 583 9222(ext.130) M:+44 754 032 3831
www.williamscollege.co.uk


## முகாவில் கிராமத்துக்கு மின் விநியோகம்

இயக்கச்சி முகாவில் கிராமம் முதல் தடவையாக மின் வெளிச்சம் பெற்றுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 145 மில்லியன் ரூபா செலவில் 5.2 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின் விநியோகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடக்கின் வசந்தம் மின் விநியோகத்திட்ட முகாமையாளர் குணசீலன், யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் ஞானகணேசன் ஆகியோர் கூட்டாக இணைந்து மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

முகாவில் அ.த.க.பாடசாலைக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ள 100 கே.வி.மின்மாற்றியின் விசையை அழுத்தி மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலைமற்றும்பத்துக் குடியிருப்புக்களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டது. (ஓ-9)

## 'பிரதீபா பிரபா' விருது அதிபர்கள் நால்வருக்கு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் நான்கு அதிபர்களுக்கு கல்வி அமைச்சின் சிறந்த நல் அதிபர்களுக்கான "பிரதீபா பிரபா" விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

பருத்தித்துறைக் கோட்டத்தில் வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன், புற்றளை ம.வி. அதிபர் மு.அனந்தீஸ்வரன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரேசன், கரவெட்டிக் கோட்டத்தில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலய அதிபர் எஸ்.ஜெயானந்தகுமார் ஆகியோரே "பிரதீபா பிரபா" விருதுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (ந-35)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




வல்வெட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த
**கனகசபை தேவிகா**
தம்பதியரின் செல்வப் புதல்வனும்
யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனுமான
**நிருஜன்**
அவர்கள் 2013 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்கும் பெற்றோருக்கும் உற்றார் உறவினருக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் மேன்மேலும் பல பெருமைகளையும் உயர் நிலைகளையும் அடைந்து சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

29/9, பிறவுண் வீதி,
2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**வாழ்த்துபவர்கள்:**
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார்.
(C/12632)(10,6)

## சாரதி தேவை
இலகு ரக வாகன சாரதி உடன் தேவை.
40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:-0756700680

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சுற்றிவர மதில் கட்டியபடி 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீட்டிற்கு அத்திவாரம் போட்ட நிலையில் கிணறும் உள்ளது.
T.P-0771319939

## பயிற்சி வகுப்பு
கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் (5th Batch 09/10/2013 காலை 9.00மணிக்கு) சிறந்த விளக்கத்துடன் இலகுவான முறையில் சாறி பிளவுஸ், சல்வார், எம்றோயிடரி (கையால் பூ போடும் முறை) பயிற்றப்படும். 7ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும்.
(சி.12393)(14,17)
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 077 9297474

## காணி விற்பனைக்கு
யாழ்பாணம் இருபாலையில் பருத்தித்துறை வீதியில் முகப்பைக் கொண்ட செவ்வக வடிவான 4பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு- 077 5143819
(சி.12395)(14,17)

## மணமகள் தேவை
வசாவிளான் -நெல்லியடி, இந்து கௌரவ குடும்பம், 1982 கேட்டை சிவில் எஞ்சினியர், ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை, மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. கிரகபாவம் 16. Profil Number: 15914
www.thaalee.com (திருமணசேவை)
T.P:2520619

## பணிப்பெண் தேவை
கொழும்பில் கௌரவமான தமிழ்க் குடும்பத்துடன் தங்கியிருந்து பணிபுரிய 30-40 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- 0777 105609
(சி.12307)(14,17)

## மணமகள் தேவை
வடமராட்சி இந்து கௌரவ குடும்பம், 1979, சதயம், A/L முகாமையாளர், UK citizen மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. 2இல் செவ்வாய், கிரகபாவம் 40.
Profil Number: 18614
www.thaalee.com (திருமணசேவை)
T.P:2520619

## மணமகள் தேவை
வேலணை, இந்து கௌரவ குடும்பம், 1976 பூசம், BSc Computer Engineer. USA Citizen மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மொத்த பாவம் 31. (கல்யான எழுத்து குழம்பியவர்) Profil Number: 17637
www.thaalee.com (திருமணசேவை)
T.P:2523127

## விநியோகஸ்தர் தேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் விநியோகஸ்தர்கள் அவசியம் (யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு)

தினபாலகுழுவானது 57 ஆண்டுகளுக்கு மேலாக நுகர்வோர் எலெக்ட்ரோனிக்ஸ் மற்றும் சமையலறை உபகரணங்களை இறக்குமதி செய்து நாடளாவிய ரீதியில் விநியோகித்து வரும் ஓர் முன்னணி நிறுவனமாகும். மேலும் 2000 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பிலிப்ஸ் எலெக்ட்ரோனிக்ஸின் அங்கீகரிக்கப்பட்ட ஒரே விநியோகஸ்தராகவும் திகழ்கின்றது. தற்பொழுது நாடளாவிய ரீதியில் நமது விநியோகஸ்தர் வலையமைப்பை விரிவாக்கும் திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம்.

**PHILIPS**
Home Appliances and Personal Care

நீங்கள் எங்கள் விநியோகஸ்தர்களாக ஆர்வமாக இருப்பின் கீழே குறிப்பிட்ட ஆவணங்களுடன் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தேவையான ஆவணங்கள்:
- வணிக பதிவு நகல்
- வங்கி உத்தரவாதம் / பிணை
- 3 மாதங்களுக்கான வங்கி அறிக்கை
- தேசிய அடையாள அட்டையின் பிரதி
- விநியோகஸ்தர் விண்ணப்பக் கடிதம்

(C/12375)(10,14) >>REXADS>

DINAPALA GROUP
The Key Account Manager
Dinapala Group of Companies
40 Nawala Road, Nugegoda
Tel: 077-930-9922, 011-2811-045, 011-2811-075
E mail : lalitha@dinapalagroup.com

## வீடு வாடகைக்கு
கோண்டாவில் பொற்பதி வீதியில் பெரிய Hall 5அறைகள், சமையல் அறை, இணைந்த குளியலறை, பிரத்தியேக குளியலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 0779007481
(சி.12396)(14,17)

## சுத்தமானதும், தூயதுமான நீரை பெறுவதற்கான ஒரே சாதனம்




தொ.இல: 021 222 5390
வட மாகாண ஏக முகவர்:
நாராயணா ஹாட்வெயார்ஸ் ரேடர்
இல: 92C, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

## குறுகிய கால வாடகைக்கு
வெள்ளவத்தை 45, நெல்சன் வீதியில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வருபவர்களுக்கும், திருமண வைபவங்களுக்கும் சகல தளபாடங்களுடனும் அறைகளாகவும், 2,3 அறைகள் கொண்ட வீடுகளாகவும் வசதிக்கேற்ப மாத, கிழமை, நாள் வாடகைக்குண்டு. குடும்ப மாக வந்து தங்குவதற்கும் பொருத்தமானது. (A/C, Hot Water உட்பட)
011 2502412 / 011 2360544
Hot : 077 3038063 / 071 8054332
வாகனத் தரிப்பிட வசதி உண்டு. (சி/12343) (10,6,3)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு
அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
**Saving Book - FD - Statement**
For: Student | Business | Migration | PR | Visit
Family | Dependant | Refused | Visas
077 4789289
விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் [illegible]
No.52, Davidson Road, Colombo -04.
நேரத்தை முன்கூட்டியே பதிவுசெய்துவிட்டு வரவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நடராசா

(கொழும்புத் துறைமுகக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இலங்கை ஓட்டங்குளம், கொழும்பு, கனடா ரொரன்ரோ, இங்கிலாந்து கொவன்றி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் சின்னத்தம்பி நடராசா கடந்த 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி (நீளியார்)-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-தையல்முத்து தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுசீந்திரன், கலைச்செல்வி, சுசீஸ்வரன், சோதீஸ்வரன், கலையரசி, இராஜசுசீந்திரன், சுசீ ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சேதுப் பிள்ளை, காலஞ்சென்ற கதிரவேலு (பொலிஸ்), காலஞ்சென்ற குமாரசாமி, மனோன்மணி (ஓய்வுபெற்ற தாதி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இன்பராணி, சச்சிதானந்தம், தயாரஞ்சினி, நவரஞ்சினி, துறைவன், சுதர்சினி, தாருணி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சண்முகம், நடராசா (சின்னத்தம்பி), விஜயரத்தினம் (நல்லையா), பத்மநாதன்(பழனி), விமலா, ரவீந்திரன், கலா, ஜெகதீஸ்வரன் (குழந்தை), ஈஸ்வரன் ஆகியோரின் தாய் மாமனும், காலஞ்சென்ற தம்பையா, காலஞ்சென்ற ஏரம்பு, கண்மணி, காலஞ்சென்ற கண்மணி, காலஞ்சென்ற பங்கராசா, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், காலஞ்சென்ற மணியம், கனகேஸ்வரி(சின்னக்கிளி) ஆகியோரின் மைத்துனரும், இந்திரா, பூபதிராசா, காலஞ்சென்ற சந்திரா, தவராசா, ராணி, காலஞ்சென்றவர்களான சித்திரா, திருக்குமார், மற்றும் வனிதா, பாமா, பரமேஸ்வரி, நாகலிங்கம் ஆகியோரின் அன்புக் குஞ்சியய்யாவும், டினோ, அன்புருவன், வேனில், செவ்வந்தி, கார்த்திகா, மானசி, மாசிலன், சுபீட்சன், முகூர்த்தா, ரட்சிகா, நேத்திரன், கோபிகா, பிறிநிதா, அபிஷா, அபூர்வன், மிதுலா, நிலா, அமிர்தா ஆகியோரின் செல்லப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.10.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் Canley Crematorium Garden Cemetery, Cannon Hill Road, Coventry CV4 7DF - இல் நண்பகல் 12.45 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சச்சிதானந்தன் (மருமகன்-நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா),
071 305 6733
011 282 0866

(சீ/12619) (10,14)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை துரைச்சாமி

(அம்பாள் பேக்கரி உரிமையாளர், ஆனைப்பந்தி)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை துரைச்சாமி கடந்த (03.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வீரகத்தி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கண்மணியின் பெறாமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சண்முகலிங்கம், பரமலிங்கம், கமலாம்பிகை, ஆனந்தலக்சுமி, கேதீஸ்வரன், தனலக்சுமி, யோகேஸ்வரி அகியோரின் அன்புச் சகோதரனும், ஜெய நனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன் ஆகியோரின் பாச மிகு தந்தையும், பஞ்சாட்சரம், சிவசுந்தரம், சபாநந்தினி, கி.ஸ்ரீறங்கன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்ற நாகராசா மற்றும் செல்வநாயகம், கனகலிங்கம், இராசலிங்கம், கந்தசாமி,ரூபாவதி, புஸ்பராணி காலஞ்சென்ற பாக்கியம், சவுந்தலாதேவி மற்றும் விஜயலக்சுமி, காலஞ்சென்ற சந்திரன் மற்றும் வதனி, தவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யனுஜா, கபிஷன், நக்சிகா, திசிஜா, விதுஷ், டிருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக கோம்பயன்மணல் இந்து மயாணத்துக்கு எடுத்துச் செல்லப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/3, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0170

(சீ/12615) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கியைத் தமிழ் இனவாதியாக சித்தரிக்கும் சிங்கள இனவாத கூட்டு

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.6
சிங்கள இனத்துடன் தனிப்பட்ட உறவுத் தொடர்புகளை கொண்டவர் என்ற கண்ணுக்குத் தெரியும் உண்மைகளை மறைத்து விட்டு விக்னேஸ்வரனை தமிழ் இனவாதியாக காட்டுவதற்கு சிங்கள இனவாத கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர்.

தனியொரு தமிழ் நாட்டுக்காக ஆயுதம் தூக்கி போராடிய வரலாறு வடக்கு முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரனுக்கு கிடையாது என்பது சிங்கள இனவாதிகளுக்கு பெரும் கவலையாக இருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

தனியார் வானொலி நிகழ்ச்சியொன்றில், ஜாதிக ஹெல உறுமயவின் பிரசாரச் செயலாளர் நிஷாந்த வர்ணசிங்குடன் கலந்து கொண்டு விவாதிக்கு போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விக்னேஸ்வரனும், சம்பந்தனும் தமிழ் இனவாதிகளாக இருந்தால் தான் சிங்கள மக்கள் மத்தியில் தங்கள் வண்டி ஓடும் என்பது சிங்கள இனவாத கூட்டமைப்பினருக்கு நன்கு தெரியும். ஆனால் விக்னேஸ்வரன் தமிழ் இனவாதி இல்லையென்பது இவர்களுக்கு பெரும் கவலையாக இருக்கின்றது.

நடந்து முடிந்த மத்திய மாகாணம்மற்றும் வடமேல்மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட இந்த சிங்கள இனவாத கட்சிகளின் வேட்பாளர்களில் ஒருவர் கூட வெற்றிபெறவில்லை.

சிங்கள இனத்தையும் ,சிங்கள நாட்டையும் காப்பாற்ற கிளம்பியுள்ளதாகச் சொல்லிக் கொள்ளும் சம்பிக்க ரணவக்க,விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன ஆகிய சிங்கள தீவிரவாத அரசியல்வாதிகளின் வேட்பா



ளர்களை சிங்கள மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

ஆகவே இந்த நாட்டில் இன்று இனவாதம் தோல்வியடைந்து வருகின்றது. உங்களது இனவாத கூட்டு கட்சிகளின் கருத்துக்களும்,பொதுபல சேனா போன்ற அமைப்புக்களின் கூச்சல்களும் மக்களை சலிப்படைய வைத்துள்ளன.

சிங்கள மக்கள் எங்களது அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் சொல்லும் கருத்துக்களை புரிந்து கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-5)

# பொதுநலவாய தலைவர்கள் வடக்கு கிழக்குக்கும் செல்வர்

கொழும்பு, ஒக்.06
இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கும் அரச தலைவர்கள் வடக்கு,கிழக்கு பகுதிகளுக்குச் சென்று யுத்தத்தின் பின்னரான நிலைவரங்களை நேரில் பார் வையிடவுள்ளனர். சில நாடுகளின் தலைவர்கள் கொழும்பில் இரண்டு நாட்கள் மாத்திரமே தங்குவதால் அவர்களுக்குப் பதிலாக அவர்களின் செயலாளர்கள் வடக்கு, கிழக்குக்குச் செல்வார்கள் என்று அறியமுடிகின்றது. அங்கு, சிவில் அமைப்புகள், மக்கள் ஆகியோரை சந்தித்து வெளிநாட்டு அரச தலைவர்கள் கலந்துரையாடுவார்கள் என்று தகவல்கள் வெளியானாலும் அது குறித்து இன்னும் உத்தியோக பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

நுவரெலியா, அம்பாந்தோட்டை, தென் ஆகிய பகுதிகளுக்கும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் செல்லவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

# ஆதாரங்களை தகர்த்தாலும் விடுதலை வேட்கை அடங்காது

## *மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் உறுதி*

யாழ்ப்பாணம், ஒக்.6
தமிழ் மக்களின் வீரம் செறிந்த போராட்ட ஆதாரங்களைக் குண்டு வைத்து தகர்க்கலாம். ஆனால் எமது மக்கள் மனங்களிலுள்ள தமிழ் உணர்வையும் விடுதலை வேட்கையையும் எவராலும் அழிக்க முடியாது - அடக்கி விடமுடியாது என்று தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினரும், தமிழரசுக் கட்சி இளைஞர் அணித் தலைவருமான பா.கஜதீபன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் முல்லைத்தீவு இல்லம் இராணுவத்தால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டமையை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுதந்திரத்துக்காக அன்று தொடக்கம் இன்றுவரை போராடிய அனைத்துத் தலைவர்களையும் மக்கள் தமது மனத்திலேயே ஆழமாகப் பதிய வைத்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அந்தத் தலைவர்களை மக்கள் மனங்களில் இருந்து அகற்றிவிட முடியும் என்பது அறிவீனமாகும். தலைவர்கள் யாராக இருந்தாலும் அவர்களும் அவர்களின் வாழ்விடங்களும் மதிக்கப்பட வேண்டியவை.

தமிழ் மக்களின் மனங்களில் தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம் என்ற உணர்வு உள்ளது. தம்மைத் தாமே ஆள விரும்பினார்கள். எமக்காகப் போராடிய எமது மண் மீட்புக்காக உயிர் நீத்தவர்களின் தியாகங்களை மக்கள் மனதில் நிலை நிறுத்திக் கொண்டுள்ளார்கள். அவர்களின் தேசியக் கனவை நனவாக்கவே தமிழ்த் தேசியக் கூட்மைப்பினரான எமக்கு மக்கள் வாக்களித்தார்கள். இதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.'

எமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வாழ்விடத்தை இராணுவம் இடித்தழித்தாலும் போராட்ட ஆதாரங்களை மறைத்தாலும் ஒவ்வொரு தமிழனின் மனத்திலும் போராட்டத் தியாகங்களும் உணர்வும் என்றும் நிலைத்துள்ளது.

எமது மக்களின் மனங்களிலுள்ள போராட்ட உணர்வையும் தியாகத்தையும் எவராலும் அழிக்க முடியாது - என்றுள்ளது. (த-5)

# பட்ஜட் விவாதம் முடிந்த கையோடு மேல், தென் மாகாணங்கள் கலைப்பு

## ஊவா ஒத்திவைப்பு

வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த கையோடு மேல் மற்றும் தென்மாகாண சபைகளை கலைத்து அவற்றுக்கு மார்ச் முற்பகுதியில் தேர் தலை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவ்விரு மாகாணங்களுடன் இணைத்து ஊவா மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசு முன்னதாக உத்தேசித்திருந்தாலும் முக்கிய சில காரணங்களால் அந்த முடிவு பிற்போடப்பட்டுள்ளது.

நவம்பரில் ஆரம்பமாகும் 2014 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதம் (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) மீதான வாக்கெடுப்பு டிசம்பரில் நிறைவடைந்ததும், மேல் மற்றும் தென் மாகாண கலைப்பு அறிவிப்பு மாகாண ஆளுநர்களால் விடுக்கப்பட வுள்ளது.

இவ்விரு மாகாணங்களுக்கு மார்ச் சில் தேர்தல் நடைபெறவுள்ளதை அரசும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, பொது நலவாய மாநாடு முடிவடைந்ததும் மாகாண சபை கலைப்பு திகதி அறிவிக்கப்படவுள்ளது.

அதேவேளை, நவம்பர் 15 தொடக்கம் 17 வரை பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளதால், 2014 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நவம்பர் பிற்பகுதியில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

# பிணையில் செல்ல அனுமதி

மன்னார், ஒக்.06
மன்னார் பள்ளிமுனை ஆலய நிர்வாக சபையின் செயலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் வைத்து பள்ளிமுனை ஆலய நிர்வாக சபையின் செயலாளரான லக்ஸ்மன் பிகிராடோ (வயது-29) மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரொருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

கடும் தாக்குதல்களுக்கு உள்ளான லக்ஸ்மன் பிகிராடோ மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து குறித்த நபரைத் தேடி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த புதன் கிழமை மதியம் சந்தேக நபரான அரச தரப்பு நகர சபை உறுப்பினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந் தார். மன்னார் பொலிஸார் அவரை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன் போது சந்தேக நபருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (க-12)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரபாகரனின்

பேச்சாளர்.

"இந்தப் பதுங்கு குழியைச் சுற்றி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றை அகற்றாமல் பதுங்குழியைக் குண்டு வைத்து அழித்தால் அந்த அதிர்வினால் சுற்றுப் புறத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளும் வெடிக்கும் ஆபத்து இருந்தது. இதனால் தான், கண்ணி வெடிகளை அகற்றியதன் பின்னர் இந்தப் பதுங்கு குழி அழிக்கப்பட்டது" என்றும் ருவான் வணிகசூரிய கூறினார். (த-5)

### முதல்வரையும்

கப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

தொடர்ந்து பிற்பகல் 1.15 மணியளவில் மதிய போசனத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறியை பழைய பூங்காவிலுள்ள ஆளுநர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன் பின்னர் மாலை 4.30 மணியளவில் ரில்கோ விடுதியில் வைத்து இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கும், இந்திய அரசின் உதவியில் பயன் பெற்ற சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சரையும் ரில்கோ விடுதியில் குர்ஷித் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இறுதியாக 5.30 மணிக்கு இந்திய ஊடகவியலாளர்களுடன் சந்திப்பபை நடத்துவார்.

இதன் பின்னர் 6 மணிக்கு பலாலி விமான நிலையம் ஊடாக மீண்டும் அவர் கொழும்பு திரும்பவுள்ளார். (த-5)

### இலங்கைக்கு

படவில்லை என்று சர்வதேச சமூகம் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை நேரில் கண்டறிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும் இலங்கைக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இவரது பயணமுடிவிலும் இலங்கைக்கு எதிரான கருத்துக்களே ஐ.நா. சபையில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில் அடுத்த ஆண்டு மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் மேலும் இறுக்கமானதொரு பிரேரணையைக் கொண்டு வருவதற்காகத் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இரண்டு பிரேரணைகளிலும் சொல்லப்பட்ட விடயங்கள் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றியும் அதில் உள்ள முன்னேற்றம் என்ன? என்பது தொடர்பிலும் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

ஊடகத்துறையினர் மீதான தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு என்பன தொடர்பிலும் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

இலங்கை விடயத்தில் அக்கறை கொண்டுள்ள மேற்கு நாட்டுத் தூதரங்களும் ஐ.நா. முகவர் அமைப்புக்களுமே இந்தத் தகவல்களைத் திரட்டி வருகின்றன எனத் தெரியவருகின்றது. (த-5)

### விக்கியின்

ணத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதலமைச்சர் பதவி ஏற்பதற்கு முடிவாகியுள்ளது.

இவர்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருந்தால், ஜனாதிபதியும் பதிலுக்கு நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். அதனடிப்படையில் முதலில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைவைக்கப்பட்டுள்ள 500 பேரையாவது ஜனாதிபதி விடுவிக்க வேண்டும் என்று தம்பிராசா கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணை, தமது இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே. அதற்கான உத்தரவாதத்தை ஜனாதிபதி வழங்கினால் அவர்கள் முன்பாக பதவியேற்கலாம் என்றும் அவர் கூறினார்.

இவை எதுவுமில்லாமல் ஜனாதிபதி முன்பாக முதலமைச்சர் பதவியேற்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனைக் கண்டித்தே நல்... துள்ளேன் என்று தம்பிராசா மேலும் தெரிவித்தார்.

புளியங்குளத்துடன் நேற்றைய நடைபயணம் முடிவடைந்த நிலையில் இன்று அது தொடரும் என்று அவர் தெரிவித்தார். (த-5)

### விக்கியின் பதவியேற்பில்

யேற்கும் வைபவத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் கலந்துகொள்வார் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ முன்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியேற்கும் முடிவு சர்வதேச இராஜதந்திர மட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த முடிவை ஐ.தே.கவும், ஜே.வி.பியும் கூட வரவேற்றுள்ளன.

இதேவேளை, இந்த முடிவு குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான சில மாகாண சபை உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இதனால் இந்தப் பதவியேற்பு நிகழ்வில் பங்கெடுப்பதைத் தவிர்க்கப்போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தெரிவித்துள்ளன. (த-5)

### வடக்கு

தொடர்பில் தலைவர் இரா.சம்பந்தன் எந்த முடிவையும் நேற்றைய கூட்டத்தில் அறிவிக்கவில்லை.

அதேவேளை, நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி முன்பாக நடைபெறவுள்ள பதவிப் பிரமாண நிகழ்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது. அத்துடன் கட்சித் தலைவர்கள் விரும்பினால் இதில் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நெருங்கிய உறவினர்கள் 10 பேர் வரை கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்ட போதும், உறவினரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார பங்கேற்பாரா என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (த-5)

### பொதுநலவாய

பட்டு வருகின்றது எனத் தெரிய வருகிறது. அத்துடன், அதிகாரங்க ளைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக கூட்டமைப்பு, இந்தியாவின் உதவியுடன் உலக நாடுகளுக்குத் தெளிவுபடுத் தும் நடவடிக்கையிலும் இறங்கவுள்ளது என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### புத்தூரில்

விபத்து நிகழ்ந்துள்ளது.

உடனடியாக அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்தார். அவரது தலையில் வெடிப்பு ஏற்பட்டமையாலேயே உயிரிழப்பு நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (த-4-9)

### 'டிராக்டர்'

மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

மணல் ஏற்றுவதற்காக போக்கறுப்பு பகுதியிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் தனது டிராக்டரில் இவர் புறப்பட்டுள்ளார். மருதங்கேணிக்குச்சென்று அங்குள்ள டிராக்டரின் பெட்டியைப் பொருத்திக்கொண்டே மணல் ஏற்றுவதற்கு செல்வதாகக் கூறியுள்ளார். அதன்படி மருதங்கேணிக்குப் புறப்பட்டுள்ளார்.

அவ்வாறு சென்ற இளைஞர் நேற்றுமுன்தினம் இரவாகியும் வீடுதிரும்பவில்லை. இதனால் அவரது மனைவியின் தந்தையார் அவரைத் தேடி நேற்று அதிகாலை 4 மணிளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். இதன்போதே யாருமற்ற இடத்தில் டிராக்டரின் பின் சில்லு அவரின் நெஞ்சை நசித்த வண்ணம் அவர் சடலமாகக் காணப்பட்டார்.

இதன் பின்னர் சம்பவம் தொடர்பில் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக பளைப் பொலிஸார் கூறினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்ட பின்னர் சடலத்தை மீட்டனர். பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் மேலும் கூறினார். (த-4-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னொளியில் இறுதியாட்டம்



பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம்



இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக்.6
பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுகிழமை மின்னொளியில் இடம் பெற்றவுள்ளது.
இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இதில் பிரதமவிருத்தினராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வேதாபரணம் சிறப்பு விருத்தினராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலளர் வரதராஜன் கௌரவவிருத்தினராக வைத்தியர் இரசையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.6
யாழ். உதைபந்தாட்ட லீக்கினல் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடந்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு தைானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டக் கழகம் எதிர நாவாந்துறைசென்.நிக்கிளஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.6
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடந்தும்"யாழ்ப்பாணச் சமர்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமைஉரும்பிரய் இந்துக் கல்லுரி மைதானத்தில் இடம் பெற்றஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்

**மாலை 4மணி**
றெட்றேஞ்சா விளையாட்டுக்கழகம் எதிர வல்வை விளையாட்டுக்கழகம்.

**மாலை 5மணி**
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் ஞான முருகன் விளையாட்டுக்கழகம்.

(த-23)

# ஞானமுருகன் கோல் மழை

பருத்தித்துறை, ஒக்.6
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட தொடரில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.
ஞானமுருகன் அணியை எதிர்த்து மணற்காடு சென். சேவியர் அணி மோதியது.
இடைவேளைக்கு முன்னர் மிகவும் விறுவிறுப்பாக இரு அணிகளும் மோதின. ஞானமுருகன் அணி வீரர்களான 4 ஆவது நிமிடத்தில் சுபாஸ், 15 வது நிமிடத்தில் பார்த்தீபன் அடுத்தடுத்து கோலைப் போட்டனர்.
இதனால் ஞானமுருகன் அணியினர் தமக்கு வெற்றி உறுதி என ஆனந்தமடைந்தனர்.



ஆனால் இதனை நீடிக்க விடாது சென்.சேவியர் அணி வீரர் நிரஞ்சன் 16 ஆவது நிமிடத்தில் கோலைப் போட்டார்.
இதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது .
அவ்வேளை ஞானமுருகன் அணி வீரர் பார்த்தீபன் 25 ஆவது நிமிடத்தில் மீண்டும் கோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது 31 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரர் கனியூட் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்படையும் என எதிர் பார்த்த போதும், தமது பலத்தை வெளிப்படுத்திய ஞானமுருகன் அணி வீரர்கள் சுபாஸ் 38 ஆவது நிமிடத்திலும், தவரூபன் 43 ஆவது நிமிடத்திலும் மீண்டும் சுபாஸ் 51 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.
ஆனாலும் 55 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரர் கனியூட் தனது அணிக்காக கோலைப் போட, 56 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் ஜஸ்ரின் ஒரு கோலைப் போட்டார் ஆட்டம் நிறைவிற்கு வந்தது. இதில் சென்.சேவியர் அணியை 7:3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஞானமுருகன் அணி வெற்றி பெற்றது. (த-422)

# ஹென்றிஸ்-அன்ரனிஸ் மோதல்

வலி.வடக்கு, ஒக்.6
இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரிக்கும் இடையே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி களின் முடிவுகள் வருமாறு:-
14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.ஹென்றீஸ் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.ஹென்றீஸ் கல்லூரி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.அன்ரனீஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

# மானிப்பாய் இந்துவை வீழ்த்தி வாகை சூடியது சென்.பற்றிக்ஸ்



யாழ்ப்பாணம், ஒக்.6
இலங்கைப் பாடசாலைகள் உதைப் பந்தாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் பிரிவு III இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தில் இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிபெற்றது.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ்கல்லூரிஅணியைஎதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டன.
ஆட்டம் ஆரம்பமானமுதல் இரு அணியினரும்தமது அணிக்கான கோல்களைப் பெறும் நோக்கில் எதிர் அணியினருடைய கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர் எதிர் அணியினருடைய தடுப்பாட்டத்தினால் இரு அணியினராலும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.
இதன்போது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் முன் வரிசை வீரன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதல் கோலை அடித்தார்.
பதிலுக்குத் தமது அணிக்கான கோலைப் போட வேண்டும் என்ற எண்ணத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் எதிர் அணியினருடைய கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தது.
ஆட்டம் இடை வேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருத்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது ஆட்டம் மேலும் சூடு பிடித்து.
இதன்போது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிவீரன் ஜெனற் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியானமுறையில் பயன்படுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். ஆட்ட நேர முடிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 2:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# சர்வதேச கூட்டுறவாளர் தின விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.6
19 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையால் கூட்டுறவு பணியாளர்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற கூட்டுறவு சங்கங்களின் விவரம் வருமாறு:-
(நேற்றையத் தொடர்ச்சி)

**200 மீற்றர் ஓட்டம் பெண்கள் 36-45 வயது**
1 ஆம் இடம்- அ.உதயசந்திரிக்கா (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ. சங்கம்), 2ஆம் இடம்- ம.யாசோதா (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.சங்கம்), 3 ஆம் இடம்- பா.பாலாம்பிகை (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.ச).

**200 மீற்றர் ஓட்டம் பெண்கள் 46 வயதுக்கு மேல்**
1 ஆம் இடம்- வி.நகுலேஸ்வரி (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.சங்கம்), 2 ஆம் இடம்- அ.கலைமகள் (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.ச.), 3 ஆம் இடம் க.செல்வராணி (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.ச.).

**200 மீற்றர் ஓட்டம் ஆண்கள் 18-35 வயது**
1 ஆம் இடம்- சி.ஜெயந்தன்- பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம், 2 ஆம் இடம்-ம.கீர்த்தனன் (உடுப் பிட்டி ப.நோ.கூ.சங்கம்), 3 ஆம் இடம்- எஸ். சிவசுதன் (உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்).

**200 மீற்றர் ஓட்டம் ஆண்கள் 36-45 வயது**
1 ஆம் இடம்-ந.காந்தரூபன டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 2 ஆம் இடம்- சி.யோகநாதன் (கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்), 3 ஆம் இடம்-மா.சிவகுமார் (கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

**200 மீற்றர் ஓட்டம்-ஆண்கள் 46 வயது**
1ஆம் இடம்- சி.இிராசரத்தினம்(ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச.), 2 ஆம் இடம்-சி.இந்திரசித்து (பண்டத்தரிப்பு ப.தெ. வ.அ.கூ.சங்கம்), 3 ஆம் இடம்- நா.அமிர்தலிங்கம் (கோண்டாவில் ப.தெ.வ.ஆ.கூ.ச.)

**100 மீற்றர் ஓட்டம் பெண்கள் 18-35 வயது**
1 ஆம் இடம்-சிகஸ்தூரி (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச.), 2 ஆம் இடம்- நா.கஜனி (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 3 ஆம் இடம்-சி.றேபேக்கா (செல்வ விநாயகா மாதர் சி.க.கூ.சங்கம்).

**100 மீற்ற ஓட்டம் பெண்கள் 36-45 வயது**
1ஆம் இடம்- அ.உதயசந்திரிக்கா (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ. சங்கம்), 2 ஆம் இடம்-ம.யசோதா (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க. கூ.ச.), 3 ஆம் இடம்- பா.பாலாம்பிகை (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.ச.).

**100 மீற்றர் ஓட்டம் பெண்கள் 46 வயதுக்கு மேல்**
1 ஆம் இடம்- வி.நகுலேஸ்வரி (நவாலி கிழக்கு முருகனாந்தா சி.க.கூ.ச.), 2 ஆம் இடம்- அ.கலைவாணி (நவாலி கிழக்கு முருகானந்தா சி.க.கூ.ச.), 3 ஆம் இடம்- க.செல்வராணி (பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ.சங்கம்).

**100மீற்றர்ஓட்டம்ஆண்கள்18-35வயது**
1 ஆம் இடம் -ம. கீர்த்தனன் (உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்).2 ஆம் இடம் கி.ஜெயந்தன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 3 ஆம் இடம்- உஷாந் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.சங்கம்).

**100 மீறறர் ஓட்டம் ஆண்கள் 36-45 வயது**
1 ஆம் இடம்- ந.காந்தரூபன் (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 2 ஆம் இடம்- சி.யோகநாதன் (கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்), 3 ஆம் இடம்- த.மனோரஞ்சிதன் (கோண்டாவில் ப.தெ.வ.அ. கூ.சங்கம்).

**100 மீற்றர் ஓட்டம் ஆண்கள் 46 வயதுக்கு மேல்**
1ஆம் இடம்-சி.இிராசரத்தினம் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐ.நா.ச.), 2 ஆம் இடம்-சி.இந்திரசித்து (பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்)., 3 ஆம் இடம்- நா.அமிர் தலிங்கம்(கோண்டாவில் ப.தெ.வ. அ.கூ. சங்கம்). (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவாளர் பதவியிலிருந்து விலகியமை மகிழ்ச்சியானது

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களில் ஒருவராக இருந்து, அண்மையில் அந்தப் பதவியிலிருந்து விலகியமை தான் மேற்கொண்ட சிறப்பான செயல்களில் ஒன்று என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.


ஆஸ்திரேலியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் அவ்வணியின் தலைவருக்கும் தேர்வாளர் தகுதி அளிக்கப்பட்டிருந்தது. இதைப் பெற்றுக்கொண்ட முதலாவது தலைவராக மைக்கல் கிளார்க் அமைந்தார்.

இந்நிலையில் மிக்கி ஆர்தர் அவ்வணியின் தலைவர் பதவியிலிருந்து நீங்கிய பின்னர், தேர்வாளர் பதவியிலிருந்து விலகுவதாக மைக்கல் கிளார்க் அறிவித்திருந்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், அணியின் தேர்வாளர் பதவியிலிருந்து விலக எடுத்த முடிவு, தான் எடுத்த முடிவுகளில் மிகச்சிறப்பான ஒன்று எனக் குறிப்பிட்டார்.

தேர்வாளர் பதவியென்பது முழுநேரத் தொழில் எனக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், அணித் தலைவராகவும், தேர்வாளராகவும் இருக்கும் போது அணியின் வீரர்களோடு நேரத்தைச் செலவிட முடியாது போனதாகவும், ஆகவே தற்போது அணியின் வீரர்களோடு மீண்டும் அதிக நேரத்தைச் செலவிட முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேர்வாளர்களின் கூட்டங்களுக்காகவும், தேர்வு தொடர்பாக மணிக்கணக்காக தொலைபேசித் தொடர்பிலும் இருப்பதற்குப் பதிலாக இப்போது சக வீரர்களுடன் கோப்பி அருந்துவதிலும், மதிய, காலை உணவுகளை உண்பதிலும் தற்போது நேரத்தைச் செலவிடுவதாக மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். (கு)





## 2015 உலகக் கிண்ணத் தொடருக்கு ஆப்கான் முதல் முறையாகத் தகுதி

உலகக் கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடரில் 2ஆவது இடம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதன்முறையாக உலகக் கிண்ணத் தொடருக்குத் த்குதி பெற்றது. ஐ.சி.சி., சார்பில் 12ஆவது உலகக் கிண்ணத் தொடர் 2015 பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரை ஆஸ்திரேலியா.மற்றும் நியூசிலாந்தில் நடக்கவுள்ளது. மொத்தம் 14 அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடக்கும். ஏ பிரிவில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து மற்றும் பி பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே என்று 10 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றன.

சார்ஜாவில் நேற்று முன்தினம் முடிந்த உலகக் கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடர் மூலம் (ஜூன் 2011 முதல் 2013 ஒக்ரோபர் 4) 2 அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

8 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில், ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதின. புள்ளிப்பட்டியலில் முதலிடம் பெற்ற அயர்லாந்து (11 வெற்றி, 24 புள்ளி) ஏற்கனவே தகுதி (பி பிரிவு) பெற்றுவிட்டது.

2ஆவது, 3ஆவது இடத்தில் தலா 18 புள்ளிகளுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நெதர்லாந்து அணிகள் இருந்தன. நான்காவது இடத்தில் இருந்த ஆப்கானிஸ்தான், தனது கடைசிப் போட்டியில் நேற்று முன் தினம் கென்யாவைச் சந்தித்தது.

முதலில் விளையாடிய கென்ய அணி, 43.3 ஓவரில், 93 ஓட்டங்களுக்கு சுருண்டது. எளிய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான் 20.5 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து, 19 புள்ளிகளுடன், பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி 2015 உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற்றது.

ஏ பிரிவில் இடம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறுவது இது தான் முதல்முறை. இதற்கு முன் 2010, 2012 இல் 20/20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியது.மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு, 2014 இல் நியூசிலாந்தில் நடக்கவுள்ள தகுதிச்சுற்று போட்டிகளின் மூலம் தெரிவு செய்யப்படும்.

இதில் நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஸ்காட்லாந்து, கென்யா, நமீபியா, கனடா, உகாண்டா, ஹொங்கொங், நேபாளம் மற்றும் பப்புவா நியூகினியா என்று 10 அணிகள் மோதவுள்ளன. (கு)

## சென்னையைத் தோற்கடித்து இறுதியாட்டத்தில் ராஜஸ்தான்

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் இறுதிப் போட்டிக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றே ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடி ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 14 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, 2ஆவது விக்கெட்டை 29 ஓட்டங்களுக்கு இழந்தது. எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக 33 ஓட்டங்களும், 4ஆவது விக்கெட்டுக்காக 59 ஓட்டங்களும் பகிரப்பட்ட நிலையில் அவ்வணி 159 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் இறுதி 5 ஓவர்களில் அவ்வணி சார்பாக 38 ஓட்டங்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தன. துடுப்பாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக அஜின்கியா ரஹானே 56 பந்துகளில் 70 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 23 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக டுவைன் பிராவோ 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்க ளையும், கிறிஸ் மொறிஸ் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும், ஜேஸன் ஹோல்டர் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும், மோகித் சர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது விக்கெட்டை 13 ஓட்டங்களுக்கும், 2ஆவது விக்கெட்டை 33 ஓட்டங்களும் இழந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக் களை இழந்து 7 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களுடன் தடுமாறியது. 8ஆவது விக்கெட்டுக்காக ரவிச்சந்திரன் அஷ்வின், கிறிஸ் மொறிஸ் இருவரும் 7 ஓவர்களில் 73 ஓட்டங்களைப் பகிர்ந்த போதிலும், அவ்வணியால் வெற்றிபெற இயலாது போயிற்று.

துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக ரவிச்சந்திரன் அஷ்வின் 28 பந்துகளில் 46 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 23 பந்துகளில் 29 ஓட்டங்களையும், கிறிஸ் மொறிஸ் 17 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக பிரவீன் தம்பே 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் போள்க்னர், ஷேன் வொற்சன், றாகுல் சுக்லா மூவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பிரவீன் தம்பே தெரிவானார். (கு)



## இந்தியாவுக்கெதிரான மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் அணி அறிவிப்பு



ஷெல்டன் கொட்டரெல், கேர்க் எட்வேர்ட்ஸ் சட்விக் வோல்ற்றன் ஆகியோர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் குழாம் அறிவிக் கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இத்தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி சச்சின் டெண்டுல்கரின் 200ஆவது டெஸ்ட் போட்டியாக அமையவுள்ள நிலையில், இத்தொடர் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இத்தொடருக்கான டெரன் சமி தலைமையிலான டெஸ்ற் குழாம் அறிவிக்கப்பட்ள்ளது.மார்ச் மாதத்தில் சிம்பாப்வே அணிக்கெதிராகப் பங்குபற்றிய மேற்கிந்தியத் தீவுகள் குழாமிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் ஷனொன் கப்றியல் நீக்கப்பட்டுள்ளார்.

அத்தொடரில் பங்குபற்றியிருக்காத ஷெல்டன் கொட்டரெல், கேர்க் எட்வேர்ட்ஸ் சட்விக் வோல்ற்றன் ஆகியோர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முழுமையான குழாம்:

டெரன் சமி, ரீனோ பெஸ்ற், டெரன் பிராவோ, ஷிவ்நரின் சந்தர்போல், ஷென்டன் கொட்டரெல், நர்சிங் டியோநரைன், கேர்க் எட்வேர்ட்ஸ், கிறிஸ் கெயில், வீரசமி பேர்மாள், கெரான் பவல், டினேஷ் ராம்டின், கேமர் றோச், மார்லன் சாமுவேல்ஸ், ஷேன் ஷிலிங்போர்ட், சட்விக் வோல்ற்றன் . (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் வரை அதிக போட்டிகளை நடத்த இந்தியக் கிரிக்கெட் திட்டம்

இந்திய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணம் இன்னும் ஊசலாட்டத்தில் தான் உள்ளது.

2 டெஸ்ட் போட்டி, 3 ஒருநாள் போட்டி கொண்ட தொடரையாவது நடத்தி விடவேண்டும் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

ஆனால் இந்தியக் கிரிக்கெட் சபை வளைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி ஒரு 20/20 , ஏழு ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் மோத உள்ளது.

இத்தொடர் முடிந்ததும் மேற்கிந்திய தீவுகள் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுக்கெதிராக ஆடுகிறது. இதன் தொடர்ச்சியாக மேலும் சில தொடர்களை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை திட்டங்களை வகுத்து வருகிறது. ஒளிபரப்பு உரிமம், அனுசரணை தொடர்பாக முதற்கட்டமாக ஆலோசனை நடந்து வருகிறது. (த)


## வீடு வாடகைக்கு உண்டு



பலாலி வீதியில் உள்ள விவசாய பயிற்சி நிலையத்துக்கு (Farm School) முன்னால் 200m தூரத்தில் அழகிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. இது அலுவலக பாவனைக்கும் உகந்தது. சகல வசதிகளுடன் இரண்டு தளங்களை கொண்டது. அத்துடன் வாகனத்தரிப்பிடம் மற்றும் இணைய வசதி, மின்சார வசதி, தொலைபேசி வசதிகள் போன்றன உள்ளன. 3450 சதுரஅடி விஸ்தீரணம் கொண்டது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 2699960 அல்லது 077 1258025

இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் (32231) (10,14)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி மத்தியில் சகல வசதிகளுடன் புதிததாக புனரமைக்கப்பட்ட அழகிய உறுதியான வீடு, விசாலமான வளவுடனும்,நன்நீர் கிணற்றுடனும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 0778285930

## கருத்தரங்குகள்

★ அதிபர்களுக்கான EB பரீட்சைக்கு
ஞாயிறு 2 மணி
திங்கள், செவ், புதன்
பி.ப. 3.30 மணி – 6 மணி வரை
★ HDFC வங்கிப் பரீட்சைக்கு
ஞாயிறு 12 மணி
திங்கள், செவ்., புதன்
பி.ப. 3 மணி – 5.30 மணிவரை
தொ.பே.:0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்.

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள்,மின் உபகரணங்கள் CD 200 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0729155887

## Study in UK

உங்கள் London செல்லும் கனவை
நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
நடைமுறைகள் மாறினாலும் எவ்வித
மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

GCE (O/L) தகமை போதுமானது

October/ December தவணை அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் குறைந்த விசாக்களைப் பெற்றுக்கொடுத்திருப்பதால்
- 4 வருட Visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- முதல்தர வரிசையில் உள்ள 50 இற்கு மேற்பட்ட கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்கான ஆலோசனை
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- உரிய ஆவணங்கள் இருப்பின் இரு மாதத்தில் பயணம்

COLLEGES
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1

UNIVERSITIES
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5

011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230



UK கல்வியாய்வு தொடர்பாக Exponet மிகத் தெளிவான விளக்கங்களைத் தருவதுடன் நண்பனைப்போல் செயற்பட்டு VISA கிடைக்கும் வரை என்னுடன் உறுதுணையாக இருந்து என் வாழ்க்கைப் பாதையை மாற்றித்தந்துள்ளது.
KARTHIGA KANAKARASA (JAFFNA)



Exponet ஐ நான் யாருக்கும் பரிந்துரை செய்வேன். ஏனெனில் விரைவாக Exponet மூலம் மிக குறுகிய காலத்தில் வெற்றிகரமாக மாணவர் விசா பெற்றுக்கொள்ள முடியும். Exponet சிறந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.
THILLAINATHAN SUTHAKAN (JAFFNA)

EXPONET
379 - 1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## LONDON METROPOLITAN COLLEGE
Computer Courses

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing cs6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

## வெறும் 7 இலட்சம் மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாடு ஒன்றில் மாதம் 125000/= சம்பாதிக்க, படிக்க அரிய வாய்ப்பு

- உணவு இருப்பிடம் ரிக்கற் இலவசம்
- 12 பேருக்கு மட்டும் அரிய வாய்ப்பு
- 7 நாள்களும் காலை 8.30 -மாலை 6 மணிவரை திறந்திருக்கும்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

After A/L What Next ?

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 07.10.2013 | 12.10.2013 | 14.10.2013 | 19.10.2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hotlines:0777585913,0777222422,0714299935,0777730074

## விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டி ஜேர்மன் சப்பேட் விற்பனைக்குண்டு. கோண்டவிலில்

தொடர்பு:- 0755113457

## TOWNACE VAN விற்பனைக்கு

டாக்டர் ஒருவரின் சொந்தப் பாவனையில் உள்ள WPGN - 9xxx இல. வான் விற்பனைக்குண்டு- சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு:- 0774548375, 0758117381

## ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு

அடைகிடவாத இனம் (கிறி றாஷ்)
ஒருநாள் குஞ்சுகள்,ஒரு மாதக் குஞ்சுகள், முட்டையிடும் கோழிகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777556244

## டோகா செல்லும் பயணிகளுக்கு



யாழ் மக்களுக்காக 24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - டோகா Colombo-Doha 26000/=
ONW (மாதாந்த கொடுப்பனவுமுறையில்) 2650/= HNB

Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
0214 920 920

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## German Institute

German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
10 Palay road, Jaffna
(ஆரியகுளத்துக்கு அருகாமையில்)
Mrs. Kajenthini T.P.: 0771604823

## வீடு வாடகைக்கு உண்டு

இல. 12 முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் 6 அறைகள், 6 குளியல் அறைகள், வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0710611622

## Water Proofing

மழைக்காலம் தொடங்கும்முன் உங்கள் கட்டடங்களின் கொங்கிறீற் சிலாப், பல்கனி, சுவர்களில் தண்ணீர் கசிதலை தடுத்து நிறுத்திடவும், புதிய கட்டடங்களுக்கும் Water Proofing செய்திடவும் உத்தரவாதத்துடன் கூடிய சேவை.

தொடர்பு: 077 437 2876

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

வெளிநாடு செல்வோருக்கான A1,B1 IELTS, SPOKEN ENGLISH, அடிப்படை ஆங்கிலம் இத்தாலி மொழி கற்கைகள்

23,பலாலி வீதி 0771327818 | 181,பிரதான வீதி நெல்லியடி 0213734121

## க.பொ.த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான புலமைப்பரிசில்கள்(40,000Rs.)

1.வெளிவாரிக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.
2.Charted Institute of Management Accountant :CIMA-UK
3.மைக்ரோசொப்ற் கணினிப்பொறியியலாளர் கற்கை நெறி

மேற்படி கற்கைநெறிக்கான புலமைப்பரிசில்களை பெறவிரும்பும் மாணவர்கள் தமது சுயவிபரக்கோவையை 10.10.2013க்கு முன்னர் MCS CAMPUS இல 34, சேர்.பொன் இராமநாதன்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி




WebDesigning, Multimeida, Networking

பங்குபற்ற விரும்புவோர் உங்களது<NAME> Free என typeசெய்து 772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள்யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS தகவல் தொழில்நுட்பவளாகத்தில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



பக்கம் 12

# அதிகாரிக்கு லட்சம் அடிபட்டவனுக்குக் கஷ்டம்

## 100 இந்திய சினிமா

## தமிழ் சினிமா

### சாதனையும் வேதனையும்

# சூரியகாந்தி

உதயன் 06.10.2013






உலகையே மாற்றிப்போட்ட ஒரேயொரு புத்தகம்

பக்கம் 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை



# இதற்குத்தானா வாக்களித்தோம்?

● ஔண்யன்

*நீ போருக்கு போனடத்தை*
*போராடி மாண்டாய் ஐயா*
*மகனே*
*பாரத் துவக்கெடுத்தோ*
*உங்களுக்கு*
*பயந்தவெடி வச்சானோ*
*உங்களுக்கு பெரிய துவக்கொடுத்தோ*
*உங்கள பேசாமல் சுட்டெறிந்தான்*
*மகனார்*
*உன்ன சந்தியல கண்டடத்தை*
*உன்னைபெத்த கறுமி*
*தலைவெடித்துப் போறனையா*
*மகனார் நீ கப்பலில வாராயெண்டோ*
*நாங்க கடலருகில் காத்திருந்தோம்*

*மகனே நீ*
*இருந்த இடத்தைப் பார்த்தாலும்*
*இரு தணலாய் மூளுதைய்யாவ!*
*நீ படுத்த இடத்தை பார்த்தாலும்*
*பயம் பயமாய் தோன்றுதடா*
*மகனே*
*உன்னைப் பெற்ற கறுமி நான்*
*இங்க உப்பலந்த நாழியைப்போல்*
*நீ இல்லாம*
*நாள்தோறும் உக்கிறனே*

போருக்குப் பின்னைய காலத்தில் அநேகவீடுகளில் ஒவ்வொரு தாய்மாரின் உள்ளத்திலும் இந்த ஒப்பாரி மௌனத்திலாக்குள் ஒளிந்து ஒலித்தபடிபேதான் இருந்தது. ஏனெனில் போரின் இருளில் எங்களின் இளையதலைமுறையின் உயிர்கள் ஈவிரக்கமின்றி அதிகாரத்தால் காவு கொள்ளப்பட்டிருந்தன விடுதலைக்காகப் போராடிப் போனவர்களை மாத்திரமன்றி, உயிர்ப் பயத்தில் பதுங்கு குழிக்குள் ஒளிந்திருந்தவர்களைக்கூட தப்பிக்க அதிகாரம் அனுமதிக்கவில்லை. மூன்று தசாப்தங்களை எம்மினத்தின் மீது நிகழ்ந்து வந்த இன அழிப்பின் உச்சக்கட்டம் முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றப்பட்டிருந்தது. எங்கும் குருதியும் ஓலங்களும், பிணங்களும், தனித்து துடித்தபடி கிடக்கும் உடல் அவயவங்களும் அந்த மணல்வெளியை நிறைத்திருந்திருந்தன. குடியிருக்குமிடமெல்லாம் சவக்கிடங்கானது. குண்டு மழையில் தப்பிப்பிழைத்தவர்கள் சீருடைக்காரர்களால் பிடிக்கப்பட்டு, நிர்வாணக் கொலைக்குழிக்குள் தள்ளப்பட்டனர். பெண்கள் பலவந்தப்புணர்வுக்கு பொதுவெளியில உட்படுத்தப்பட்டு, பின்னர் வெடி வைத்து சிதைக்கப்பட்டனர். அப்படியும வெறியடங்காத சில சீருடைகள் பெண்களின் பிணங்களையும் மணல்வெளியில் புணர்ந்து இச்சை தீர்த்தன. இவ்வளவு துயரங்களையும சுமந்தவர்கள், அதன் பின்னும் ஒவ்வொரு ஒருதரம் கத்தி தங்களுக்காக தாங்கள் அழுவதற்குக் கூட அனுமதிக்கப்படாத நிலையே நீடித்தது. புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் மக்களை அடக்கி ஒடுக்கி, சில சலுகைகளை விட்டெறிவதன் மூலம் அவர்களின் உரிமைக்கான குரலை தனக்கிசைவான திசையில் பயணிக்கச் செய்துவிடலாம் என்பதே ஆட்சியாளர்களின் எண்ணமாக இருந்தது. அதிகாரத்தின் எண்ணத்தை செயற்படுத்தும் பொறுப்பு, எள் என்னும் முன்னரே எண்ணெயாக வந்து நிற்கும் இணக்க அரசியல்முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களும் வாரியிறைக்கப்படும் அரச நிதியை தங்களின் சொந்தச் சொத்துப் போன்றுமக்களைவிடுதலைஎன்றபாதையை மறக்கச்செய்து, அபிவிருத்தி என்ற திசை நோக்கி அழைத்துச் செல்லமுற்பட்டனர். ஏற்கனவே போருக்காக திறைசேரியின் அத்தனை செல்வப்பாத்திரங்களையும் அரசு வழித்து துடைத்து விட்டதால், அபிவிருத்திக்காக போர் நடந்த இடங்களைக் காட்டி உலகத்திடம் பிச்சையெடுத்து, அதனையேதான் ஏதோ பெருமனது படைத்து தருவதாக அரசும் பாவனை செய்தது. ஆனால் என்னதான் அபிவிருத்தி என்ற பெரும்போர்வை கொண்டு மூடியபோதும், போரின் காயங்களையும் , வலிகளையும், நினைவுகளையும் மறைக்கவே முடியவில்லை. தங்கள் பிள்ளைகளை, கணவனை, மனைவியை, சகோதரர்களை கண்முன்னே கொன்றவர்களை மக்கள் மன்னிக்கத் தயாரகவில்லை. தங்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு சலுகையும் அவர்களின் இழப்பை ஒருபோதும் ஈடுசெய்யப்போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். இறுதிப்போரில் நடந்த அக்கிரமங்களின் ஆதாரங்களாக புகைப்படங்களும், காணொலிகளும் பகட்டுத்திரையின் ஓரங்களை எரித்துக் கொண்டு, உண்மையின் குரல்கள் உலகமுற்றத்தில் ஒலிக்கத் தொடங்கின. தமிழர்கள் மீதான தன் குருட்டுப்பார்வையை மீள்பரிசீலனை செய்தது உலகம். நமக்குச் சாதகமான சில கதவுகள் திறந்து கொண்டன. போர் முடிந்துவிட்டது தானே. தமிழர்களுக்கு இனியும் நல்லிக்கணத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்வை வழங்காமல் பின்னடித்தால் விளைவு வேறாக இருக்கும் என்று கண்டிப்பாக உலகம் சொன்னபின்னும் இலங்கை நாடகமாட முடியாது. ரமணா விஜயகாந்த் பாணியில் சொல்வதென்றால் இலங்கை அரசுக்கு தமிழில் பிடிக்காத வார்த்தை நல்லிணக்கம். ஆனால் பிடிக்கிறதோபிடிக்கவில்லையோஅதைநிறைவேற்றத் தானே வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த ஜெனீவாத் தொடரில் எல்லா நாடுகளும் கடித்துக் குதறிவிடக்கூடும்.

இத்தகைய அழுத்ததின் பேரால்தான் , தன் பிடிவாதத்தை கைவிட்டு வடக்குத் தேர்தலை நடத்தியது அரசு. மனதுக்குள் நாளும் பொழுதும் ஒப்பாரிகளோடு வாழ்ந்து கொண்டிருந்த மக்கள், தம்மை முள்ளிவாய்க்காலில் துடிதுடிக்க வீழ்த்திய அதிகாரத்தை தேர்தலில் தங்கள் முன் தலைகுனிய வைக்கக் கங்கணம் கட்டினர். இந்த நிலையில் மாற்றுத்தெரிவுகள் வேறேதும் இல்லாத நிலையில் அவர்களின் ஒரே நம்பிக்கையாக கூட்டமைப்பு மாத்திரமே எஞ்சியது. தேர்தலின் ஆரம்பத்திலேயே முதலமைச்சர் வேட்பாளர், ஏனைய வேட்பாளர்கள் விடயத்தில் கூட்டமைப்பு தடுமாறினாலும், பின்னர் புலிகளின் பிரதிநிதிகள் போன்று மேடைகளில் முழங்க, மக்கள் வாக்குகள் கொண்டு அரசை செப்ரெம்பர் 21 ஆம் திகதி வடக்கில் சாய்த்தனர். வழக்கமாகவே தேர்தல் என்றாலே தங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பது போல விட்டேத்தித்தனத்தோடு நடந்து கொள்ளும் வடக்கு மக்கள் அன்றைக்கு இது எங்களின் வரலாற்றுக் கடமை என்பது போல பேரெழுச்சி கொண்டு வாக்களிக்க வந்தனர். இதற்கு முக்கிய காரணம் இணங்கிபோக நாம் தயாரில்லை. எங்கள் உரிமைகளோடு வாழவே நாம் விரும்புகிறோம் என்ற செய்தியைச் சொல்லத்தான் இந்த வாக்குப் புரட்சி நடந்தது. தங்களுக்கான தமிழர் அரசின் அத்திபாரம் போடப்படுவதாக நினைத்தே தங்களின் ஒவ்வொரு வாக்கையும் அளித்தனர்.



மக்களின் ஆணை கிடைத்ததும் நாங்கள் ஒருபோதும் ஆளுநருக்கு முன்னாலோ அல்லது ஜனாதிபதிக்கு முன்னாலோ பதவியேற்க மாட்டோம் என்று கூட்டமைப்பு அறிவிக்க மக்களுக்குப் புல்லரித்தது. ஆளுநருக்கு முன்னால் பதவியேற்காமல் நியமனக் கடிதத்தை மட்டும் பெற்றுக் கொண்டார் முதலமைச்சர் விக் னேஸ்வரன். நாங்கள் சரியானவர்களையே தேர்ந்திருக்கிறோம் என்று தம் மைத்தாமே பாராட்டிக் கொண்டனர். ஆனால் அதன் பின்னர் மீண்டும் முருங் கைமரத்தில் வேதாளம் ஏறிக்கொண்டது. அமைச்சுப்பதவிகள் யாருக்கு என்பதில் கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுகள் தொடங்கின. கூடி நின்று மக்களிடம் வாக்குக் கேட்டவர்கள் கன்னை பிரிந்து நின்று அடிபடத் தொடங்கினர். இந்தப்பத்தி எழுதப்படும் வரை அமைச்சுப்பதவி குறித்த இழுபறி நீடிக்கவே செய்கிறது. இந்தக்குழப்பம் உச்சக் கட்டத்தை தொட்ட அடுத்தடுத்த நாள்களிலேயே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்தார். அதன் பின்னர் ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று அறிவிக்கவும் செய்தார். உண்மையில் இலங்கை அரசமைப்பின் படி கட்டாயமாக ஜனாதிபதி அல்லது ஆளுநர் முன்னிலையில் தான் ஒரு முதலமைச்சர் பதவியேற்க வேண்டும் என்று சட்டமிருந்தால் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்த சந்தேகம் எழுந்திருக்காது. ஆனால் மேல்நீதிமன்ற நீதிபதி அல்லது பிரதமநீதியரசர் என்போர் முன்னிலையில்கூட பதவியேற்க கொள்ள வசதி இருக்கும்போது, இப்படி மஹிந்தவின் காலில் அட்டாங்க நமஸ்காரம் செய்வதை மக்களால் ஜீரணிக்க முடியவில்லை. எப்போதும் எதிர்ப்பரசியல் என்பது சாத்தியமற்றதுதான். ஆனால் தேவையற்ற விடயத்துக்குக் கூட வளைவது தான் இங்கு பிரச்சினையாகிறது. எப்போதும் நாணிக்கோணும் அரசியல் பாதையில் தான் கூட்டமைப்பின் மாகாண அரசு செல்லப் போகிறது என்றால், ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்ற சலிப்பே மக்களிடம் ஏற்படும். இந்தச் சலிப்பு பலமடையும் போது, இந்தமுறை வெற்றிலை கடாசப்பட்ட நினைவில் கொண்டிருக்க வேண்டியது ஒவ்வொரு அரசியல்வாதியினதும் கடமை.


இப்போது வடக்கு மக்கள் பலரும் விரும்பியோ விரும்பாமலோ
நந்தவனத்தில் ஓர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய்
குயவனை வேண்டி
கொண்டு வந்தான்
ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக்
கூத்தாடி போட்டுடைத்தாண்டி

என்று பாடி தங்களை நொந்து கொள்கிறார்கள். மக்கள் தீர்ப்பின் படி தான் அரசியல்வாதிகள் நடக்கவேண்டுமே தவிர, தங்கள் சுயநலனுக்காக மக்கள் தீர்ப்பை அரசியல்வாதிகள் வளைக்கக்கூடாது. அப்படி வளைக்க முற்பட்டவர்கள் வரலாற்றின் பக்கங்களில் இருந்தே காணாமல் போயிருக்கிறார்கள். தங்கள் நம்பிக்கைகள் தகர்ந்து போய்விட்டதோ என்ற சோகத்தில் மீண்டும் ஒப்பாரிகளின் தேசத்தில் உழல தம்மை தயார் படுத்துகிறார்கள் மக்கள். எப்போதும் அவர்கள் சிலுவையேந்திகள்தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# தமிழ் சினிமா 100 சாதனையும் வேதனையும்



இந்திய சினிமாவுக்கு 100 வயதாகி விட்டது. கிட்டத்தட்ட அதேபோன்று தமிழ் சினிமாவும் நூற்றாண்டைத் தொட்டுவிட்டது. இதையொட்டி தமிழகத்திலே ஒரு அரச விழா ஏற்பாடு செய்யப்பட்டது. கடும் சர்ச்சைகள் விமர்சனங்களுடன் அது நடந்து முடிந்தது. விழாவுக்கு மட்டும் 10 கோடி இந்திய ரூபா மக்கள் பணம் வாரியிறைக்கப்பட்டது.

இந்தியாவின் முதல் திரைப்படமான 'ராஜா ஹரிசந்திரா'வை 1913இல் இயக்கி வெளியிட்டார் தாதாசாகேப் பால்கே. அன்றிலிருந்து இன்று வரை இந்திய சினிமா எட்டாத உயரங்களை எல்லாம் எட்டியுள்ளது. பெரும் தொழில் துறையாக வளர்ந்து நிற்கின்றது. ஆயிரக்கணக்கானவர்கள் இந்தக் கனவுத் தொழிற்சாலையினுள் வேலை செய்கிறார்கள். இன்னும் பல்லாயிரம் பல்லாயிரம்பேர் தமக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்துவிடாதா என்று ஏக்கத்துடன் காத்துக் கிடக்கிறார்கள். கோடான கோடி பணம் ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறைக்குள் சுழல்கிறது.

1895இல் பிரான்ஸ் நாட்டில் சலனப்படக் கலை (Motion pictures) கண்டறியப்பட்டது. ஒரு தொழில்நுட்பம் கண்டறியப்பட்டு வெறும் 18 ஆண்டுகளில், பல்லாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள ஒரு நாட்டில், அதுவும் அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டில், அந்தத் தொழில்நுட்பத்தை மேம்பட்ட வடிவத்தில் கையாண்டு வெற்றியடைந்தவர் தாதாசாகேப் பால்கே. அவர் இயக்கிய முதல் படம் வெளியான 1913-ஐக் கணக்கிட்டு இந்த ஆண்டு இந்திய சினிமாவின் நூற்றாண்டாகக் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் அரசும் திரைத் துறையும் இவ்விழாவைக் கொண்டாடுகின்றன. ஆனால் இந்த நேரத்தில் பல வரலாற்று மறப்புக்களையும் திரிபுகளையும் இந்தக் கொண்டாட்டங்கள் ஏற்படுத்திச் சென்றிருக்கின்றன.

## தமிழ் சினிமா ஆரம்பம்

சாமிக்கண்ணு வின்சன்ட் என்ற பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருக்க நியாமில்லை. தமிழ்நாட்டின் திருச்சி பொன்மலை ரயில் நிலையத்தில் டிராப்ட்ஸ்மனாகப் பணியாற்றிவர் அவர். சினிமா எனும் கலை பிரான்ஸைச் சேர்ந்த லூமியே சகோதரர்களால் உலகுக்கு அறிவிக்கப்பட்ட போது, சலனப்படங்களைப் புகைப்படங்களின் மேம்பட்ட வடிவமாகத்தான் பெரும்பாலானோர் பார்த்தார்கள். அது ஒரு பெரும் தொழிலாக மாறும் என்றோ, அதுதான் உலகையே ஆட்டி வைக்கப் போகிறது என்றோ பெரும்பாலானோர் கற்பனை செய்திருக்கவில்லை. மிகச் சிலர் சினிமாவைக் கலையாகவும் தொழிலாகவும் அறிந்துகொண்டனர். அந்த மிகச் சிலரில் சாமிக்கண்ணு வின்சன்ட்டும் ஒருவர்.

அந்தக் காலத்தில் எடுக்கப்பட்ட படங்களைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். அவை அனைத்தும் துண்டுப் படங்கள். அதாவது, மிகச் சில நிமிடங்களே ஓடக் கூடியவை. மூன்று நிமிடங்களுக்கு ஓடும் படம், ஏழு நிமிடங்கள் ஓடும் படம் என்ற வகையறாக்கள். அப்படங்கள் அனைத்துமே ஒலி அற்றவை அல்லது மௌனப் படங்கள். ஊமைப் படங்கள் என்று பொதுவழக்கில் அழைக்கப்பட்டவை.

## ஊமைப் படம்


படங்களின் நீளமும் குறைவு, ஒலியும் இல்லை. அவை பெரும்பாலும் ஆவணப் படங்களின் மூல வடிவங்களாகவே இருந்தன. 'லீவிங் தி ஃபேக்டரி' என்றொரு பிரபலமான படம். அதில் என்ன ஓடும்? ஒரு தொழிற்சாலையிலிருந்து பணி முடித்த தொழிலாளர்கள் வெளியேறும் காட்சி இருக்கும். அப்போதைய படப்பதிவுத் தொழில்நுட்பத்தின்படி, விநாடிக்குப் பொதுவாக 14 சட்டகங்கள் (frames) ஓடும். அதாவது, பாத்திரங்கள் குடுகுடுவென நடப்பார்கள், வெடுக்கெனப் பேசுவார்கள், சீமாட்டி நாயைப் பிடித்து மின்னல் வேகத்தில் நடப்பாள். இப்போது நாம் காணும் இயல்பான வேகம் 24 சட்டகங்களில் பதிவுசெய்யப்படுகிறது. இவ்வளவு குறைபாடுகளுடன் சினிமா இருந்த காலம் அது.

சாமிக்கண்ணு எப்படித்தான் இவ்வளவு சிக்கல்களையும் கடந்து சிந்தித்தாரோ புரியவில்லை. டூபான் என்ற பிரெஞ்சுக்காரரிடமிருந்து, 'பதே' எனும் புரொஜக்டரை 2 ஆயிரம் இந்திய ரூபாய்க்கு வாங்கினார். அக்காலத்தில் அது மிகப் பெருந்தொகை. உறவினர்களிடம் கடன் வாங்கித்தான் அந்த புரொஜக்டரை வாங்கினார். ஆனால், அது தான் இன்றைய தென்னிந்திய சினிமாத் தொழிற்சாலையின் முதல் விதை.

சென்னை எஸ்ப்ளனேட் பகுதியில், முதன்முறையாகக் கொட்டகைத் திரையரங்கை அமைத்தார் வின்சன்ட். கொட்டகைக்குள் படம் காட்டலாம் எனச் சிந்தித்ததே சாதனைதான். ஏனெனில், சினிமா என்பது மேட்டுக்குடிகளின் கலையாக மட்டும் பார்க்கப்பட்ட காலம் அது.

## திரைப்பட கலை அறிமுகம்

வார்விக்மேஜர் என்னும் ஆங்கிலேயர், சென்னையில் 1897இல் முதல்முதலாகத் திரைப்படக் கலையை அறிமுகம் செய்தார். அவர் படம் ஓட்டிய இடம் 'எலெக்ட்ரிக் தியேட்டர்' அரங்கம். அது செறிவாகக் கட்டப்பட்ட திரையரங்கம்.



சாமிக்கண்ணு வின்சன்ற்

மின்சாரத்தால் இயங்கும் அரங்கம். அதில் படம் பார்த்தவர்கள் எல்லோருமே துரைமார்கள்தான். வெள்ளையரும் பிற பணக்காரர்களுக்குமானதாகத்தான் சினிமா இருந்தது. அவர்களுக்குத்தான் அது புரியும் என்று நம்பப்பட்டது. அவர்கள் வந்து பார்க்கும் அளவுக்கான வசதியான இடத்தில்தான் திரையிட முடியும் என்றும் நம்பப்பட்டது.

மின்சாரமே அக்காலத்தில் ஓர் ஆடம்பரம். அப்படியானால் சினிமா எவ்வளவு பெரிய ஆடம்பரம் என்று யோசித்துக் கொள்ளுங்கள். சாமிக்கண்ணு, சினிமாவை மேட்டிலிருந்து பள்ளத்துக்குக் கொண்டுசென்றார். எளிய மக்களும் சினிமாவை நேசிப்பார்கள் என அவ்வளவு மோசமான காலத்திலும் அவர் நம்பினார். 1908 வரை, பெரும்பாடுகள், கடன் மேல் கடன். நீண்ட காலம் வெளியூர்களில் தங்கி இருந்தபோது, மனைவியின் உடல் நலம் பாதிக்கப்பட்டது எனப் பல நெருக் கடிகளின் மத்தியிலும் தளராது முன்னேறினார். வின்சன்ட் ஊர் திரும்பிய சில நாட்களில் மனைவி இறந்து போனார் இப்படி எவ்வளவோ துன்பங் களுக்கிடையில், சினிமாவை ஒரு தொழிலாக தமிழர்களுக்கு மாற்றிக்காட்டியவர் சாமிக்கண்ணுதான்.

## முதலாவது திரையரங்கம்

தமிழகத்தின் முதல் திரையரங்கம் கெயிட்டி சென்னையில் 1913இல் (தமிழ் சினிமாவுக்கு 100 வருடங்கள் என்பது இதிலிருந்து இணைகிறது) கட்டப்பட்டது. இரண்டாம் அரங்கத்தைக் கோவையில் வின்சன்ட்தான் 1914இல் கட்டினார். பெயர் 'வெரைட்டி ஹால்'. இப்போதும் அந்த அரங்கம் இயங்குகிறது. பெயர் மட்டும் 'டிலைட் தியேட்டர்' என மாற்றி விட்டார்கள்; உரிமையாளர்கள் மாறியதால். ஆனாலும், அந்த அரங்கம் இருக்கும் வீதியின் பெயர் இப்போதும் கோவையில் 'வெரைட்டி ஹால்' வீதிதான்.

ஆனால், இப்போது நடக்கும் சினிமா நூற்றாண்டு விழாவில், 1914இல் தொடங்கப்பட்ட 'டிலைட் தியேட்டர்' உரிமையாளர் என்ற வகையில் ஜோகர் என்பவருக்கு விருது வழங்கியுள்ளார் தமிழக முதல்வர். ஜோகர் குடும்பத்தினர் சில ஆண்டுகளுக்கு முன், 'வெரைட்டி ஹால்' திரையரங்கை வாங்கியவர்களே தவிர, நிறுவியவர்கள் அல்லர். முறையாக, சாமிக்கண்ணு வின்சன்ட் குடும்பத்தினருக்கு அவ்விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு முன்னோடியின் வரலாறு எல்லோர் கண் முன்னேயும் மாற்றப்படுகிறது. இது அறியாமையினால்கூட நிகழ்ந்திருக்கலாம். ஆனால் இது மட்டுமே பிரச்சினை அல்ல என்பதுதான் சோகமானது.

## லெனின் கூறும் சினிமா

தமிழுக்கு மூன்று முறை தேசிய விருது பெற்றுத் தந்த கலைஞரான பி.லெனின் சுட்டிக்காட்டும் விடயங்களைப் பாருங்கள் பலதும் புரியும்.

இந்திய சினிமா நூறு ஆண்டை கடந்திருப்பது மகிழ்ச்சியைக் கொடுக்கிற செய்தியாக இருந்தாலும், இந்த நூறு ஆண்டுகளில் இந்திய சமூகம், குறிப்பாக தமிழ் சமூகம் கொஞ்சம்கூட சினிமாவை புரிந்துக் கொள்ளவில்லையே என்கிற ஆதங்கமும் இருக்கவே செய்கிறது.

சரி, இந்திய சினி[illegible] டாடுவது என்று[illegible] அதை எப்படி உருப்படியாக கொண்டாடுவதே என்றாவது சிந்தித்தார்களா? தொடர்ச்சியாக சென்னை முழுவதும் திரையிடப்பட்ட படங்கள் எல்லாமும், சினிமாவின் உன்னதத்தை, தமிழர்களின் பண்பாட்டை எந்தவிதத்திலும் பிரதிபலிக்காத, வெறும் கேளிக்கையை கொண்டாடும் படங்கள். இந்த படங்களை திரையிட்டு, நாம் எப்படி நூறு வருடத்தை கொண்டாடுவது. இப்படியான படங்கள்தான் இந்த நூறு வருடத்தில் வந்திருக்கிறது என்றால், நாம் கூச்சப்பட வேண்டாமா என்று நான் கேட்கவில்லை? சிந்திக்கிறேன்.

உண்மையாகவே திரையிடப்பட்ட இந்தப் படங்களையும் தாண்டி, தமிழ் சினிமாவில் நூற்றுக்கணக்கான அற்புதமான படங்களும் வெளிவந்திருக்கின்றன. அமெரிக்காவில் இருந்து கேமராவின் பாகங்களை விற்க வந்த எல்லிஸ். ஆர். டங்கன் தமிழ் திரைப்படங்களுக்கு ஒரு புதிய வடிவத்தைக் கொடுத்தார். எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றவர்களின் படங்களை திரையிடுவதை ஆதரிக்கும் வேளையில், சூப்பர் ஸ்டார் (ரஜினிகாந்த் அல்ல) தியாகராஜ பாகவதர்தான், பி.யு.சின்னப்பா போன்றவர்களை நாம மறந்ததையும் நான் இந்த நேரத்தில் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர் படத்தை திரையிட முனையும்போது, தமிழ் சினிமாவின் முகத்தை மாற்றியமைத்த எல்லிஸ். ஆர். டங்கன் இயக்கிய மந்திரிகுமாரி திரைப்படத்தையாவது திரையிட்டு இருக்கலாமே! அல்லது நாவலில் இருந்து சினிமாவாக மலர்ந்த மலைக் கள்ளனைப் பரிசீலித்து இருக்கலாமே! ஏன் இந்த படங்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன. கலைஞர் இந்த படங்களில் பங்காற்றி இருப்பதாலா?

வெறும் நடிகர்களை கொண்டாடுவது மட்டுமல்ல, நூற்றாண்டுக் கொண்டாட்டம். இந்த நூற்றாண்டை சினிமா கடந்து வர முக்கிய காரணம், சினிமாவில் ஆளுமை செலுத்திய இயக்குநர்கள். அதில் முக்கியமானவர் கே.ராம்நாத். ஒரு வெளிநாட்டு இலக்கியத்தை தமிழில் ஏழை படும் பாடு என்கிற திரைப்பாமாக எடுத்தார். இன்று வரை தமிழில் அப்படியான திரைப்பட முயற்சி உருவாகவே இல்லை. ராம்நாத்தின் ஏதாவது ஒரு திரைப்படத்தை திரையிடுவதில் இங்கே என்ன பிரச்சினை இருந்தது?

வெறும் பாடல்களால் நிறைந்த தமிழ் திரைப் படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு பாடல்களே இல்லமால், ஜப்பானிய சினிமா பாணியில் வீணை எஸ்.பாலசந்தர் இயக்கிய 'அந்த நாள்' திரைப்படம் எத்தனை முக்கியமான திரைப்படம். ஒரு பொம்மையை வைத்து முற்றிலும் வித்தியாசமான காலத்தில் அவர் இயக்கிய பொம்மை திரைப்படத்தையாவது திரையிட்டு இருக்கலாமே!

டி.ஆர்.ரகுநாத் இயக்கிய திரைப்படங்கள், பி.ஆர். பந்துலுவின் முக்கியமான படமும், தமிழர்களின் சுதந்திரப் போராட்ட பங்கை விளக்கும் ஒரு வீரனின் கதையுமான 'கப்பலோட்டிய' தமிழன் திரைப்படம் எல்லாம் எங்கே போனது? ஒரு தெலுங்கு நடிகை சிவாஜிக்கு சமமாக வசனம் பேசி நடித்த, 'கண்ணகி' திரைப்படம் ஏன் காணாமல்போனது. 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ [illegible] மிக நீளமான தலைப்பில் [illegible] திரைப்படமெல்லாம் என்ன ஆனது? தவிர முதல் சகலகலா வல்லியான பானுமதியின் 'சண்டிராணி' படம் என்ன ஆயிற்று?

டி.ஆர். ராஜகுமாரி, டி. எ. மதுரம், ஜீவரத்தினம் இன்னும் பல திறமையான நடிகைகளை எந்த தமிழ் சினிமா நினைவுக்கூறப்போகிறது என்று எனக்கு தெரியவில்லை.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல், அஜித், விஜய் மட்டும் தமிழ் சினிமாவின் தூண்கள் இல்லையே. இவர்களுக்கு முன்னர் பல போட்டுக் கொடுத்த அருமையான பாதையில்தானே இவர்கள் பயணம் செய்கிறார்கள். இவர்களை செம்மைப்படுத்திய இயக்குனர்களை ஏன் தமிழ் திரையுலகம் மறந்துபோனது. தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் ஏன் இதில் தலையிட்டு நிகழ்வை செம்மைப்படுத்தக்கூடாது? ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும், கலைஞர் கருணாநிதி தமிழ் சினிமாவிற்கு அளித்த பங்கை யாராவது மறந்து விட முடியுமா? உலகில் இந்த வயதிலும் பேனா பிடித்து எழுதும், அதுவும் யார் கேட்டாலும் சினிமா என்றால், தன்னை மறந்து அதில் மூழ்கிப் போகும், ஒரு கலைஞன் இந்த சினிமாவிற்கு அளித்த கொடையை ஏன் தமிழ் சினிமா மறந்து போனது?

சிவாஜி கணேசன் என்கிற ஆளுமையை அடையாளம் காண வைத்து, தமிழர்களின் பகுத்தறிவை உசுப்பிவிட்ட, திராவிட இயக்கத்தின் தொடக்க கால காவியமான 'பராசக்தி', திரைப்படம் எங்கே போனது? வீர வசனங்களுக்கு பேர்போன கண்ணாம்பாளை நிலைநிறுத்திய 'மனோகரா' என்ன ஆனது? கலைஞரின் எத்தனையோ படங்களில் எதையாவது ஒன்றையாவது திரையிட்டு இருக்கலாம். அரசியலுக்கு அப்பாற்பட்டு, தொடர்ந்து இந்த வயதிலும், திரைத் துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு கலைஞனாகவாவது கருணாநிதியை இந்த தமிழ் திரையுலகம் கொண்டாடியிருக்கலாம்.

கலைஞரைத் தாண்டியும், திராவிட இயக்கத்தின் ஆணிவேர் அறிஞர் அண்ணாவின் படங்கள் என்ன ஆனது? நல்லதம்பி படம் பற்றி இங்கே யாருக்காவது தெரியுமா? பகுத்தறிவை வளர்த்ததாக சொல்லப்படும் அண்ணாவின் படங்களுக்கே இந்த நிலையா? எனில் அண்ணா நாமம் எங்கே வாழ்வது? இன்னொரு முக்கியமான கலைஞனான வீ.கே ராமசாமி டி.ஆர். மகாலிங்கம் எங்கே போனார்கள்? ஏன் தமிழ் சினிமா சரித்திரம் மறந்துபோனது? 'ரத்தினக் குமார்' என்கிற படம் பற்றிய குறிப்புகளாவது இங்கே இருக்கிறதா? என்று நான் உங்களை கேட்கவில்லை. எனக்குள்ளேயே யோசித்துப் பார்க்கிறேன்.

சினிமாவுக்குள்ளேயே இருக்கும் ஒரு சாதனைக் கலைஞனின் அழுகுரல் இது. "தமிழுக்கு மூன்று முறை தேசிய விருது பெற்றுத் தந்தவன் என்று பார்க்காமல் சினிமாவை நேசிக்கும் சாதாரண மனிதனாகப் பார்த்து இவற்றைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சுகிறார் அந்த மனிதன். ஆனால் இவை எவையும் விழாவை நடத்திய அரசின் காதுகாளில் ஏறியிருக்கவில்லை.

மேலும், தமிழகத்தின் முதல் திரைப்பட இயக்குநர் நடராஜ முதலியார். 1916இல், அவர் இயக்கிய படம் 'கீசகவதம்'. அப்படிப் பார்த்தால் உண்மையில், 2016தான் தமிழ்த் திரையுலகின் நூற்றாண்டு. இப்போது கொண்டாடப்படுவதைக் காட்டிலும் சிறப்பாகவும், பயன்மிக்க வகையிலும் 2016 கொண்டாடப்பட வேண்டும். பால்கே ஒரு சாதனையாளர்தான். அதேபோன்று தமிழகத்தில் திரைக்கலை வளர்த்தவர்களும் சாதனையாளர்கள்தான் என்பதை எப்படிப் புறந்தள்ளிவிட முடியும்.

வராய்ட்டி கோல் தியேட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை




# பிரபாகரன் இருந்த வீடு

ஜெரா

1997ஆம் ஆண்டிலிருந்து விரிவு பெற்ற புதுக்குடியிருப்பு சிறுநகர எல்லை அந்தக் காட்டுக்குறையனோடு அரண் பெற்றுக் கொண்டது. அதாவது அது கழித்துவிடப்பட்ட காட்டுப்பகுதி. அப்படியென்றால் யாரும் கவனத்திலெடுக்காத காடு என அர்த்தப்படும். ஒரு பக்கம் புதுக்குடியிருப்பின் வேணாவில் கிராமமும், மறுமுனையில் ஒட்டுசுட்டானுக்கு செல்லும் வீதியும் அந்த சிறுகாட்டுத் துண்டுக்கு கூரிய வாள் வடிவம் கொடுத்திருந்தது. இரு பக்கங்களாலும் அந்தக் காட்டுக்குள் நகரும் மக்கள் அதனை அரித்து எடுத்தனர். அதாவது மெல்லிதாக நீண்டு வளரும் மரங்கள், அக்கால குடிசை வீடுகளுக்கு அவசியப்பட்டது. வரிச்சித் தடிகளுக்கு பிரபலம் பெற்ற இடமாக அந்தத் துண்டுக் காடு விளங்கியது. ஆனால் 1999ஆம் ஆண்டோடு அதற்குள் பொதுமக்கள் யாரும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. இந்தக் காட்டுப் பகுதிக்குள் பொது மக்கள் உள்நுழையத் தடை என்கின்ற பெயர்ப் பலகைகள் காட்டு மரங் களில் பலமாக அறையப்பட்டிருந்தன.

## கழித்துவிடப்பட்ட காடு

அந்த ஆண்டிலிருந்து கழித்துவிடப்பட்ட காடு மர்மம் நிறைந்ததாக மாறியது. பகலில் எந்த ஆள் நடமாட்டத்தையும் அங்கு அவதானிக்க முடியாது. நள்ளிரவானதும் வாகன இரைச்சலினால் அயல் கிராமங்களே அதிரும். கிரவல் மண் அதிகளவில் காட்டின் உள்ளே எடுத்துச் செல்லப்படுவதாக ஒரு தரப்பினரும், வெளியே எடுத்து வரப்படுவதாக இன் னொரு தரப்பினருமாக புதுக்குடியிருப்பு சந்திக் குடிமகன்கள் வாதிட்டுக்கொண்டனர். ஆனாலும் யாரும் அதனை ஆழமாக தேடிக் கண்டுபிடிக்க விரும்பவில்லை. காரணம் அப்போது ஒட்டுசுட்டான் வீதி அச்சுறுத்தல் மிகுந்ததாக மாறியிருந்தது.

இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுறுவும் படையணி அந்த வீதியில்தான் தன் வீரத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. குறித்த ஆண்டிலேயே, புதுக்குடியிருப்புக்கு மிக அருகான பகுதியில் கிளைமோர் தாக்குதலொன்றில் கேணல் சங்கர் கொல்லப்பட்டார். அதற்குப் பிறகு கழித்துவிடப்பட்ட காட்டுப் பகுதியிலிருந்து எந்த இரைச்சலும் வரவில்லை. அமைதியானது காடு.

## காட்டுக்குள் வீடு

காட்டின் அமைதி நிரந்தரமானது. தொடர்ந்து சமாதானம் அடித்ததால் எந்த பரபரப்பையும் அந்தக் காட்டை அண்மித்த பகுதியில் அவதானிக்க முடியவில்லை. ஆனால் ஆயுதமற்ற நிலையில் எவ்வேளையிலும் போராளிகளை அங்கு அவதானிக்கலாம். அருகருகாக போராளிகளுக்கான முகாம்கள் முளைத்தன. காட்டுக்குள் இருந்த போராளிகள் நாட்டுக்குள் வர ஆரம்பித்திருக்கின்றனர் என மக்கள் பேசிக் கொண்டார்கள். ஆனாலும் அந்த மர்மம் கிடப்பில் போடப்பட்டிருந்து. 2009ஆம் ஆண்டில் புலிகள் மௌனித்த பின்னர் உடையத் தொடங்கிய மர்மங்களுள் கழித்துவிடப்பட்ட காடு முதன்மையிடத்துக்கு வந்தது. போரை ஒளி பரப்பிய தொலைக்காட்சியில் தோன்றிய இராணுவத்தினன் மீண்டும் மீண்டும் அந்த காட்டையே காட்டினான். அதற்குள் இருக்கும் சிறு வீட்டையும், அதற்கு கீழான நில அறைகளையும், பிரபாகரன் வாழ்ந்தமைக்கான தடயங்களையும் மீள மீள விவரணப்படுத்திக் கொண்டிருந்தான்.

## பிரபாகர நினைவை மீளுற்பத்தி செய்யுமிடம்

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஆவென வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர். பெரும் ஆச்சரியக் கிடங்காக அதையுணர்ந்தனர். அரச ஊடகங்கள் பிரபாகரனின் சொகுசுத்தனமாக அதனைக் காட்டி அவர் மீதான பிம்பக் குலைவை ஏற்படுத்த முயற்சித்தன. உடனடியாகவே போர் சுற்றுலாவையும் இராணுவத்தினர் ஆரம்பித்திருந்தனர். அந்தக் காட்டுக்குள் நுழைவதற்காக மக்கள் முண்டியடித்தனர். ஒரு பெரும் யுக முடிவில் தோற்கடிக்கப்பட்ட வீரனின் தூய சமாதியைப் பார்க்கும் அனுபவத்தை அங்கு வருபவர்கள் பெற்றுச்சென்றனர். பிரபாகர நினைவை மீளுற்பத்தி செய்யுமிடமாக அதைக் கருதினர். அந்தக் கட்டுமானத்தை தொட்டுணர்ந்து தம் இனப் பெருமையை இரு தரப்பினருமே பேசிக் கொண் டனர். தெற்கிலிருந்து வந்தவர்கள் தோற்றுப்போன இனத்தின் மீது ஏளனத்தையும், அதிகாரத்தையும் கூட அந்த விடத்தில்தான் வெளிப் படுத்தினர்.

## ஏன் தகர்த்தார் வீட்டை?

ஆனாலும் இவை எதற்கும் நீடிப்பு கிடைக்கவில்லை. நடந்து முடிந்த பொறுக்கித்தனமிக்க தேர்தலுக்கு பிரபாரகனும், மாவீரர்களும் அழைத்துவரப்பட்டிருந்தனர். பிரபாகரன் மாவீரனாக ஒளிவீசியிருந்தார். மாவீரர் துயிலுமில்லங்கள் மறுபடியும் தேவையென்ற முழங்கங்கள் வடக்கின் எட்டுத்திக்கும் ஓங்கியொலித்தன. அரசியலில் அப்பாவிகளான மக்கள் மீண்டும் இந்தக் குரல்களுக்குப் பின்னால் இழுபட்டனர். தியாக அலைகளுக்குப் பின்னால் அடித்துச் செல்லப்பட்டனர். வீரப் பெருக்கில் நனைந்தனர். எல்லாவற்றையும் இராணுவம் பார்த்துக் கொண்டிருந்தது. அவர்கள் அடுத்த போருக்குத் திட்டமிட்டனர். இது ஒருவித உளவியல் போர். பிரபாகரனையும், மாவீரர்களையும் மன நினைவைவிட்டு அழிக்கும் போர். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முடிவு பெற்றிருந்தாலும், பிரபாகரன் வாழ்ந்த இடம், போராட்டத்திற்கான உணர்வை கொடுப்பதாக அனைவரும் உணர்ந்தனர். அதற்காக, இதுவரை இராணுவ வெற்றியின் உச்சமாக விளங்கப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த பிரபாகரனின் வீட்டையும் கடந்த 3ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் தகர்த்தெறிந்தனர்.

## வியக்க வைத்த கட்டுமானம்

இஸ்ரேலிய புலனாய்வுத் துறையான மொசாட்டின் கட்டுமாணப் பணிக்கு ஒப்பானதாக இந்த வீட்டை சிலர் அடையாளப்படுத்தியிருக்கின்றனர். அது எவ்வளவு புகழ் மிக்கதாகவும், நுட்பமிக்கதாகவும் இருப்பினும், புலிகளின் இராணுவத் தந்திரோபாயங்களுக்கும், பிரபாகரன் இயற்கை மீது கொண்டிருந்த பேரறிவுக்கும் இந்த வீடு சிறந்த உதாரணம். வீடு அமைக்கட்டிருக்கும் பகுதியை நூலிலைக் காடு என்றே குறிப்பிடலாம். அதாவது மிகுந்த நெருக்கமிக்கது. மெல்லிய கொடிகளும், செடிகளும், இடையிடையே மரங்களும் நிறைந்தது. எவராலும் இலகுவில் உள்நுழைந்துவிட முடியாதது.

(30 ஆம் பக்கம் பார்க்க)





ஒரு பெரும் யுக முடிவில் தோற்கடிக்கப்பட்ட வீரனின் தூய சமாதியைப் பார்க்கும் அனு பவத்தை அங்கு வருபவர்கள் பெற்றுச்சென்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள் வெட்டின் அரசியல்

ஆனைக்கோட்டைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் குடாநாட்டில் ஒரு பரபரப்பான நிலையைத் தோற்று வித்து விட்டது. வழமை போன்று இந்த வாள் வெட்டில் பாதிக்கப்பட்டது சாதாரண குடிமகன் அல்ல. சட்டத்தைப் பாது காக்கவென களமிறக்கப்பட்டிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தான்.

வழமையான வீதிச் சோதனை நடவடிக்கையில் குறித்த பொலிஸார் ஆனைக்கோட்டைப் பகுதியில் ஈடுபட்டிருந்தனர். வீதியால் வருகின்ற வாகனங்களை வழிமறித்து ஆவணங்களைப் பரிசோதித்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் உறுமிக்கொண்டு வந்தது ஒரு இலக்கத் தகடு அற்ற ஒரு மோட்டார் சைக்கிள். அந்த மோட்டார் சைக்கிளை தூரத்திலேயே கண்டு விட்ட பொலிஸார் அதனை நிறுத்தச் சொல்லி ஒளிச் சமிக்ஞை செய்தனர். பொலிஸாரின் கட்டளைக்கு பணிவது போன்று வேகத்தை குறைத்தபடி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர். முன்னால் நின்ற பொலிஸ் உத்தியோகத்தரை அணுகி மறைத்து வைத்திருந்த வாளால் வெட்டிவிட்டு கணப்பொழுதில் அங்கிருந்து விரைந்து பறந்தனர்.

இந்தச் சம்பவத்தில் குறித்த பொலிஸ்காரர் கையில் படுகாயமடைந்தார். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியெங்கும் சல்லடை போட்டுத் தேடிய பொலிஸார் 8 இளைஞர்களைக் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர். ஆயினும் விசாரணைகளின் முடிவில் அவர்களுக்கும் வாள் வெட்டுச் சம்பவத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்பது நிரூபணமானதால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளக விசாரணைகளின் பின்னர் தற்காலிகமாக பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். ஏனெனில் இரவு நேரக் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்படும்போது ஐந்து பேர் கொண்ட குழுக்களாகவே அவர்கள் கடமைபுரிய வேண்டும். ஆனால் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. அதிலும் போர் முடிவுக்கு வந்த பின்னர் இருவர் அல்லது மூவர் கொண்ட குழுக்களாகவே இரவு நேரக் கடமையில் பொலிஸார் ஈடுபட்டு வந்தனர். வாள்வெட்டுச் சம்பவம் நிகழ்ந்த சந்தர்ப்பத்திலும் மரபார்ந்த முறை மீறப்பட்டு இரண்டு பொலிஸாரே கடமையில் இருந்துள்ளனர். "ஐந்து பொலிஸாரே இணைந்து இரவுக் கடமையில் ஈடுபடவேண்டும் என்ற விதியை ஏன் மீறினீர்கள்?" என்ற மேலதிகாரிகளின் கேள்விக்கு முகாம் பொறுப்பதிகாரியால் உரிய பதிலை வழங்க முடியவில்லை. ஆளணிப் பற்றாக்குறை என்ற பதில் மேலதிகாரிகளுக்கு பொருத்தமற்றதாகவே இருக்கும். எனவே கடமையில் இருந்து தவறியதற்காக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் பணி நீக்கத்தோடு ஏனைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பயம் பிடித்துள்ளது. உடனடியாகவே வியாழக்கிழமை இரவில் இருந்து ஐந்து பேர் கொண்ட குழுக் களை இரவுக் கடமையில் ஈடுபடுத்த தொடங்கிவிட்டனர்.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இது ஒரு சாதாரண குற்றம் போலவும், பொலிஸார் விழித்துக் கொண்டு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர் என்றும் தோன்றக் கூடும். ஆனால் உண்மையில் இந்த வாள் வெட்டுச் சம்பவத்துக்குப் பின்னால் மிகப் பெரிய அரசியல் ஆபத்தொன்று ஒளிந்திருப்பதாகப் பலர் சந்தேகிக்கின்றனர்.



வடக்கு மாகாண சபை கூட்டமைப்புத் தலைமையில் பரிபாலிக்கப்படும்போது, அதிகரித்த இராணுவப் பிரசன்னம் குறித்த முறைப்பாடுகள் சர்வதேசத்துக்கு அடிக்கடி செல்லக்கூடும். இதனால் இப்போது கேட்பதைவிட இன்னமும் அதிகாரத் தோரணையோடு "போர் முடிந்த பின்னரும் தமிழர் பிரதேசங்களில் இத்தனை இராணுவத்தினர் இனியும் ஏன்?" என்ற கேள்வியை சர்வதேசம் எழுப்பக் கூடும் இது இலங்கைக்கு இன்னமும் இட்டுக் கட்டான நிலைமையை ஏற்படுத்திவிடும். ஆகவே இராணுவத்தின் இருப்பை நியாயப்படுத்துவதற்காக காரணிகள் அரசுக்கும் படைத் தரப்புக்கும் தேவைப்படுகின்றன. முன்னர் புலிகளைச் சாட்டி படை முகாம்களை நிறுவ முடிந்தது. வகை தொகையற்ற இராணுவத்தினரை தமிழ்ப் பகுதிகளில் நிலைநிறுத்த முடிந்தது. ஆனால் இனி அப்படி செய்ய முடியாது. எனவே தான் வேறு வழியில் படைத் தரப்பின் இருப்புக்கான அவசியம் பற்றிய போலிக் காரணிகளை உருவாக்க முனைப்புக் காட்டப்படுகிறது.

குறித்த வாள் வெட்டுச் சம்பவத்துக்குப் பின்னர் கட்டாயமாக இரவுக் கடமையில் ஐந்து பேர் கொண்ட பொலிஸ் குழுக்களே ஈடுபட வேண்டும். ஆனால் அவ்வாறு ஈடுபடத்தப்படும் பட்சத்தில் பகல் கடமையில் ஈடுபடுவதற்கான ஆளணிப் பற்றாக்குறை பொலிஸாருக்கு ஏற்படும். அல்லாதவிடத்து இரவு பாதுகாப்புக் கடமையை சில பொலிஸ் நிலையங்கள் கைவிட வேண்டியிருக்கும் அல்லது தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாதிருக்கும். இந்த விடயம் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்கு பெருந்தடையாக இருக்கும். எனவே வேறு வழியின்றி குடாநாட்டின் பாதுகாப்புக்காக மேலதிக கடமையில் ஈடுபடுமாறு பொலிஸார் படையினரைக் கேட்க வேண்டிய சூழல் எழும். அப்போது பொலிஸாருடன் சேர்ந்தும் அல்லது தனித்தும் இராணுவத்தினர் இரவு நேரப் பிரசன்னத்தை அதிகரிப்பார்கள். இதன் பின்னர் சர்வதேசம் இராணுவப் பிரசன்னம் குறித்த கேள்விகளை எழுப்பினால் மக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸாருக்கு ஒத்துழைப்பாக செயற்படவே தமிழ் பகுதியில் இன்னமும் இராணுவம் நிலைத்திருக்கிறது எனக் காரணம் கூற முடியும். இதற்காகவே இந்த வாள் வெட்டுச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்பதே பலரின் சந்தேகம்.

ஏனெனில் இப்போது இரவு நேரங்களில் வீதிக்கு வீதி பொலிஸார் வாகனங்களை மறித்து பரிசோதிப்பதும் தம் பொக்கெற்றுக்களை நிரப்புவதும் யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லோருக்கும் அத்துப்படியான விடயம் இந்த நிலையில் இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் எந்த ஒரு யாழ்ப்பாணத்து இளைஞனும் பயணிப்பதில்லை. மாறாக படைப் புலனாய்வுப் பிரிவினரே இவ்வாறன இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் உலவுகின்றனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். அவர்களின் கூற்றை நிரூபிப்பது போன்று இலக்கத்தகடற்ற வாகனக்காரர்கள் பல்வேறு நாசகாரச் செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறான ஒரு புலனாய்வுக் குழுவே பொலிஸாரை வாளால் வெட்டிவிட்டு படைத் தரப்பின் இருப்புக்கான நியாயத்தைச் சோடிக்க முனைகிறது என்று கருதப்படுகிறது. இதில் எது உண்மை என்பதை இனி வரப்போகும் சூழமைவுகளே தீர்மானிக்கப் போகின்றன.

DPMC

எந்தப் பாதைக்கும் ஏற்ற வாகனம்

பஜாஜ்

முச்சக்கர வண்டி



கார்ப்பெட் வீதியா, தார் வீதியா, கிறவல் வீதியா,
களிமண் வீதியா, குச்சொழுங்கையா நீங்கள்
பயணம் செய்யும் பாதைகள் எதுவாகவும்
இருக்கட்டும். அனைத்துக்கும் ஈடுகொடுக்கும்
பஜாஜ் முச்சக்கர வண்டி

அதுமட்டுமன்றி...
- கைக்கடக்கமான விலை
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- போதியளவு அசல் உதிரிப்பாகங்கள்
- நாடெங்கும் சேவை நிலையங்கள்
- சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை



நிதி, காப்புறுதி சேவையுடன் மற்றைய வசதிகள் மற்றும் ஆலோசனைகளுடன் விற்பனைக்கு பின்னரான சேவைகளுக்கு எங்களை நாடவும்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே:
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

பஜாஜ் முச்சக்கர வண்டி
வாழ்வை வளமாக்கும்
வகையான
குடும்ப வாகனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> இது கிட்டத்தட்ட ஆயுதங்களற்ற ராணுவம் போன்றது. இதன் ஊழியர்கள், அரசு தங்களுக்குத் தந்திருக்கும் மொட்டை அதிகாரத்தைத் தங்களுடைய மனம்போன போக்கில் செயல் படுத்துவார்கள்.

# ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்க்கை போராட்டம்

சீனாவின் இரும்புத்திரை சமூக வாழ்க்கையை ஒரு பெண்ணின் போராட்டம் கேள்விக்குள்ளாக்கி வருகிறது. சீன அரசு சங்கடத்தோடு ஒரு பெண் பெயரை உச்சரிக்கிறது: ஜாங் ஜிங்!

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் பொருளாதார மந்த நிலையால் பாதிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று சீனத்தின் ஷென்யாங். இந்த நகரில் வாழ்ந்த சியா ஜுன்பெங்கின் மனைவிதான் ஜாங் ஜிங். இவர்களுக்கு ஒரு மகன். வேலையிழந்து வாடியதால் குடும்பத்தாரின் வாட்டத்தைப் போக்க நகர வீதிகளில் இறைச்சி விற்றார் சியா ஜுன்பெங். கணவரின் வீதி வியாபாரத்துக்கு வேண்டிய உதவிகளை மனைவி செய்துவந்தார்.

நகரத்து வீதிகளில் இப்படி இறைச்சி விற்பது சீனாவில் சட்டவிரோதம். எந்த நாட்டில்தான் இதையெல்லாம் அனுமதிக்கிறார்கள்? நகர மக்களின் சுகாதாரத்தில் அக்கறைகொண்டுதான் இந்த நடவடிக்கை என்றாலும், சீனத்தில் இந்த வேலைகளை ஒப்படைத்திருப்பது செங் குவான் என்ற அலுவலர்கள் படையிடம். இது கிட்டத்தட்ட ஆயுதங்களற்ற ராணுவம் போன்றது. இதன் ஊழியர்கள், அரசு தங்களுக்குத் தந்திருக்கும் மொட்டை அதிகாரத்தைத் தங்களுடைய மனம்போன போக்கில் செயல்படுத்துவார்கள். ஆட்சியதிகாரத்தில் உள்ளவர்களிடம் ஒரு மாதிரியாகவும் ஏதும் இல்லாத எளியவர்களிடம் கெடுபிடியாகவும் நடந்து கொள்வார்கள்.

சியா ஜுன்பெங் செல்வாக்கு ஏதுமில்லாதவர். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் வீதியில் அவர் இறைச்சி விற்றுக்கொண்டிருந்தபோது எங்கிருந்தோ இரு அதிகாரிகள் அவரை நோக்கி ஓடிவந்தனர். அவரிடம் இருந்தவற்றைப் பறித்து வீதியில் வீசி எறிந்ததுடன் அவரை அடிக்கவும் ஆரம்பித்தனர். அவர்களிடமிருந்து தப்பிக்க, சமையலறைக் கத்தியைக் கையில் எடுத்து அவர்களை நோக்கித் திருப்பினார் சியா ஜுன்பெங். அப்போது நடந்த களேபரத்தில் இருவருக்கும் பலத்த கத்திக்குத்து விழுந்து படுகாயம் அடைந்தனர். பிறகு, இருவரும் இறந்துவிட்டனர்.

நகராட்சி விதிகளுக்குப் புறம்பாக வீதியில் இறைச்சி விற்பனை செய்தது. நகர மக்களின் உடல் நலனைக் கெடுக்கும் வகையில் சுகாதாரக் கேடாகத் தின்பண்டம் செய்து விற்றது. நகராட்சி அதிகாரிகளைக் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தது. அவர்களுடைய உயிரைப் பறிக்க ஆயுதங்களுடன் திட்டமிட்டு வந்தது என்று ஏகப்பட்ட குற்றப் பிரிவுகளில் சியா ஜுன்பெங் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. நான் இறைச்சி விற்றது உண்மைதான். குடும்பம் வறுமையில் வாடியதாலும் வேறு வேலை கிடைக்காததாலும் விற்றேன். அதிகாரிகளைக் கொல்லும் நோக்கம் எனக்குக் கிடையாது. இருவரும் என்னை அடித்தபோது வலி தாங்காமல் அவர்களை மிரட்டத் தற்காப்புக்காகத்தான் கத்தியை எடுத்தேன். அதன் பிறகு நடந்த சம்பவங்கள் எதுவும் நான் திட்டமிடாதவை என்று வாதாடினார் சியா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜுன்பெங். ஆனால், எதுவும் அதிகார வர்க்கத்தின் காதுகளில் ஏறவில்லை. கீழ் நீதிமன்றங்கள், மேல் நீதி மன்றங்கள் என்று ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு முறையீட்டிலும் தோற்றுக்கொண்டே வந்தார் சியா ஜுன்பெங்.

இதற்கிடையே, இந்த வழக்கு செய்தி ஊடகங்கள் வழியாகவும் சைனா வெய்போ சமூக ஊடகத்தின் (சீனத்து ட்விட்டர்) வழியாகவும் ஏராளமான சீனர்களைச் சென்று சேர்ந்தது. அவர்கள் ஜாங் ஜிங்குடன் தொடர்புகொண்டு அனுதாப வார்த்தைகளைத் தெரிவித்ததுடன், அவருடைய கணவரை வழக்கிலிருந்து விடுவிக்க அவர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் துணையாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.


கிராமப்புறத்தைச் சேர்ந்த ஜாங் ஜிங்குக்குக் கணினி என்றால் என்னவென்றே தெரியாது. கணவருக்கு ஆதரவாகக் களம்காணப் புறப்பட்ட அவருக்கு, மனித உரிமைகளுக்காகப் பாடுபடும் மூன்று இளம் வழக்குரைஞர்கள் ஆதரவாக வந்தனர். அவர்களில் ஒருவர் ஜாங் ஜிங்குக்கு ஒரு கணினியையும் சட்டப் புத்தகத்தையும் பரிசாக அளித்தார். ஜாங் ஜிங் இப்போது கணினி, சட்டப் புத்தகங்களின் துணையோடு சட்ட வல்லுநர்களுக்கு ஈடாக விவாதிக்கும் அளவுக்குத் தேறிவிட்டார். கணவருக்காக நீதிமன்றங்களின் படியேறிப் பழகிவிட்டார்.

அதேபோல, தன்னுடைய தந்தையின் நிலைகண்டு வருந்திய அவர்களுடைய ஒரே மகன், அடிக்கடி ஓவியங்களைத் தீட்டிக்கொண்டே வந்தான். அந்த ஓவியங்கள் அவனுடைய தந்தையின் நிலையை உணர்த்தும் வகையில் சோகக் காவியங்களாக இருந்ததால் அவற்றைப் பலரும் விலைகொடுத்து வாங்கிச் சென்றனர். சீனத்தில் மனித உரிமைகள் நசுக்கப்படுவதைக் கண்டித்து நடைபெறும் ரகசிய ஓவியக் கண்காட்சியில் வைப்பதற்காகச் சில ஓவியங்களை ஆர்வலர்கள் விலைகொடுத்து வாங்கிச் சென்றனர். ஆனால், தாய்க்கும் மகனுக்கும் கடைசியில் கிடைத்தது தோல்விதர்ன்.

கடந்த வாரம் சியா ஜுன்பெங்கின் கடைசி மேல்முறையீட்டு மனுவும் நிராகரிக்கப்பட்டது. அடுத்த நாளே அவருடைய கணவருக்கு விஷ ஊசி போட்டுக் கொல்ல வேண்டும் என்று தீர்ப்பாகிவிட்டது. சாவுத் தண்டனை விதிக்கப்படும் நாளன்று காலையில் ஜாங் ஜிங் அவருடைய கணவரைச் சந்திக்க அனுமதி தரப்பட்டது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு கணவரை முதல்முதலாக நேரில் பார்க்கப்போகிறோம் என்று துடிப்புடன் சென்றவருக்கு ஒரே ஏமாற்றம். சியா ஜுன்பெங்கைச் சிறைக் கொட்டடிக்குள் ஒரு நாற்காலியில் உட்கார வைத்திருந்தனர். இரண்டு கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் பிணைத்திருந்தனர். கைகளால் கால்களைத் தொட முடியாது. அவ்வளவு ஏன், ஒரு கையால் இன்னொரு கையைக்கூடத் தொட முடியாமல் சங்கிலி தடுத்தது. அந்த அறையில் ஆறு மூத்த அதிகாரிகள் கடுகடுவென உட்கார்ந்திருந்தனர். அவருடன் 30 நிமிடங்கள் மட்டுமே இருக்கலாம் என்று அனுமதி வழங்கினர். மனைவியை நீண்ட நாள்களுக்குப் பிறகு சந்தித்த ஜுன்பெங் உணர்ச்சி மேலிட்டு அழுதார். நான் வேண்டுமென்றே அவர்களைக் கொல்லவில்லை. என் மீது வீணாகப் பழி சுமத்துகிறார்கள் என்று மனம் நொந்து கூறினார். குழந்தையை நன்றாகப் படிக்க வை, நன்றாகப் பார்த்துக்கொள் என்று கூறினார். உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்று உறுதியளித்த ஜாங் ஜிங், அவரை கட்டித்தழுவி ஆறுதல் கூற நினைத்தார். ஆனால், ஜுன் பெங்கைச் சுற்றிக் கட்டியிருந்த சங்கிலிகளை அகற்ற அதிகாரிகள் மறுத்துவிட்டனர். ஆகையால், அந்த அறைக் கதவின் கம்பிகளுக்கு நடுவே கையை நுழைத்து அவரைத் தன்னருகில் இழுக்க முயன்றார். அவரால் இரு கைகளையும் நுழைக்க முயன்றும் ஒரு கையால் மட்டுமே அவருடைய முகத்தை அதுவும் ஒரு விரலால் மட்டுமே தொட முடிந்தது. இருவர் விழிகளிலும் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கடைசி நேரத்தில்கூட கணவனின் உடலைத் தொட முடியவில்லையே என்ற ஆதங்கம் மனைவியைத் துடிக்கச் செய்தது. போதும் போங்கள் என்ற அதிகாரிகளின் உறுமல்களுக்கு இடையே இருவரும் பிரியாவிடை பெற்றனர். அந்தக் கடைசிச் சந்திப்புக்குச் சில மணி நேரங்களுக்கெல்லாம் கணவரின் உடல் எரிக்கப்பட்ட சாம்பலை மூட்டையாகப் பெற்றார் ஜாங் ஜிங்.

அதை வீட்டுக்கு எடுத்துவந்து அலங்கரிக்கப்பட்ட பந்தலில், ஒரு மேசையின் மீது வைத்தார். பக்கத்திலேயே ஜுன்பெங்கின் இளவயதுப் புகைப்படம், அருகில் பார்வையாளர்கள் விரும்பினால் குறிப்புகளை எழுத ஒரு புத்தகம், இறந்தும் ஒளிவீசும் அவருடைய ஆன்மாவைக் குறிக்க ஒரு மெழுகுவர்த்தி ஆகியவற்றுக்கிடையே பத்திரிகை நிருபர்களுக்கும் செய்தி ஊடகங்களுக்கும் பேட்டியளித்தார் ஜாங் ஜிங். சிலவேளைகளில் அழுதும் சில வேளைகளில் விரக்தியாகச் சிரித்தும் பேட்டியளித்தார்.


அவருடைய 13 வயது மகன், தந்தையைக் கொன்றுவிடுவார்கள் என்பது உறுதியானதும் ஓர் ஓவியம் வரைந்தான். மிகப் பெரிய கடலில் ஒரு மீன் மட்டும் சிறிய கிண்ணத்தில் சிறைபிடிக்கப்பட்டதைப் போல அதில் வரைந்திருந் தான். அது பார்ப்பவர்களின் மனதை மிகவும் உருக்கியது. 400 மைல் களுக்கு அப்பாலிருக்கும் பெய்ஜிங்கிலிருந்து வந்த சீனர் ஒருவர் அந்த ஓவி யத்தை விலை கொடுத்து வாங்கினார். ஏழைகள் வசிக்கும் ஒற்றையறை அடுக்ககங்களில் ஆறாவது மாடியில் ஜாங் ஜிங் குடும்பம் வசிக்கிறது. அனை வரும் படியேடி அந்த



வீட்டுக்கு வந்து தங்க ளுடைய அனுதாபத்தைத் தெரிவித்துச் செல்கின்றனர்.

உணவு, உடை, இருப்பிடம் என்ற முத்தேவைகளும் முக்கியமானவை தான். அத்தோடு முடிந்து விடுவதல்ல வாழ்க்கை. மனிதனை மனிதனாக நடத்தாத எந்த மகத்தான நாடும் ஆடு, மாடுகளைப் பாலுக்காகவும் தோலுக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கும் பக்குமவற்ற பண்ணைகளாகவே வரலாற்றால் பார்க்கப்படும்.


தன்னுடைய மக்கள் மனிதர்களாகவே பார்க்காத இதே சீனா தான் இலங்கையில் அபிவிருத்திக்கு உதவி செய்து இந்த நாட்டு மக்களின் மேம்பாட்டில் கரிசனை கொண்டுள்ள தாம். சொல்கிறார்கள் இந்த நாட்டுத் தலைவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## தேசிய இனப் போராட்டங்கள்



*பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர்.*

*தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.*

(கடந்த வாரத் தொடர்ச்சி)

"மொழி, இனம், நாடு ஆகிய மூன்று உணர்வுகளும் தனித்தனியானவை போல் தோன்றினும், நாட்டு (தேசிய) உணர்வு என்ற கோணத்தில் நோக்கும் போது இவை ஒன்றுடன் ஒன்று இணைந்தும் பிணைந்தும் வருபவையே ஆகும். தமிழ் நாட்டுணர்வைப் (தேசியத்தை) பொறுத்த வரையில் இதனைத் தோற்றுவிப் பதற்கு மொழியே உயிர் கூறாக (Vital Criteria) இருந்திருக்கிறது.

மொழியின் மூலமே இனமும் நாடும் பெயர் பெறுவதாலும் மொழி மக்களின் வாழ்வோடும் இடங்களோடும் ஒன்றி வருவதாலும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க இயலாத அளவிற்கு இம்மூன்று உணர்வுகளும் பிணைந்திருக்கின்றன. எனவே, தமிழ் நூல்களில் காணப்பெரும் தமிழ உணர்வை வெறும் மொழி நோக்கில் மட்டும் காணாமல் தமிழர் வாழ்வின் உள்ளியக்கமாகவும் காண்பதே மிகவும் பொருத்தமுடையது. தமிழ் நாட்டுணர்வு மொழி வழியே உருப்பெற்றதெனினும் ஒவ்வொரு காலத்திலும் முதன்மை பெற்றிருந்த உணர்வுகள் கலந்தே வந்திருக்கின்றன. குறிப்பாக அரசு, மொழி, மதம், பண்பாடு, சமூகம் ஆகியன தமிழ் நாட்டுணர்வில் கலந்திருக்கின்றன.

நில எல்லைகளை வற்புறுத்தியும் அரசியலுணர்வுக்கு (கோனுணர்வுக்கு) முதன்மை தந்தும் இரட்டைக் காப்பியங்களின் காலம் வரையில் வளர்ந்து வந்த தமிழ் நாட்டுணர்வு சமயகாலத்தில் மாற்றம் பெறுகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் இடப்பற்றும் கோனாட்சி உணர்வும் சமயங்களின் செல்வாக்கால் சமயகால இலக்கியங்களில் வெகுவாக மறைந்துவிட்டன. சமய இலக்கியங்களில் தமிழ்நாடு என்ற ஒருமை நோக்கில் பாடப்பட்ட பாடல்கள் பல இருப்பினும் அவை அரசியல் நோக்கில் பாடப்பட்டவை அல்ல; சமய/ பண்பாட்டு நோக்கில் பாடப்பட்டவையாகும். இதே நிலை சமயக் காலத்தையடுத்த சிற்றிலக்கியக் காலத்திலும் அதனையடுத்த காலங்களிலும் தொடர்கிறது. 'தமிழ் மக்களின் வாழ்க்கையில் பழைமையுணர்வு மரபு வழிபட்ட தன்மை என்பன பேரிடம் பெற்றதைப் போலவே' இலக்கியங்களிலும் பழைமையுணர்வு காலந்தோறும் வலுப்பெற்று வந்தது. இலக்கியங்களில் பழைமையை நினைவுகூர்வதில் இலக்கிய இலக்கண மரபுகள், பழந்தமிழ் இலக்கியங்கள், புலவர்கள், சமயகால நிகழ்வுகள், பெருமைகள் ஆகியன இடம்பெற்ற அளவுக்குப் பழந்தமிழ் அரசியலோ, இனப்பழமையோ நாட்டு எல்லைகளோ இடம்பெறவில்லை. எனவே தமிழ் நாட்டு (தேசிய) உணர்வு பண்பாட்டு வழிப்பட்டதாக மலர்ந்தது.

இந்த வரலாற்றைத் தொகுத்துக் காணும் போது தொல்காப்பியர் காலத்திலிருந்து பேராசிரியர் சுந்தரம் பிள்ளை காலம் வரையில் வளர்ந்து வந்திருக்கும் தமிழ் நாட்டுணர்வைப் 'பண்பாட்டு வழிப்பட்ட நாட்டுணர்வு என்று கூறலாம்'

**பல்வேறு மன்னர் குலங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளை ஆண்டு வந்த போதிலும் அனைத் துப் பகுதித் தமிழரையும் இணைக்கும் அம்சமாகத் தமிழ் மொழி திகழ்ந்தது. தமிழர்களை அடையாளப்படுத்தி ஒன்று படுத்தும் கருவி யாக மொழி விளங்கிற்று.**



### பண்பாட்டுத் தேசியம்


பண்டைய தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டிய வேந்தர்களுடன் வேளிர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரும் தத்தமக்கேயுரிய நிலப் பகுதிகளில் தனியாட்சி செலுத்தி வந்தனர். அக்குறு நிலமன்னர்களின் எண்ணிக்கை 120 என வரலாற்றாசிரியர் ஸ்மித் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் 300 இற்கு மேற்பட்ட அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியப் பாயிரத்தில்

"வடவேங்கடந் தென் குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

எனத் தமிழகத்தின் எல்லை தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. அகண்ட இந்த நிலப்பரப்பு சங்க காலத்திலிருந்து வெள்ளையர் வரும் காலம் வரை ஒரு ஆட்சியின் கீழ் ஒருபோதும் இருந்ததில்லை. களப்பிரர், பல்லவர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர் போன்ற தமிழ் மன்னர் குலங்களின் ஆட்சியிலும் அதற்குப் பின் அந்நியர்களான முஸ்லிம்கள், நாயக்க மன்னர்கள், மராட்டியர்கள் போன்றவர்களின் ஆட்சிக் காலங்களிலும் ஒரு பேரரசு உருவாகவில்லை.

பிற்காலச் சோழரின் ஆட்சியில் மகத்தான சோழப் பேரரசை உருவாக்கும் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. சோழப் பேரரசு வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே இலங்கை வரை விரிந்து பரந்திருந்தது. முதலாம் இராசராசன், இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் காலம் வரை நீடித்த இந்தப் பேரரசைப் பிற்காலப் பாண்டியர்கள் தகர்த்துவிட்டனர். அவர்கள் உருவாக்க முயன்ற பாண்டியப் பேரரசும் கி.பி. 1311 ஆம் ஆண்டு மாலிக் காபூர் படையெடுப்பினால் தகர்ந்தது. சோழர்– பாண்டியர் ஆகியோர் இடைவிடாது தமக்குள் போராடிக் கொண்டதன் விளைவாக இரு அரசுகளுமே பலவீனமடைந்தன. இதன் விளைவாக அந்நியர் படையெடுத்துத் தமிழகத்தைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டது. பல்வேறு மன்னர் குலங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளை ஆண்டு வந்த போதிலும் அனைத்துப் பகுதித் தமிழரையும் இணைக்கும் அம்சமாகத் தமிழ்மொழி மட்டுமே திகழ்ந்தது. தமிழர்களை அடையாளப்படுத்தி ஒன்றுபடுத்தும் கருவியாக மொழி விளங்கிற்று.

பாணர்களும் புலவர்களும் எல்லைகளைத் தாண்டி பல நாடுகளுக்குச் சென்று அந்தந்த மன்னர்களிடம் தங்கள் புலமைத் திறனைக் காட்டிப் பரிசில் பெற்றனர். அரச குலங்கள் ஒன்றுடன் ஒன்று திருமண உறவு பூண்டன. வெவ்வேறு அரச நாட்டு மக்களும் தமக்குள் திருமண உறவு கொண்டனர். வணிகர்கள் எவ்வித மான தங்குதடையுமின்றி அனைத்து



நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்து பொருளீட்டினர். சமண, பௌத்த, சைவ, வைணவத் துறவிகளும் அவ்வாறே அனைத்து நாட்டு மன்னர்கள், மக்களின் ஆதரவு பெற்றுத் தொண்டு புரிந்தனர்.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகிய சைவ சமயக் குரவர்களும் பன்னிரு ஆழ்வார்களும் எல்லை கடந்து எல்லா நாடுகளுக்கும் சென்று பக்திநெறியைப் பரப்பினார்கள். ஆக மொத்தத்தில் பல்வேறு மன்னர்களின் ஆட்சியின் கீழ் தமிழ் நாட்டின் பல பகுதிகள் இருந்தாலும் மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தமிழர்கள் ஒன்றுபட்டிருந்தனர்.

### தமிழனின் உலகப் பார்வை

தமிழ்த் தேசிய இனம் என்று பேசுவது மனித குலத்துக்கு எதிரிடையானது அல்ல. மனித குலம் ஒன்றே என்பதையும் பல மரபினங்களை அவற்றுக்குள் அடங்கிய எண்ணற்ற தேசிய இனங்களையும் ஒருங்கே கொண்டதே மனித குலம் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்தவர்கள் தமிழர்கள்.

உலகம் ஒன்று என்பதையும் இங்கு வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரே குலத்தினரே என்பதையும் நமது தமிழினம் ஒரு போதும் மறந்ததில்லை.

உலகில் வாழும் மற்ற இனத்தவருக்கு இத்தகைய சிந்தனை பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பே தமிழர்களுக்கு உலகளாவிய சிந்தனை இருந்தது.

உலகம், உலகு என்ற சொற்களை நமது பழந்தமிழ்ப் புலவர்கள் தொலை நோக்கோடு நிறையப் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் படைத்த இலக்கியங்களை "உலகம்" என்றே அவர்கள் தொடங்கினார்கள்.

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்று திருக்குறளை வள்ளுவர் தொடங்கினார்.

"உலகம் உவப்ப" என்று திருமுருகாற்றுப் படையை நக்கீரர் தொடங்கினார்.

"உலகத்திரே உலகத்திரே" என்று கபிலர் தனது அகவலத்தை தொடங்கினார்.

"அங்ஙண் உலகளித்தலால்" என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தொடங்கினார். "உலகெலாம் உணர்ந்து" எனச் சேக்கிழார் பெரிய புராணத்தைத் தொடங்கினார்.

"மலர்தலை உலகின் மல்கிருள் அகல" எனப் பவணந்தி முனிவர் நன்னூலைத் தொடங்கினார்.

"உலகம் யாவையும்" என்று கம்பர் தனது காவியத்தைத் தொடங்கினார். "மலர்தலை உலகத்து" என்று நாற்கவிராச நம்பி தனது அகப் பொருளைத் தொடங்கினார். இங்ஙனம் உலகம் பற்றிய விரிந்த சிந்தனை நமது புலவர்களுக்கு இருந்தது.

முனைவர் ப.கிருஷ்ணன் எழுதியுள்ள 'தமிழ் நூல்களில் தமிழ் மொழி – தமிழ் இனம் – தமிழ்நாடு' என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சங்க இலக்கியங்களில் பயின்று வரும் உலகு என்ற சொல்லின் பயில்வெண்களைக் கணக்கிட்டாலே, சங்கப் புலவர்களின் உள்ளங்களில் பொது உணர்வு [உலகு தழுவிய பேருணர்வு] இடம் பெற்றிருந்ததை அறிய முடியும். ஏறக்குறைய 200 இடங்களில் உலகு என்ற சொல் பழந்தமிழ் நூல்களில் வருகின்றது.

உலகக் கண்ணோட்டம் மட்டுமல்ல "ஒன்றே குலம்" எனத் திருமூலர் கூறிய கண்ணோட்டமும் தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. அதனால்தான் "யாதும் ஊரே–யாவரும் கேளீர்" என்று சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் கூறிய மாந்த நேயம் தழுவிய பரந்த நோக்கமும் தமிழர்களுக்கு இருந்தது. இன்னமும் இருக்கிறது.

உலகியல் பார்வை இருப்பதினாலேயே நமது தனித்தன்மையை நாம் இழந்து விடக்கூடாது. உலகம் முழுவதிலும் பரவி வாழும் தேசிய இனங்கள் எதுவாக இருந்தாலும் தங்களது தனித்தன்மையை ஒரு போதும் இழந்துவிடாமல் உலகப் [illegible] குரல் கொடுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






AMW
ஒரே விநியோகஸ்தர்

★ அக்கறைப்பற்று - 071 2228887 ★ அளுத்கம - 077 3648603 ★ அனுராதபுரம் - 025 2221823 ★ அவிசாவளை - 071 7158156 ★ பதுளை - 071 4912896 ★ பலாங்கொடை - 045 2289089 ★ படபொல - 091 5627000/ 077 3854734
★ மட்டக்களப்பு - 065 2227333/ 077 3268484 ★ பொரலஸ்கமுவ - 071 8567264 ★ தம்புளை - 066 2283133 ★ தெல்கொட - 033 2256187 ★ திகன - 071 5969653 ★ கம்பஹா - 033 4937696 ★ காலி - 091 4941489/ 0777 250445
★ ஹோமாகம - 071 4478765 ★ ஹொரணை - 077 3031210 ★ கதுருவெல - 027 2226221 ★ கட்டுனெரிய - 077 6989787 ★ களனி - 011 4342857/ 075 9450801 ★ குருநாகல் - 037 2223220 ★ மாத்தளை - 071 8378983
★ மாத்தறை - 041 7210625 / 077 3054150 ★ மொனராகலை - 077 7718211 ★ கல்கிசை - 077 7722518 ★ நீர்கொழும்பு - 077 6989787 ★ புத்தளம் - 077 2906075 ★ சீதுவ - 011 2291932/ 077 610 0390
★ இரத்தினபுரி - 045 2222060 / 071 7158156 ★ தம்புத்தேகம - 071 5900900 ★ திஸ்ஸமஹாராம - 077 4788123 ★ வவுனியா - 077 2737622 ★ நெல்லியடி - 077 9893343 ★ யாழ்ப்பாணம் - 077 6623824

"யமஹா டவுன்" 482, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 0114718603
ஈ மெயில் : yamaha@amwltd.com
உடனடி அழைப்பு 077 296 7075



www.pabcbank.com
(011) 4 667 222



# உங்கள் வசதிக்காக வேலை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது

| 24x7-365 நாட்களுக்கு கிளை திறந்திருக்கும் (எப்பொழுதும்) | வருடத்திற்கு 365 நாட்கள் திறந்திருக்கும் கிளைகள் (மாலை 6.00 வரை) | நீடிக்கப்பட்ட வேலை நேரங்களுடைய கிளைகள் (மாலை 6.00 வரை) | சாதாரண வேலை நேரங்களைக் கொண்ட கிளைகள் (மாலை 4.00 வரை) |
|---|---|---|---|
| கொள்ளுப்பிட்டி.<br>தினமும் 24x7-365 நாட்கள் வருடத்திற்கு | பத்தரமுல்லை, தம்புள்ளை, காலி, கண்டி சிற்றி செண்டர், கிரிபத்கொடை, குருணாகல், மாத்தறை, நீர்கொழும்பு, நுகேகொடை, இரத்மலானை.<br>வாரநாட்களில்: 09.00 am - 06.00 pm,<br>சனிக் கிழமைகளில்: 09.00 am - 01.00 pm,<br>ஞாயிற்றுக் கிழமைகளில்: 10.00 am - 01.00 pm | அனுராதபுரம், பொரளை, கம்பஹா, ஜா-எல, யாழ்ப்பாணம், கடவத்தை, கண்டி, கொட்டாஞ்சேனை, மஹரகம, மொரட்டுவை, பஞ்சிகாவத்தை, புறக்கோட்டை, பிலியந்தலை, ராஜகிரிய, இரத்தினபுரி, தலவத்துகொடை, திருகோணமலை, வத்தளை, வெள்ளவத்தை.<br>வாரநாட்களில்: 09.00 am - 06.00 pm,<br>சனிக் கிழமைகளில்: 09.00 am - 01.00 pm | அக்கரைபற்று, அகுரெஸ்ஸ, அம்பலாங்கொடை, அம்பலாந்தோட்டை, பதுளை, பலாங்கொடை, பம்பலப்பிட்டி, பண்டாரவளை, மட்டக்களப்பு, சிலாபம், சுன்னாகம், டாம் வீதி, தெஹிவளை, எம்பிலிப்பிட்டி, கலேவெல, கம்பளை, ஹட்டன், கதுறுவெல, கல்முனை, கஹபோவில, களுத்துறை, காத்தான்குடி, கட்டுகஸ்தோட்டை, கேகாலை, கெகிராவை, கிளிநொச்சி, கிருலப்பனை, குளியாப்பிட்டி, குண்டசாலை, மாலபே, மாத்தளை, மினுவங்கொடை, மொனராகலை, நாரஹேன்பிட்டி, நெல்லியடி, பழைய சோனகர் தெரு, பாணந்துறை, பேராதனை, பிலிமத்தலாவை, புத்தளம், தங்காலை, வவுனியா, வறகாபொல, வென்னப்புவ, உலக வர்த்தக மையம்.<br>வாரநாட்களில்: 09.00 am - 04.00 pm,<br>சனிக் கிழமைகளில்: 09.00 am - 01.00 pm |

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

பான் ஏஷியா வங்கி ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் · Fitch Rating 'BBB(lka)'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாமகன்

# அனைவரையும் வசீகரிக்க 06



வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

## இலக்கு

உங்கள் வசீகர ஆற்றலை அதிகரிக்கும் செயல்முறையானது. உங்களுடைய சுய விழிப்புணர்வு - அதாவது தெரிந்து கொள்ளும் உந்துதலை அதிகரிப்பதில் இருந்து தொடங்குகிறது.

- யார் நீங்கள்? எதை முக்கியமாக ஆதரிக்கிறீர்கள்?
- மற்றவர்களிடம் உங்களுடைய பாதிப்பு என்ன?
- உங்களிடம் மற்றவர்களின் பாதிப்பு என்ன?
- உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது?

இவற்றுக்கான பதில்களின் மூலம் நீங்கள் சுயவிழிப்புணர்வு கொள்ளலாம். சுய விழிப்புணர்வை உயர்த்துவது என்று சொல்வது அச்சுறுத்துவதாக இருக்கக்கூடும். ஆனால் கண்ணாடி பயிற்சி அந்தத் திசையில் அதற்கான ஒரு தொடக்கம். நீங்கள் யார்? அடுத்தவர்கள் உங்களிடம் என்ன காண்கிறார்கள் என்பதை உங்களை உன்னிப்பாகக் கவனிக்கச் செய்கிறது இந்தப் பயிற்சி. நீங்கள் சுயவிழிப்புணர்வுடன் இருக்கும் நேரத்தில்:

- அமைதியான முறையில், உணர்ச்சியின் பாதிப்புக்கு உள்ளாகாமல் உங்களை நீங்களே பார்க்க முடியும். உங்களை முழுமையாக நுணுக்கமாக விசாரணை செய்து பகுத்தாய்வு செய்ய முடியும்.
- பிறர் உங்களைப் பற்றிய விமர்சனத்தை முன்வைக்கும்போது, அதை உங்கள் இருப்புக்கு ஆபத்து வந்துவிட்டதாக அச்சத்துடனோ அல்லது தற்காப்பு மனநிலையுடனோ அணுகாமல், உங்களைப் பற்றிய அடுத்தவரின் மதிப்பீட்டை ஏற்றுக் கொள்வீர்கள்.

உங்களுடைய சுய விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளும்போது, குறிப்பாக உங்களுடைய வசீகரிக்கும் கவர்ச்சி விளைவோடு அதைச் சாதித்துக் கொள்ள முயலும்போது, ஆக்கபூர்வமான சொந்தப் பாதிப்பை ஏற்படுத்துவதில் அது அதிக பங்கு வகிக்கிறது. அதனால்தான் அது மிகவும் முக்கியம்.

உதாரணத்துக்கு, உங்கள் சுய விழிப்புணர்வு மிக உயர்ந்த அளவில் இருந்தால், நீங்கள் என்ன சொல்ல வேண்டும் என்பதை அல்லது உங்களிடம் சொல்வதற்கு எதுவுமே இல்லை என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் அமைதியாக இருந்து உங்கள் செயற்பாட்டினைப் பற்றிய பின்னூட்டத்தை (Feedback)கேட்டுப் பெறுவீர்கள். எதிர்மறையான விமர்சனத்தையும் உங்களால் கையாள முடியும். யார் நீங்கள் என்பதைவிட உங்கள் செயலைப் பற்றிய விமர்சனம் அந்தத் தகவல் என்பதாக ஏற்றுக் கொள்வீர்கள்.

உங்கள் சுயவிழிப்புணர்வை உயர்த்திக்கொள்ளும்போது அடுத்தவர் மீதான உங்கள் தாக்கத்தை அது பாதிக்கிறது. ஏனெனில் உங்களுடைய பலவீனங்களைக்குறைத்துக்கொண்டு உங்கள் பலங்களோடு விளையாடத் தொடங்குகிறீர்கள். உங்களுடைய நடவடிக்கை அடுத்தவரை எப்படிப் பாதிக்கிறது என்பதையும் அதற்கான அவர்களுடைய பதில் விளைவுகளையும் நீங்கள் பார்க்கிறீர்கள். முக்கியமாக உங்களுடைய உணர்ச்சிகளைப் பற்றித் துல்லியமாகவும் வெளிப் படையாகவும் பேச முடிகிறது என்பது தான் அதற்கான பொருள்.

இந்தத் தொடர் முழுவதிலும் கொடுக்கப்பட்டிருப்பது போல் உங்களுடைய சுயவிழிப்புணர்வை உயர்த்திக் கொள்ள மிக அதிக வழிகள் உள்ளன.

**வசீகரிக்கும் செயற்பாட்டின் ABC**

**A** Aim (இலக்கு) ஒரு காரணத்துக்காகச் சந்திக்கிறீர்கள். உங்களுடைய இலக்கில் தெளிவாக இருங்கள்-நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?

**B** Be Yourself(நீங்களாக இருங்கள்) இந்தச் சந்திப்பிற்கு உங்களை முழுமையாக எடுத்துச் செல்லுங்கள். உங்கள் மதிப்பு, தரம் இவற்றை நினைவில் கொள்ளவும்.

**C** Chemistry (கெமிஸ்டரி) உற்றுக் கேளுங்கள், பதில் சொல்லுங்கள், உதவுத் தொடர்பைத் தேடிப் பெறுங்கள். உங்களுடைய கெமிஸ்டரி அதாவது உணர்வுப் பரிமாற்றம் சரியாக இருந்தால் உங்களுடைய இலக்கை அடைவது நடக்கக்கூடும்.

*'நீங்கள் என்னவாக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு எப்போதும் காலம் கடந்துவிடவில்லை'*

*-ஜார்ஜ் எலியட் எழுத்தாளர்*

மருத்துவர் இ.சிவசங்கர்



## சமூகத்தின் வளர்ச்சிக்கு உண்மையாக உழைப்பதே அரசியல்வாதியின் தர்மம்

உலக வாழ்க்கையில் அவ்வப்போதும், தொடர்ச்சியாகவும் பல 'திருவிழாக்கள்' நடைபெறும். இவற்றில் மனம் இலயித்து திசை மாறி போகாது வாழ்வின் நோக்கு வழியில் பயணிப்பதே இறுதியில் பயனைத் தரவல்லது. அந்த வகையில் சத்திய தர்ம வாழ்க் கையே உண்மையான வாழ்க்கை முறையாகும். நாம் நேர்மையாக வாழ்வதே இறுதியில் நிலைத்த பயனை தரவல்லது. அத்துடன் எமக்கான தர்மங்களாக அமையும் எமது கடமைகள், பொறுப்புக்களை முழுமையாக ஆற்றி முடிப்பதே தத்தமது தனிமனித வாழ்வு சிறப்புறவும், சமூகத்தின் வாழ்வு மேலோங்கவும் வழியமைக்கும்.

இந்த வகையில் அரசியல்வாதியாக தொழில் படுபவரின் தர்மம் என்ன?

தான் சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்துக்கு உளப்பூர்வமாகச் செயற்படுவதேயாகும். சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பாடு படுவதாகக் கூறியே தேர்தலில் நிற்கின்றோம்; மக்களிடம் வாக்கும் கேட்கின்றோம். தத்தமது வாழ்நிலையில் தாம் விரும்புகின்ற மாற்றம் ஏற்பட வேண்டும் என்று கருதியே வாக்குகளை வாக்காளர்கள் அளிக்கின்றனர்.

தேர்தல் காலத்தில் தாம் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் தாம் சார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அமைவான முடிவை எடுப்பதுமே தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். அந்த வகையில் வடமாகாண சபையின் செயற்பாடுகள் அமைய அதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அவரவர்கள் சார்ந்த கட்சிகளும் செயற்பட வேண்டியதும் தார்மீகக் கடமையாகும்.

பல்வேறு வகைகளிலும் பாதிப்புற்று தொடர்ந்தும் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் அமைச்சுக்கள் ஒழுங்காக செயற்பட வேண்டியது கட்டாய தேவையாகும். திணைக்கள கட்டமைப்பில் மேலிருந்தும் கீழிருந்தும் எதிர்ப்புக்களும் தடைகளும் ஏற்படுத்தப்படக் கூடிய சூழ்நிலை உண்டு. கொள்கை பற்றுறுதியுடன் செயற்பட்டால் மட்டுமே இவற்றை தாண்டிச் செயற்பட முடியும். தேவையான செயற்பாட்டு ஆளுமையும் துறைசார் பின்புல தகைமையும் தடையை எதிர்கொள்ளும் துணிவும் திணைக்களங்களின் ஒத்துழைப்பைப் பெற்றும் சமயோசிதமும் அமைச்சர்களின் வெற்றிகரமான செயற்பாட்டின் அடிப்படை களாகும். அந்தச் செயற் பாட்டில் ஈடுபடுவதற்கு கொள்கைப் பற்றுறுதியும் சமூக அக்கறையும் தேவையானது. மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கின் றோம் என்ற பொறுப்புணர்வுடன் அமைச்சுப் பொறுப் பேற்பவர்கள் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

## மிஷ்கினின் இன்னொரு படைப்பாக்க முத்திரை

தொகுப்பு: ஆதங்கன்

னக்கென்று தனிப் பாணி, தனிப் பாதை என்று பயணிக்கும் இயக்குநர்களில், முக்கிய மானவன் என்பதைத் தனது ஒவ்வொரு படங்களிலும் நிரூபிக்கும் மிஷ்கின். ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படத்திலும் தனது முத்திரையை பதிக்கத் தவறவில்லை.

திரைக்கதை நேர்த்தி, காட்சியமைப்பு, கதாபாத்திர அமைப்பு என்று அனைத்திலும் தனித்துவத்தைக் கையாளும் மிஷ்கின், சாதாரண வணிக மயப்பட்ட படமாக எடுக்கக்கூடிய கரு வைக்கூட, உலக சினிமாவுக்கு நிகரான ஒரு திரைப் படமாக எடுக்கக்கூடியவர் என்பதற்கு மற்றொரு சான்றாக இந்தப்படத்தை படைத்துள்ளார். சித்திரம் பேசுதடி, அஞ்சாதே, போர் செய் என்று வரிசையாக தன்னுடைய நெறியாள்கை அடையாளத்தை அழுத்தமாகவும் வித்தியாசமாகவும் பதிவு செய்த மிஷ்கின், கடைசியாக ஜீவாவை வைத்து இயக்கிய 'முகமூடி ' படத்தில் சராசரி இயக்குநர்களை விடவும் தரமற்ற படத்தை இயக்கக்கூடியவர் என்ற கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானார். ஆனால் முகமூடியில் இழந்த தன்னுடைய பெயரை ஓநாயும் ஆட்டுக்குட்டியிலும் மிஷ்கின் மீட்டெடுத்துள்ளார்.

மருத்துவக் கல்லூரி மாணவரான ஸ்ரீ. இரவு நேரத்தில் குண்டடிபட்டு வீதியில் கிடக்கும் மிஷ்கினை, தூக்கிக் கொண்டு தனியார் மருத்துவமனைக்கு செல்கிறார். அங்கு 'பொலிஸ் கேஸ்' என்று சொல்லி, மருத்துவம் பார்க்க மறுத்து விடுகிறார்கள். பிறகு பொலிஸிடம் சென்று முறையிட்டால், அங்கேயும் கால தாமதம் ஆகின்றது. உயிரை காப்பற்றும் நட வடிக்கையை யாரும் மேற்கொள்ளவில்லை. இதனால், தனது வீட்டுக்கே மிஷ்கினை தூக்கிச்செல்கிறார் ஸ்ரீ. தனது கல்லூரிப் பேராசிரியரான மருத்துவரிடம் தொலைபேசியில் ஆலோசனை கேட்டு, மிஷ்கின் உடம்பில் உள்ள குண்டை அறுவைச் சிகிச்சை செய்து எடுக்கிறார் .

ஆனால் காலையில் மிஷ்கின், யாருடைய கண்ணுக்கும் படாமல், அங்கிருந்து தப்பித்தும் விடுகிறார். இந்த நிலையில் ஸ்ரீயின் வீட்டை பொலிஸார் சுற்றி வளைக்கின்றனர்.

பிறகுதான் தெரிகிறது, மிஷ்கின் பல கொலைகள் செய்த பயங்கர கொலைக் குற்றவாளி என்று. இதற்கிடையில் மிஷ்கினை பிடிக்க, ஸ்ரீயை பொலிஸ் பகடைக்காயாகப் பயன்படுத்த முயல்கிறது. அதே நேரத்தில் ஸ்ரீயின் மூலமாகவே பொலிஸிடம் இருந்து தப்பிக்க மிஷ்கின் திட்டமிடுகிறார். இதற்கிடையில் வில்லன் குழு ஒன்றும் மிஷ்கினை விரட்டுகிறது. இறுதியில் மிஷ்கின் என்ன ஆனார், அவருக்கு ஏன் இந்த நிலை என்பது, விறுவிறுப்புடன் சொல்லப்பட்டிருக்கிறது.

இதே கதையை வேறு யாராவது இயக்கியிருந்தால், நம்ப முடியாத சண்டைகள், ஏராளமான முன் கதைச் சுருக்கங்கள், நாயகனுக்கு உதவி செய்யும் நாயகி, அவர்களுக்கிடையே தேவையற்று நுழைக்கப்படும் காதல் பாடல்கள் என்று வழக்கமான வணிக அம்சங்களைக் கலந்து கலவரப் படுத்தியிருப்பார்கள். ஆனால், அப்படி எதுவும் இல்லாமல், தனக்கே உரிய பாணியில், அமர்க்களப்படுத்தியுள்ளார் மிஷ்கின். இயக்குநராக மட்டும் இன்றி, ஒரு நடிகராகவும் ரசிகர்களை கவர்ந்துள்ள மிஷ்கின், ஒவ்வொரு இயக்குநருக்குள்ளும் சிறந்த நடிகன் இருக்கிறான் என்று மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார்.



> ஒவ்வொரு இயக்குநருக்குள்ளும் சிறந்த நடிகன் இருக்கிறான் என்று மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார்.

படத்தின் கதையை விவரிக்கும் அந்த ஒரு காட்சியிலேயே, வித்தியாசமாக படமாக்கி, அதே நேரம் கதைக்கேற்ற மாறுபட்ட நடிப்பைக் கொடுத்துள்ளார்.

வழக்கு எண் படத்தில் நடித்த ஸ்ரீ தான் மற்றொரு ஹீரோ. மருத்துவக் கல்லூரி மாணவராக நடித்துள்ள ஸ்ரீக்கு இது இரண்டாவது படம். ஆனால், அப்படி இல்லாமல் பல படங்களில் நடித்த அனுபவசாலி போன்று காட்சிகளின் தன்மை புரிந்து இயல்பாக நடித்துள்ளார். நீளமான வசனங்கள் இல்லை என்றாலும், முக பாவனை மூலமே தனது திறமையை நிரூபித்துள்ளார்.

இரகசியப் பொலிஸாக நடித்துள்ள சாஜி, கதாபாத்திரத்துக்குச் சரியான தேர்வு. அவருடைய குரலும் கதாபாத்திரத்துக்குப் பலம்சேர்க்கிறது. அதுவும், மேலதிகாரிக்கு முன்னால் மருத்துவரிடம் பரபரப்பாக பேசும் அவருடைய கதாபாத்திரமும், அதை அவர் கையாண்ட முறையும் திரைக்கதையின் வேகத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

படத்தின் காட்சிகள் முழுவதும் இரவில் நடந்தாலும், ஜூனியர் ரங்கா எந்த காட்சியிலும் உறுத்தாமல், நேர்த்தியான ஒளிப் பதிவைக் கொடுத்துள்ளார்.

படத்தில் பாடல்கள் இல்லை, அது தேவையும் இல்லை. இளையராஜாவின் முன்னணி இசைக் கோர்ப்பு என்று திரையில் மிஷ்கின் போடுகிறார். அவர் ஏன், அப்படி போட்டார் என்று படம் பார்க்கும் போதுதான் தெரிகிறது. படம் முழுவதற்கும் இசையாக அல்ல, ஜீவனாக அமைந்துள்ளது ராஜாவின் இசை.

நேர்த்தியான திரைக்கதை, சுவாரஷ்யமான காட்சிகள், அசத்தலான படைப்பாக்கம் என்று பல அம்சங்கள் இருந்தாலும், அந்த வில்லன் குழுவும், அவருடைய அடியாள்களும் தான் ஏதோ, தொலைக் காட்சிகளில் இடம்பெறும் குழந்தைகள் நிகழ்ச்சிகளில் வருவது போல இருப்பது சற்று முகம் சுழிக்க வைக்கிறது. இருப்பினும், அவற்றைத் தனது சண்டை காட்சிகளின் மூலமாகவும், துரத்தல் காட்சிகளின் மூலமாகவும் ஈடுகட்டிவிடுகிறார் மிஷ்கின்.

தனது படங்களின் மூலமாக கோடிகளைசம்பாதிக்கத் தவறியிருந்தாலும், அவ்வப்போது வழி தவறிப் பயணிக்கும் தமிழ் சினிமாவை சரியான பாதையில் பயணிக்க வைக்க ஒரு போதும் தான் தவறுவதில்லை என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார் மிஷ்கின்.

## அழிவுக்கு முன் அகந்தை.....

*- தமிழவன்*

நீதம் நிலைநாட்ட வந்த
நீதி தேவதைக்கு
காதல்த் தூது விட்ட
வேடர் குலத் தலைவர்களே
கொடிகட்டிப் பறக்கிறது
உங்கள் போக்கிரித்தனங்கள்
ஐ.நா.வரையில்
பரிகாசம் செய்வதற்கு
பிள்ளை என்ன நாடாளுமன்றத்தின்
நந்தா மாலினியா ! இதுதான் உங்கள்
அமைச்சரவை இலட்சணமா?
தமிழிச்சி என்பதால்த்தான்
இந்தப் பரிகாசமா?
சோனியாவை உங்களால்
மணம்கோர முடியுமா?
ஓங்கு புகழ் ஆங்கில மாதரசியாம்
மார்கி[illegible]
மண[illegible] அனுப்ப முடியுமா?
முடிந்தது உங்கள் கதை.
ஒரு பானை சோற்றுக்கு
ஒரு சோறு பதமல்லவா?
ஒரு குடம் பாலுக்கு
ஒரு துளி விஷம் போதுமல்லவா!
வீண் பேச்சு [illegible]க்கும்
விபச்சார சிந்தனைகட்கும்
ஐ.நா. என்ன மகியங்கனைக் காடா?
அழிவுக்கு முன்னானது அகந்தை
நினைவில் கொள்ளுங்கள்
திருந்திக் கொள்ளுங்கள் இல்லையேல்
திருத்தப்படுவீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிக்கு லட்சம்; அடிபட்டவனுக்கு கஷ்டம்

தே.பிரேம்



முன்னாலும் பின்னாலும் பெருங் காடு. அருகே சில குடிகள். ஒன்றே ஒன்று மட்டும் சிறு கல்வீடு. அடிக் கொரு தடவை குர்... குர்... என்றபடி பாய்ந்து கடந்து போகும் தாட்டான் குரங்குகள்.

இங்கேதான் கவிதா தன் வாழ்வை மீண்டும் ஆரம்பித்திருக்கிறார். எல்லாவற்றையும் மறந்து தனக்கான ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்பும் நம்பிக்கையுடன் யாழ். குடாநாட்டை விட்டு வந்திருக்கிறார். நான்கு ஆண்டுகள் பிரிவு, வேதனை, சோதனைக்குப் பின்னர் தனது கணவனைக் கண்டுபிடித்துச் சேர்ந்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்தவர் கவிதா. என்றாலும் அவருக்கு அங்கு நெருங் கிய சொந்தம் என்று கூறிக்கொள்ள எவரும் இல்லை. இருந்த ஒரே சொந்தத்தையும் 2009இல் செஞ்சிலுவைக் கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டு காத்துக்கிடந்த தவிப்பு அவருக்கு மட்டுமே புரிந்தது.

இறுதிப் போரில் தினேஷ் படுகாயம் அடைவ தற்கு 4 மாதங்களுக்கு முன்னர்தான் கவிதா அவரை மணம் முடித்தார். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு காயமடைந்த தினேஷைக் கப்பலில் ஏற்றிச் சென்ற பின்னர் கவிதாவால் அவரைக் காணமுடியவில்லை. எங்கிருக்கிறார் என்ற தகவலும் தெரியவில்லை. எவ்வளவோ முயற்சிகள் செய்தபோதும் பதில் என்னவோ வெறுமைதான்.

கடந்த 3 வருடங்களைக் கவிதாவும் தடுப்புக் காவலில்தான் கழித்தார். விடுதலைப் புலி களின் வழங்கல் பிரிவுக்கு வாகனம் ஓட்டினார் என்பதற்காக அவருக்கு அந்தத் தடுப்புக்காவல் நீதி விசாரணை இன்றியே வழங்கப்பட்டது.


சண்டை தீவிரம் பெறத் தொடங்கியிருந்த 2009 தை மாதத்தில்தான் கவிதா - தினேஷ் திரு மணம் நடந்திருந்தது. நான்கே மாதங்களில் தினேஷ் ஷெல் அடிபட்டுப் படுகாயமடைந்தார்.

சுமார் 4 வருட வனவாசத்துக்குப் பின் னர் கவிதா இந்தச் சமூகத்தில் மீள இணைந்த போது அவரை வரவேற்க ஆட்கள் இல்லை. உறவுகள் என்று சொல்லிக்கொள்ள எவ ரும் இல்லை. இருந்த ஒரே உறவைப் பற் றியும் எந்தத் தகவலும் இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த கவிதா கடைசியில் உரும்பிராயில் இருந்த தூரத்து உறவினர்களுடன் ஒட்டிக்கொண்டார்.

நம்பிக்கை மட்டுமே அவருக்குத் துணை இருந் தது. தன் தேடலை மட்டும் அவர் கைவிடவில்லை. ஒருவர் மாறி ஒருவராகத் தகவல் சேகரித்தார். தினேஷ் உறவினர்களைக் கண்டுபிடித்து விசா ரித்தார். கடைசியில் ஒருவழியாக தினேஷ் இருக்கும் இடத்தைக் இரு மாதங்களுக்கு முன் னர்தான் கண்டுபிடித்தார். வவுனியாவில் இருந்தார் தினேஷ்.

அவரைக் கண்டுபிடிக்க கவிதா தன்னந் தனி யாகத்தான் போராடினார். அவருக்கு எந்த அரச நிறுவனமும், அரச சார்பற்ற நிறுவனமும் உதவி செய்யவில்லை. பிரிந்துபோன குடும் பங்களை ஒன்றிணைப்பதற்கான அதி காரி என்று ஒருவரை வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஒரு லட்சம் ரூபா சம்பளம் கொடுத்து நியமித்திருக்கிறார். ஆனால் அவரோ அவரின் கீழ் உள்ள பிரிவோ கவிதாவுக்கு உதவவில்லை. கேட் டால் அது பிள்ளைகளை குடும்பத்துடன் சேர்த்து வைக்கத்தான் இருக் கிறதாம். கடந்த ஒரு வருடத்தில் அந்தப் பிரிவு எந்தச் சிறுவனையும் சிறுமியையும் குடும்பத்துடன் சேர்க்கவில்லை. ஆனால் அதன் அதிகாரிக்கு மட்டும் மாதா மாதம் லட்ச ரூபாயில் சம் பளம் அளக்கப்படுகிறது. ஏனென்றால் அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி. வேலையே செய்யாத ஒருவருக்கு காசை வாரி இறைத்துக்கொண்டிருக்கையில் பிரிந்துபோன குடும்பங்களின் உறவுகள் இப்படி தவித்துக் கொண்டிருக்கின்றன.

போர் முடிந்ததும் முகாம்களில் உள்ளவர்களைக் குடும்பங்களுடன் இணைப்பதற்கு பெரு மெடுப்பில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவற்றிலும் தவறி கவிதா தினேஷ் போன்ற எத் தனை பேர் இன்னும் இருக்கிறார்கள் என்பது தெரிய வில்லை. அது பற்றி அதிகாரிகளுக்கு அக்கறையும் இல்லை.



தன்னந்தனி யாக தினே ஷைத் தேடிக் கண்டு பிடித்த போது அவர் இடுப்புக்குக் கீழே இயங்க முடியாதவ ராக இருந் தார். சக்கர நாற்காலி இன்றி நகர முடியாத நிலையை எட்டியிருந்தார். கவிதா அது கண்டு அஞ்சவில்லை. காதலுடன் தினேஷையும் கூட்டிக்கொண்டு வாழ்வதற்கான நம்பிக்கையுடன் கேப்பாபில வுக்கு வந்தார். அங்கு வாழ்க்கையை மீண் டும் தொடங்குவது அவ்வளவு சுலபமானதாக இல்லை. எழுந்து நடக்க முடியாத கணவன், வலது காலை போருக்குப் பறி கொடுத்த கவிதா என்ற இருவரால் என்ன செய்துவிட முடியும் என்று அவர்கள் பின்தங்கிவிடவில்லை. தொண்டு நிறுவனம் ஒன்று கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிறது. அரைச் சுவர் வைத்த வீடு ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். அருகில் கல்வீடு கட்டிக்கொடுக்கும் இராணுவத்தினர் இதுவரையில் இவர்களுக்கு உதவி செய்ய வில்லை. இவர்கள் புலிகளின் ஆட்கள் என்று நினைத்திருப்பார்கள் போலும். ஆனாலும் அந்தத் தம்பதியினர் தளர்ந்துவிடவில்லை. வாழ்க்கையை கட்டியெழுப்பும் விடா முயற்சியைத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

குரங்குகள் தொல்லையால் அந்த வீட்டுக்குள் பாதுகாப்பாக எந்தப் பொருளையும் வைத்து எடுக்க முடியவில்லை என்று கவிதா எம்மிடம் முறையிட்டுக் கொண்டிருக்கையில் சமைத்த சாப்பாட்டை வைத்துப் பாதுகாக்க தினேஷ் ஒரு சிமெந்தாலான குட்டி அறையைத் தயார் செய்து கொண்டிருக்கிறார். தனது இயலாமை கண்டு அவர் அஞ்சவில்லை. அதனுடன் போராடுவதற்கு அவர் தயாராகத் துணிவுடனேயே இருக்கிறார். ஆனால் இந்தத் துணிவும் உரமும் விடாமுயற்சியும் மட்டும் அவர்களை உயர்த்தி விடப் போதுமானதாக அந்தச் சூழலில் தெரியவில்லை. யாராவது அவர்களுக்கு உதவ வேண்டும்.

இருந்தபடியே தன்னால் ஆட்டோ ஓட்ட முடியும் என்று கூறும் தினேஷ், வைத்திருக்கும் ஒரே ஓட்டோவைத் திருத்த 50,000 ரூபா பணம் இன் றித் திண்டாடுகின் றார். எனவே அது வீட்டின் பின் புறமாக நின்று கொண்டிருக்கிறது. யாராவது உதவி னால் அந்தச் சிறிய குடும்பத்துக்கு நிரந்தரமான ஒரு வருமான வழி கிடைத்து விடும். உழைப்புக்கு வேறு வழிகள் ஏதுமில் லாத அந்தக் காட்டிற்குள் அவர்களுக்கு வேறு தொழில் வாய்ப்பும் இல்லை. கவிதா அவ்வப்போது காடு வெட்டச் சென்றால் கொஞ்சம் பணம் கிடைக்கும். அதை வைத்துத்தான் வாழ்க்கையை ஓட்டியாக வேண்டியிருக்கிறது.



வேலையே இல்லாத அதிகாரிக்கு ஒரு லட்சம் ரூபா சம்பளம் போகிறது. வாழ்க்கையை நடத்த ஒரு குடும்பத்துக்கோ இங்கு பணம் இல்லை. உதவவும் யாரும் இல்லை. இது கவிதாவின் கதை மட்டும் அல்ல. பாதிக் கப்பட்ட அனேகம் குடும்பங்களின் கதை. வன்னியில் இன்றும் இப்படி ஓராயிரம் சோகக் கதைகள் உண்டு. இது போன்ற துயரம் இலங்கையில் மட்டும்தான் நடக்க முடியும். அதுவும் தமிழர் பகுதி களில் மட்டும்தான். நாமோ கோயில்களி லும் ஹோட்டல்களிலும் பணத்தைக் கொட்டிக்கொண்டிருக்கிறோம்.




செய்ற வேலைய முடிச்சுட்டே வாங்க, மாலை 6 மணி வரைக்கும் **Full Service Banking**

இப்பொழுது உங்கள் வேலையை பாதியில் நிறுத்திவிட்டு வங்கிக்கு விரைந்து ஓட அவசியம் இல்லை. எமது அனைத்து NDB வங்கிக் கிளைகளும் உங்களது எந்தவொரு வங்கித் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு வார நாட்களில் மாலை 6 மணி வரை Full Service Banking. அதனால் உங்கள் வேலைகளை முடித்துவிட்டே வாருங்கள்.

NDB 9 to 6 FULL SERVICE

அழையுங்கள் 011 244 8888

AA- (lka) Fitch Rating - நஷனல் டிவலெப்மென்ற் பாங் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

NDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய வணக்கம்

சா.ரமேஸ்குமார், மருதனார்மடம்.

இந்து மதத்தின் சனாதன தர்மம் நான்கு வேதங்களைக் கொண்ட பழமையான மதம். இறைவனால் அருளப்பட்ட முதல் வேதம் இருக்கு வேதம். இது பெரும்பாலும் பாடல்களாகவே இருக்கின்றது. இதில் சூரியனுக்கும் அதன் வழிபாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எமது முன்னோர்கள் ஆரம்ப காலம் முதலே சூரிய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள். சூரியன் இவ்வுலகுக்கு கண்போன்றவன். பாண்டவர்களின் மூத்த சகோதரனான கர்ணன் சூரிய வழிபாட்டின் மூலமே அனைத்தையும் பெற்றான். சூரியன் இப் பிரபஞ்சத்தின் மாபெரும் கர்மயோகி என்கின்றார் பகவான் பாபா. சூரியனுக்கு பாரதத்தில் ஆலயங்களும் உண்டு. எமது இளம் சந்ததியினர் சூரிய வழிபாட்டை பற்றி சற்றும் அறியவில்லை. பிரபஞ்சத்தைக் காப்பது சூரியன். அதனால் அக் கதிரவனை போற்றுவோமாக!

சூரிய தேவனிடம் இவ்வுலக வாழ்க்கைக்கான பொருளையும், உயர் வாழ்க்கைக்கான ஆற்றலையும் வேண்டும் பிரார்த்தனை பின்வருமாறு: (இருக்கு வேதம் 10-37)

மித்திரன் மற்றும் வர்ணனுடைய கண்களாக இருக்கும் சூரிய பகவானே! உனக்கு வணக்கம். தொலை தூரங்களிலும் பார்க்கக் கூடிய தெய்வீகப் பிறப்பை உடைய, அனைத்தையும் பிரகாசிக்கச் செய்கின்ற அந்த மகாதேவனுக்கு நமது செயல்களையெல்லாம் ஒரு யாகமாகச் சமர்ப்பிப்போம். வான மகனாகிய சூரியனைப் போற்றுவோம்.

சத்தியவாக்கு எல்லா இடங்களிலும் என்னைக் காக்கட்டும் வானமும் பூமியும் இரவும் பகலும் எல்லாமே அந்த சத்தியவாக்கினாலேயே தாங்கப்படுகின்றன. பிரபஞ்சம் அதிலேயே நிலைபெறுகிறது. ஆறுகள் ஓடுவதும் சூரியன் உதிப்பதும் அந்தச் சத்தியவாக்கினால்தான்.


சூரிய தேவனே! விரைந்து செல்லும் குதிரைகளை நீ ரதத்தில் பூட்டினால் பண்டைய அரக்கர்களும் உன் அருகில் இருக்கமாட்டார்கள். ஓர் ஒளியாய் நீ பயணிக்கும்போது மற்ற ஒன்றாகிய காரிருள் மறைகிறது.

சூரிய தேவா! எந்த ஒளியால் இருளை விலக்கிறாயோ அசைகிற ஒவ்வொன்றையும் எந்த ஒளியால் தூண்டுகிறாயோ, அந்த ஒளியால் எங்கள் வறுமை, யாகம் செய்யாமையால் வரும் தோஷம், நோய், தீயகனவுகள் அனைத்தையும் போக்குவாய்.

சூரிய தேவனே! உன்னைப் போற்றினால் மக்களின் வழிபாட்டை மென்மையாக நீ காக்கிறாய். ஸ்வதா மந்திரத்துடன் ஆஹுதிகள் அளிக்கும்போது நீ மேலே எழுகிறாய். இன்று உன்னைத் துதிக்கும்போது தேவர்கள் எங்கள் நற்செயல்களைக் காக்கட்டும்.

வானம், பூமி, நீர், இந்திரன், பித்ருகள் எல்லோரும் எங்கள் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளட்டும். எங்கள் பிரார்த்தனைகளைக் கேட்கட்டும். நாம் சூரியனைக் கண்டு பயப்படாமல் இருப்போமாக. நீண்ட காலம் வாழ்ந்து வயதான காலத்திலும் ஆரோக்கியமாக வாழ்வோமாக.

இப்படி சூரியனை பிரார்த்தித்து எம் உள்ளொளியை பெருக்குவோமாக.





# மலத்தை வெளியேற்றுவதை விட்டு ஏன் உள்ளே தள்ளுகிறார்கள்?

எத்தனை பேர் கோயில் வீதியில் உள்ள மண்ணைத் தொட்டுக் கும்பிடுகிறார்கள். எத்தனைபேர் அதில் சிறிதளவை புனிதப் பொருளாக வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட புனிதமான இடத்தில் இப் படிப்பட்ட சிறுமைகள் நடக்கலாமா?

ஒரு முதியவர் 'எண்பது வயதிருக்கும்.' அந்தத் தள்ளாத வயதிலும் முருகப் பெருமானுக்கு தனது கையால் ஒரு சிதறு தேங்காய் அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஐம்பது ரூபாய் கொடுத்து ஒரு தேங்காய் வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். சன நெரிசலுக்குள் பெருங் கஷ்டப்பட்டு அவர் முன்னேறிக் கொண்டிருந்தார். திடீரென எங்கிருந்தோ வந்த இளைஞன் ஒருவன் அந்தத் தேங்காயைப் பறித்துக் கொண்டோடினான். அந்த முதியவர் திகைத்துப் போய் செய்வதறியாது பதறி நின்று கொண்டிருந்தார். அதைப் பற்றி அந்த இளைஞனுக்குக் கவலையில்லை.

தேங்காயைக் கொண்டோடிய இளைஞன் அதனைத் தன் தலைக்கு மேலே. இன்னொரு தேங்காயுடன் மோதி உடைத்தான். அதில் வரும் இளநீரைத் தன் தலைக்கு மேல் ஊற்றிக் கொண்டான். அது அவன் உடல் முழுவதும் வழிந்து பரவியது. அவனுள் பரவசம் பரவியது. அவன் தன்னைக் கடவுளுக்குச் சமமானவன் என்று நினைத்தான் போலும். அதுமட்டுமல்ல அங்கு நின்ற இன்னொரு இளைஞன் (அவரது நண்பர் போலும்) தலைக்கு மேலும் இரண்டு தேங்காய் களை அடித்து உடைத்து இளநீரை "அரோகரா" என்ற கோஷத்துடன் அபிஷேகம் செய்தான். இது நடந்தது நல்லூர் கந்தன் தேர் உற்சவத்தில்.

தேர்த் திருவிழாவில் இப்படிச் செய்ய வேண்டுமென்று சைவசமய நூல்கள் ஏதாவதில் குறிப்பிடப்பட்டுள்ளதா? அல்லது சைவத்தையும் மரபுகளையும் கட்டிக்காத்த எமது ஆறுமுக நாவலர் தமது சைவ வினாவிடை அல்லது வேறு ஏதாவது நூலில் இவ்வாறு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளாரா? இந்த அநாகரிகத்தை சகல தொலைக் காட்சிகளிலும் படம்பிடித்து வேறு உலகம் முழுவதும் ஒளிபரப்புகிறார்கள். வானொலிகளில் நேர்முக வர்ணனை செய்கிறார்கள். இவற்றைப் பார்த்தும் கேட்டும் இதுதான் யாழ்ப்பாணத்துச் சைவக் கிரியை முறையென்றும் அனைவரும் நினைக்கப் போகிறார்கள்.

இளநீர் என்பது அபிஷேகப்பொருள். இயற்கை தரும் எந்தக் கலப்படமுமற்ற தூய நீர். சிதறு தேங்காய் அடிப்ப தென்பது எமது ஆணவம் என்ற மலம் சிதறிப் போகட்டும் என்பதைக் குறிப்பதாகும். ஆனால் இந்த இளைஞர்களோ அடுத்தவர்களின் ஆணவ மலத்தைப் பறித்து தங்கள் தலையில் அல்லவா ஏற்றிக் கொள்கிறார்கள்.

நல்லூர் ஆலயத்திலே பல மரபுகள் சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நேரம் தவறாத பூசைகள், கோயில் புனிதம், ஆண்டான், அடிமை பாகுபாடின்மை ஆகியவை நல்லூரானின் உலகறிந்த சிறப்புகளாகும். எத்தனை பேர் கோயில் வீதியில் உள்ள மண் ணைத் தொட்டுக் கும்பிடுகிறார்கள். எத்தனைபேர் அதில் சிறிதளவை புனிதப் பொருளாக வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

அப்படிப்பட்ட புனிதமான இடத்தில் இப்படிப்பட்ட சிறுமைகள் நடக்கலாமா? இந்த இளைஞர் கூட்டங்களுக்கு அனுமதியளித்தது யார்? இறைவனுக்கும் அடியவர்களுக்கும் இடையில் நிற்பதற்கு இவர்கள் யார்?

உரிய தரப்பினர் இதற்குரிய நடவடிக்கை எடுத்து அடுத்த திருவிழாவின் போதாவது இவ்வாறு நடக்காமல் தடுப்பார்களா?

தேங்காய் அடிப்பதற்கென தனியான இடம் ஒன்றினை பிரதான வாயிலின் இடது புறம் அமைத்து அங்கு வரிசையில் பக்தர்கள் சென்று சிதறு தேங்காய் அடிக்க ஒழுங்கு செய்ததால் நன்றாக இருக்கும்.



# காடுடைய சுடலை

மிலேச்சத்தனம்
மிச்சமாக இருந்திருந்தால்
மனிதக் கூட்டத்தில்
எனக்கும்
இடம் கிடைத்திருக்கும்

என் ஆன்மா
தனிமைப் பட்டவர்களின்
கூடாரத்திலும்
த்கனத்திற்காய்
அடுக்கப்பட்ட விறகுகளிலும்
தங்கிவிட்டது.

இம்மைக்கும் மறுமைக்கும்
ஆட்பட்டுப் போகாத
என் ஆசைகளும்
காடுடைய சுடலை
பொடியணிந்து ஆடுகிறது

ஆசைகள் தீர்ந்த ஞானமோ!
அனுபவம் தந்த தத்துவமோ
என்னிடம் இல்லை.
எல்லாம் இருபதிகர் போட்ட
இரும்புச் சட்டைகள்

நெடுந்தீவு க.யோகேஸ்வரன்
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம்: 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# கடமையா உடைமை ?



இனியும் அவனால் நடக்க முடியவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. மயக்கத்தில் தலை சுற்றிக் கொண்டு வந்தது. வேறு வழியின்றி அந்தத் தெருவோரத்தில் வீழ்ந்து முகங்குப்புறப்படுத்துக் கொண்டான். ஒரு காலத்தில் பந்த பாசத்தை துச்சமாக மதித்து சொத்துக்கள், ஆஸ்திகளே சொந்தமென்று எண்ணி அடாவடித்தனமாக , அகங்காரமாக வாழ்ந்தவன்தான் இந்தக் குமரன் என்னும் பெயரைக் கொண்டவன். இப்பொழுது சர்வமுமடங்கி ஒரு நேரக் கஞ்சிக்கே வழி தெரியாது கால்போன போக்கிலே போய்க் கொண்டிருந்தவன். இனி நடக்கவே முடியாதளவுக்குப் பலவீனமாகி தெரு வீதியிலே வீழ்ந்துவிட்டான்.

விதியா ! சதியா ! இவை இரண்டுமேயில்லை. இவன் செய்த பாவ வினைகளே! இவனைத் துரத்தித் துரத்தி இந்த இழி நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன என்பதுதான் உண்மைநிலை. பெற்றோருக்கு ஆசையருமையாய் ஒரே பிள்ளை. எத்தனையோ பாசத்துடன் ஊட்டி அரவணைத்துப் பேணி வளர்த்த அவர்களைக் கொஞ்சமும் இரக்கமில்லாது கல் நெஞ்சத்தனமாக விரட்டியடித்தவன். அவர்களிடமிருந்து அத்தனை சொத்து சுகங்களையும் கபளீகரம் செய்துவிட்டு அவர்களை அநாதைகளாக்கியவன். அவர்களுக்கு இவன் செய்த துரோகங்கள் ஒன்றா இரண்டா ! அவைகளத்தனையும் இப்போது இவனுக்குப் புரியத் தொடங்குகின்றன. இனிப் புரிந்தென்ன ! புரியாமற் போயென்ன! கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்! எத்தனை கொடுமைகளைத் தன்னுடைய பெற்றோருக்கு இழைத்திருப்பான்! ஆனால் அவைகள் எல்லாவற்றிலும் குறிப்பிட்ட அந்த ஒரேயொரு நாளை அவனால் மறக்க முடியாமலிருந்தது.

இவன் செய்த பாதகங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற மாபெரும் கொடிய நாள் அதுதான். இதோ இவன் தனது இறுதி மூச்சை விடுவதற்கு இன்னும் சில விநாடிகளே காத்திருக்கின்றன. அதற்குள் அந்தக் கசப்பான நாளை அசை போட்டுப் பாக்க இவனுடைய மனம் அவசரப்படுகின்றது. அதுதான் இவனுடைய தந்தை இந்த பண்ணையை விட்டுப் பிரிந்து போன கடைசி நாள்.

"எடி பிள்ளையள் ! கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாலை ஊத்துங்கோ! அங்கார்! அங்கார்! கடை வாய்க்கிளாலை பால் வழியுது. மெள்ள மெள்ள ஊத்துங்கோடி பிள்ளையள். இஞ்சார்! அங்கை ஆர் அழுறது? எப்பனுக்கு அழாமலிருங்கோ பாப்பம். அழுதால் அந்தச் சீவன் அந்தரப்படுமெல்லே! ஒருத்தரும் அழக்கூடாது" பூரணம் பெத்தாச்சி மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். ஊருக்குள் எத்தனையோ நன்மை தீமைகளை நடத்தி முடித்த அனுபவசாலி அவள்.

சங்கக்கடை மனேச்சர் சண்முகசுந்தரத்தார் தனது மண்ணுலக வாழ்வை முடித்து விண்ணுலகப் பயணத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்திய நிலையில் கடைசி மூச்சுக்களை எண்ணிக் கொண்டிருக்கின்றார். ஊரிலேயுள்ள அனுபவம் மிக்க தச்சன் ஒருவனை வீட்டுக்கே அழைத்து வந்து. அறுத்து வைத்திருந்த முதிரம் பலகையிலே பார்த்துப் பார்த்துச் செய்வித்தது அந்த மரவாங்கு. தலைமாட்டில் விசேடமாகப் பெட்டியொன்று அமைத்து அந்தக் கால முறைப்படி அழகாகவும் கச்சிதமாகவும் செய்யப்பட்ட அந்த வாங்குதான் இப்போது சண்முகசுந்தரத்தாரின் நலிந்துபோன உடலைச் சோகமாகச் சுமந்து கொண்டிருக்கின்றது.

மரப் பெட்டகம், அலுமாரி, கோற் காலி, நெல், குரக்கன், வரகு போன்ற தானியங்களைச் சேமித்து வைக்கக் கூடிய கூடை வகைகள் மற்றும் இன்னோரன்ன வீட்டுக்குத் தேவையான அனைத்துத் தளபாடங்களையும் தனக்கு உரித்தாக்கிக் கொண்டவர் சண்முகசுந்தரத்தார். வீட்டைச் சூழவுள்ள அனைத்துப் பகுதிகளையும் பயன்தரு பயிர்க்கொடிகளை நாட்டிப் பசுமையாகப் பச்சைப் பசேலென்று வைத்திருந்தார். கடினமான உழைப்பாளி. விளையாட்டுக்குக் கூடப் பொய் பேசமாட்டாத சத்தியசீலன். ஊரவர் உற்றார் உறவுகளுடன் மிக அன்னியோன்னியமான உறவுகளைப் பேணி வந்தார். சங்கக்கடையில் பணி புரிந்த காலங்களிலே மிகவும் நாணயமான ஒரு ஊழியனாகவே காணப்பட்டார். பொதுவாகச் சங்கக்கடை மனேச்சர் என்றால் ஏதோ 'அப்பிடியிப்பிடி'ச் சம்பாதித்திருக்கலாம். ஆனால் இவரை அப்படி யாராவது நினைத்தார்களென்றால், அவர்களுக்குக் கடவுள் கஞ்சித் தண்ணிக்கே படியளக்கமாட்டார். அப்படியொரு கண்ணியவான். ஏன்! கனவான் என்று கூடச் சொல்லலாம்.

சந்தானலட்சுமியைத் திருமணம் முடித்தார். சந்தானம் அந்தளவுக்கு ஒன்றும் விருத்தியாகவில்லை. இதன் காரணமாகச் சந்தோஷம் கொஞ்சம் குறைவாகவேயிருந்தது. இருந்தும் அவருடைய இஷ்ட தெய்வமான குமரக் கடவுளின் கிருபையால் அழகான ஒரு ஆண்மகன் பிறந்ததும் குமரன் என்றே அவனுக்கு நாமமும் சூட்டி திருப்தியுடன் வாழ்ந்தார் மனேச்சர் சண்முகசுந்தரம். "எடி பெட்டை! உன்ரை பேரையுமெல்லோ மறந்து துலைச்சுப் போட்டன். யேய்! மணியத்தின்ரை பெட்டை! உன்னைத்தான்! இஞ்சார்! உங்களையெல்லே அழக்கூடாது எண்டு சொன்னது. ஒருத்தரும் அழக்கூடாது. எல்லாரும் தேவாரம் படியுங்கோ. அந்தச் சீவனுக்கு எப்பன் ஆறுதலாயிருக்கும். படியுங்கோ!" சற்று உறுக்கலாகச் சொல்லியபடி எரிந்து கொண்டிருந்த குத்து விளக்குக்கு எண்ணெய்யை ஊற்றித் திரியினைச் சரி செய்து கொண்டிருந் தார் பரஞ்சோதி வாத்தியார். அவருடைய கட்டளையை உடன டியாக அமுல்படுத்தும் வகையில் தோடுடைய செவியன் என ஆரம்பித்துத் தேவாரங்களைப் பச்சை பிழை பிழையாகப் பாடிக் கொண்டிருந்தாள் மங்களம் ரீச்சரின் பேத்தி சுலோசனா. போதாக் குறைக்கு அவளுடன் கூட்டணி சேர்ந்து குண்டுப் பெட்டை குகனேஸ்வரியும், பேக்கரிப் பேரம்பலத்தாற்றை கடைக் குட்டி கவிதாவும் கோஷ்டிக் கானமிசைத்துக் கொண்டிருந்தனர்.

"கடவுளே! மிதிச்ச இடத்துப் புல்லுச் சாகாத மனிசன். மனிசனுக்கு வருத்தமெண்டு ஒண்டுமில்லை. எல்லா மந்தத் தறுதலை மோன் குமரன்ரை போக்குகளாலைதான் கவலைப்பட்டுப் படுக்கையிலை விழுந்தவர். நீங்கள் பொய்யெண்டாப் பாருங்கோ! உவன் தன்ரை தாய் தேப்பனை எவ்வளவு கொடுமைப்படுத்தினானோ அதேமாதிரி உவன்ரை பிள்ளை குட்டியளும் கடைசிக் காலத்திலை உவனை வீட்டைவிட்டு கலைக்குங்கள். பொய் எண்டாற் பாருங்கோ! பெத்து வளத்த தாய் தேப்பனை வருத்துற பிள்ளையளுக்கும் கடைசியாய் அதே நிலைமைதான். இதுதான் நியதி. ஊழ்வினை சும்மாவிடாது."

"சண்முகத்தார் பெண்சாதி நேர காலத்துக்குப் போய்ச் சேர்ந்திட்டுது. புண்ணியம் செய்த சீவன். இந்த மனிசன்தான் பாவம்". கார்க்காரக் கந்தசாமியும் தணிகாசலத்தாரும் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது கிட்டத்தட்ட அங்கேயிருந்தவர்கள் எல்லோரின் செவிகட்குள்ளும் விழத்தான் செய்தன. சண்முகசுந்தரத்தாருக்கு வயது எழுபத்தைந்துக்குக் குறையாது. மனைவி சந்தானலட்சுமி. சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பே பரமனடி சேர்ந்துவிட்டார். அன்று முதல் தனி மரமானார். தனக்கு விரும்பிய வேளைகளில் மட்டும் ஏதாவது உப்புச் சப்பில்லாத உணவாகப் பார்த்துத் தந்தையிடம் கொண்டு வந்து கொடுப்பான் குமரன் என்னும் அவருடைய ஏகபுத்திரன். தந்தையின் வீட்டுக்குப் பின்புறத்துக் காணியிலே ஆடம்பரமானதொரு வீடு அமைத்து மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான். தந்தையிட மிருந்து வங்கிப் புத்தகம், காணி, பூமி அனைத்தையும் கறந்து கொண்டவன். இறுதியாக இன்னுமொன்றை எதிர்பார்த்து அங்கலாய்ப்புடன் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான். ஊர் உலகத்துக்குப் பயந்து தந்தையிடம் அவ்வப்போது போலிப் பாசத்தைக் காட்டினானேயொழிய உண்மையைச் சொல்லப் போனால் தந்தையை ஒரு சுமையாகவே எண்ணினான். அவரின் சாவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான். எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் சண்முகசுந்தரத்துக்கு அப்படியொன்றும் இரத்த உறவு முறையில்லை. சுற்றிச் சுற்றிச் பார்த்தால் என்பது போலப் பார்த்தால் ஏதோ தூரத்து உறவு முறைதான். ஆனால் ஏகாம்பரம் குடும்பத்தினரின் அபரிமிதமான மனிதநேய உணர்வும் அதையொட்டிய கடமைகளும் சண்முகசுந்தரத்துக்கு மிகவும் ஆதாரமாயமைந்திருந்தன.

அணைந்துபோன குறைச் சுருட்டை வெளியில் வீசியெறிந்துவிட்டு எச்சிலைத் துப்பியபடி உள்ளே நுழைந்த வல்லிபுரத்தார், சண் முகத்தாரின் கோலத்தைப் பார்த்து நீண்ட பெருமூச்சொன்றை விடுகின்றார். ஒன்றைவிட்ட அண்ணன் முறை. கவலையை அடக்க முடியாது. அவரையுமறியாமல் கண்கள் பனித்துக்கொள்ள மெல்ல அதனைத் துடைத்துத் தன்னை ஆசுவாசப்படுத்தியவர் வெளியேறுகின்றார். இப்படியாக அயலவர்கள், உறவினர், நண்பர்கள் என்று ஏராளமானோர் வருவதும் போவதுமாக இருக்கின்றனர். கடந்த ஒரு மாத காலமாக அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சண்முகசுந்தரம், பூரண குணமடையாத நிலையிலேயே வைத்தியர்களினால் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தார். சொல்லப் போனால் நோய் என்று அலட்டிக் கொள்வதற்கு ஒன்றுமில்லையெனினும் மனைவியின் பிரிவும், மகனுடைய ஈனத்தனமான போக்குகளும், ஆறாத காயங்களாகிச் சிழ் பிடித்த ரணங்களாய் தாங்கொணாத வேதனைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தன. உடல் வலியை எப்படியோ தாங்கிக் கொள்ளலாம். ஆனால் உள்ளத்தை உலுப்பிக் கொண்டிருக்கும் வேதனைகளை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கண்ணே! மணியே! கற்பகமே! பொன்னே! மணியே ! பொக்கிஷமே என்று சீராட்டி வளர்ந்த கடா இன்று மார்பிலே பாய்ந்து கொள்கின்றதை அவரால் சீரணிக்க முடியவில்லை. அவர் பாயில் வீழ்ந்து படுக்கையானதுக்கு இதனைவிட வேறு எந்தக் காரணங்களையும் யாரும் கற்பிக்க முடியாது.

"யேய் கமலம்! இவடத்தை இப்ப கொஞ்சம் நாளாய் அண்டங் காகங்கள் கரையுது கவனிச்சிருக்கிறியே!"

"ஓம் அன்ரி! அது மட்டுமே விடியப் புறத்திலை உவடத்து நாய் எல்லாம் ஊளையிட்டுகத்துதுகள். அதுதான் எங்கடை அம்மா அடிக்கடி சொல்லுவா ஊருக்குள்ளை கிட்டடியிலை ஆரோ போகப் போகினமெண்டு. பாக்கப் போனாலிப்ப அது உண்மை

# குற்றம்

இந்தக் குற்றம்
உலகத்து நீதிபதிகளுக்கு
சவால் விடுகிறது
எவன் தீர்ப்பெழுதுவான்?
கூண்டில் நிற்கவேண்டியது
அரசியலும் அதன்
உப்புப் பெறாதபேரங்களும்
யார் செய்வார்கள்?
குறுக்குக் கேள்விக்கு
ஆட்பட வேண்டியது
பாதங்களும் அதன்
பல நூற்றாண்டுகளான
ஏமாற்று விளையாட்டுக்களும்

கேட்பாரோயாராயினும்
இந்தக் குற்றத்துக்கு
பல முகங்கள் இருக்கின்றன
என்றாலும் முகமற்றது போல்
நழுவிக் கொண்டே இருக்கின்றது
கூர்முனைக் கத்தியைப் போல
கணக்கின்றி கொல்கிறது
காற்றைப் போல எல்லாத்
திசைகளிலும் உராய்ந்து
தன்னைத் தானே
சாணையேற்றிக் கொள்கிறது
காலப் பெருநீட்சியில்
இந்த சரித்திரத் தீவின்

ஆள் குறைப்புக்காக
குற்றத்தின் கோரப் பற்கள்
என்னை தூக்கியெறிந்ததில்
எனது நாள்கள் ஒவ்வொன்றும்
எரியும் மின் கம்பிகளுக்குள்
சிக்கி தகனிக்கின்றன.
எனது தாகங்களை
குற்றத்தின் தாகத்துக்குப்
பலியாகி நிலத்தில் வீழ்ந்து

மறுபடி எழுந்து நிற்க
திராணியின்றி தள்ளாடுகின்றன.
தன் சொந்த வேதனைக்கு
ஆறுதல் தேடுகிறது இதயம்
மகிழ்ச்சியின் கணங்களை
சிதறச் செய்கிறது
மௌனியான துயரம்
காலாவதியாகும் மூளையின்
செல்கள் நான் இருப்பதை
எனக்கு உணர்த்துவதற்கே
பகீரத பிரயத்தனம் செய்கின்றன
சுவாசக் காற்று என்னை
உயிரோடு வைத்திருக்கிறது

ஆனால் உயிரின் காயங்கள்
ஆழப் பதிந்திருக்கின்றனவே
எந்தக் காற்றைக் கொண்டு
ரணம் ஆற்றுவேன்?
ஏய்ப்புகளின் ஆயுள்
சுருங்குவதாகத்
தெரியவில்லை
முள் பாதை நீள்கிறது
இந்த ஊரில்தான்
வாழ்க்கை பயணிக்கிறது
அதை என்னுடையதாக
உணர முடியவில்லை
கனவுகளின் நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலத்தான் கிடக்குது." அங்கே குழுமி யிருந்தவர்களில் இரண்டு பேரின் கண்டு பிடிப்புக்கள். அங்கே எத்தனை ஆயிரம் பேர்தான் கூடியிருந்தாலும் ஒரே ஒருவனின் பிரசின்னமில்லாமையானது மிகப் பெரிய குறையாகவேபட்டது. எப்போதோ ஒரு தடவை மிக அபூர்வமாக கண்களை விழித்துப் பார்க்கும் சண்முக சுந்தரத்தாரின் கண்கள் எதையோ ஆர்வமாகத் தேடுவதை அங்கிருந்த அனுபவசாலிகள் புரியாமலில்லை. அந்தப் பார்வையில் ஏதோவொரு தேடலும் ஏக்கமும் கலந்திருக்கின்றன. அதனை வார்த்தைகளால் வெறுமனே வர்ணிக்க முடியாது.

"மெய்யே பரமண்ணை! ஆரேன் அறிவிக்கிற ஆக்களுக்கு அறிவிக்கிறதெண்டால் ..மேளம்..சந்தைச் சாமானுகள் வாங்கிறதெண்டால்.. ஆயத்தப்பண்ண வேணுமெல்லே" இராசமணி ஏனோ மிகவும் அவசரப்படுகின்றான். "டேய் ! விசர்ப் பெடியா! ஆடறுக்க முந்தி ஏதோ எண்டது போலை.. மனிசன் மலை மாதிரிக் கிடக்குது. நீ என்னெண்டால்! போடா போய் உன்ரை வேலையைப் பாரடா!" பரமர் சீறிப்பாய இராசமணி இடத்தைக் காலி பண்ணுகின்றான்.

யாருமே எதிர்பார்த்திராத வகையில் அந்தக் கூட்டத்துக்குள் ஒரு புதிய உருவம் திடீரென உட்புகுந்து கொள்ள வாங்கிலைச் சூழ நின்றவர்களெல்லாம் மிகுந்த பயபக்தியுடன் விலகி ஒதுங்குகின்றனர். சண்முகசுந்தரத்தின் மீது பார்வை நிலைகுத்தி நிற்கின்றது. கணப்பொழுதில் அந்த உருவம் மின்னலாக மறைகின்றது.

வந்தவன் வேறு யாருமல்ல. சண்முக சுந்தரம் அருந்தவம் செய்து பெற்ற அருமை மகன் குமரனே! சாவுக்காகக் காத்திருக்கும் ஆருயிர்த் தந்தை மீது அவனுடைய கண்கள் கடமைக்காகவே மேய்ந்து கொள்கின்றன. அவன் பார்த்த அந்தப் பார்வையிற் கனிவு இல்லை.

> அக்கினி தனது கடமையைச் செய்ய விளாசி எரியத் தொடங்குகின்றார் சண்முகசுந்தரம். இங்கே மேசை லாச்சிகள், பெட்டகம்,அலுமாரி என்று எதுவும் தவறாது அனைத்தையும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்திக் கொண்டிருக்கிறான் குமரன். அவனுக்கு இப்போது வேண்டியதெல்லாம் தந்தையின் வீட்டுக்குரிய உறுதிப்பத்திரம்.

மாறாகக் கடுமையே தெரிந்தது. பாசம் தெரியவில்லை. ஒருவித பாசாங்கே தெரிந்தது. சோகம் தெரியவில்லை. ஏதோ ஒரு வேகமே தெரிந்தது. அங்கே கூடியிருந்தவர்கள் ஆச்சரியம் ததும்ப ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொள்கின்றனர். அந்தப் பார்வைகளில்தான் எத்தனை அர்த்தங்கள? நீண்ட பெருமூச்சுக்கள் சங்கமமாகிக்கொள்ள...

என்ன நடந்ததோ, எது நடந்ததோ! இத்தனை நேரமும் சலனமேயில்லாது சடமாகக் கிடந்த சண்முக சுந்தரத்தின் கால்களிரண்டும் திடீரென நீண்டு மடங்கிக் கொண்டிருந்தன. இதுவொரு இச்சையில் செயலென்று உணர்ந்து கொண்டாலும் பார்ப்பவரைப் பயங்கொள்ள வைக்கின்றது. நெஞ்சுக் கூட்டிலி ருந்து கர்கர்ரெனப் பயங்கர ஒலியு டன் மூச்சுக்கள் முட்டி மோதி வெளியேறுகின்றன.. நிசப்தமான சூழ் நிலையில் அந்தப் பெரு மூச்சுக்களின் ஒலி எல்லோர் மனதிலும் கிலியை உண்டாக்கிக் கொள்கின்றது.

"யேய் பெட்டையள்! கலகலக்காதேங்கோ! சேடமிழுக்கத் துவங்கீட்டுது. எப்பனுக்கு அமைதியாயிருங்கோ" மீண்டும் உஷாராகிக் கொண்டிருந்தாள் பூரணப் பெத்தாச்சி. "பாத்தியளே! பராசக்தி மாமி. பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லுமெண்டு சொல்லுறது என்ன பொய்யே! இவ்வளவு நேரமும் அந்தச் சீவன் மோனைக் கண்ணிலை வைக்கிறதுக்குத்தான் காத்துக் கொண்டிருந்திருக்குது. மோனைக் கண்ணிலை வைச்ச உடனை கண்மூடி முழிக்க முந்திப் போய்ச் சேர்ந்திட்டுதே! என்ன?"

சபையில் பலவிதமான ஊகங்களும் கருத்துக்களும் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்க சண்முகசுந்தர மென்னும் பெயரில் இத்தனை காலமும் இந்த மண்ணில் புகழ் பூத்து வாழ்ந்த ஒரு ஜீவன் இன்று சவம் என்னும் புதிய பெயர் பூண்டு தீக்குளிக்கப் புறப்படுகின்றது. எது வித உறவோ உரிமைகளோ எதுவுமின்றி ஏகாம்பரத்தின் மகன் செந்தில் நாதன் மொட்டையடித்துக் கையில் கொள்ளிக் குடத்தைச் சுமந்தபடி முன்னே போகப் பின்னால் சோம சுந்தரம் பிரேதமாகச் சுடு காட்டையடைகின்றார். ஏராளமான உற்றார் உறவினர், அயலவர்கள், நண்பர்கள், சுடுகாட்டிலே ஒரே கூட்டம்.

செந்தில்நாதன் ஒரு பெற்ற தந்தைக்குக் கடமை செய்பவன் போல் சண்முகசுந்தரத்தாருக்கும் கொள்ளிக் கடனை முடிக்கின்றான். அக்கினி தனது கடமையைச் செய்ய விளாசி எரியத் தொடங்குகின்றார் சண்முகசுந்தரம்.

இங்கே மேசை லாச்சிகள், பெட்டகம்,அலுமாரி என்று எதுவும் தவறாது அனைத்தையும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்திக் கொண்டிருக்கிறான் குமரன். அவனுக்கு இப்போது வேண்டியதெல்லாம் தந்தையின் வீட்டுக்குரிய உறுதிப் பத்திரம். இந்த வீட்டையும் தனக்கே சொந்தமாக்கிவிடவேண்டும். அது எப்போது நிறைவேறும். தந்தையின் சாவின் பின்புதான் . எனவே இத்தனை காலமும் அவ ரின் சாவை ஆவலோடு எதிர் பார்த்திருந்தவன். உறுதிதான் அவனுடைய இலக்கின் இறுதிப் பெரும்பான்மை வெற்றியாயி ருந்தது. "சில வேளை கிழவன் எனக்குச் சீவியம் காட்டி" எழுதுறன் எண்டுபோட்டு ஏகாம்பரத்தான் வீட்டுக்கு எழுதிப் போட்டுதோ" அவ னைப் பொறுத்தவரை இப்படியொரு சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. நியாயமானதுதான். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. சண்முகசுந்தரம் எதையுமே சரியாகத்தான் செய்வார். இதையும் அப்படியே செய்திருந்தார். இப்போது அந்த வீடு குமரனுக்குச் சொந்தமாகிவிட்டது. தந்தையின் உடல் பற்றி எரிந்து கொண்டிருக்க ஒன்றுமே தெரியாதவன் போல் வீட்டின் உறுதியைக் கைப்பற்றிக் கொண்ட மகிழ்ச்சியுடன் வீடு செல்கின்றான்.

"தந்தையைப் போல் உலகிலே தெய்வமுண்டோ!" சௌந்தரராஜனின் பழைய பாடலொன்றைக் கக்கியபடி வீதி வழியே ஐஸ்கிறீம் வான் ஒன்று வர அந்தப் பாடலை வெகுவாக ரசித்துக் கொண்டிருக்கிறான் குமரன். பாடலின் இசை யைத்தான் அவனால் ரசிக்க முடிந்த தேயொழிய அந்தப் பாடலின் அருமையான அர்த்தத்தை அவனைப் போன்ற இரும்பு நெஞ்சங்களால் எப்படிப் புரிய முடியும்?



கே.எஸ்.நிமலன்

# அகம் நக நட்புங்கள்

இதிகாசங்களிலும் இலக்கியங்களிலும் நட்பின் இலக்கணம் மிக அழகாகவும், ஆழமாகவும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. மகாபாரதத்தில் இக்கட்டான சூழ்நிலையிலும் நட்பிற்காக உயிர் துறந்த கர்ணன் உயர்ந்த நிலையில் வைத்து பேசப்படுகின்றான். திருக்குறளிலும் நட்பு, நட்பு ஆராய்தல் எனும் அதிகாரத்தினூடே மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

"முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம் நக நட்பதே நட்பு"

என்ற குறள் ஊடாக நட்பின் தாற்பரியத்தை எடுத்தியம்புகின்றார் திருவள்ளுவர். இவ்வாறு இன்று வரை இலக்கியங்களில் நட்பு பேசு பொருளாவது மட்டுமல்ல இன்றைய சினிமாக்களும் நட்பை மையப்படுத்திக் கதை எடுக்கத் தவறவில்லை. "நண்பனே! நண்பனே! ஆருயிர் நண்பனே! சிறகுகள் இல்லாமலே சிகரம் தொட்டு விடு" என்று தன்னம்பிக்கையூட்டவும் சினிமாப் பாடல்கள் தவறவில்லை. அவ்வாறு நட்பு எல்லாத்துறைகளிலும் கோலோச்சி நிற்பதனை மறுத்துவிடலாகாது; மறைத்துவிடலாகாது.

இன்றைய காலகட்டத்தில் நட்பின் நிலை எத்தகையது என்பதனையும் உண்மையான நட்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பதனையும் உறவுகளின் ஊடாக எப்படி நட்பின் வழி நிற்க வேண்டும் என்பதனையும் ஆராய்வது மிக முக்கியமானது.

ஒருவரின் ஆளுமையைக் கட்டியெழுப்புவதில் நட்பு வட்டாரம் பெரும் பாதிப்புச் செலுத்துகின்றது. "உனது நண்பன் யாரெனக் கூறு நீ யாரெனக் கூறுகின்றேன்" என்னும் புகழ்பெற்ற வாசகம் சாதாரணமானதல்ல. அதற்குள் சமூகவியல் ரீதியான, உளவியல் ரீதியான பல தாக்கங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு பருவத்திலும் மனிதனது நட்பு வட்டாரங்கள் வேறுபட்டுக் காணப்படும். சில வேளைகளில் பள்ளிக்கூட நட்பு வாழ்வின் எல்லை வரை தொடர்வதுமுண்டு. கல்வி, விளையாட்டு, கலை இன்னோரன்ன துறைகளில் நட்பின் பாதிப்பைக் குறைத்து மதித்துவிட முடியாது.

நல்ல மாணவன் ஒருவனை தீய நட்பு பாழாக்கி விடக் கூடிய அபாய ஏது நிலை உண்டு. தீய நட்பானது உறங்கு நிலையிலுள்ள திறமைகளைத் தட்டி எழுப்ப விடாமல் தொடர்ந்து உறங்கச் செய்துவிடும். இதனால் சாதிக்க துடிக்கும் மனமானது தீயதன் பாற்சென்று சாக்கடைக்குள் விழக்கூடிய நிலையே தோன்றும். "உண்மையான நட்பு என்பது எதுவெனில், பரஸ்பரம் ஒரிவரிடமுள்ள திறமைகளை இனம் கண்டு ஊக்குவிப்பதே ஆகும்". இது உண்மையில் ஒவ்வொருவரையும் சாதனையாளராக்குவதற்கு உகந்த நிலையை ஏற்படுத்தும். எனவே நண்பர்களானவர்கள் ஒருபோதும் உங்கள் நண்பனின் திறமைகளை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்த தவற வேண்டாம்.

குடும்பத்தில் பெற்றோர்-பிள்ளைகள் உறவு முக்கியமானது. பிள்ளைகள் குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் பெற்றோர் அவர்களோடு நட்பு நிலை நின்று அவர்களைக் கையாளுவதே சாலச் சிறந்தது. அப்போது பிள்ளைகளின் தேவை என்ன? அவர்களின் எண்ணோட்டங்கள் எத்தகையன? அவர்களுக்கு எத்தகைய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்பது தீர்க்கமாக விளங்கும். குறிப்பாகத் தாய்மார்கள் தமது பதின்ம வயதுப் பருவப் பிள்ளைகள் (Teenage) நட்பின் வழி நின்று அணுகுவது அவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கும் துஷ்பிரயோகங்களிலிருந்து விலக்குவதற்கும் துணை நிற்கும்.

சகோதர சகோதரிகளும் நட்பின் நிலை நின்று ஒருவரோடு ஒருவர் நல்ல உரையாடல்களை மேற்கொள்வது அவர்களுக்கிடையில் அந்நியோன்ய உறவை வளர்க்கும். கல்வி, இலக்கியம், விளையாட்டு, அரசியல், சமகாலப்போக்கு போன்ற பொது விடயங்களைப் பரிமாறும் போது சகோதரர்களின் மத்தியில் இருக்கும் இடைவெளிகளைக் குறைக்கலாம்.

இன்றைய கால கட்டத்தில் நட்பு என்பதன் அர்த்தம் பெரும்பாலானவர்களினால் தவறாகப் பார்க்கப்படுகின்றது. அதாவது நட்பு என்பது வெறுமனே கூடிக் கதைத்துவிட்டு கலைந்து செல்வதும் பிறந்தநாள் போன்ற கொண்டாட்டங்களை கொண்டாடி மகிழ்தலும் எனும் குறுகிய வட்டத்திற்குள் நின்று விடுவதாக நினைக்கிறார்கள். இவையெல்லாம் வெறும் பிளாஸ்டிக் நட்பாக பார்க்கப்பட வேண்டியன. மாறாக நண்பர்கள் ஆத்மார்த்த ரீதியில் தங்களது நட்பைத் தொடர வேண்டும். பல ஆக்கபூர்வமான கருத்துக்களை கதைத்து மகிழ வேண்டும். நண்பர்களின் பிறந்தநாள், திருமணங்களின் போது நல்ல நூல்களைப் பரிசளிக்க வேண்டும். புத்தகங்களை பரிசாக வழங்குகின்ற நடைமுறையை நண்பர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். நண்பனொரு வன் தவறான பாதையில் செல்கின்றான் எனத் தெரிந்தால் அவனை அந்த வழி செல்லவிடாது தடுக்க வேண்டும். இவ்வாறான செயலொ ழுங்குகள் மூலம் நட்பின் தாற்பரியத்தை புரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கும்.

இன்றைய சவால் மிக்க சூழ்நிலையில் எம்மைச் சூழ பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. நம்மை நல்வழிப்படுத்துவதற்கும் சரி, தீய வழிப் படுத்துவதற்கும் சரி பல வடிவங்களில் அவை காணப்படுகின்றன. இன்றைய இந்த நிலைமைகளில் நண்பர்கள் குழாம் தம்மை நல்வழிப்படுத்துவதற்குரிய பாதைகளை அகலமாக்கிக் கொண்டே போக வேண்டும். அப்போது தான் எமது எதிர்கால சந்ததி நல்ல இலக்குகளை அடைய முடியும். எனவே நல்ல நிலையை அடைய நல்ல நட்பை ஆயுதமாக்குங்கள்.






புளுதிப் புயல் வீசுகிறது.
நிலைக் கண்ணாடி
அருவுருவத்தை விம்பிக்கிறது
கண்கள் இருப்பை
வெளிப்படுத்தவே இல்லை
உலக வரைபடத்தில்
எங்குமே என்னைப்
பொருத்த முடியவில்லை
குற்றத்தின் பராக்கிரமம்
எல்லாத் திசைகளையும்
சல்லி சல்லியாக உடைக்கிறது
உலகத்து நீதிபதிகளுக்கே
சவால் விடுகிறது
எவன் தீர்ப்பெழுதுவான்?

- வேல். லவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையும் மறவர் வரலாறு



இந்திரா. உமாசுதன்

யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் உள்ள டச்சுக் கோட்டையைப் பார்ப்பதற்காக இன்று நிறையப்பேர் வருகிறார்கள். வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. அவர்கள் தவிர தெற்கிலிருந்து வரும் சுற்றுலாவிகளும் கோட்டையைத் தவறவிடுவதில்லை. அவர்கள் எல்லோருக்கும் கோட்டையின் வரலாறாக ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னான கதை சொல்லப்படுகிறது. ஆனால், இரத்தமும் சதையுமாக வியர்வையும் துன்பமுமாக 23 ஆண்டுகளுக்கு முன்னர் கோட்டையைச் சுற்றி நடந்தவைகளின் வரலாறு அவர்களுக்குச் சொல்லப்படுவதுமில்லை; அவர்களுக்கும் அதில் அக்கறையுமில்லை.

1990 செப்ரெம்பர் 26ஆம் நாள் கோட்டையில் பாயும் புலிக்கொடி பறந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் வீழ்த்தப்பட்ட மிகப்பெரிய தளம் என்ற வரலாற்று வெற்றியை அது பதிவு பெற்றது. பின்னாள்களில் விடுதலைப் புலிகள் பெற்ற மிகப் பெரிய இராணுவ வெற்றிகளுக்கு எல்லாம் அச்சாரம் இட்டது யாழ்ப்பாணம் கோட்டையின் வீழ்ச்சி.

### வரலாறு

பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணக் கோட்டை இராணுவ ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக விளங்கியது. இலங்கையின் வடபகுதியில் போர்த்துக்கேயர் கி.பி. 1619இல் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர். ஒல்லாந்தர் மரபின்படி சற்சதுர வடிவமாக காணப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டைய 1658இல் அழித்த போர்த்துக்கேயர் அந்த இடத்தில் கி.பி. 1665 - 1680 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தற்போது காணப்படுகின்ற ஐந்து பக்க சுவருடைய நட்சத்திர வடிவிலான கோட்டையை அமைத்தனர். மூலைப் பகுதிகளிலே கொத்தளங்களையும் நட்சத்திர வடிவிலான அகழியையும் அமைத்தனர். இந்தக் கொத்தளங்கள் ஐந்துக்கும் ஒல்லாந்து, சீலாந்து, பிறிஸ்லாந்து, உற்றைச், ஹல்டர்லாந்து எனப் பெயரிட்டனர்.

பாதுகாப்பை மேலும் பலப்படுத்த மூடிய பாதைகளையும், எதிரியை தாக்க கோட்டைச் சுவரை சரிவாகவும், கோட்டையின் வாசல் பகுதியில் அகழிக்கு வெளியே காவலரண்களையும் அமைத்தனர். 1775இல் போரின்றியே ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குள் போனது கோட்டை. 1948இல் இருந்து இலங்கை சுதந்திரம் அடையும் வரை இந்தக் கோட்டை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

### கோட்டைக்கு முன்னர்

1658 தொடக்கம் 1990 ஆண்டு காலப்பகுதிகளுக்கு இடைப்பட்ட மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் மீதான அடக்குமுறைச் சின்னமாக விளங்கியது கோட்டை.

இலங்கையின் வடபகுதியில் சுதந்திரமான யாழ்ப்பாண இராச்சியம் காணப்பட்டது. சங்கிலி மன்னரின் ஆட்சி 1619ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை தலைநகராகக் கொண்டு விளங்கியது. ஐரோப்பியரின் வருகையால் யாழ்ப்பாண இராச்சியம் படிப்படியாக அவர்களிடம் வீழ்ச்சியடைந்தது. தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்த போர்த்துக்கேயர் கி.பி. 1543ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தைத் தாக்கினர். அதில் அவர்கள் தோல்வி கண்டனர். தொடர்ச்சியாக 1560 மற்றும் 1595ஆம் ஆண்டுகளில் மீண்டும் தாக்கினர் போர்த்துக்கேயர். அவையும் தமிழ் மன்னர்களால் முறியடிக்கப்பட்டன. 1619இல் மீண்டும் ஒரு போரை அவர்கள் தொடுத்தனர். சங்கிலி மன்னனைத் தோற்கடித்து தமது ஆதிக்கத்தை உறுதியாக நிலைநிறுத்தினர்.

ஆரம்பத்தில் நல்லூரை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த போர்த்துக்கேயர், அடர்ந்த காட்டில் எரியும் தியாக நெருப்பைப் போல கிளர்ந்தெழும் தமிழர்களின் உரிமை வேட்கையின் மத்தியில் தங்கியிருப்பதில் உள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருத்தில் கொண்டு தமது பாதுகாப்புப்பாக ஒரு கோட்டை அமைக்கத் தீர்மானித்தனர்.

அதனடிப்படையில் யாழ்ப்பாணத்தின் தென்கரையோரத்தை தெரிவு செய்தனர். 3,960 அடி நீளமான சுற்றுமதிலைச் சூழ 6,400 அடிகள் நீளமான அகழி வெட்டினர். சாய்வுச் சுவர் அமைத்து கோட்டையை வடிவமைத்துக் கொண்டனர்.

**கோட்டையைக் காப்பாற்றுவதற்காகவும் அங்கிருந்த படை யினருக்கு பாதுகாப்பு வழங்கு வதற்காகவும் யாழ். நகரப் பகுதி மீது சரமாரி யான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கோட்டையைச் சுற்றியிருந்த வீடுகளைத் தரைமட்டமாக்கிவிடும் திட்டத்துடன் தொடர்ச்சியான எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கின்றன. ஒரு தடவை 50 மணி நேரம் தொடர் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.**

### இராணுவ ஆதிக்கம்

இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்த 1948ஆம் ஆண்டு யாழ். கோட்டை இலங்கை இராணுவத்தின் சிறைச்சாலையாகவும் பொலிஸ் நிலையமாகவும் மாறியது. ஆனால் அதன் அடக்குமுறைக் குணம் மாறவில்லை.

1971 ஆம் ஆண்டில் மக்களாட்சி என்று கூறிக்கொண்டு ஜே.வி.பி. நாடு முழுவதும் இருந்த பொலிஸ் நிலையங்களைத் தாக்கியது. யாழ். கோட்டையும் அப்போது தாக்கப்பட்டது. ஆனால் அந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோட்டையில் அமைந்துள்ள ராணிமாளிகை இலங்கை இராணுவத்தின் விசாரணைத் தளமாகவும் சிறைச்சாலையாகவும் மாறியது. 1983 இல் இராணுவ முகாமாகியது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தீவிரம் பெறத் தொடங்கிய காலத்தில் 1984இல் புலிகள் கோட்டையைத் தாக்கினர். 1987ஆம் ஆண்டுவரை - 3 ஆண்டுகளும் 23 நாள்களும் - ஒரு முற்றுகைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1987 ஜூலை மாதம் 29ஆம் திகதி இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்தது. 1987 ஓகஸ்ட் மாதம் இந்திய இராணுவம் கோட்டையில் நிலை கொண்டது. புலிகளுடன் முரண்பட்டுக்கொண்டு தமிழர்கள் மீது ஒரு போரை வலிந்து திணித்த இந்திய இராணுவம் கோட்டையை முகாமாகவும் சித்திரவதைக் கூடமாகவும் மாற்றியது. இதனால் 1987 ஒக்ரோபர் ஏற்பட்ட மோதலை தொடர்ந்து இந்திய இராணுவம் கோட்டையில் இருந்து வெளியேறியது.

1989இல் இலங்கை இராணுவம் மீண்டும் கோட்டையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதனை நகரில் உள்ள முக்கிய தளமாக்கியது. அது விடுதலைப் புலிகளுக்கும் அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸவுக்கும் இடையில் தேனிலவு இருந்தகாலம். அது பின்னர் ஊடலாகிப் பிணக்கான போது, 1990ஜூன் 16ஆம் திகதி புலிகள் கோட்டையை மீண்டும் முற்றுகை இட்டனர்.

### அடிமை விலங்கு ஒடிந்தது

இந்தமுறை கோட்டையை முற்றுகைக்குள் வைத்திருப்பது என்பதை விடுத்து அதனைக் கைப்பற்றுவது என்பதில் புலிகள் தீவிரமாக இருந்தனர். அடிக்கடி கோட்டை மீது அதிரடித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கோட்டை மதிலைக் கடந்து உள்ளே சென்றுவிட முயன்ற போராளிகள் பலர் களப்பலியாகினர். பெண் போராளிகளும்கூட தீவிரமாக கோட்டைத் தாக்குதல்களில் பங்கெடுத்தனர். கோட்டைக்குள் இருந்து இராணுவமும் வெளியே இருந்து புலிகளும் அடிக்கடி குறிபார்த்துச் சுட்டுக் கொண்டதில் இரு பக்கமும் பலர் உயிரிழந்திருக்கின்றனர்.




உள்ளே மாட்டிக் கொண்டிருந்த இராணுவத்திற்கு அப்போதெல்லாம் பலாலியில் இருந்து ஹெலிகளில்தான் உணவு மற்றும் பொருள்கள் வரும். மாலையில் உணவு ஹெலி உள்ளே இறங்குவதற்கு முன்னதாக கோட்டையைச் சுற்றிய பகுதிகளை நோக்கிப் படையினர் சரமாரியாகச் சுடுவார்கள். ஹெலி மேலெழும் போது மீண்டும் அதே மாதிரி நடக்கும். அவ்வப்போது அவ்ரோ விமானத்திலும் வந்து கோட்டைக்குள் ஆயுதங்கள் மற்றும் பொருள்களை வானில் இருந்தபடியே போடுவார்கள். அவை சில சமயங்களில் கோட்டைக்கு வெளியே விழுந்து புலிகளிடம் போய்ச் சேர்ந்துவிடும். ஒரு தடவை அவ்ரோ போட்ட மூடை ஒன்று பிய்ந்து அதிலிருந்த சாக்குகள் எல்லாம் பறந்து வந்து குடிமனைகளின் மேல் விழுந்தன. மக்கள் சிரித்துக் கொண்டே அவற்றைப் பொறுக்கி வைத்துக்கொண்டார்கள்.

கோட்டையைக் காப்பாற்றுவதற்காகவும் அங்கிருந்த படையினருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் யாழ். நகரப் பகுதி மீது அந்தக் காலத்தில் சரமாரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கோட்டையைச் சுற்றியிருந்த வீடுகளைத் தரைமட்டமாக்கிவிடும் திட்டத்துடன் தொடர்ச்சியான எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஒரு தடவை 50 மணித்தியாலங்கள் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. விமானக் குண்டு வீச்சுக்களும் தாராளமாக நடத்தப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் வை-8, அவ்ரோ விமானங்கள்தான் இத்தகைய குண்டு வீச்சுக்களில் ஈடுபடுத்தப்பட்டன.

### போற்றிய நினைவுகள்

1990 செப்ரெம்பர் 26ஆம் நாள், அப்போது புலிகளின் யாழ். மாவட்டத் தளபதியாக விளங்கிய பானு கோட்டையில் புலிக்கொடியை ஏற்றி அதன் ஆக்கிரமிப்பு - அடக்குமுறை - முகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை ஒருபோதும் இராணுவத் தேவைகளுக்காக - புலிகளால்கூட - பயன்படுத்தப்படவில்லை. மீண்டும் ஓர் ஆக்கிரமிப்புத் தளமாகக் கோட்டை மாறிவிடக்கூடாது என்பதற்காகவே கோட்டையின் தெற்கு மதிலை மக்களின் உதவியுடன் புலிகள் இடித்தழித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலிகள் கோட்டையில் புலிக் கொடியை ஏற்றுவதற்கு முன்னதாக படையினர் அங்கிருந்து தப்பியோடி இருந்தனர். ஒல்லாந்தர் அமைத்திருந்த நீர் வழியூடாக மண்டைதீவிற்கு அவர்கள் தந்திரோபாயமாகப் பின்வாங்கினர் என்று அரசு அறிவித்தது. எத்தனை நாள்களுக்கு முன்னர் அவர்கள் வெளியேறி இருந்தனர் என்பது உறுதியாகத் தெரியவரவில்லை. ஆனால் தியாக தீபம் திலீபன் ஆகுதியாகிய நாளில் யாழ்ப்பாணக் கோட்டையில் புலிக் கொடி பறந்தது.

பத்திரிகைகள் விசேட பதிப்புக்களை வெளியிட்டு கோட்டை கைப்பற்றப்பட்ட செய்தியை மக்களுக்கு அறிவித்தன. மக்கள் ஆரவாரித்தனர். வெடிகள் கொழுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சந்திகளிலும் வீதிகளிலும் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்று இது பற்றி வியந்து பேசிக்கொண்டனர். விமானத் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் தொடர்ந்து கொண்டிருந்தபோதும் கோட்டையைப் பார்த்துவிட வேண்டும் என்று முண்டியடித்தனர். அவர்களின் பாதுகாப்புக் கருதி மாலை 6 மணிக்குப் பின்னரே யாழ். நகருக்குள் செல்ல முடியும் என்று புலிகள் அறிவிக்கும் அளவிற்கு நிலைமை மோசமாகியிருந்தது. கோட்டையைப் பார்க்கச் சென்றவர்கள் அங்கிருந்து கற்களைப் பெயர்த்து எடுத்தும் மண்ணை அள்ளி வந்தும் தமது வீடுகளில் நினைவுச் சின்னமாகப் போற்றினர்.









கோட்டையின் வீழ்ச்சி பற்றி வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் விடுதலைப் புலிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தது. "370 வருடங்களுக்கு மேலாக எம்மைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலியின் ஒரு துண்டு இன்று விழுந்தது. அந்நிய ஆதிக்கத்தின் அவமானச் சின்னம் இன்று அழிந்து முடிந்தது."

### பேச ஆள் இல்லை

இப்போது எல்லாமும் முடிந்து விட்டது. ஆயுதங்கள் மௌனித்துப்போன பின்னணியில் யாழ்ப்பாணக் கோட்டை மரபுரிமைச் சின்னமாகவும் கலாசாரப் பொக்கிஷமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. டச் என்று முன்னர் அழைக்கப்பட்ட தற்போதைய நெதர்லாந்து அரசின் உதவியுடன் மீள்புனரமைக்கப்பட்டு வருகின்றது. கிட்டத்தட்ட அதன் முக்கால் வாசிப் பணிகள் முடிந்துவிட்டன. இப்போது அது சுற்றுலா மையமாகிவிட்டது. போர்த்துக்கேயர்களைப் பற்றியும் ஒல்லாந்தர்களைப் பற்றியும் அவர்களின் பராக்கிரமங்களைப் பற்றியும் அங்கு பேசப்படுகின்றது. ஆனால் இந்த மண்ணின் மைந்தர்கள் அதனை ஆக்கிரமிப்பின் அடையாளத்தில் இருந்து விடுவித்ததைப் பற்றிப் பேசுவதற்கு அங்கு யாரும் இல்லை. இந்தக் கோபத்தில்தானோ என்னவோ கோட்டையைப் பார்க்கச் செல்லும் எல்லோர் முகத்திலும் உப்புக் காற்று வேகமாக அறைந்து மோதுகின்றது.





# இணையத்தில் வேகமாக பரவுகிறதாம் கோபம்

உலகை ஒன்றாக இணைத்திருப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கும் இணையத்தில், கோபம் தான் மிக வேகமாகப் பரவும் மனித உணர்வு என்று சீனாவில் செய்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

மனிதர்கள் மத்தியில் இன்று மிகவும் பிரபலமாகி, வாழ்வுடன் ஒன்றிப் போயிருக்கும் ஒரு சமூக இணையத்தளம் டுவிட்டர்.

குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பற்றி மக்கள் தூண்டப்பட்டதும் தமது கருத்துக்களை அவர்கள் டுவிட்டரில் சென்று பதிந்து விடுகிறார்கள்.

உதாரணமாக சர்ச்சைக்குரிய ஒரு கருத்து, அது ஒரு சினிமா நடிகை கூறிய கருத்தாக இருக்கலாம் அல்லது அரசியல்வாதியின் உரையாகவும் இருக்கலாம். அந்தக் கருத்தைக் கேள்விப்பட்ட அல்லது பார்த்த அல்லது படித்த உடனே டுவிட்டர் ஆர்வலர்கள் தமது கருத்துக்களைப் பதிந்து விடுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட விவகாரம் குறித்து பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்கள் மத்தியில் என்ன கருத்துகள் நிலவுகின்றன என்பதை அறிய விரும்பும் ஆய்வாளர்கள் முதலில் நாடுவது டுவிட்டர் போன்ற இணையத்தளங்களைத் தான்.

இப்படிப்பட்ட உலக சமூக இணையத்தளங்களில் ஒன்றுதான் வே-போ. மேற்குலகின் டுவிட்டர் போன்றது சீனாவின் இந்த வே-போ. ஐநூறு மில்லியன் மக்கள் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

நூறு மில்லியன் கருத்துகள் தினமும் இதில் பதிவாகின்றன. தமது சீன நாட்டின் இந்த வே-போ இணையத்தளம் பற்றி, தலைநகர் பீஜிங்கிலுள்ள பே ஹாங் பல்கலைக்கழகம் நடத்திய ஆராய்ச்சியில் சில சுவாரஸ்யமான விடயங்கள் வெளியாகியுள்ளன.

வே-போ பயன்பாட்டாளர்களின் சொற்பிரயோகம், ஸ்மைலிகள் என்கிற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கேலிச்சித்திரப் பிரயோகம் ஆகியவற்றை ஆராய்ந்த பல்கலைக்கழக ஆய்வாளர்கள், வே-போவில் வெளியிடப்படும் கருத்துக்களை கோபம், சோகம், குதூகலம், விரக்தி என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்துத் தொகுத்தார்கள்.

அவற்றை அவர்கள் ஆய்வுசெய்தபோது, கோபமூட்டும் பதிவுகளே மக்கள் மத்தியில் அதிக அளவில் பகிர்ந்து கொள்ளப்பட்டதைக் கண்டறிந்தார்கள். இதற்குக் காரணம், கோபக்கார பதிவர்களுக்குக் கோபக்கார நண்பர்கள் ஏராளமாக இருப்பதாகக்கூட இருக்கலாம்.

சீனாவிலுள்ள சமூகப் பிரச்சினைகள், வெளிநாடுகளுடனான இராஜதந்திர தகராறுகள், இவை போன்ற தகவல்கள் வே-போ தளத்தில் ஆத்திரத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்று ஆய்வுகள் காட்டின. 2010 ஆம் ஆண்டில் ஆறு மாத காலம் சுமார் இரண்டு லட்சம் வே-போ பாவனையாளர்களின் எழுபது மில்லியன் பதிவுகள் ஆராயப்பட்டு இந்த முடிவுகள் எட்டப்பட்டன.

இதேபோல, பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சிலர் கண்டுபிடித்துள்ள ஒரு கணினி தொழில்நுட்பம் டுவிட்டர் தளத்தின் மூலம், ஒரு நாட்டின் உணர்வை அறிய முடிகிறது. ஒரு விடயத்தைப் பற்றி ஒருவர் ஆத்திரம் கொண்டிருந்தால், அதே ஒத்த கருத்தை உள்ளவர்களுடன் அவர் இணைவது இயற்கைதான் என்று ஆய்வை நடத்திய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# புவி வெப்பமடைவதற்கு மனிதச் செயலே காரணம்

தற்போது புவி வெப்பமடைந்து வருவதற்கு மனிதச் செயற்பாடுகள் காரணம் என்பது உறுதியாகத் தெரிவதாக ஐநா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மாறிவரும் உலகப் பருவநிலை தொடர்பான சர்வதேச நிபுணர் குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், புவி வெப்பமடைந்து வருவதற்கான முக்கியக் காரணம் மனிதச் செயற்பாடுகள்தான் என்பது விஞ்ஞானிகளுக்கு 95 வீதம் உறுதியாகத் தெரிவதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் கடைசியில் உலகக் கடல் மட்டம் தற்போது உள்ள அளவிலிருந்து 82 சென்டிமீற்றர்கள் உயரலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சட்டரீதியான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு அரசுகள் முயன்றுவரும் நிலையில், விஞ்ஞானிகளின் இந்த அறிக்கை மிகவும் அவசியமானது என ஐநா தலைமைச் செயலர் பான் கீ மூன் இந்த நிபுணர் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

உலகப் பருவநிலை தொடர்பான ஐ.நா உச்சி மாநாடு ஒன்றை அடுத்த வருடத்தில் தான் கூட்டப்போவதாக அவர் கூறியுள்ளார்.

புவியின் சராசரி வெப்பநிலை இரண்டு பாகை செல்ஷியஸுக்கும் கூடுதலாக அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க [illegible] அதிகரிக்க வைப்பதென்பது இந்த மாநாட்டின் இலட்சியமாக இருக்கும் என [illegible]வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.10.2013 முதல் 12.10.2013 வரை

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி.....?

தருபவர் - வித்தியா

**மேடம்** - உங்களின் தனித் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். பணிபுரிவதில் ஆர்வம் அதிகரிக்கும். அயல் வீட்டாருடன் இருந்த மனக்கிலேசம் விலகும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, குடும்ப ஒற்றுமையைப் பாதுகாப்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அக் கறையுடன் செயற்படுவீர்கள். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை பயன்படுத்துவதால் குடும்பத் தேவைக்கான பணவரவு அதிகரிக்கும்.

**இடபம்** - இனிய எண்ணங்களால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும் வசீகரமான பேச்சால் புதியவர்களின் அன்பு, நட்புப் பெறுவீர்கள். பணவரவு அதிகம் பெற உருவாகிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துவீர்கள். எதிரி உங்களிடம் மறைமுகமாக சில நன்மை முயற்சி மேற்கொள்வார். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற்றுவர். சலுகைப் பயன்களும் எளிதாகக் கிடைக்கும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் மட்டுமே கல்வியில் ஆர்வம் வளரும்.

**மிதுனம்** - உங்கள் மனம் வருந்துகிற வகையில் சிலர் அவமதித்துப் பேசுவர். அவர்களிடம் விலகுவதால் நேரமும் மன அமைதியையும் பாதுகாக்கலாம். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை மனதில் நம்பிக்கை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும். மாணவர்கள் பெற்றோரின் எண்ணம் உணர்ந்து செயற்படவேண்டும்.

**கடகம்** - கருணை மனதுடன் செயற்பட்டு மனதில் நிம்மதியும் சமூகத்தில் உயரிய அந்தஸ்தும் பெறுவீர்கள். எதிரியின் எண்ணங்களை உணர்ந்து விலகுவீர்கள். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க கூடுதல் தியாக உணர்வுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் எதிர்பார்த்த அரசு உதவி பெற அனுகூலம் உண்டு. பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**சிங்கம்** - உறவினர்களிடம், உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். எதிரியால் உருவாகிற தீய செயல் பலமிழந்து போகும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற உங்களின் கன உழைப்பும் இஷ்ட தெய்வ அருளும் துணை நிற்கும். மாணவர்கள் திட்டமிட்டு படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**கன்னி** - வசீகர வார்த்தைகளும் சம அளவில் கலந்திருக்கும். மனதில் உருவாகிற சஞ்சலங்களை பழைய நன்மைகளை நினைத்துப் பார்த்துக் குறைத்துக் கொள்வீர்கள். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க அன்பாக நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத் தன்மைகளை கூடுதல் அக்கறையுடன் பாதுகாக்கவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை மதித்து நடப்பதால் ஒழுங்கு நடவடிக்கை வராமல் தவிர்க்கலாம்.

**துலாம்** - பிறரது ஆடம்பரச் செயல் நடைமுறைகளைப் பார்த்து தாமும் அவ்வாறு நடந்து கொள்ள எண்ணம் உருவாகலாம். இதனால் தேவையற்ற பணச்செலவு, குடும்ப உறுப்பினர்களின் அதிருப்தியை எதிர்கொள்ள நேரிடலாம். கவனம் தேவை. உங்களின் இதமான அணுகுமுறையால் மனதில் மாற்றம் பெறுவர். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் உதவுவார். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும்.

**விருச்சிகம்** - வாழ்வில் எதிர்மறையாக உருவான சூழ்நிலைகளைச் சரி செய்வதில் அக்கறை கொள்வீர்கள். அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை மனமுவந்து ஏற்றுக் கொள்வர். மாணவர் கள் புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் வேண்டும்.

**தனுசு** - உங்களின் சிறிய முயற்சியும் அளப்பரிய நன்மைகளைப் பெற்றுத் தரும். இடம், சூழ்நிலை உணர்ந்து பிறரிடம் பேசுவீர்கள். சமூகப் பணியில் ஆர்வம் வளரும். மரியாதை, புகழ் தாமாகத் தேடிவரும். எதிரியால் உருவாகும் தொந்தரவு விலகும். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் எளிதாக வந்து சேரும். மாணவர் களுக்கு நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**மகரம்** - எவரிடமும் அளவுடன் பேசுவது நேரம், மன அமைதியை பாதுகாக்கும். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் பணவரவு சீராகும். இயந்திர தொழிற்சாலைப் பணியாளர், பாதுகாப்பு முறையைத் தவறாமல் பின்பற்றவும். மாணவர்கள விளையாட்டுக்களில் சாகசத்தைத் தவிர்க்கவும்.

**கும்பம்** - ஆன்மிக நம்பிக்கைகளைப் பின்பற்றி, கடந்த தினங்களில் பெற்ற நன்மைகளை நினைத்து பெருமிதம் கொள்வீர்கள். எதிரி வியந்து விலகும் புதிய சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவைப் பெற்றுத் தரும். பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு நிர்வாகத்திடம் நற்பெயர், வெகுமதி பெறுவர். மாணவர்கள் கல்வியில் புதிய ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

**மீனம்** - திட்டமிட்ட காலத்தில் பணியை நிறைவேற்றுவதில் தாமதம் உருவாகலாம். தன்னுடன் பழகுபவர்களின் மனப்பாங்கை உணர்ந்து பேசுவது நல்லது. இல்லறத்துணை குடும்ப நன்மைகளை மனதில் கொண்டு தியாக மனதுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய அதிகம் பணிபுரிவது அவசியம். அரசியல்வாதிகள், எவருக்கும் தகுதிக்கு மீறிய, வாக்குறுதி தரக்கூடாது.



## சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்

◆ கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சீனியைக் கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு முழுக வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

◆ இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், 2 தேக்கரண்டி உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.

◆ முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

◆ கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் தேசிக்காய் சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும். நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஒயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற விட்ட பின்னர், சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

◆ பழுத்த வாழைப் பழத்தை நன்றாகப் பிசைந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிகவும் மிருதுவாகும்.

◆ தேநீர் தயாரித்த பின்னர் மிஞ்சும் தேயிலைத் தூளில் தேசிக்காய் சாறை பிழிந்து, தலையில் தேய்த்து முழுகினால் தலைமுடி பளபளப்பாகும்.

◆ வேப்பமிலை, சிறிது மருதாணி மற்றும் குப்பை மேனி இலைகளைக் காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடங்கள் ஊற வைத்துக் குளித்தால், முகம் பரு வராமலும், வெளியில் கறுத்துப் போகாமலும் இருக்கும்.

◆ அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசைத் தன்மை குறையும்.



## ஆஹா என்ன ருசி

### வெள்ளை ரவ்வை உப்புமா

தேவையான பொருள்கள்

- வெள்ளை ரவ்வை - 500 கிராம்
- பெரிய வெங்காயம் - 3
- கரட் - 1
- இஞ்சி - சிறிதளவு
- பச்சை மிளகாய் - 4
- கடுகு - 1 தேக்கரண்டி
- உளுத்தம் பருப்பு - 1 தேக்கரண்டி
- கடலைப் பருப்பு - 1 தேக்கரண்டி
- கறிவேப்பிலை - 2 நெட்டு
- எண்ணெய் - தேவையான அளவு
- நெய் - 3 தேக்கரண்டி
- தண்ணீர் - தேவையான அளவு
- உப்பு - தேவையான அளவு

*செய்முறை*

தாச்சியில் சிறிது நெய் விட்டு ரவையை குறைந்த சூட்டில் சாதுவாக பொன்னிறமாகும் வரை வறுத்துக்கொள்ளவும்.
வெங்காயத்தை நீளப்பாடாக வெட்டி வைத்துக் கொள்ளவும். கரட்டை தூள்களாக வெட்டிக் கொள்ளவும்.
பச்சை மிளகாயை நீளப்பாடாக இரண்டாக வெட்டி அதனை 2,3 சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும்.
இஞ்சியையும் குத்தி நசித்து வைத்துக் கொள்ளவும்.
பெரிய தாச்சியில் எண்ணெயை விட்டு கடுகு வெடித்ததும் கடலைப் பருப்பையும், உளுத்தம் பருப்பையும் போட்டு வதக்கவும். அவை பொன்னிறமாகச் சிவந்ததும்; கறிவேப்பிலை, வெங்காயத்தை போட்டு சிவக்கும் வரை வதக்கவும். பின்பு, பச்சைமிளகாய், இஞ்சி, கரட்டையும் போட்டு அவற்றையும் சேர்த்து நன்றாக வதக்கவும்.
தேவைக்கேற்ப தண்ணீர், உப்பு சேர்க்கவும். தண்ணீர் கொதித்ததும் ரவ்வையை சிறிது சிறிதாக சேர்த்து கட்டிசேராமல் கிளறிக்கொண்டே இருக்கவும். ரவ்வை வெந்ததும் எஞ்சி இருக்கும் நெய்யையும் சேர்த்து கிளறி அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.

### வெண்டிக்காய் வெள்ளைக் கறி

தேவையான பொருள்கள்

- பிஞ்சு வெண்டிக்காய் - 15
- பச்சைமிளகாய் - 4
- சின்ன வெங்காயம் - சிறிதளவு
- தேங்காய்ப்பால் - 1 கப்
- கறிவேப்பிலை - சிறிதளவு
- உப்பு - தேவையான அளவு
- தேசிக்காய் சாறு - 1 மேசைக்கரண்டி



*செய்முறை*

வெண்டிக்காயை நன்றாகக் கழுவி அடி மற்றும் நுனி இரண்டையும் வெட்டி எடுக்கவும். பெரிய வெண்டிக்காய்களை 2 அல்லது 3 துண்டுகளாக வெட்டி கழுவி எடுக்கவும்.
தேங்காய்ப்பால், வெட்டிய பச்சை மிளகாய், வெங்காயம் மற்றும் கறிவேப்பிலை, உப்பு ஆகியவற்று டன் சேர்த்து அவிய விடவும். பதமான பதத்தில் இறக்கி தேசிக்காய் சேர்க்கவும். தாளிதமும் போடலாம்.
சூடான சுவையான வெண்டிக்காய் வெள்ளைக்கறி தயார். செலவும் அதிகம் இல்லாத சத்தான ருசியான உணவாக இருக்கும். வெண்டிக்காய் வழுவழுப் பாக இருப்பதனால் சிறுவர்கள் உண்பதற்குப் பின்னடிப்பார்கள். அது இல்லாமல் செய்வதற்கு, வெண்டிக்காயை வெட்டியதும் 10 முதல் 15 நிமிடங் கள் ஒரு பாத்திரத்தில் போட்டு அப்படியே வையுங் கள். அதன் பின்னர், ஒரு தாச்சியில் எண்ணெய் இன்றி குறைந்த நெருப்பில் லேசாக வாட்டி எடுங்கள். அதன் பின்னர் அவிய விட்டீர்களானால் வெண்டிக்காயில் இருந்து வழுவழுப்புத் தன்மை வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> கலாசார்ம் என்ற போர்வைக்குள் அடக்கி, தம்மை தாமே வளர்க்கத் தவறி விட்டாள் என்பதுதான் உண்மை. பெண்களுக்கான சுதந்திரம் எதிர்க்கப்பட்டதும் அதை மறுத்துப் போராட அன்றைய பெண்கள் முன்வரவில்லை. ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி இன்று பெண் முன்னேறி யிருக்கின்றாள் என்றால் அது மறுப்பதற்கில்லை.

சுபானுஜன் சாரங்கி

# அடுத்த நூற்றாண்டை வெற்றிகொள்ள பெண்ணுக்குத் தேவை கல்வி

பெண்களுக்கு எல்லாத் திறமைகளும் இருக்கின்றன. பண்பாடு, கலாசாரம் என்ற போர்வைக்குள் இதை அடக்கி, தம்மைத் தாமே அவர்கள் வளர்க்கத் தவறி விட்டனர் என்பதுதான் உண்மை. பெண்களுக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டபோது அதை எதிர்த்துப் போராட அன்றைய பெண்கள் முன்வரவில்லை. ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி இன்று பெண் முன்னேறியிருக்கின்றாள் என்றால் அதையும் மறுப்பதற்கில்லை.

பெண்களைப் பற்றி ஆராய்ந்தவர்கள் ஆண்களை விட பெண்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள், கடின உழைப்பாளிகள் என்று கூறுகிறார்கள்.

எல்லா மனிதர்களும் தம் வாழ்வில் மகிழ்வுடன், மன நிறைவுடன் இருக்கவே விரும்புகின்றனர். அதுதான் வாழ்வு என்று கருதுகின்றனர். முன்னைய காலத்தில் ஒரு ஆணைப் பார்த்து, என்ன வேலை செய்கிறீர்கள்? என்று கேட்டார்கள். மாறாக, ஒரு பெண்ணை யாரும் என்ன வேலை செய்கிறீர்கள்? எனக் கேட்பதில்லை. காரணம் பெண்ணுக்குக் குடும்பம், குழந்தைகள், கணவன், வீடு என்று வேலைகள் இருப்பதாக சமூகமே முடிவு செய்துவிடும். அவையே பெரிய வேலைகள்தான் என்று எண்ணினார்கள். அதுவே அவர்களுக்கு (பெண்களின்) நிறைவைத் தருகின்றன என்ற மனப்பான்மையும் இருந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை. பெண்ணையும் பார்த்து என்ன செய்கிறீர்கள்? எனக் கேட்கின்றனர். அந்தளவுக்கு இன்றைய பெண் சகல துறைகளிலும் ஈடுபடுகிறாள், உழைக்கின்றாள். சில பெண்கள், ஆண்களை விடக் கூடுதலாகவும் வருமானம் பெறுகின்றனர்.

பெண் என்ற வகையில் மனதில் ஏற்படும் பெருமை, நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை, நமக்குள் ஏற்படும் மனநிறைவு இவைதான் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகின்றன. மேலும் சாதனை செய்யத் தூண்டுகின்றன. இப்படிப்பட்ட எண்ணங்கள் பெண்ணின் மனதில் அதிகம் எழுகின்றன என்றாலும், அந்த வாய்ப்பு, குறிப்பாக கிராமங்களில் வாழும் பெண்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை என்பது கவலைக்குரிய விடயம். அவர்களும் சாதிக்கின்றனர். நாளுக்கு நாள் ஏதோ ஒரு கூலித் தொழிலைத் தேடி, தன் குடும்பத்தைக் காக்கும் பெண்களும் உள்ளனர். என்னைப் பொறுத்தவரை அதுவும் ஒரு சாதனை தான். உதாரணத்துக்கு ஒரு பெண் கூலித் தொழிலாளியாக இருந்து தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து சமுதாயத்தில் ஒரு நல்ல பிரஜையாக்குகின்றாள் என்றால், அவர்களுக்கு ஓர் அந்தஸ்தைக் கொடுக்கின்றாள் என்றால் அவளும் சாதனைப் பெண்ணே! இருந்தாலும்கூட, ஆணுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை இந்தச் சமூகம் ஏன் ஒரு பெண்ணுக்குக் கொடுப்பதில்லை?

ஒரு பெண் எதற்குப் படிக்க வேண்டும்? கல்யாணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குப் போகிறவள் தானே என்று அவளைத் திருமணத்துக்காகவே வளர்க்கின்றனர். ஒரு பெண் கல்வி கற்றால் குடும்பமே கற்றதற்குச் சமம் என்ற சிந்தனையை மறந்து விடுகின்றனர்.

பெண்களின் இன்றைய முன்னேற்றத்துக்கு அவள் பெற்ற கல்வியும் ஒரு காரணமாக இருக்கிறது. இன்று படிப்பிலும் சாதனை படைக்கின்றாள். படிக்காத பாமரர்கூட இன்று தன் பெண் பிள்ளைகளை நகர்புறத்தில் படிக்க வைக்கின்றனர். காரணம் எல்லா முன்னேற்றங்களும் கற்றலில்தான் உள்ளன என்பதால் படிப்பு இருந்தால்தான் ஊர், உலகம் தெரியும். படிப்பு இருந்தால்தான் நல்ல வேலைக்குப் போக முடியும். நல்ல வேலைக்குப் போனால்தான் நிறைய உழைத்து தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்ற முடியும். கல்வியின் மூலம்தான் எம் வாழ்வை எவ்வாறாயினும் மாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணம் பெண்ணுக்கு உருவாகிவிட்டது.

இருப்பினும் அநேக சமூகங்களில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாகக் கல்வி பெறும் வாய்ப்பைப் பெறவில்லை. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்ற பெண்ணிய இயக்கங்கள், அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு போன்றவை பெண்களுக்கான சம கல்வி வாய்ப்புகளை ஓரளவு ஏற்படுத்தித் தந்தன. இன்று சில மேலை நாடுகளில் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி பெண்கள் ஆண்களைவிட அதி உயர் கல்வியைப் பெறுகிறார்கள். ஆனால் இன்னும் பல நாடுகளில் பெண்களின் கல்வி ஆண்களை விடப் பின்தங்கியதாகவே உள்ளது. இருந்தும் அந்த நாடுகளிலும் பெண்கள் தமது உழைப்பால் முக்கியத்துவம் பெறுகின்றார்கள் என்றால் அது மிகையில்லை. உதாரணமாக பெருந்தோட்டத் துறையில் பணியாற்றும் பெண்களைச் சொல்லலாம்.

இன்று பல்வேறு துறைகளில் பெண்கள் உயர் நிலையை அடைய வேண்டியிருக்கிறது. அது கல்வித் துறையில் மட்டுமன்றி, ஊடகம், மருத்துவம் மற்றும் சட்டத்துறைகளில் உயர் நிலையை அடைந்த பெண்களின்பால் எமது சமூகம் அதிக தேவையுடையதாக இருக்கின்றது.

ஒரு பெண் தன் காலில் நிற்கும்போது - தன்னால் சம்பாதித்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வரும்போதுதான் அவர்களுக்கு சுதந்திரமும் சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் கிடைக்கின்றன.

உழைக்கின்ற மருமகளை அவளது மாமியாரால் அதிகம் கட்டுப்படுத்த முடிவதில்லை. அதிகாரம் செய்யவும் முடிவதில்லை. மாறாக மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றது. முன்னேற விரும்பும் பெண்கள் இந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கிள்ளி எறிய வேண்டும்.

அதற்குப் பெண்கள் முதலில் கற்க வேண்டும். இன்றைய பெண்கள் அதைச் சரிவர நிறைவேற்றி வருகின்றனர் என்றால் அது மிகையில்லை. ஆனாலும் பின்தங்கிய பிரதேசப் பெண்களுக்கும் இந்தப் பழக்கத்தை வலியுறுத்தி அவர்களையும் எம் பக்கம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கென பெண் விழிப்புணர்வு, செய லமர்வுகளை நடத்தி அவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுக்க வேண்டும். அத்துடன் பெண் ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும். அதுவே பெண்ணின் வெற்றி என்பது எனது கருத்து. வெற்றிக்குத் தேவை பொருளாதாரச் சுதந்திரம். அதாவது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, வாழ்வதற்குத் தேவையான பொருளாதார நிலைதான் அவளுக்கு உறுதுணையாகும். அப்படியென்றால் பின்தள்ளப்பட்டிருக்கும் பெண்கள் சமுதாயம், அடுத்த நூற்றாண்டில் வெற்றிச் சிகரங்களை எட்ட, அவர்களுக்கு இன்று அவசியமானது கல்வி, உலக அறிவு, தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை என்பன மட்டுமே.

## பால்நிலை சமத்துவத்தை பாடசாலையிலிருந்து தொடங்க வேண்டும்

அடுப்படியே உலகம் என்று பெண்களுக்காக வகுக்கப்பட்ட வாழ்க்கை முறை இன்று பல மாறுதல்களை அடைந்திருந்தாலும் பெண்கள் இன்னும் பயணிக்க வேண்டிய தூரம் அதிகமானதே. பெண்கள் இன்று பல துறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்ற ஒருபக்க நியாயப்பாடுமிக்க கருத்துக்களும் பெண்களுக்கு சமத்துவம் கிடைக்கப்பெற்றுவிட்டதென்ற நியாயப்பாடுகளும் சமூகத்தில் முன்மொழியப்பட்டே வருகின்றன.

அக்கருத்துக்களுக்கான அடிப்படை, பெண்கள் ஒவ்வொரு துறையிலும் கால்பதித்துள்ளனர் என்பதே. அப்படியே கால்பதித்திருந்தாலும் அவர்கள் சமத்துவமாக மதிக்கப்படுகின்றார்களா? சுரண்டல்கள் என்பதும் இரண்டாந்தரமாகப் பார்க்கப்படும் அடிமட்ட சிந்தனைகளில் இருந்தும் பெண்கள் விடுபட்டு விட்டார்களா? என்றால் அவை இன்னும் அடையப் படவில்லை என்பதே பெண்கள் தரப்பு நியாயப்பாடாக காணப்படுகின்றது.

பிரபஞ்ச உருவாக்கத்தில் பெண்ணின் பங்கு அளப்பரியது. ஒரு பெண் தனக்கு குழந்தைகள் போதுமென்று தானே தீர்மானித்தாலும்கூட அதற்கான அனுமதியை ஆணே வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் எமது சமூகத்தில் காணப்படுகின்றது.

வீதியில் செல்லும் ஒரு பெண்ணை தமக்கு சமமானவள் என்று நினைப்பவர்கள் எத்தனைபேர்தான் உள்ளனர்.

கல்வித்துறை முதல் அனைத்து துறைகளிலும் பெண்கள் உயர்ந்த இடத்தை அடைந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்து என்பதும் அவர்கள் சார்ந்த துறைகளில் எதிர்நோக்கும் சவால்களும், அளப்பரியன. இன்று பாடசாலை முதல் வைத்தியசாலை வரை அனைத்து இடங்களிலும் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன. பெண்கள் பாதுகாப்பற்றவர்களாகவும் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாகவும் காணப்படும் நிலை இன்று அதிகரித்துவிட்டது.

பெண்களின் துன்புறுத்தல்களுக்குக் காரணக்கர்த்தாக்களாகவும் அதேநேரத்தில் பாதுகாவலர்களாகவும் ஆண்கள் இருப்பது எமது சமூகத்தின் இயலாமையை எடுத்துக்காட்டுகின்றது. ஆண், பெண் சமத்துவம் என்பது எமது சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் என்றால் 'பெண் வன்முறை', 'பெண் பாதுகாப்பு', 'இரண்டாம்தர நிலை' என்ற பதங்களுக்கான தேவை இன்று இருந்திருக்காது.

பால், பால்நிலை தொடர்பான பாடங்கள் கல்வித் திட்டங்களில் இணைத்துகொள்ளப்படுவது இன்றியாமையாத தேவையாக உள்ளது. ஒரு குழந்தை குடும்பத்தில் இருந்து அடுத்தபடிக்கு காலடி எடுத்து வைப்பது என்றால் அது பாடசாலைப் பருவத்தில்தான். மாணவப் பருவத்திலே ஆண், பெண் சமத்துவம் வலியுறுத்தப்படுமானால் அதுவே சமூக மாற்றத்துக்கு காரணமாக அமையும்.

பக்கச்சார்பற்ற சமசந்தர்ப்பம் பெண்களுக்கு வலியுறுத்தப்படுவதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

அரசியல், தலைமைத்துவம் சார்ந்த விழிப்புணர்வு என்பது பெண்களுக்குத் தேவைப்படும் ஒன்று. இதுசார்ந்த செயற்திட்டங்களில் ஈடுபடுவதற்கு பெண்கள் சார்ந்து இயங்கும் நிறுவனாங்கள் முன்வர வேண்டும்.

இன்றைய பெண் பாதுகாப்பு, பெண் வன்முறைகள் என்பவை எந்தெந்த மட்டங்களில் இருந்து எழுகின்றன என்பதை அறிந்து அதற்கு முற்றுப்புள்ளியிட்டால் மட்டுமே பெண் சமத்துவமென்பது சாத்தியமானது.



அருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 06 10 2013 ஞாயிற்றுக்கிழமை



# எயிட்ஸ் நோய்க்கு காளானிலிருந்து புதிய மருந்து

எயிட்ஸ் நோய்க்கு காளான்களில் இருந்து துரித நிவாரணம் அளிக்கும் மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட விருக்கிறது.

இந்தத் தகவல் ரஷ்யநாட்டு விஞ்ஞானிகளிடமிருந்து வந்துள்ளது. ஒரு வகை மரங்களில் முளைக்கும் சாகா என்றழைக்கப்படும் காளான்களில் நடத்தப்பட்டுள்ள ஆய்வுகள் நம்பிக்கை அளிக்கும் விதத்தில் காணப்படுவதாகவும் அதனால் இந்த ஆய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ரஷ்யாவில் நொவொசிபேர்ஸ்க் என்ற இடத்துக்கு அருகில் அமைந்துள்ள வெக்டர் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகையில் மூன்றுவிதமான காளான்களை தாங்கள் ஆய்வுக்குட்படுத்தியதாகவும் சாகா வகை காளான்கள் நம்பிக்கையூட்டும் வகையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காளானிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நச்சுத்தன்மை மிகக் குறைவாக இருந்ததாகவும் நுண்கிருமிகளுக்கு எதிராக வேலை செய்யும் சக்தியை அதிகமாகக் கொண்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறியது. அவை இன்புளுவென்சா, பெரியம்மை, எச்.ஐ.வி. போன்ற வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறப்பாக பயன்படக்கூடியவை என்கிறார்கள் அவர்கள்.


சைபீரியாவில் பலநூற்றாண்டு காலமாக அங்குள்ள மக்களால் காளான்கள் ரோக நிவாரணிகளாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. சாகா காளான்களில் புற்று நோயைக் குணப்படுத்தும் அம்சங்களும் காணப்படுவதாக நம்பப்படுகின்றது.



# அதிவேக பறவை

பறவைகளில் அதிவேகமாகப் பறக்கும் பறவை பெரிக்ரின் பால்கன் (Peregrine Falcom) என்றழைக்கப்படும் ஒருவகை பருந்தையே குறிப்பிடு கிறார்கள். பருந்து அல்லது வல்லூறு என்று நாம் அழைக்கும் பறவை இனத்தைச் சேர்ந்த இந்த வகை பால்கன்கள் வடஅமெரிக்காவில் டக்ஹாக் அல்லது பெரகிரைன் என்று அழைக்கப்படுகின்றது.

பெரிய அண்டங்காக்காவின் அளவு பெரிதாகவுள்ள இந்தப் பறவையானது முதுகு பாகத்தில் நீலமும் பழுப்பு நிறமும் கொண்டது. வயிற்றுப் பாகம் வெண்மையாகவும் கறுப்புத் தலைப்பாகமும் மீசையும் கொண்டிருக்கும். இந்தப் பறவை வேட்டையாடும் போது பறக்கும் வேகம் மணிக்கு 322 கி.மீ. வேகத்தை எட்டிவிடுவதுண்டு. இந்தப் பறவையின் மிகக் கூடிய வேகமாக பதியப்பட்டிருப்பது மணிக்கு 389 கி.மீ. ஆகும். மலைச்சாரல்கள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள், கரையோரப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. பெரும்பாலும் 15.5 வருட காலம் இது உயிர்வாழக் கூடியது என்று கணிக்கப்பட்டுள்ளது.



# வேகம் மிக்க மீன்



நீரின் மேலாக பாய்ந்தும் மிக வேகமாக நீந்தியும் செல்லும் தன்மை கொண்ட இந்த மீன் 4.8 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தைக் கடக்க வல்லது.

செயில்பிஷ் என்றழைக்கப்படும் இந்த வகை மீன்கள் கடற்பிரதேசங்கள் எங்கும் வெப்பமாக உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் நீல நிறத்துடன் வெளுப்பாகவும் காணப்படுகின்றன. இந்த மீனின் விசேடம் என்னவென்றால் சிலவகை கப்பல்கள், படகுகளில் காணப்படும் பாய்களைப் போல் முதுகுப் பகுதியில் முழுமையாக மூடிக் கொள்ளும் அளவுக்கு இறகு போன்ற அமைப்பு காணப்படுவதாகும். சில வகை மீன்களைப் போன்று நீளமான சொண்டு இருக்கும். இந்த மீனானது மணிக்கு 110 மைல் வேகத்தில் நீந்தக் கூடியது. முதுகில் அமைந்துள்ள பாய் போன்ற அமைப் பானது எப்பொழுதுமே சரிவாகவே காணப்படும். முதுகின் மீது சரிந்து கிடக்கும்- ஆனால் அந்த மீன் அச்சுறுத்தலுக்கு உள்ளானால் அல்லது உணர்ச்சிவசப்படுமானால் அது நிமிர்ந்து விறைத்துக் கொள்ளும். அப்போது வழமையை விட பெரிதாகவும் காணப்படும். இந்த மீன் தேவை யேற்படும்போது தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை யுடையது. நீரின் மேலாக பாய்ந்தும் மிக வேகமாக நீந்தியும் செல்லும் தன்மை கொண்ட இந்த மீன் 4.8 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தைக் கடக்க வல்லது.

# அதிவேக விலங்கு

சீட்டா (Cheetah) என்றழைக்கப்படும் ஒருவகை சிறுத்தைப்புலியே உலகில் மிக வேகமாக ஓடக் கூடிய மிருகம் என்று கணிக்கப்பட்டுள்ளது. வேறு எந்த மிருகத்தையும் விட வேகத்தில் இதனால் ஓடமுடியும். மணிக்கு 112-120 மைல் வேகத்தில் ஓடக் கூடிய சீட்டா மூன்று நிமிடங்களில் 100 கி.மீ. வேகத்தை எட்டிவிடக் கூடியது. ஆபிரிக்கா, மத்திய கிழக்கின் சில பகுதிகள் இவைகளின் வாழ்விடங்களாகும். இவை புலிகள் இனத்தை ஒத்திருந்தாலும் கர்ஜிப்ப தில்லை. ஆனால் ஒருவித ஒலியை எழுப்புவதாகக் கருதப்படுகின்றது. மான்கள் போன்ற சிறு மிருகங்களை வேட்டையாடி இது உணவாக்கிக் கொள் ளும். பாலைவனக் காடுகள், புதர்கள் பற்றைகளில் இது வாழும்.



அசை போட ஒரு விடயம் 94

ரம்யன்

# உலகின் அதிவேக மனிதன்

உலகத்தில் இன்று உயிர் வாழ்கின்ற மனிதர்களில் மிக வேகம் கூடியவர் என்று யாரை சொல்லலாம்?


நிச்சயமாக ஜமெய்க்கா நாட்டவரான உசேன் செய்ன் வியோ போல்ட் (உசேன் போல்ட்) என்பவர்தான் என்று எந்த ஒரு பள்ளிக்கூட மாணவனும் பதில் அளிப்பான். 1986 ஒகஸ்ட் 21 ஆம் திகதி பிறந்தவரான 27 வயது இளைஞரான இவர் உலகின் மிக வேகமான மனிதர் என்று கருதப்படுகின்றார். ஓட்டத்தில் இவரது வேகத்தை கருதி ஊடகவியலாளர்கள் இவரை மின்னல் வேக போல்ட் என்று அழைக்கிறார்கள்.

தடகள ஓட்ட வீரர்களில் உலகில் இன்று மிக உயர்ந்த அளவிலான வருமானத்தை உடையவர் போல்ட். 2013 ஆம் ஆண்டு உலக செம்பியன்ஷிட் போட்டிகளில் மூன்று தங்க பதக்கங்களை வென்றவர். இந்தப் போட்டியின் 30 வருடகால சரித்திரத்தில் மிக வெற்றிகரமான வீரர் என்று பேசப்படும் ஒருவராக போல்ட் இருந்து வருகிறார். 2008 நீபொக் ஒலிம்பிக்ஸ் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.72 செக்கன் வேகத்தில் தனது முதலாவது உலக சாதனையை நிலைநாட்டினார். அதையே 9.58 செக்கனில் ஓடி அடுத்த ஆண்டில் புதிய சாதனையை நிலைநாட்டினார். அதுவே இன்றும் நிலைபெற்றுள்ளது.

ஓடத் தொடங்கிய மாத்திரத்தில் தொடர்ச்சியான பலப்பிரயோகத்தில் காணப்படுபவரான போல்ட் சில கட்டங்களில் மெதுவாக வேகத்தைக் கூட்டி உயர்மட்ட வேகத்தை எட்டுவதைக் காணலாம். முதல் நான்கு ஐந்து செக்கன்களில் வேகத்தை அதிகரிக்கும் அவர் ஓட்டத்தின் முடிவுவரை பெரும்பாலும் 12.2 M/S வேகத்தை மேற்கொள்வார்.

போல்ட் அதிகமாக முதலில் விரும்பியது கிரிக்கெட் விளையாட்டைத்தான். அதிலேயே நீடித்திருந்தால் தாம் ஒரு வேகப் பந்துவீச்சாளராக வந்திருப்பார் என்று தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டென்டுல்கர், போல்ட்டின் விருப்பமான வீரர்களில் ஒருவர்.


தடகள ஓட்ட வீரர்களில் உலகில் இன்று மிக உயர்ந்த அள விலான வருமானத்தை உடையவர் போல்ட். 2013 ஆம் ஆண்டு உலக செம்பியன்ஷிட் போட்டிகளில் மூன்று தங்க பதக்கங்களை வென்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்க வேண்டிய — கிடைத்த — நிலை நிறுத்தப்பட்ட

# கண்ணியம்



2013 செப்டெம்பர் 21ஆம் நாள் இலங்கையர்களுக்குச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாள். ஒரு புது யுகத்தின் ஆரம்ப நாள்.

பல தசாப்தங்களாக வன்முறை, மோதல்களினால் துன்புற்றிருந்த வடக்கு மாகாணத்தில் ஜனநாயக முறைமையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாக சபை பதவிக்கு வந்துள்ளது. ஜனநாயக விழுமியங்களையும் சுதந்திரத்தையும் போற்றுபவர்களுக்கு, அவர்கள் எந்த மதத்தை, இனத்தை சேர்ந்தவராக அல்லது மொழியைப் பேசுபவராக இருந்தாலும், வடக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் மட்டற்ற மகிழ்ச்சியை தந்திருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழரசுக் கட்சி (ஃபெடரல் கட்சி) ஆரம்பித்த அஹிம்சை போராட்டத்துடன் விடுதலைக்கான முயற்சி ஆரம்பமாகியது. அந்த அமைதி வழி போராட்டம் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டதை தொடர்ந்து ஆயுதம் ஏந்திய போராட்டம் வெடித்தது. மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான நீண்டதொரு காலகட்டம் அழிவிலும் நாசத்திலும் கடந்து முடிந்தது. தோல்விகளுடனும் அவமானத்துடனும் கடந்துபோன பல ஆண்டுகளுக்குப் பின் தமிழ் பேசும் மக்கள் பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றியானது, தமது உரிமைகளை ஒருநாள் ஜனநாயக வழிவகைகள் மூலம் அடையலாம் என்ற நம்பிக்கையை நம் மக்களின் மனங்களில் மீண்டும் தோற்றுவித்துள்ளது. தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்கு 13ஆவது சட்ட மூலம் எவ்வகையிலும் போதுமானதல்ல என்ற கருத்தை தமிழரசுக் கட்சி பல காலமாக வழியுறுத்தி வந்துள்ளது. இந்த அடிப்படையில் அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகளுக்கான முயற்சிகளை வன்முறையற்ற, ஜனநாயக வழிமுறையில் முன்னெடுப்பது எம்முடைய நோக்கமாகும். அதுபோன்ற ஒரு முயற்சிக்கான நம்பிக்கையை இந்த தேர்தல் நமக்குள் துளிர் விடச் செய்துள்ளது.

## கிடைக்க வேண்டிய கண்ணியம்

பல காலங்களாக வடக்கில் ஜனநாயகம் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளது. தேர்தலுக்கான தினம் வரை பல வாரங்களாக எண்ணற்ற சம்பவங்கள் வடக்கில் நடைபெற்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மட்டுமன்றி வேட்பாளர்கள் அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் ஏன் தாக்குதலகளுக்கும்கூட ஆளாகினர். வாக்களிக்கும் தினத்திலும் அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் முற்றுப் பெறவில்லை என்பதோடு இவற்றை இராணுவத்தினரே முன்னின்று மேற்கொண்டனர் என்பதே கவலை தரும் விடயமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளில் தயக்கமின்றியும் வெளிப்படையாகவும் இராணுவம் ஈடுபட்டதோடு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகளை ஒடுக்கும் கைங்கரியத்திலும் இராணுவம் வெட்கமின்றி பகிரங்கமாகவே களமிறங்கியிருந்தது. இதுபோன்ற சூழலி லேயே வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு அரசை கூட்டமைப்பு வலியுறுத்தி வருகின்றது. எது எவ்வாறிருந்த போதிலும், அடக்குமுறையை தோல்வியுறச் செய்து மக்களின் ஆணை வெற்றி பெற்றதோடு வடக்கு மக்களின் மன உறுதி பற்றி அரசு செய்திருந்த மதிப்பீடு முற்றிலும் தவறானது என்பதும் உறுதியாகியுள்ளது. வன்முறைக்கு முகங்கொடுத்தவர்களாக வடக்கு மக்கள் வெளிப்படுத்திய திடசங்கற்பம் உண்மையில் அகிலத்தார் மெச்சத் தகுந்ததாகும்.

ஒரு மாபெரும் வெற்றியை நாம் அடைந்திருந்தாலும் அதன் களிப்பில் மூழ்கிவிட இது தருணம் அல்ல. நீண்ட நெடுங்காலம் நடைபெற்று வந்த மோதல் காரணமாக கணக்கிட முடியாத மனித உயிர்களை நாம் இழந்துள்ளோம். பெரும் எண்ணிக்கையானோர் நிரந்தர ஊனமுற்றோராகி யுள்ளனர். இன்று சாத்தியமாகியுள்ள இந்த வெற்றி பல உயிர் தியாகங்கள் மற்றும் இழப்புகள் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்கள் செய்த தியாகங்களுக்கு நாம் என்றென்றும் கடன்பட்டவர்களே. இது போன்றதொரு பின்னணியில் நாம் பெற்றுள்ள இவ்வெற்றியை நாம் அதிக ஆரவாரமின்றி அமைதியாகக் கொண்டாடுவதே பொருத்தமாகும். நிலை உயரும் போது பணிவு கொள்வதே போற்றத்தகு உயர் பண்பாகும்.

## கிடைத்த கண்ணியம்

அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராகப் பல ஆண்டுகளாக நாம் குரல் கொடுத்து வந்துள்ளோம். ஆனால் நம்முடைய போராட்டம் பெரும்பாலும் தனியாக மேற்கொள்ளப்பட்டதொரு போராட்டமாகவே இருந்து வந்துள்ளது. பின்விளைவுகளைப் பற்றி அஞ்சாது மேற்கொள்ளப்பட்டு வந்த அக்கிரமங்களுக்கு எதிராக நாம் குரல் எழுப்பும் சமயத்தில் ஏனைய கட்சிகள் வாய் மூடி மௌனிகளாகவே இருந்து வந்துள்ளன. பெரும்பான்மையின் மனோ இச்சைக்கு துணை போனவர்களாக, உறுதியற்ற நிலையில் ஏனையோர் இருந்த தருணத்தில் இந்த நாட்டினை [illegible] சட்ட மூலத்தை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் தனியாக மேற்கொண்டு வந்தோம். இதன் காரணமாக தெற்கில் இருப்பவர்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள நன்மக்களின் பாராட்டை நாம் பெற்று வந்தோம்.

தன்மானம் என்பது அபிவிருத்தியை விட முக்கியமானது என நம்பும் வடக்கு மக்களின்

> தன்மானம் என்பது அபிவிருத்தியை விட முக்கியமானது என நம்பும் வடக்கு மக்களின் உள்ளங்களை கூட்டமைப்பின் கொள்கைகள் வென்றெடுத்துள்ளன.


(25 ஆம் பக்கம் பார்க்க)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர.பரிஷித், தரம்-6ஏ, யாழ். இந்துக் கல்லூரி



இ.ரஸ்மினி, தரம்-8ஏ,
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



ம.பபிசலா, தரம்-9,
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



லோ.சிந்துயா,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி



மூ.டிலக்சன், தரம்-9,
யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்



சு.அனபாயன்,
யா/ சித்தங்கேணி பாலர் பாடசாலை


## "கு" வரிசைப் பழமொழிகள்

- குட்டிச் சுவரிலே தேள் கொட்ட, தண்ணீர் முடாவில் நெறி போட்டதாம்.
- குட்டின குட்டும் குழியிற் பாய்ந்த தண்ணீரும் திரும்ப வருமா?
- குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்.
- குத்திக் குத்தி மாவிடித்தாலும், குத்தாணிக்கு ஒரு கொழுக் கட்டைகூடக் கிடையாது.
- குதிரை இல்லா ஊருக்கு கழுதை தம்பிரான்.
- குதிரை எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்.
- குதிரை குருடானாலும் கொள் உண்பதில் பின்னிற்காது.
- குபேர நகர் கொள்ளை போனாலும் அதிஷ்டமில்லாத வனுக்கு அகப்பைக் காம்புகூட அகப்படாது.
- குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கச் சென்று குருடன் கூத்தை பழித்தான், செவிடன் பாட்டைப் பழித்தான்.

சு.ஆகீசன், தரம்-5டி,
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி.

## மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்
மாமரம் தந்த மாம்பழம்
மஞ்சள் நிற மாம்பழம்
பிள்ளையார் பெற்ற மாம்பழம்
முருகனைப் பிரித்த மாம்பழம்
சிறுவர் சுவைக்கும் மாம்பழம்
அணில் கடிக்கும் மாம்பழம்
நான் விரும்பும் மாம்பழம்



கி.வாகினி,
வண்ணை, காமாட்சி முன்பள்ளி.

## கர்வம்



ஒரு குளத்தில் ஏராளமான மீன்கள் வசித்து வந்தன. அவற்றில் ஒருதங்க நிற மீனும், ஒரு கெளுத்தி மீனும் நண்பர்களாக இருந்தன. தங்க நிறமீனுக்குத் தான் அழகாகத் தங்கம் போல் மினுமினுப்பாய் இருப்பதால் கர்வம் அதிகம். கெளுத்தி மீனிடம் நட்பாக இருந்தாலும், அடிக்கடி அதன் தோற்றத்தைக் கண்டு கேலி செய்யும்.

ஒருநாள், தங்க மீன் மிக ஆனந்தமாய் நீரில் குதித்துக் குதித்து கும்மாள மடித்தது. அப்போது அந்தப் பக்கம் கெளுத்தி மீன் வந்தது. அதைப் பார்த்ததும் தங்க மீனுக்கு குஷி அதிகமாகி விட்டது. ஹாய்... இன்றும் என் அழகைப்பார். என் மினுமினுப்பைப்பார்; வசீகரத்தைப்பார். நாளுக்கு நாள் எனது மெருகு எப்படிக் கூடிக் கொண்டே போகிறது பார். உலகில் என் போன்ற அழகிய மீன் எங்கு இருக்கமுடியும் ? இறைவன் உன்னையும்தான் படைத்திருக்கிறானே..! அவலட்சணமாய், கருமை நிறத்தில் சொரசொரப்பாய்... என்ன பிற வியோ நீ..! இந்தக் குளத்தில் என்னைப் போல் வேறு யாரும் இல்லாததால் உன் னுடன் பழக வேண்டிய சூழ்நிலை. எல்லாம் என் தலையெழுத்து" என்றது.

"தங்க மீனே! நம்மையெல்லாம் படைத்தவன் இறைவன். உன்னை இத்தனை அழகாய் படைத்ததற்கும், என்னை இத்தனை அவலட்சணமாய்ப் படைத்த தற்கும் ஏதேனும் வலுவான காரணம் இருக்கும். அதனால் இறைவனுடைய செயலைக்குறை சொல்லாதே. எனது தோற்றம் இப்படி இருக்கிறதே என்று எண்ணி என்றுமே நான் கவலைப் பட்டதில்லை. எனக்கு இந்த உடலமைப்பே போதும். ஆனால், ஒரு விடயம்..! உனக்குப் பெருமை அதிகமாகி விட்டது. இது நல்ல தல்ல. பெருமை உள்ளவர்களை கடவுள் எதிர்த்து நிற்பார். விரைவில் உனக்குப் பாடம் கிடைக்கும்!" என்று அமைதியாகச் சொன்னது. "சரிதான்! இது உன் இயலாமையின் வெளிப்பாடு. நிச்சயம் உன்னையே உனக்குப் பிடிக்க வில்லை. அதனால் பிடித்தது போல் எதையோ சொல்லிச் சமாளிக்கிறாய். சரிவிடு! சில சமயங்களில் உன்னை நினைத்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. சரி... சரி... உன்னுடன் பேசிக் கொண்டிருப்பதால் என் மகிழ்ச்சி கெடுகிறது. நான் வருகிறேன்!" என்று சொல்லி விட்டு துள்ளிக் குதித்துத் திரும்பி, ஆனந்தமாகப் பாட்டுப் பாடியபடி நீரின் மேற்பரப்புக்குச் சென்றது தங்க மீன்.

திடீரென்று, தன்னை யாரோ கவ்விப் பிடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டு, நிமிர்ந்து பார்த்தது. ஒரு கொக்கின் அலகில் அது சிக்கிக் கொண்டிருந்தது. "ஐயோ! கொக்கு!" என்று அலறியது தங்கமீன். "ஆமாம்! கொக்குத்தான். என் வாழ்நாளில் உன்னைப் போன்ற அழகிய மினுமினுப்பான மீனை நான் பார்த்ததே இல்லை. குளத்தின் ஆழத்திலேயே என்னமாய் ஜொலிக்கிறாய்; பிரமாதம்.இன்று எனக்கு நீ அற்புதமான விருந்து." என்று கரகரத்த குரலில் பேசியது கொக்கு. "ஐயோ! என்னை விட்டு விடு!" என்று சொல்லிக் கதறித் துடித்தது தங்கமீன். "விட்டு விடவா? அடப் பைத்தியமே!" என்று அதைக் கொத்தித் தின்றது கொக்கு.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கெளுத்தி மீன், "தங்க நிற மீனே! மினுமினுப்பால் தலைக் கனம் பிடித்துத் திரிந்தாயே. அந்த மினுமினுப்பே இன்று உன் உயிருக்கு உலைவைத்து விட்டது பார்த்தாயா? என்னுடைய அசிங்க மான கரிய நிறம் கொக்கின் பார்வையில் இருந்து என்னைத் தப்பிக்க வைத்து விட்டது" என்று சொல்லி விட்டு, குளத்தின் ஆழத்திற்குச் சென்றது.

## தாவரங்கள் ஏன் நகர்வதில்லை தெரியுமா?

அசைவு என்றால் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத் துக்கு நகர்வது எனப் பொருள்படும். பறவைகள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் நகர்வதன் முக்கிய நோக்கம் உணவைத் தேடிக் கொள்வதே. நாம் தண்ணீர் குடிக்க, ஆற்றைத் தேடிச் செல்லவேண்டும். உணவு உண்ண வேண்டும் என்றால், அது இருக்கும் இடத்துக்குச் செல்ல வேண்டும். தாவரங் களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. அவற்றின் முக்கிய உணவான காற்றையும் சூரிய ஒளியையும் இலைகள் வழி யாகப் பெற்றுவிடுகின்றன. மண்ணில் இருந்து வேர்கள் மூலம் நீரையும் உறிஞ்சிக் கொள்கின்றன. தமக்குத் தேவை யான உணவைத் தாமே தயாரித்து விடுகின்றன. எனவே அவற் றுக்கு அசைவதற்கான தேவை ஏற்படாமல் போய்விடுகிறது.

ஞா.சஞ்ஜீவன், தரம்-10பி,
இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி.





## விடை தெரியுமா ? 231

### உங்களுக்கும் பரிசுகள்

1. உலக சிறுவர், முதியோர் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகின்றது?
2. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
3. கதிர்கள் ஊடுருவாத உலோகம் எது?
4. இலங்கையின் தெங்கு முக்கோண வலயம் எது?
5. காலை நேரத்தில் பாடப்படும் இராகத்தின் பெயர் என்ன?

### விடைகள் 229

1. ஆஸ்திரேலியா
2. தமிழ்
3. ஒக்ரோபர் -09
4. கோலாலம்பூர்
5. வாத்து

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 12.10.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (228)

- ♥ க.தர்ஷன், தரம்-9G, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
- ♥ ஆ.பாலமதுஜா, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பா.
- ♥ சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியின் பயன்பாடுகள் தெரிந்த பிறகு அலுவலகங்களில் எல்லாம் கணினிகள் குடியேறின. இதைப் புரிந்து கொண்ட மென்பொருள் நிறுவனங்கள் அலுவலகங்களின் பயன்பாட்டுக்குரிய மென்பொருள்களை எழுதத் தொடங்கின.
அலுவலகங்கள் என்றாலே வியாபார விடயமாகக் கடிதங்கள் எழுதுவதென்பது இன்றியமையாத ஒன்று. அதுவும் மின்னஞ்சல் வராத அந்தக் காலத்தில் ஒவ்வோர் அலுவலகத்திலும் ஒரே நாளில் நூற்றுக்கணக்கான கடிதங்களை அனுப்புகின்ற நிலைமை இருந்து வந்தது.
அதுவரையில் தட்டச்சுசெய்து தப்பும் தவறுமாக, அடித்தல் திருத்தலுடன் கடிதங்களைத் தயார் செய்து கொண்டிருந்தனர். இந்தக் குறைகளைக் களைந்து கணினியிலேயே கடிதங்களைத் தயார் செய்யும் நோக்கில் உருவான மென்பொருள், 'வேர்ட் ப்புரொஸஸர்'
இதன் மூலம் விரைவாக டைப் செய்யவும் பிழைகளைத் திருத்தவும் வசதி செய்யப் பட்டது. இந்த வேர்ட் ப்புரொஸஸர்' மென்பொருளில் அப்போது பிரபலமாக இருந்தவை என்று வேர்ட் ப்புரொஸஸர் (word Processor), வேர்ட் ஸ்டார் (word star) என்ற இரண்டையும் கூறலாம். மிகவும் அவசியமான இந்த மென்பொருள்களை ஒவ்வொரு அலுவலகத்திலும் வாங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த பில்கேட்ஸ், மைக்ரோசொஃப்டிலும் வேர்ட் ப்வேர்ட் ப்புரொஸஸரைத் தயாரிக்க முடிவு செய்தார்.
இந்த விடயத்தில் மைக்ரோசொஃப்ட் குழுவினருக்கு எவ்வித முன் அனுபவமும் இல்லையென்பதால், ஜெரொக்ஸ்பார்க் (XEROXPARC) என்ற ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சார்லஸ் சீமோன்யீ என்பவரை மைக்ரோசொஃப்ட்டில் இழுத்துப் போட்டார் பில்கேட்ஸ்.
சீமோன்யீ மேலும் பல நிபுணர்களை மைக்ரோசொஃப்டுக்கு அழைத்து வந்தார். அவர்களின் தலைமையில் தயாரிக்கப்பட்ட 'வேர்ட் ப்புரொஸஸருக்கு பில்கேட்ஸ் வைத்த பெயர் மைக்ரோசாஃப்ட் வேர்டு.
1983 ஒக்ரோபரில் இந்த "மைக் ரோசொஃப்ட் வேர்டு" வெளியானபோது அந்த அலுவலகமும் இதை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. காரணம், எல்லா அலு வலகங்களிலும் வேர்ட் ப்புரொஸஸர், வேர்ட் ஸ்ரார் மென்பொருள்களே கொடி கட் டிப் பறந்தன.
"மேற்கண்ட இரண்டையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு மைக்ரோசொஃப்ட் வேர்டு முன்னுக்கு வந்து விடும்" என்று நம்பிக் கொண்டிருந்த பில்கேட்ஸின் நம்பிக்கை தளர்ந்தது. "இந்த மைக்ரோசொஃப்ட் காலை வாரி விட்டதே" என்று பில்கேட்ஸ் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது இன்னொரு யோசனை பிறந்தது.
"பணம் கொடுத்து மக்கள் இதை வாங்கா விட்டால் என்ன? அவர்களுக்கு இதை இலவசமாகவே கொடுக்கிறேன்" என்று கூறி கணினி பத்திரிகை ஒன்றுடன் இலவச இணைப்பாக மைக்ரோசொஃப்டைக் கொடுத்துப் பார்த் தார். அப்போது கூட இது பெரிய அளவில் வெற்றிபெறவில்லை.
"இதை வெற்றிகரமாக எப்படி விற்பனை செய்வது?" என்று கேட்ஸ் குழுவினர் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த போது தான் அவர்களை நோக்கி மறுபடியும் ஓர் அதிர்ஷ்டக் காற்று அடித்தது.
கணினி தயாரிப்பில் மற்றொரு ஜாம்பவனாக விளங்கிய "ஆப்பிள்" நிறுவனம் தனது புகழ்பெற்ற 'மேகின்டொஷ்" கணினி களில் "மைக்ரோ சொஃப்ட் வேர்ட்" மென் பொருளைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தது.
அந்தக் கால கணினிகளிலேயே மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் அதே சமயம் மக்களிடம் புகழ் பெற்றிருந் ததாகவும் "மேகின்டொஷ்" கணினி விளங்கின! விற் பனையிலும் இவை உச்சத்தில் இருந்தன.
இந்தக் கணினிகளுடன் மைக்ரோ




# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

அழகிய பாண்டியன்



" மைக்ரோசொஃப்ட் வெற்றி கரமாக எப் படி விற்பனை செய்வது?" என்று கேட்ஸ் குழுவினர் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த போதுதான் அவர்களை நோக்கி மறுபடியும் ஓர் அதிர்ஷ்டக் காற்று அடித்தது.

சொஃப்ட் வேர்ட். இணையும்போது நூறு சதவிகித வெற்றிக்கு வாய்ப்புண்டு என்பதில் சந்தேகமில்லை. இப்படி ஒரு வாப்புக்காகவே காத்திருந்த பில்கேட்ஸ் மேகின் டொஷ் கணினிகளுக்கு ஏற்ற வகையில் "மைக்ரோசொஃப்பட் வேர்டை" மாற்றியமைப்பதில் முனைந்தார். அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார்.
மற்ற கணினிகளில் எடுபடாமல் தோல்வியுற்ற மைக்ரோசொஃப்ட் வேர்ட். மேகின் டொஷ் கணினிகளுடன் இணைந்த போது மாபெரும் வெற்றியைப் பெற்றது. அதுவரை விற்பனையில் ஐந்தாம் இடத்தில் இருந்த மைக்ரோ சொஃப்ட் குறுகிய காலத்திலேயே முதலிடத்தை எட்டிப் பிடித்தது.

## ஜம்பவின் தடாலடிகள்

ஒருநாள் ஜம்புலிங்கத்தின் பேரன் உலகில் மிக மிகச் சிக்கலான கேள்வியை அவரிடம் கேட்டான்.
"கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா?"
ஜம்புலிங்கத்துக்கு அதெல்லாம் சிக்கலான கேள்வியாகவே தெரியவில்லை. அவர் சொன்னார்,
"நீ முதலில் எதை ஓடர் பண்ணுகிறாயோ அது முதலில் வரும்."





யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில் நின்றபோது ஒருவர் ஜம்புலிங்கத்தைப் பார்த்துக் கேட்டார், இந்தியப் பி.எம். (பிரைமினிஸ்டர்) மன்மோகன் சிங் ஏன் மாலையில் நடைப் பயிற்சி செய்கிறார், காலையில் செய்யாமல்?" என்று கேட்டார்.
ஜம்புலிங்கம் அதற்குச் சொன்ன பதில், "மன்மோகன்சிங் பி.எம். (pm) தானே தவிர ஏ.எம். (am) அல்லவே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மீண்டும் மனந்தளராத விக்கிரமாதித்தர்கள்



சோபனா

நாங்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்கேல்ல. பரம்பரை பரம்பரையாச் செய்யிற தொழில். எப்பிடி விடமுடியும்? நிலத்தையும் வானத்தையும் நம்பித் தான் எங்கட வாழ்நாள். அதுதான் இந்த நிலத்தை உழ ஆரம்பிச்சிருக்கிறம்."

கந்தரோடை வெளியில் 35 வருடங்களுக்கு மேலாக விவசாயத்தையே நம்பி வாழும் 65 வயதான கந்தசாமி புழுதி உழவில் ஈடுபட்டபடியே தன் கவலைகளைப் பகிர்ந்து கொள்கிறார். இந்த வருட காலபோகத்தில் ஈடுபடும் விவசாயிகள் பரப்பரப்பு அடைந்திருப்பதைப் போல அவரும் ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கிறார்.

"போன வருஷம் எங்களுக்கு பெரும் நஷ்டம். வயலுக்கு செலவழிச்சது போக லாபம் என்றொண்டு கிடைக்கேல்ல. என்றாலும் எங்கட பிழைப்பைக் கைவிட முடியுமே? ஏதோ கடவுள் வழி காட்டுவார் என்ற நம்பிக்கையிலதான் இந்த வருஷமும் வயலுக்க கால் வைச்சிருக்கிறம்."

என்னதான் இழப்புக்களை சந்தித்தாலும் இந்த நம்பிக்கையும் விடாமுயற்சியும்தான் கந்தசாமி போன்ற விவசாயிகளை இன்னமும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

அவருக்கு 12 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. குத்தகைக்குக் கொடுத்தது போக ஒவ்வொரு வருடமும் குறைந்தது 4 ஏக்கர் நிலத்திலாவது விதைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் கந்த சாமி.

"முந்தியெல்லாம் நிலத்தை மண் வெட்டி போட்டு கொத்தி முடிக் கவே நான் கைந்து நாள்கள் வேணும். இப்ப அந்த கஷ்டம் இல்லைத்தானே. எல்லாத் துக்கும் மிசின் வந்திட்டுது. ஒரு மணித்தியாலத்தில நிலத்தைப் பண் படுத்தி முடிச்சுப்போடலாம். இப்ப எங்கட வயல் உழுது முடிஞ்சுது. நல்ல நாள் பார்த்து நெல் விதைக்கிறதுதான் அடுத்த வேலை." காத்துக் கொண்டி ருக்கிறார் கந்தசாமி. மழை ஒழுங்கா கப் பெய்து கைகொடுக்க வேண்டும் என்று கடவுகள் எல்லோரிடமும் வேண்டிக் கொள்கிறார்.

அண்மையில் பெய்து போன மழையை அடுத்து காலபோக விவசாயத்துக்கு எல்லாவிவசாயிகளும்தமது நிலங்களைத் தயார்ப்படுத்த ஆரம்பித்து விட்டனர். வடமாகாணம் முழுவதும் 85,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இந்த வருடம் நெல் உற்பத்தி மேற்கொள் ளப் படும் என்று விவசாயத் திணைக் களம் எதிர்பார்க்கின்றது. அதனடிப் படையிலான திட்டங்களையும் அது தயார்ப்படுத்தியுள்ளது.

குடாநாட்டில் கடந்த வருடம் ஏற்பட்ட எதிர்பாராத காலநிலை மாற்றம் நெல் உற்பத்தியில் பெரும்பாதிப்பை ஏற் படுத்தியது. இதனால் அறுவடை உள்ளூர் நுகர்வுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. ஏற்றுமதி செய்வதற்கு பெரிதளவில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதன் மற்றொரு விளைவாக விதை நெல்லை அடுத்த காலபோகத்துக்கு சேமித்து வைக்க முடியாத நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்பட்டிருந்தனர்.

"நாங்கள் இப்ப 25 வருசத்துக்கு மேலா எங்கட வயல் நிலத்தில நெல் தான் அதிகமாக விதைக்கிறனாங்கள். வேற பயிர்கள் நடுறதில்லை. போன வருசம் ஏமாந்திட்டம். இந்த வருடம் அப்படி நடக்காது. ஏழு ஏக்கர் நிலப்பரப் பில இப்ப நெல் விதைத் தாச்சு. மிச்ச நிலமும் உழுது கொண்டிருக்கிறம். இரண்டு நாளில அதுவும் உழுது முடிந்துபோய்விடும். கண்களில் நம் பிக்கை ஒளியுடன் சொல்லி முடித்தார்" முழுநேர விவசாயியான மோகன். "இனி வானம்தான் வழிகாட்ட வேண்டும்" என்றார் கைவிரித்தபடியே அவர்.

போருக்குப் பின்னரான சூழலில் யாழ். குடாநாட்டில் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பின் தொகை அதிகரித்திருக்கிறது. ஆனால் விவசாயம் வாழ்க்கைக்கான தொழிலாக இல்லை என்ற புறுபுறுப்பும் அதிகரித்திருக்கிறது.

எனினும் விவசாயத்தை இன்னும் மேம்படுத்தி, புதிய நுட்பங் களைப் புகுத்தி விவசாயிகளுக்குப் போதிய வருமானம் வருவதற்கான திட்டமிடல்களையும் உதவிகளையும் தாம் மேற்கொண்டு வருவதாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர். "வடமாகாணம் முழுவதும் 85,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல்லை உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறம். விதை நெல், உரம் ஆகிய அனைத்தும் கொள்வனவு செய்து கமக்கார அமைப்புகளூடாக வழங்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. போதுமான விதை நெல்லும் உரமும் கிடைக்கப்பெறும். மீதிநடவடிக்கைகளை விவசாயிகள்தான் மேற்கொள்ள வேண்டும்" என்கிறார் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார்.

போருக்குப் பின்னர் விவசாய நிலப் பகுதி அதிகரித்தாலும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டுள்ள பல நூறு ஹெக்டேயர் வயல் நிலங்கள் இன்னமும் தரிசாகிக் கொண்டிருக் கின்றன.

"நாங்கள் பரம்பரையாக விவசாயம் தான் செய்து வந்தம். இப்ப எங்களுக்கு அதுக்கான காணிகூட இல்லை. நிலம் இல்லாம எப்படி விதைக்கிறது? அதால வயல் செய்யிறதை விட்டுட்டு கூலி வேலைக்குப் போறம். எங்கட காணிகள் எப்ப கிடைக்குதோ அப்ப தான் எங்களால விவசாயம் செய்ய முடியும்" என்கிறார் சுந்தரலிங்கம்.

எப்படியிருந்தாலும் "தை பிறந்தால் வழி பிறக்கும்" எனும் எதிர்பார்ப்புடன் விவசாயிகள் இந்த வருட கால போகத் துக்கான முன்னாயத்தங்களில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்க வேண்டிய கண்ணியம் .......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளங்களை எமது கொள்கைகள் வென்றெடுத் துள்ளன. அதே போன்று, பொருளாதார அபிவிருத்தி, வசந்தம் போன்ற பசப்பான வார்த்தைகளைக் கூறித் தம்மை எவரும் எளிதில் ஏமாற்றி விட முடியாது என்ற செய்தியையும் வடக்கு மக்களை தெள்ளத் தெளிவாக அறிவித்து விட்டனர். இதன் மூலம் தேசத்தின் உண்மையான முன்னேற்றத்தை ஆசிக்கும். ஒத்த குறிக்கோள் உள்ள ஏனைய நன்மக்களின் அபிமானத்தையும் வடக்கு மக்கள் பெற்றுள்ளனர்.

இந்த நிலை மாற்றத்தை அரசு கூர்ந்து கவனித்தல் வேண்டும். ஜனாதிபதியின் செல்வாக் கும் மதில் மேல் பூனையின் நிலையை அடைந்துள்ளது. தனது நிலையை சீராக்கிக் கொள்வதற்காக தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவர் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம், அல்லது ஒரு சிலருக்கு வெற்றியை தேடித் தந்த, ஆனால் பெரும்பான்மையால் ஒதுக்கப்பட்ட ஒரு தலைவராக அவர் சரித்திரத்தில் ஒரு ஓரத்தில் இடம் பெறலாம். சுருங்கக் கூறின், தமிழ் பேசும் மக்களின் அபிமானத்தை அரசு கைப்பற்றுவதற்கான தருணம் இதுவே.

பேச்சை செயலாக மாற்றிக் காட்டுவதற்குத் தமக்குள்ள ஆர்வத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அதன் புதிய முதலமைச்சரும் வெளிப்படுத்தியுள்ளனர். 13ஆம் சட்ட மூலத்தின் வடக்கில் இருக்கின்றது என்பதை உலகிற்கு காண்பிப்பதற்கும் நாம் உறுதி பூண்டுள்ளோம்.

இவை மூலம் சிறந்த ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும் ஒரு நிர்வாகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக வடக்கு மாகாண சபையை திகழச் செய்வது நம்முடைய குறிக்கோளாகும். இதன் மூலம் நம்மைப் பற்றி நேச எண்ணம் இல்லாதவர்களின் அபிமானத்தை நாம் பெற முடியும் என்பது நமது நம்பிக்கை.

### நிலை நிறுத்தப்பட்ட கண்ணியம்

பெற்ற வெற்றியின் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாக, கடந்த காலத்தையும் நினைவு கூர்ந்த வண்ணம் புதிய பொறுப்புக்களை ஏற்க நாம் தயாராகும் இந்தத் தருணத்தில் சுய மரியாதையை பாதுகாப்பதோடு பரஸ்பர கண்ணியத்தையும் பேணத் தவறக் கூடாது என்பதில் நாம் அதிக அக்கறை கொண்டுள்ளோம்.

நம்மை விட ஏனையோர் எவ் விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதோடு கண்ணியம் எனப்படுவது சகலருக்கும் சொந்தமான ஒன்று என்பதைப் புரிந்து செயற்படும் போதே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுகின்றது. இதற்கு ரிஷி மூலம் நதி மூலம் பாராது சமத்துவத்துடன்



குறுகிய வழிகள் ஊடாக சுகாதாரம், கல்வி உட்பட்ட பல துறைகளில் பெரும் மாற்றங்களைச் செய்த வண்ணம் வடக்கை அபிவிருத்தி செய்யும் பிரம்மாண்டமான சவால் நம் முன்னே உள்ளது என்பதை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். இருப்பினும், வடக்கின் நிர்வாகத்தில் முறைகேடான கிடுக்கிப் பிடி ஒன்றை வைத்திருப்பதற்கு அரசு பிடிவாதமாக முயற்சித்த வருகின்றது. இதன் காரணமாக எமக்குள்ள சவால்களின் பிரம்மாண்டம் மேலும் அதிகரிக்கலாம். இருந்த போதிலும், எமது மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை மாற்றமின்றி நிறைவேற்ற நாம் அயராது பாடுபடுவோம்.

முன்மாதிரியான தலைமைத்துவம் ஒன்றை வழங்கும் கடப்பாடும் நமக்குள்ளதை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். வடக்கில் வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் கண்ணியத்தைப் பேணி அவர்களைச் சமத்துவத்துடன் நடத்துவதன் மூலம் சகவாழ்விற்கான முன்மாதிரியை முழு இலங்கைக்கும் தருவதில் கூட்டமைப்பு சிறப்பாக செயற்பட இயலும் என்பது நம்முடைய உறுதியான நம்பிக்கையாகும்.

நம்மை நோக்கி வரும் விமர்சனங்கள், மாற்றுக் கருத்துக்களை ஏற்று அவற்றிற்கு மதிப்பளிப்பதன் மூலம் சட்டத்தின் ஆளுகை, கருத்துக் கூறும் சுதந்திரம் மற்றும் அச்சமற்ற பொது வாழ்விற்கான அடிப்படை சூழ்நிலை அனைவருடனும் உறவாடுவதற்கான பரந்த மனோபாவம் அவசியமாகும்.

மேலும் அதிக எண்ணிக்கையானது ஓர் இனத்தை கண்ணியப்படுத்துவதற்கான அளவீடாகக் கருதப்படுதல் தற்கால உலகில் காலாவதியான ஒரு கோட்பாடாகும் என்பதையும், ஒவ்வொரு தனி மனிதனும் போற்றத் தகுந்தவனே என்பதையும் நாம் அனைவரும் ஏற்க வேண்டும்.

உண்மையான மாற்றம் ஒன்று சடப்பொருள்களில் எற்படுவது அல்ல. மாறாக அது மனித உள்ளங்களில் ஏற்பட வேண்டிய ஒன்றாகும்.

சக மனிதர்களை மதிக்கும் போதே இது சாத்தியமா கின்றது. இங்கு வசிப்பவர்கள் அனைவரும் சமமானவர்களே என்றும் ஒருவரைவிட மற்றவர் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்லர் என்ற நிலைப்பாட்டின் மீது நிலைத்தவர்களாக நாம் செயற்பட எண்ணியுள்ளோம்.

இதற்காகவேதான், மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கான சூழல் மற்றும் ஐக்கியமான ஒரு தேசத்தின் மக்களின் கனவை நனவாக்கும் பின்னணியை வடக்கின் இந்த வெற்றி நமக்கு உருவாக்கித் தந்துள்ளது.

# வன்னியில் துயரப்படும் பெண்களை புறக்கணித்து பெண்ணுரிமை பேசாதீர்

போரினால் சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம் கொடுத்துள்ள வன்னி நில தமிழ்ச் சகோதரிகளின் துன்பங்களைக் கணக்கில் எடுக்காமலும், அவர்களது உரிமைப் போராட்டங்களை உள்ளடக்காமலும் இந்த நாட்டில் எந்த மூலையிலும் எவரும் பெண்ணுரிமை பற்றிப் பேச முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பிரியாணி குணரத்ன. கொழும்பு, மருதானை சி.எஸ். ஆர். மண்டபத்தில், சமூக நீதிக்கான பெண்கள் நடவடிக்கை அமைப்பின் மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார். அங்கு பிரியாணி மேலும் தெரிவித்ததாவது:

இன்று வாழும் தமிழ்ப் பெண் சகோதரிகளின் துன்பங்களைக் கணக்கில் எடுக்காமல் அவர்களின் உரிமைப் போராட்டங்களை உள்ளடக்காமல் இந்த நாட்டில் எந்த மூலையிலும் எவரும் பெண்ணுரிமை பற்றிப் பேசமுடியாது; பேசவும் கூடாது.

வடக்கு - கிழக்கில் 90,000 கணவனை யிழந்த பெண்கள் இருகின்றார்கள் என்றவிடயம் உண்மையே. இந்தவிடயமானது இலங்கையின் கொடுமைகளை படம் பிடித்துக் காட்டுகிறது. இதைப் புரிந்துகொண்டாலே வடக்கு - கிழக்கு பெண்களின் அவல வாழ்வு பற்றிப் புரியும்.


குடும்பங்களுக்குத் தலைமை தாங்கிட வேண்டிய நிலைமையிலும் வாழ்வாதார தேவைகள் கிடைக்காமல், பலவந்தமாக சம்பூர் பகுதியில் அமைக்கப்பட உள்ளதாக சொல்லப்படும் மின் ஆலை ஒன்றிற்காக மக்கள் துரத்தி அடிக்கப்பட்டுள்ளனர். தங்கள் சொந்த நில வரம்புகளுக்கு உள்ளே இவர்கள் செல்ல முடியாதுள்ளது.

சொந்த நிலங்கள் பறிக்கப்பட்டுப் தெரியாத பழக்கமில்லாத காட்டு நிலங்களில் இப்படிப்பட்ட மக்கள் குடியேற்றப் படுகின்றமைக்கு முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராம மக்களின் அவலவாழ்வு கண்முன் நிற்கும் உதாரணமாகும். இங்கேயும் பெண்களே பெருந்துன்பங்களை எதிர்நோக்குகின்றார்கள். யுத்தத்தில் கொல்லப்பட்ட தமது பிள்ளையின், கணவரின், தந்தையின் நினைவுக் கல்லறைகளைப் இராணுவத்தினர் அழித்துள்ளதைத் தமிழ் பெண்களால் மன்னிக்க முடி யாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கொல்லப் பட்டவர்களை நினைவுகூர முடியாதுள்ள வன்னி நில தமிழ் பெண்களின் இன்றைய யதார்த்தத்தை நாம் அறியவேண்டும். இறந்தவர்களை நினைவுகூர அவர்களுக்குத் தேசிய துக்க தினத்தை நிர்ணயிக்க நாம் வழி காண வேண்டும்.

வடக்கு - கிழக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தமிழ்ப் பெண்களை ஆக்கிரமித்துள்ளன. இராணுவ வலயங்களும் படைத் தரப்பினரின் தொந்தரவுகளும் வன்னிப் பெண்களை அச்சுறுத்துகின்றன. இவற்றைக் களைய நாம் முன்நிற்க வேண்டும் ஆகவேதான், போரினால் சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம் கொடுத்துள்ள வன்னி நில தமிழ்ச் சகோதரிகளின் துன்பங்களை கணக்கில் எடுக்காமலும், அவர்களது உரிமைப் போராட்டங்களை உள்ளடக்காமலும் இந்த நாட்டில் எந்த மூலையிலும் எவரும் பெண்ணுரிமை பற்றிப் பேச முடியாது என்று நான் சொல்கிறேன். அவர்களின் நினைவுகள் கொழும்பிலுள்ள நமது மனசாட்சிகளை உறுத்த வேண்டும் என்றும் சொல்கிறேன் - என்றார் பிரியாணி குணரத்ன.

BRITISH COUNCIL

Education UK
Innovative. Individual. Inspirational.



## உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்கு...

9 பிரபல பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களைச் சந்திக்க ஒக்ரோபர் மாதத்தில் St John's College இற்கு வாருங்கள்

- Anglia Ruskin University
- City University London
- University of Greenwich
- London South Bank University
- The University of Northampton
- University of Salford
- Sheffield Hallam University
- University of Sussex
- UWE, Bristol

யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்காட்சி:
திகதி: 2013 ஒக்ரோபர் 12, சனிக்கிழமை | நேரம்: மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை
இடம்: St John's College, பிரதான வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
பிரவேசம்: முன்பதிவு மூலம் மட்டும்

தொழில் நிலையை மேம்படுத்த அல்லது தனிப்பட்ட கல்வித் தகைமைகளை விருத்திசெய்ய விரும்பும் அனைவருக்கும் இணையற்ற பெறுமதியை பிரிட்டிஷ் கல்வி வழங்குகின்றது. தொழில் தேடும் மாணவர்களுக்கும் அவர்களை வேலைக்கமர்த்துவோருக்கும் இது ஒரு நித்திய முதலீடாகும்.

மாணவர்கள் தமது கல்விக்கான ஒரு சிறந்த இடமாக பிரிட்டனை கருதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இதோ, அவற்றுட் சில:

- பிரிட்டிஷ் கல்வி நிலையங்களினால் பேணப்படும் உயர்ந்த கல்வித் தராதரங்கள்
- கல்வித் தகைமைகளுக்குச் சர்வதேச அங்கீகாரம்
- பட்டம் பெற்ற பின் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு
- பிரிட்டிஷ் கல்வி நிலையங்களினால் வழங்கப்படும் பல்வேறு வகையான கற்கை நெறிகளும் பாடத் துறைகளும்
- பிரிட்டிஷ் தகைமை பெற்ற பட்டதாரிகளுக்குத் தமது சொந்த நாட்டில் சிறந்த தொழில் வாய்ப்புக்கள்
- பிரிட்டனின் பல்லினக் கலாசார அமைப்பு உங்களுக்குப் பரிச்சயமான சூழலை வழங்கும்
- ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்களையும் புலமைப்பரிசில்களையும் பிரிட்டிஷ் கல்வி நிலையங்கள் வழங்குகின்றன


மேலதிக விபரங்களுக்கும் பதிவு செய்வதற்கும் 0114521521, 0114521576, 0114521577 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக எடியுகேஷன் யு.கே. அணியுடன் தொடர்புகொள்ளுங்கள்.

www.educationuk.org/srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகையே மாற்றிப்போட்ட ஒரேயொரு அற்புத புத்தகம்






உலகில் மிகப் பெரிய தாக்கம் செலுத்திய 100 முக்கிய புத்தகங்களில், ஒரு சுற்றுச்சூழல் புத்தகத்துக்கும் இடம் உண்டு: ரேச்சல் கார்சன் எழுதிய மௌன வசந்தம் (Silent Spring). இந்தப் புத்தகம் வெளியானபோது, "அர்த்த மற்ற புத்தகம்" என்று விமர்சித் திருந்தது 'டைம்' பத்திரிகை. ஆனால், அந்த பத்திரிகையே பின்னாளில், 20ஆம் நூற்றாண்டில் தாக்கம் செலுத்திய 100 முக்கிய ஆளுமைகள் என்று வெளியிட்ட பட்டிய லில் ரேச்சல் கார்சனுக்கு இடம் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது வரலாறு.

சுற்றுச்சூழல் ஆராய்ச்சி பற்றிப் பேசும்போது, ரேச்சல் கார்சனைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்க முடியாது. அறிவியல் முறைப்படி சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எப்படிப் பகுப்பாய்வது என்பதைக் கற்றுத்தந்தவர் ரேச்சல் கார்சன்தான்.

சுற்றுச்சூழலுக்கு எதிரான அமைப்புகள் அதிகம் வெறுக்கும் புத்தகங்களில் ஒன்று 'மௌன வசந்தம்'. அது வெளியான நாள் செப்ரெம்பர் 27, 1962. வெளியாகி ஒன்றரை ஆண்டுகளுக்குள் 10 லட்சம் பிரதிகள் விற்றன. புகழ்பெற்ற பிறகு, நியூயோர்க்கர் வார இதழில் தொடராகவும் வெளியானது. ரேச்சல் கார்சனின் தோழி ஓல்கா ஓவன்ஸ் ஹக்கின்ஸ், 1958இல் ரேச்சலுக்கு எழுதியிருந்த கடிதத்தில் எனது ஊரில் வசந்தம் மௌனித்து, நிலம் வாழ்விழந்துபோனமை குறித்து வருத்தத்துடன் தெரிவித்திருந்தார். இந்தப் பிரச்சினை தொடர்பாக நீண்ட காலமாகவே அக்கறை கொண்டிருந்த கார்சனின் கவனத்தை அது கூர்மையாக்கியது. 1952இல் அரசுப் பணியில் இருந்து வெளியேறி, அடுத்த 10 ஆண்டு ஆராய்ச்சிக் குப் பிறகு 'மௌன வசந்தம்' நூலை அவர் வெளியிட்டார். இந்தப் புத்தகம்தான் சூழலியல் தொகுதி (ecosystem) என்ற சொல்லை, அதாவது உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன என்பதை முதன்முதலில் எடுத்துச் சொன்ன புத்தகம். இப்படி ஒன்றையொன்று சார்ந்து வாழும் நமது உயிர்க் கோளத்தில் வேதிப் பொருள்கள் எப்படி நிலம், நீர், காற்று போன்றவற்றை மாசுபடுத்தி, பின்விளைவுகளை உருவாக்குகின்றன என்று 'மௌன வசந்தம்' ஆதாரங்களுடன் விளக்கியிருந்தது.

> இந்தப் புத்தகம்தான் சூழலியல் தொகுதி (ecosystem) என்ற சொல்லை, அதாவது உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன என்பதை முதன்முதலில் எடுத்துச் சொன்ன புத்தகம்.

பூச்சிக்கொல்லிகள் மீதான வழக்கமான பரிசோதனைகள் கீழ்க்காணும் முக்கிய விஷயங்களைக் கவனத்தில் கொள்ளாததை அவர் சுட்டிக்காட்டி இருந்தார். ஒரு ஏரியில் 0.02 பி.பி.எம். (கன அளவில் 10 லட்சத்தில் ஒரு பங்கு) வேதி மாசுப்பொருள் கலந்தாலும், அது உணவுச் சங்கிலியின் ஒரு நிலைக்கு மேல் உள்ள ஒரு பறவையிடம் வந்து சேரும்போது, அதன் ரத்தத்தில் 1,600 பி.பி.எம். என்ற பூதாகார அளவுக்கு, அதாவது அப்பறவையைக் கொல்லும் அளவுக்குப் போய்விடுகிறது என்பதை ரேச்சல் விளக்கினார். அவரது இந்தக் கண்டுபிடிப்புக்குப் பின்னர்தான் உயிர் உருப்பெருக்கம் (Biomagnification) என்ற வார்த்தையும் மனித உடல்நலனில் அது ஏற்படுத்தும் பெரும் ஆபத்தும் உணரப்பட்டன. இன்றைக்குப் பல்வேறு நச்சுப்பொருள்கள் இந்த வகையில்தான் நம்மைப் பாதிக்கின்றன என்றும் அவற்றால் புற்றுநோய் போன்ற நோய்கள் தாக்குகின்றன என்றும் தெரியவந்திருக்கிறது.

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு நச்சு வேதிப்பொருள்கள் ஒன்றுசேரும்போது, அவை தனித்தனியாக ஏற்படுத்தும் பாதிப்புகளைவிட, கூட்டாக ஏற்படுத்தும் பாதிப்பு பல மடங்கு அதிகம். அவை நீண்ட காலத்தில் செல்களைப் பாதித்து மரபணுப் பண்புகளைச் சிதைப்பதாகவோ புற்றுநோயை உருவாக்கக்கூடியதா கவோ அமையும். அமெரிக்காவின் தேசியப் பறவையான மொட்டைக் கழுகுகள் இனப்பெருக்கம் செய்ய முடியாமல் அழிவதற்கான காரணம், வேளாண் பூச்சிக்கொல்லிகளே என்று அவர் விளக்கினார். மொட்டைக் கழுகுகளின் உடலில் சேர்ந்த நச்சால், அவற்றின் முட்டை ஓடுவலுவிழந்து, முட்டை உடைந்துபோவதே இதற்குக் காரணம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பூச்சிக்கொல்லிகளைத் தெளிப்பதால் வேளாண் விளைச்சல் கூடுவதில்லை. மனிதர்களைப் போன்ற பெரிய உயிரினங்கள் தகவமைத்துக் கொள்வதற்கு லட்சக்கணக்கான ஆண்டுகளை எடுத்துக்கொள்ளும்போது, பூச்சிகளின் வாழ்க்கைச் சுழற்சி மிகக் குறுகியது. எனவே, பூச்சிகள் மிகக் குறைந்த காலத்திலேயே இந்த பூச்சிக்கொல்லிகளுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொண்டு எதிர்ப்புச் சக்தியைப் பெற்று பெருகிவிடுகின்றன என்கிறார் கார்சன்.

மட்டுமில்லாமல், சம்பந்தப்பட்ட பூச்சியின் இயற்கை எதிரியையும் பூச்சிக்கொல்லி கொன்றுவிடுவதால், அந்தப் பூச்சி அடுத்த தலைமுறையில் மிக மோசமாக உருவெடுக்க வழிவகுக்கிறது. டி.டி.ட்டி. போன்ற பூச்சிக்கொல்லிகளுக்கு எதிராக அவர் அறிவியல் ஆதாரங்களுடன் முன்வைத்த வாதம், வேதிப்பொருள் தொழிலுக்கு எதிரானதாகக் கருதப்பட்டது. இதன் காரணமாக அந்தத் தொழிலைச் சார்ந்தவர்கள் ரேச்சலை கம்யூனிஸ்ட் என்றும், பைத்தியக்காரத்தனமான வாதங்களை முன்வைக்கிறார் என்றும் தூற்றினார்கள். ஆனால், அடுத்த 10 ஆண்டுகளில், அதாவது 1972இல், டி.டி.ட்டி. பூச்சிக்கொல்லி அமெரிக்க அரசால் தடைசெய்யப்பட்டது (இங்கு நாம் இன்னும் பயன்படுத்தி வருகிறோம் என்பதைக் கவனத்தில் கொள்க). கார்சனின் புத்தகத்துக்குப் பின்னரே அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (US EPA) தொழிற்சாலைகள், விவசாயத்துக்கு ஆதரவாகச் செயல்படாத வகையில் தனிப்பொறுப்பு கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டது. மிகத் தாமதமாக என்றாலும், 2004 ஸ்டாக்ஹோம் சாசனத்தின்படி, ஒட்டுமொத்த உலகிலும் வேளாண் பயன்பாட்டுக்கு டி.டி.ட்டி. உட்பட பல்வேறு வேதிப் பொருள்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. ஒரு பெண், ஒரு புத்தகம், எப்பேர்ப்பட்ட தலைகீழ் மாற்றம்!

ரேச்சலின் ஆய்வுகள் மற்றொரு விஷயத்தையும் நமக்கு வலியுறுத்துகின்றன. அவரது ஆராய்ச்சிகள் கண்மூடித்தனமாக அறிவியல் முன்னேற்றங்களையோ லாபத்தைப் பெருக்குவதையோ மையமாகக் கொண்டிராமல், வளம்குன்றாத வளர்ச்சியை (Sustainable development) வலியுறுத்தின. இயல்பிலேயே பெண் அனைத்தையும் மறுஉற்பத்தி செய்பவள். தனக்காக மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறைகளுக்காகவும் சிந்தித்து, இயற்கையைச் சிதைக்காமல் வளம்குன்றாத வளர்ச் சியை வலியுறுத் துபவள். பாரம்பரியமாகப் பெண்ணிடம் இருந்துவரும் இந்தப் பண்புகளின் நீட்சியைத்தான் ரேச்சலின் ஆய்வுகளில் பார்க்க முடிகிறது.

**50 ஆண்டுகள் நிறைவு**





வெளிநாட்டிலிருந்து மணிகிராம் சேவை ஊடாக அனுப்பும் பணத்தை கொமர்ஷல் வங்கியில் பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு LED TV, ஹோம் தியேட்டர் சிஸ்டம், மைக்ரோவேவ் அவண், வோட்டர் பில்டர், கிறைண்டர், ரோஸ்ரர் உட்பட மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லும் வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்களும் மணிகிராம் ஊடாக பணத்தை அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் பெற்று, சீட்டிழுப்பில் கலந்து கொண்டு வெற்றியாளராகுங்கள்.

செப்ரெம்பர் 01 முதல் டிசம்பர் 31 வரை மாதாந்தம் பரிசுகள்.

MoneyGram. money transfer

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

+94 114 932 444 / +94 112 353 578


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலைப் பிள்ளை



உலகின் முதல் பெண் பிரதமரைத் தேர்ந்தெடுத்த நாடு என்ற பெருமையைக் கொண்டது இலங்கை. பாலின சமத்துவத்தில் உலக நாடுகளின் வரிசையில் 16ஆவது இடத்தை இலங்கை வகிக்கிறது" என ஐ.நா. சபையில், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பெருமிதம் ததும்ப உரையாற்றி, அவரது குரல் ஓய்வதற்கு முன்பே ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையத்தின் ஆணையர் நவநீதம் பிள்ளையின் இலங்கை மீதான வாய்மொழி அறிக்கை வெளியாகியிருந்தது.

இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் அதிலும் குறிப்பாக, குடும்பத் தலைவர் இல்லாத வீடுகளைச் சேர்ந்த பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் இழிவுகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் எனக் குறிப்பிட்டிருக்கும் அவர், அண்மையில்தான் மேற்கொண்ட ஆய்வில், சுமார் 30 சதவீத தமிழ்ப் பெண்கள், எவ்விதக் காரணமுமின்றி இராணுவத்தினர் தமது வீடுகளுக்கு அடிக்கடி வந்து தொல்லை கொடுப்பதாகக் கூறினர் எனவும் தெரிவித்துள்ளார். பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளை இலங்கை அரசு சகித்துக்கொள்ளக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கையில் ஆய்வு மேற்கொண்ட நவநீதம்பிள்ளை, இலங்கை அரசு மென்மேலும் அதிகாரத்துவத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது எனக் குற்றம்சாட்டியிருந்தார். அப்போதிலிருந்தே அவரது வாய்மொழி அறிக்கை குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்து வந்தது. இலங்கை மீது ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் தொடரான கண்காணிப்புத் தேவை எனக் கூறியிருக்கும் அவர், வலியுறுத்தியிருக்கும் மூன்று விஷயங்கள் மிக முக்கியமானவை:

1. தேர்தல் ஆணையகம், மனித உரிகைள் ஆணையகம் உள்ளிட்ட சுயேச்சையான அமைப்புகளை நியமிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை ஒழித்து, அண்மையில் ராஜபக்ஷ அரசு கொண்டுவந்த 18ஆவது திருத்தத்தைக் கைவிட வேண்டும்.
2. மீண்டும் 17ஆவது சட்டத் திருத்தத்தை உயிர்ப்பிக்க வேண்டும்.
3. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும்.

தமிழர்கள் மீதான கொடுமைகளை மட்டும் அவர் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகிய சிறுபான்மை மதத்தவர் தாக்கப்

(28 ஆம் பக்கம் பார்க்க)



உங்கள் பிள்ளைகளும்
அவுஸ்திரேலியா / கனடாவில்
கல்வி கற்க முடியும்.

கற்பதற்கான செலவு இலங்கையில் பிரசித்தி பெற்ற சர்வதேச பாடசாலைகளுக்கு ஒப்பானது.

**அவுஸ்திரேலியா**
- 11 இலிருந்து 17 வயதிற்கு இடைப்பட்ட எந்தவொரு சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் மாணவர்கள்.
- தாய் அல்லது தந்தை பிள்ளைகளோடு செல்லலாம்.
- பெற்றோருக்கு எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
- ஆங்கிலத் தேர்ச்சி அவசியமற்றது.
- IELTS/ TOEFL தேவையில்லை.
- ஆண்டுக்கான பாடசாலை கட்டணம் அவுஸ்திரேலிய டொலர் $8000 த்திலிருந்து $12,000 வரை OSHC சேர்த்து.
- விண்ணப்பக் கட்டணம் அவுஸ்திரேலிய டொலர் $225.
- முகவர் அல்லது வேறு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.



**கனடா**
- 06 இலிருந்து 17 வயதிற்கு இடைப்பட்ட எந்தவொரு சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் மாணவர்கள்.
- தாய் அல்லது தந்தை பிள்ளைகளோடு செல்லலாம்.
- பெற்றோருக்கு எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
- ஆங்கிலத் தேர்ச்சி அவசியமற்றது.
- IELTS/ TOEFL தேவையில்லை.
- ஆண்டுக்கான பாடசாலை கட்டணம் கனடிய டொலர் $11,000.
- பிள்ளைகளுக்கான வருட காப்புறுதிக் கட்டணம் கனடிய டொலர் $500.
- விண்ணப்பக் கட்டணம் கனடிய டொலர் $250.
- முகவர் அல்லது வேறு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

FLEX Graphic

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் ஜெனிபர் 0779420617

அல்பா ஹோல்டிங்ஸ்
(பிறைவேட்) லிமிடெட்
மாலபே
clement@sltnet.lk / clement.perera@gmail.com
clement.perera
0112 407 705
0112 407 706




மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரு. 189 | ரு. 300 | ரு. 100 | ரு. 400 |
| ரு. 589 | ரு. 900 | ரு. 400 | ரு. 1,300 |

Sri Lanka Telecom
Mobitel




உட்புறச் சுவர்களை அற்புதமாக அலங்கரிக்க
நிப்போலக் இமல்ஷன் பெயின்ற்கள்.

நிப்போன் பெயின்ற் லங்கா (பிறைவேட்) லிமிடெட்
நிப்போலக் ரவல்ஸ், 69A, புத்கமுவ வீதி, இராஜகிரிய, இலங்கை.
தொ.பே. 011 435 6900/8
பக்ஸ் 011 435 6909

Nippolac®

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலைப் பிள்ளை

படுவது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் தான் இலங்கைக்குச் சென்றிருந்தபோது தன்னிடம் கூறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். 2013 ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட 227 தாக்குதல்கள் குறித்த தொகுப்பு தன்னிடம் கையளிக்கப்பட்டதாகவும் அந்த விவரங்களை அரசுடன் தாம் பகிர்ந்துகொள்ள இருப்பதாகவும் கூறியுள்ள அவர், இதைச் சகித்துக்கொள்ள முடியாது என்றார். சிறுபான்மை இனத்தவர் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், தமிழர் பகுதிகளில் கல்வி, விவசாயம், சுற்றுலா முதலான பணிகளைக்கூட இப்போதும் இராணுவம்தான் செய்கிறது. இராணுவத்தின் ஒரு பிரிவாகப் பொலிஸ் வைக்கப்பட்டிருந்ததற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால், தற்போது பொலிஸ் தனியே பிரிக்கப்பட்டுள்ளது என்றாலும் அது இப்போதும் இராணுவ அதிகாரி ஒருவரின் கட்டுப்பாட்டிலும், ஜனாதிபதியின் கீழும்தான் வைக்கப்பட்டிருக்கிறது.

**இலங்கை அரசு, நவநீதம்பிள்ளையை விடு தலைப் புலிகளின் ஆதரவாளர் என்கிறது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களோ, நவநீதம் பிள்ளையை அரசை மையப்படுத்தி சிந்திக்கிறவர் என விமர்சிக்கிறார்கள்.**

தேர்தல் நடந்து முடிந்திருக்கும் வடக்கு மாகாணத்தில் சிங்கள இராணுவத்தினர் ஏராளமாக நிலைகொண்டிருக்கிறார்கள். இலங்கையின் உண்மை நிலவரத்தை நேரடியாகப் பார்வையிட்ட நவநீதம்பிள்ளை இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்களை விசாரிக்க சுதந்திரமானதொரு விசாரணை அமைப்பை நியமிக்க வேண்டும் என்ற சர்வதேசத்தின் வற்புறுத்தலுக்கு இலங்கை மதிப்பளிக்காததையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"இராணுவமே தனது போர்க் குற்றங்களை விசாரித்துக்கொள்ள வேண்டும் என இலங்கை அரசு கூறியிருப்பது ஏற்புடையது அல்ல. 2014 மார்ச் மாதத்துக்குள், இலங்கை அரசு போர்க்குற்றம் இழைத்தவர்களை விசாரித்துத் தண்டிக்காவிட்டால், சுயேச்சையான விசாரணை ஒன்றை நடத்த வேண்டிய கடமையை சர்வதேசச் சமூகம் நிறைவேற்ற வேண்டியிருக்கும்" என எச்சரித்திருக்கிறார்.

நவநீதம்பிள்ளையின் வாய்மொழி அறிக்கை, இலங்கை அரசுக்கு ஆத்திரமூட்டுவதில் ஆச்சரியமில்லை. ஆனால் ஈழத் தமிழர்களில் ஒரு பிரிவினர் குறிப்பாக, புலம்பெயர்ந்து வாழும் ஒரு சிறு குழுவினரின் சாதனமாக விளங்கும் ஒரு இணையத் தளத்தைச் சேர்ந்தவர்களும்கூட நவநீதம் பிள்ளையைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும் ராஜபக்ஷ ஆட்சியில் காணப்படும் பிற குறைபாடுகளையும் நவநீதம்பிள்ளை சமமாகப் பாவிக்கிறார், இன்னும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை வலியுறுத்துகிறார், தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையைச் சிறுபான்மையினர் பிரச்சினையாக மட்டுமே பார்க்கிறார் என அது குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கை அரசு, நவநீதம்பிள்ளையை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்கிறது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களோ, நவநீதம் பிள்ளையை அரசை மையப்படுத்தி சிந்திக்கிறவர் என விமர்சிக்கிறார்கள். இரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது நவநீதம் பிள்ளை நடுநிலையோடு கருத்துகளைக் கூறியிருக்கிறார் என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியிருக்கிறது.

ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுங்கள்

தரத்தில் உயர்ந்த

மலிபன் பால்

எப்போதும் தேர்ந்தெடுங்கள்.

அன்றும் - இன்றும் - என்றும், எக்காலத்திலும் - எத்தினத்திலும் - எவ்விதத்திலும் - மலிபன் பாலில் - மெலமைன், DCD மற்றும் எந்தவொரு உடலுக்கு ஒவ்வாத பக்றீரியாக்களும் அற்றதென அவுஸ்திரேலிய அரசு அத்தாட்சிப்படுத்தியுள்ளது.

உலகில் பால் மா உற்பத்தி செய்யும் பிரதான நாடுகளிடையே, என்றுமே புகழ் நாமத்தினை வெற்றி கொண்டுள்ள, அவுஸ்திரேலியாவிலிருந்து உலகின் மற்றைய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும், 100% இயற்கை பசும் பாலினால் உற்பத்தி செய்யப்படும், பால் புரதம், பால் ஆடை மற்றும் லக்டொஸ் உள்ளடங்கியுள்ள, உயர் தரத்திலான, போஷாக்கு பால் மா மட்டுமே. ஆரம்பத்திலிருந்தே உயர் தரத்திலான பால் மாவினை அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்து, இலங்கை வாழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவது "மலிபன் பால்" நிறுவனமே.

இவ்வாறு உங்கள் கைகளுக்கு வரும் உயர் தரத்திலான - மலிபன் பால் மாவினை நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யும் போது உலக சந்தையில் இன்று காணப்படும் விலைகளுக்கு ஏற்ப பால் மா கிலோ.கி ஒன்றிற்கு 5.20 அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. கடந்த வருடம் மே மாதம் விலை 3.86 அமெரிக்க டொலர்களாக நிலவியது. இவ் விலை இறக்குமதி செய்யும் பால் மா கிலோ.கி ஒன்றிற்கு 1.34 அமெரிக்க டொலர்களினால் அதிகரித்துள்ளது.


டொலர் விலை அதிகரிப்பினை காரணமாக கொண்டு உலக சந்தையில் பால் மா விலை அதிகரித்த போதிலும், "மக்களின் போஷாக்கு இல்லம்" என 60 வருடங்களுக்கும் அதிகமான காலம், நம் நாட்டின் பாசத்திற்குரிய குழந்தைகளுக்கு "மிகச்சிறந்ததை" மட்டுமே வழங்கி, தொடர்ச்சியாக பேணி வரும் உயர் கொள்கையை, என்றுமே காத்துக்கொள்வது "மலிபன்" நிறுவனத்தின் நோக்கமாகும்.

ஆகவே "தரத்தில் - மிக உயர்ந்த" மலிபன் பால் மாவினை உங்கள் கைகளுக்கு கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் விலையில் மாற்றங்கள் செய்ய நேர்ந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எவ்வித அச்சமுமின்றி, உயர் தரத்திலான மலிபன் பால் மாவினை கொள்வனவு செய்து உங்களதும், உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியத்தை பேணுங்கள்.

மலிபன் மில்க் புரடக்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்குத் தேர்தலும் கிழக்குத் தீர்மானமும்

● அதிரன்

**கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை வலுப் படுத்துமாறு கோரும் பிரேரணையின் மூலம் காணி, பொலிஸ் அதிகாரங்களை பெற்றுவிட முடியாது என்று அரசின் மூத்த அமைச்சரான சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் கூறியிருக்கிறார்.**

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு 2/3பெரும்பான்மையுடன் வரலாற்றுப் பெருவெற்றியை பதிவு செய்துகொண்ட அதே நேரத்தில் கிழக்கு மாகாண சபையிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு நடைபெற்றிருக்கின்றது.

அபிவிருத்தியோ சலுகைகளோ இவை எதுவும் எமக்கு தேவையல்ல. சுயநிர்ணய உரிமையுடன் கூடிய விடுதலை வாழ்வே எமக்கு வேண்டும் என்று வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது ஏகோபித்த ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி அதனை பெருவெற்றியீட்டச் செய்திருக்கிறார்கள் வடக்கு மக்கள்.

அந்தநேரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அதிகாரத்தில் இருக்கும் கிழக்கு மாகாண சபையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்துமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியுள்ளது. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அந்தச் சபையில் பெரும்பான்மை வாக்குகளால் இந்தப் பிரேரணை நிறைவேறியமை அதற்குப் பலத்த அடியாகவே அமைந்தது. ஒருபுறம் வடக்குத் தேர்தலில் படுதோல்வியையும் மறுபுறம் கிழக்கு மாகாண சபையில் 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்தும் தீர்மானத்தின் தோல்வியையும் ஒரே நேரத்தில் சந்தித்தது மஹிந்த அரசு.

தமிழ் மக்கள் எப்போதும் தமக்கே உரித்தான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடனும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகிறார்கள் என்பதற்கு இந்த இரண்டு நிகழ்வுகளும் சிறந்த எடுத்துக்காட்டு.

மாகாண சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்துமாறு கோரி கிழக்கு மாகாண சபையில் தனிநபர் பிரேரணை ஒன்று கடந்த 2ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணையே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

13ஆவது திருத்தத்தை செயலிழக்கச் செய்ய வேண்டும். அல்லது இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்று தென்னிலங்கையில் இருக்கும் பெரும்பாலான இனவாத கட்சிகளும் சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களும் போர்க்கொடி தூக்கியுள்ள இந்தநேரத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு மாகாண சபையில் 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்துமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசின் பங்காளிக் கட்சியாக இருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினரான ஜெமீல் என்பவரே கிழக்கு மாகாண சபையில் இந்தத் தனி நபர் பிரேரணையை முன்வைத்தார்.

13ஆவது திருத்தம் அல்லது 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகள் நாட்டை பிரிவினைவாதத்துக்கே கொண்டு செல்லும் என அரசும் அதன் பங்காளிக் கட்சிகளும் தொடர்ச்சியாக கூச்சலிட்டு வருகின்றன.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை வடக்குத் தேர்தலை நடத்துவது தனித் தமிழீழத்தை தமிழர்களுக்குப் பிரித்து வழங்குவது போலானது என்று தென்னிலங்கையில் இனவாத அமைப்புக்கள் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்றன. வடக்குத் தேர்தலை நடத்தி அங்கு கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அவர்கள் புலிகளின் பாணியில் தனித் தமிழீழத்தை அமைத்து விடுவார்கள் என்ற பொய்ப் பிரசாரம் தென்னிலங்கை மக்கள் மத்தியில் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இதன் ஓர் அங்கமாக வடக்குத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றத்திலும் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

ஆயினும் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் தமது ஆணையை வழங்கியிருக்கிறார்கள்.

அதேநேரத்தில் கிழக்கு மாகாண சபையிலும் மாகாண சபைகளின் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் வடக்கு மாகாண சபை செயற்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்று அரசு தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற போதும் திரைமறைவில் மாகாண சபைகளுக்கு உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கான முயற்சிகளே தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. வடக்கு மாகாண சபை கூட்டமைப்பின் கைகளுக்கு போய்ச்சேர்ந்த கையோடு இந்த முனைப்புக்கள் மேலும் தீவிரம் அடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்துமாறு கோரும் பிரேரணையின் மூலம் காணி, பொலிஸ் அதிகாரங்களை பெற்றுவிட முடியாது என்று அரசின் மூத்த அமைச்சரான சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் கூறியிருக்கிறார்.

"மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா. 13ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் இந்த அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது" என்று அவர் கூறியிருக்கிறார். அமைச்சரின் இந்தக் கூற்று எதிர்காலத்தில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களில் அரசு ஒரு விடாப்பிடிப் போக்கை கைக்கொள்ளப் போகிறது என்பதையே தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. வடக்கு மாகாண சபை விரைவில் பதவியேற்றுக் கொள்ளவிருக்கும் நிலையில் மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில் மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வு அதிக அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

இதில் இந்தியா முழுக் கரிசனையாக உள்ளது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் தெரிவித்துள்ளார். ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு நாடு திரும்பும் வேளையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

"வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வும் அதிக அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்தியா ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்திருக்கிறது. இப்போதும் நாம் அதையே வலியுறுத்துகிறோம். இந்தியாவின் முழுமுனைப்பும் அதற்கானதாகவே இருக்கும்" என்று வடக்கு மாகாண சபை தொடர் பான இந்தியாவின் கருத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார் இந்தியப் பிரதமர்.

13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஏற்கனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு உறுதியளித்திருக்கிறார். அந்த உறுதிமொழியை விரைவாகச் செயற்படுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்தியா தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்கிவந்தது. இந்தியாவின் அழுத்தம், சர்வதேசத்தின் தொடர்ச்சியான நச்சரிப்பு ஆகியவற்றின் காரணமாகவே வடக்கில் தேர்தலை நடத்த முன்வந்தது மஹிந்த அரசு. தேர்தலை வடக்கில் நடத்தினால் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டும் என்பதில் அரசுக்கு நன்கு தெரியும். ஆயினும் சர்வதேச, இந்திய அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமலே வடக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

இப்போது மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு அரசுக்கு அழுத்தம் அதிகரித்திருக்கிறது. அதற்கேற்றால் போல் கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அமைந்துவிட்டது. இப்போது தர்மசங்கடமான நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்துமாறு வடக்கிலும் கிழக்கிலும் கருத்துக்கள் வலுப்பெறத் தொடங்கிவிட்டன.

இதனால் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் விடயத்தில் அரசுக்கு அடுத்த தலையிடி ஆரம்பித்திருக்கிறது.

காணி அதிகாரம் மத்திய அரசுக்கே உரித்தானது. மாகாண அரசுகளுக்கு காணி அதிகாரங்களே கிடையாது என உயர் நீதிமன்றம் அண்மையில் சர்ச்சைக்குரிய தீர்ப்பொன்றையும் வழங்கியிருந்தது. தோட்டக் காணி ஒன்று தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. ஆயினும் உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த வழக்குக்கான தீர்ப்பு மட்டுமே அது.

அதனால் மாகாண காணி அதிகாரங்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதனால் மாகாணங்களுக்கான அதிகார விடயத்தில் அரசு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த இந்த விடயத்தை எப்படிக் கையாளப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு இப்போது எழுந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை

# பிரபாகரன் இருந்த வீடு

அப்படியே உள்நுழைந்தாலும் மரங்கள் அவரை இலகுவாக காட்டிக் கொடுத்துவிடும். குறித்த வீடு அமைந்திருக்கும் நிலப்பகுதி மிகுந்த வன்மம் வாய்ந்தது. செம்பாடு எனப்படும் மண் வகையைச் சார்ந்தது. இலகுவில் இடியாத் தன்மைகொண்ட இந்த மண், நீரை கசியவிடாது. 40 முழத்திற்கு கீழேதான் நீர் ஊற்றெடுக்கும். வேணாவில் கிணறுகள் நல்ல எடுத்துக்காட்டு.

**பாதுகாப்பிற்கே முதலிடம்**

இது கழித்துவிடப்பட்ட, சிறு துண்டுக் காடு எனினும் புவியியல் அடிப்படையில் பரந்த தொடர்புடையது. கிழக்குப் பக்கமாக இரணை மடுவுக்கும், தெற்குப் பக்கமாக முத்துஐயன்கட்டு – வவுனியாவுக்கும், கிழக்குப் பக்கமாக மணலாற்றுக்கும் காட்டுவழியே தொடர்பை வைத்திருக்கின்ற ஒரு சிறு காடாகும். மேலிருந்தோ, அல்லது கூகுள் வரைபடத்திலோ இந்தக் காட்டுப் பகுதியை அவதானித்தால் இதனை இலகுவில் விளங்கிக் கொள்ளமுடியும். புலிகள் கொரில்லா முறை நகர்வுகளுக்கும், பாதுகாப்புக்கும் இதுபோன்ற காடுகளை தெரிவுசெய்தமை அவர்களின் வரலாறாக இருக்கின்றது.

மற்றையது, புதுக்குடியிருப்பு என்ற சிறுநகரையும், அங்கிருந்து கடல்வழிக்கும், ஏனைய இடங்களுக்கும் பயணிக்க கூடிய பாதைகளையும் இந்த வீடு கொண்டிருக்கின்றது. சமாதானத்துக்குப் பின்னரான காலத்தில் புலிகளின் அனைத்து முக்கிய மையங்களும், தளபதிகளின் வதிவிடங்களும் புதுக்குடியிருப்புக்கு மாறியிருந்தன. ஒவ்வொரு முறையும் இலங்கை இராணுவத்தின் விமானத் தாக்குதல் நடந்து முடிகையில்தான் இது இந்த தளபதியின் இடம் என்று தெரியவரும் வகையில் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருந்தது. பிரபாகரன் வாழ்ந்த வீடு இதுதானா? பிரபாகரன் வசிப்பதெற்கென்று இந்த வீடு அமைக்கப்பட்டதா அல்லது முக்கிய சந்திப்புகளுக்காக அமைக்கப்பட்டதா என்ற சர்ச்சை இன்னமும் நீடிக்கின்றது. காரணம் அவர் ஒருபோதும் ஓரிடத்தில் தங்கியிருக்கவில்லை. மக்கள் அவர் வாழ்வதாக நம்பிய இடங்கள் அனைத்தும் மிகச் சாதாரணமானவையாகவே இருந்திருக்கின்றன. விசேட கவனக்கலைப்பான்கள் எவையும் அங்கு இல்லை. வட்டக்கச்சியில் அவர் மீது விமானத் தாக்குதல் நேரடியாக நடத்தப்பட்டபோதும் கூட அந்த வீடு மிகச் சாதாரணமாகவே இருந்தது. சாதாரண மக்கள் வாழும் வீடுகளிலேயே அவர் பாதுகாப்பை தேடிக்கொண்டார். அவருக்கு வன்னியின் கவனிப்பாரற்ற கிராமங்களில் எல்லாம் தங்குமிடங்கள் இருந்திருக்க வாய்ப்புண்டு என்பதை வட்டக்கச்சி சம்பவம் எடுத்துக் காட்டியது. அந்த வகையில்தான் வேணாவில் வீடும் தற்காலிக தங்குமிடமாகவும், சந்திப்புகள் நடைபெறும் இடமாகவும் இருப்பதற்கான சான்றுகளை அதிகம் கொண்டிருந்தது. அதன் அமைப்பும் அவ்வாறு இருந்ததை நேரில் பார்த்தவர்கள் உணர்ந்திருக்க முடியும்.

சரி, பிழைகளுக்கு அப்பால் 30 வருட போராட்டத்தை வழிநடத்திய ஒரு தலைவன் என்ற வகையில் அவரின் நினைவோடு சம்பந்தப்பட்டவற்றைக் கூட பதிவில் இருந்து அகற்றிவிட இலங்கை அரச தலைமைகள் விரும்புகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்கத்துக்காக மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு முதலமைச்சர் பதவியேற்பார் என்று அறிவித்திருக்கிறது.

இலங்கை வரலாற்றில் எல்லாளனுக்கு ஓர் இடம் இருப்பதைபோல, நவீன வரலாற்றில் பிரபாகரனுக்குக் கிடைக்கும் இடத்தை இதுபோன்ற தகர்ப்புகளால் நிறுத்திவிட முடியாது.



# பிற உயிரையும் நேசி

உணவூட்டி நீர்காட்டி
தவிடு புண்ணாக்கிட்டு
நல்லின ஆடு வளர்த்தாய்
அதை வேள்வியில் அறுத்தாய்
உன் ஆயுள் நீள்வதற்கு

கோமாதா என்றழைத்து
கன்று ஒன்றை ஈன்ற பின்
குருதியை பாலாக்கி
கன்றுக்கு கொடுக்கையிலே


விதை நட்டு பாத்தி கட்டி
உரமிட்டு நீர்பாச்சி
அழகான செடி வளர்த்தாய்
காலை அதில் பூ மலர
அதைப் பறித்து
மாலையிட்டாய்
உன் மணமாலை
நிலைப்பதற்கு

கோழி தன் இனம் பெருக
இட்டமுட்டை மாமிசமாம்
நாகபாம்பின் புற்றுக்கு
முட்டை வைத்தாய்
உன் நாகதோஷம்
போக்கிவிட

மனிதன் விலங்குகள்
பறவைகள் செடிகொடிகள்
எல்லாமே இறைவனின்
படைப்பு
அதை ஏன் நீ பறித்தாய்?
உன் வாழ்வு நிலைத்திட
உன்னிடத்திலிருந்து
நீ எதைக் கொடுத்தாய்?
பிற உயிரை உன்னுயிராய்
நேசி
ஆனந்த வாழ்வு கிட்டும்
இனியேனும் இதை யோசி

அ.அஜந்தன்,
கந்தர்மடம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 286



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

**இடமிருந்து வலம்**

1. தமிழ் மாதங்களில் ஒன்று
4. ஆங்கிலத்தில் இதை 'கமிஷன்' என்பார்கள்
6. நிறைகுடம்
7. மயக்கப் பேச்சு
9. தானிய அளவீட்டு அலகு
11. தென்னை மட்டையிலிருந்து பிரித்தெடுப்பது.
12. இப்போதைய நிறுத்தல் அலகு
13. முன்பனி, பின்பனி கழிய வருவது
14. பிரி
16. முருகன்
18. பிணம்
19. இதுவும் மூர்க்கனும் கொண்டது விடா
20. தலையில் கட்டுவது
21. குத்து விழுவது இப்படி
22. இரத்தம்.

**மேலிருந்து கீழ்**

1. அரைச்சதம்
2. பிரிப்பு
3. சிராய்
4. ஓர் இசைக் கருவி
5. சமிபாட்டு உறுப்பு.
8. தொடர்பு
10. நிகழ்வொன்று
12. நிலத்துக்குச் சமாந்தரமானது
13. அரசன்
15. கைதொழுது வணங்கு
16. பாக்கு மரம்
17. சிரசு
18. அபாரமாக
20. சிஷ்யனுக்கு வழிகாட்டி

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 284 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) விவாதம் (4) அசதி (7) வேட்டு (8) பேணுதல் (9) கடுக்கன் (11) கலை (12) குழி (13) தாம் (15) சலம் (17) திரிசடை (19) பாதம் (21) கவரி (22) விளம்பு (23) திரி (24) கலாம்.

**மேலிருந்து கீழ்**

(1) விவேகம் (2) வாட்டு (3) தடுக்கு (4) அணு (5) சதகம் (6) தில்லை (8) பேன் (10) கழிசடை (13) தாம்பாளம் (14) அரிவரி (16) அம்புலி (17) திகதி (18) சரி (20) தம் (22) விலா.

★ **சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.**

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி
இல. 286
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (16.10.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.284இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.10.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 283 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
எஸ்.கெங்காதரம்,
கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம். பரந்தன்.

**2 ஆம் பரிசு**
தையல்நாயகி கந்தையா,
வதிரி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
மு.மகேந்திரம்,
இல.1025, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
பா.கேதீஸ்வரி,
இல.67, கிருஸ்ணாநகர், முழங்காவில.

**5 ஆம் பரிசு**
சி.சயந்தன்,
இலங்கை மின்சார சபை, மாங்குளம்.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி செ.பாலேந்திரன்,
இல.459, பிரதான வீதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

அ.திலகவதி,
சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி.

ச.சொர்ணமலர்,
இல. 50, பஜார் வீதி, வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக வெற்றிகளல்ல நிரந்தரப் பலமே தேவை

தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டமிடலே இலங்கை அணிக்கு அவசியமானது. உடனடிப் பயன்தரும் திட்டங்கள் நீண்ட நாளைக்கு அணியின் இருப்பை தக்க வைக்காது. இலங்கை அணியின் பெருமையை நீண்டகாலம் நிலைத்து நிற்கச் செய்யும் நோக்குடனேயே எனது தலைமையிலான தேர்வுக் குழுவின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவரான சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக இலங்கை அணியின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழத் தொடங்கியுள்ளன.

அரசியல் ரீதியான தலையீடுகள், அணித் தேர்வில் பாரபட்சம், பணத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட செயற்பாடுகள், வீரர்களின் நலன்கள் உதாசீனப்படுத்தப் படல் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இலங்கைக் கிரிக்கெட் சபை மீது முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில்



அண்மையில் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் தேர்வுக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான சனத் ஜெயசூரியாவின் செயற்பாடுகளைக் கிண்டலடிக்கும் நிகழ் வொன்று வேடிக்கையாக அரங்கேற்றப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதான செயற் பாட்டாளராகச் செயற்பட்டிருந்த ஜெயசூரியா இந்த நிகழ்ச்சியால் வெகுண்டுபோய் இடைநடுவிலேயே வெளியேறியிருந்தார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர் களிடம் தனது மனக் கிடக்கைகளை அவர் வெளியிட்டார்.

"நான் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது ஒரு டெஸ்ட் அந்தஸ்துள்ள அணி என்ற நிலையில் இருந்து இலங்கை அணி கீழிறங்கிக் காணப்பட்டது. மிகவும் திறமையான வீரர்கள் இருந்தபோதும் அணிக்கிடையே ஒன்றுமையின்மையும், சம்பளப் பிரச்சினையும் தலைதூக்கி இருந்தத தாலேயே தொடர்ச்சியாக மோசமான பெறுபேறுகளை இலங்கை அணி பெற்றுக் கொள்கின்றது என்பதை என்னால் உணர முடிந்தது. ஏனெனில் நான் பரிந்துரைகள் மூலமோ அல்லது எழுத்து வடிவிலோ கிரிக்கெட்டை அறிந்தவன் அல்ல. ஒவ்வொரு நொடியும் கிரிக்கெட்டையேயே மூச்சாகக் கொண்டு வளர்ந்தவன் நான். எனக்கு ஒரு கிரிக்கெட் வீரரரின் கஷ்ட நஷ்டங்கள் நன்கு தெரியும். அதனால்தான் வீரர்களின் சம்பளப் பிரச்சினையை நான் பதவியேற்றவுடனேயே முடிவுக்குக் கொண்டு வந்தேன்.

நான் ஒரு அரசியல் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட, அணித் தேர்வின்போது பாரபட்சம் காட்டியது கிடையாது. எதிர்காலத்தில் எமது அணி மற்றைய அணிகளுக்கு சவால் கொடுக்கும் வகையில் எழுச்சி பெறுவதற்காக திறமையாக இளம்வீரர்களுக்குவாய்ப்புக்கொடுத்து வருகின்றேன். அண்மையில் மோசமான பெறுபேறுகளை வெளிநாடுகளில் வெளிப்படுத்தியபோதும் குசல் பெரோராவுக்கு ஜெயசூரியா பரிவு காட்டுகின்றார் என்ற கருத்து நிலவுவதை நான் அறிவேன். உண்மையில் அவரது உள்ளூர் போட்டிகளின் பெறுபேறு. ஏனைய வீரர்களை விடவும் மிகவும் உயர்வானது. போதிய அனுபவமின்மை காரணமாகவே வெளிநாட்டுத் தொடர்களின் போது அவர் தடுமாறுகின்றார். பொறுத்திருந்து பாருங்கள். ஒரு காலத்தில் இலங்கை அணியின் தூணாக அவர் உருவெடுப்பார். இப்போது இலங்கை அணித் தலைவராக இருக்கும் அஞ்சலோ மத்தியூஸ் எனக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்.

எங்களுடைய நோக்கமெல்லாம் தற்காலிக வெற்றிகளல்ல. என்றைக்கும் தோற்காத- 1996ஆம் ஆண்டளவில் இருந்ததைப் போன்ற - பலம் மிக்க இலங்கை அணிதான். அந்தத் தொலை நோக்கோடுதான் நான் உழைத்து வருகின்றேன்" என்று தெரிவித்தார்.



# யுவராஜை மீண்டும் சந்திப்பது மகிழ்ச்சி

## டோனி தெரிவிப்பு

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரில் யுவராஜ் சிங் தெரிவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி.

மோசமான ஆட்டத்திறன் காரணமாக இந்திய அணியில் இருந்து ஒதுக்கப்பட்டார் அதிரடி வீரர் யுவராஜ் சிங். எனினும் தளர்ந்து போகாத யுவராஜ் சிங் இடைவிடாத பயிற்சிகளை மேற்கொண்டு உள்ளூர் போட்டிகளில் தனது திறமைமையை வெளிப்படுத்தினார். அதையடுத்து அவர் 9 மாதங்களின் பின்னர் இந்திய அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி, "யுவராஜ் சிங்கை மீண்டும் களத்தில் சந்திப்பது மகிழ்ச்சி. யுவராஜ்சிங் திறமையான வீரர். அவர் அணிக்கு மீண்டும் திரும்புவார் என்பதில் எனக்கு சந்தேகம் இருந்ததில்லை. அவர் பிரான்ஸ் நாட்டுக்கு பயிற்சிக்காக சென்றதில் இருந்து யாருடனும் பேசவில்லை.

அவர் உடல் எடையை குறைத்து முன்பைவிட மெருகேறி இருக்கிறார். அவரை களத்தில் மீண்டும் சந்திப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் இந்திய தொடரில் இருந்து விலகினாலும் அந்த அணி திறமை வாய்ந்தது. அவர்களை எளிதாக எடுத்து கொள்ள மாட்டோம். தென்னாபிரிக்கத் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கிறாம். இந்தத் தொடர் இளம் வீரர்களுக்கு அவர்களது திறமை பரிசோதிக்க [illegible] உதவும்." என்று தெரிவித்துள்ளார் மகேந்திரசிங் டோனி.



# 40 வயது வரைக்கும் நானும் விளையாடுவேன்

நானும் இந்திய கிரிக்கெட் அணிக்காக நீண்ட காலம் விளையாடுவேன். எனது நாற்பதாவது வயதுவரை ஓய்வு பற்றிச் சிந்திப்பது இல்லை என்று முடிவெடுத்துள்ளேன் என்று கூறுகின்றார் இந்திய அணியின் இளம் வீரர் விராட் ஹோக்லி.

இந்திய அணியின் ஆக்ரோஷமான இளம் வீரர் விராட் ஹோக்லி. 24 வயதான இவர் தனது அதிரடி ஆட்டங்கள் மூலம் கிரிக்கெட் இரசிகர்களிடையே பிரபல்யமாகப் பேசப்படுவர்.

புதுடில்லியில் விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள வந்திருந்த விராட் ஹோக்லியை மடக்கிப் பிடித்தோம்.

*சச்சினின் ஓய்வு குறித்துப் பலதும் பத்தும் பேசுகின்றார்களே நீங்கள் அதைப் பற்றி என்னதான் கூறுகின்றீர்கள்?*

சச்சினைப் பற்றி நான் எதுவும் கூறமாட்டேன். அவர்தான் எனக்கு 'ரோல் மொடல்'. 16 வயதில் இருந்து 40 வயதுவரை அதே உடற் தகுதியுடன் விளையாடி வருகின்றார். அவருக்குத் தெரியும் எப்போது ஓய்வு பெற வேண்டும் என்று. நாம் அதைப் பற்றி அவருக்கு அறிவுறுத்தத் தேவையில்லை.

*உங்கள் எதிர்காலத் திட்டங்கள் குறித்து...?*

சச்சின் டெண்டுல்கரை போன்று நானும் இந்திய அணிக்காக நீண்ட காலம் விளையாடுவேன் என்று நம்புகிறேன். அவரது வயதை எட்டும் போது (இப்போது சச்சினின் வயது 40) நானும் தொடர்ந்து உடல்தகுதியுடன் இருப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. டெண்டுல்கர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் தற்போதுவரை செய்துள்ள சாதனைகளில் 60 முதல் 70 சதவீதம் வரை என்னால் செய்ய முடிந்தால். மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

*அதிரடித் துடுப்பாட்ட வீரரான உங்களைப் பயமுறுத்தும் பந்துவீச்சாளர்கள் யார்?*

நான் இதுவரை எதிர்கொண்ட பந்துவீச்சாளர்களில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்கள் ஸ்டெயின், மோர்னே மோர்கல் ஆகியோர் மிகவும் அபாயகரமானவர்கள். அவர்களின் பந்துவீச்சைச் சமாளிப்பது கொஞ்சம் கடினம் தான்.

*உங்களுக்குப் பிடித்த துடுப்பாட்ட வீரர் யார்?*

இந்தியாவைத் தவிர்த்து எனக்குப் பிடித்த வெளிநாட்டு கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெய்ல்(மேற்கிந்தித் தீவுகள்) தான். உண்மையிலேயே அதிரடி காட்டி ரசிகர்களை குதூகலப்படுத்தக்கூடிய ஒரு வீரர் கெய்ல்.

*நீங்கள் பெருமைப்படுவது எதைப் பற்றி?*

இந்தியா வென்ற இரண்டு உலகக் கிண்ண (2007- '20/20'. 2011 ஒரு நாள் ஆட்டம்) அணிகளில் இடம்பிடித்திருந்தது நான் செய்த அதிர்ஷ்டம். குறிப்பாகத் தெண்டுல்கர் பங்கேற்ற 6 ஆவது உலகக்கிண்ண அணியில் நானும் அங்கம் வகித்தது பெருமைக்குரிய விடயம்.

*ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் பற்றி...?*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் (எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகின்றது) கடினமானது என்பதில் சந்தேகமில்லை. காயம் காரணமாக ஆஸி. அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் இல்லாவிட்டாலும் அது பலம் வாய்ந்த அணிதான்.

களத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் வார்த்தைகளால் சீண்டினால் முதலில் துடுப்பாட்டம் மூலம் பதிலடி கொடுப்பேன். அதன் பிறகு என்ன நடக்கும் என்பதை பார்க்கலாம். ஆஸ்திரேலிய தொடரில் நிறைய ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்ற நம்புகின்றேன். வெற்றிக் கிண்ணம் எங்களுக்குத்தான் என்று கூறிப்பறந்துவிட்டார் ஹோக்லி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றம் புரிந்த அரசியல் தலைவருக்கு தூக்குத் தண்டனை

♦ பங்களாதேஷ் சுதந்திரப் போரின் போது போர்க்குற்றம்
♦ எதிர்க்கட்சித் தலைவருக்கு மரண தண்டனை
♦ வடகொரிய அணு அச்சுறுத்தல் ,கொரிய கடல் பகுதியில் கடற்படை ஒத்திகை

உலக நடப்புகள் ஒரு பார்வை

பங்களாதேஷ் உருவாவதற்குக் காரணமாக அமைந்த 1971ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த சுதந்திரப் போரின் போது இனக்கொலைகளில் ஈடுபட்டமைக்காக அந்தநாட்டின் எதிர் தரப்பு அரசியல்வாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

1971 ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானியர்கள் (இப்போது பங்களாதேஷ்) மேற்கு பாகிஸ்தான் அரசுக்கு எதிராக சுயாட்சி கோரி போராட்டம் ஆரம்பித்தார்கள். பின்னர் இந்தப் போராட்டம் சுதந்திரத்துக்கான போராட்டமாக விஸ்தரிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் காரணமாக சுமார் ஒரு கோடி கிழக்கு பாகிஸ்தானியர் இந்தியாவுக்குள் அடைக்கலம் கோரிச் சென்றடைந்தார்கள்.

அந்த வருடத்தின் இறுதியில் கிழக்கு பாகிஸ்தான் மக்களின் சார்பில் இந்தியா தலையிட்டது. போரில் தோல்வியை சந்தித்த பாகிஸ்தான் இராணுவத்தின் 90 ஆயிரம் பேர் இந்திய இராணுவத்திடம் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சரணடைந்தார்கள். 1971ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதி கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற பெயரில் சுதந்திர நாடாகப் பரிணமித்தது.

நடந்து முடிந்த குறித்த போரின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக பலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன. இந்த வழக்கில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த பங்களாதேஷ் தேசிய கட்சியின் தலைவர் சலாவுதீன் குவாடர் சவுத்தரி என்பவரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டு தூக்குத் தண்டனை விதித்தது.

போர்க் குற்றங்கள் இனக் கொலைகள். படுகொலைகள் மற்றும் மதக் குரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் காணப்பட்டது.

வழக்கை விசாரித்த சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி ஏ.ரி.எம். பாஸல் கபிர் என்பவர் தமது தீர்ப்பில் சவுத்தரி கழுத்தில் சுருக்கிட்டு தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிவித்தார். இந்தத் தகவலை பங்களாதேஷ் சட்டமா அதிபர் வெளியிட்டுள்ளார். கடந்த ஜனவரியிலிருந்து இந்த நீதிமன்றம் ஏழு நபர்களைக் குற்றவாளிகளாக அறிவித்துள்ளது. இவர்களில் ஆறு இஸ்லாமியவாதிகள் அடங்குவர்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் குற்றவாளியான சவுத்தரி கருத்து வெளியிடுகையில், நீதிவான் தனது தீர்ப்பை வழங்குவதற்கு அரசிடமிருந்து ஆணை பெற்றிருந்தார் என்றார். இந்தத் தீர்ப்பின் விவரம் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குரல் எடுத்துக் கத்தினார்.

இந்தத் தீர்ப்பையடுத்து எதிர்த் தரப்பினரின் வன்முறைகள் வெடிக்கலாம்- குறிப்பாக தென்பகுதி நகரமான சிட்டகொங் பகுதியில் கலவரங்கள் வெடிக்கலாம் என்று அதிகாரிகள் அஞ்சுகிறார்கள். கடந்த முப்பது வருட காலமாக சவுத்தரி அந்தப் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். கடந்த செவ்வாய்க் கிழமை சில எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் சிட்டகொங்கில் ஆட்டோ ஒன்றை தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்கள்.

> "போர்க் குற்றங்கள் இனக் கொலைகள், படுகொலைகள் மற்றும் மதக் குரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் காணப்பட்டது."

## தென் கொரியாவின் மிகப் பெரிய ராணுவ படை பல அணிவகுப்பு



ஒரு பத்து ஆண்டு காலத்துக்குப் பிறகு தென்கொரியா தனது படைபலகாட்சி ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியது.

வடகொரியா அணு ஆயுத வல்லரசாக தன்னை உயர்த்திக் கொண்டுள்ள நிலையில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து தென் கொரிய அதிபர் பார்க் கெயுன் ஹயே வெளியிட்டுள்ள கருத்தையடுத்து இந்த இராணுவ படை பலகாட்சி இடம்பெற்றுள்ளது.

சியோல் நகருக்கு தெற்கே உள்ள ஓர் இடத்தில் இடம்பெற்ற இந்த படை பல அணிவகுப்பில் சுமார் 11 ஆயிரம் படைவீரர்கள் கலந்து கொண்டனர்.

120 விமானங்களும் காட்சி அணி வகுப்பில் இடம்பெற்றிருந்தன. ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ள மிக நவீன ரக ஆயுதங்கள் மற்றும் வெகுதூரம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகளும் இடம் பெற்றிருந்தன. வட கொரியாவின் கேந்திர மையங்களை அச்சொட்டாக தாக்கவல்ல ஏவுகணைகள் இதில் சேர்க்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் தென்கொரியாவும் அமெரிக்காவும் வடகொரியாவினால் ஏற்படக்கூடிய அணு ஆயுதத் தாக்குதல்களை தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை கடந்த புதன் கிழமை செய்து கொண்டுள்ளன. அது மட்டுமன்றி போர்க் காலத்தில் தென்கொரிய படை அணிகள் அமெரிக்கக் கட்டளைகளுக்குள் செயற்படுவதற்கான திட்டமொன்றை மீள்பரிசீலனை செய்வதற்கும் இரு தரப்பும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

கடந்த பெபரவரி மாதம் வடகொரியா மூன்றாவது அணுகுண்டு ஒன்றை பரிசோதித்துள்ளதைத் தொடர்ந்து எழுந்துள்ள அணு ஆயுத அச்சுறுத்தலே இந்தவிதமான ஒரு மூலோபாய பாதுகாப்புத் திட்டத்தை வகுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருப்பதாக இரு தரப்பிலும் கருதப்படுகின்றது.

தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் சுக்ஹேகல் தென்கொரிய தலைவர்களுடன் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

தென்கொரியாவின் பாதுகாப்புக்கு அமெரிக்கா தன்னாலான சகலவித இராணுவ உதவிகளையும் வழங்கும். அது வழமையான உதவிகளுடன் அணு ஆயுத உதவிகளாகவும் இருக்கும் என்று அமெரிக்க அமைச்சர் கூறியிருந்தார்.



சியோல் நகருக்கு தெற்கே உள்ள ஓர் இடத் தில் இடம் பெற்ற இந்த படை பல அணி வகுப் பில் சுமார் 11 ஆயிரம் படைவீரர்கள் கலந்து கொண்டனர்.

## விநியோகஸ்தர் தேவை

நீண்டகால பாவனைக்குரிய நுகர்வு சாதனங்களை (Consumer Durables) விற்பனை செய்யும் ... சிங்கர் ஸ்ரீ லங்கா ... Huawei மற்றும் Intex ...

Deputy Sales Manager Digital Media
Singer Sri Lanka PLC
No 80 Nawam Mawatha
Colombo -02
Email: jagathp@singersl.com

HUAWEI INTEX SINGER Trusted Excellence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org